இராமஜயம்.

வல்லூர்

தேவராஜபிள்ளையவர்கள்

இயற்றிய

ஸ்ரீ சேலோபாக்கியானம்.

இஃது,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலயதேசிகராதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

ஸ்ரீமத்-இராமலிங்கசுவாமிகளவர்கள்

மாணாக்கருள் ஒருவரும்

சென்னை பச்சையப்பமுதலியார் காலேஜ்

தமிழ்ப்பண்டிதருமாகிய

ம-ள-ள-ஸ்ரீ

க. வ. திருவேங்கடநாயடவர்களால்

இயற்றப்பட்ட இன்றியமையாக் குறிப்புரையோடு,

செவ்வாய்ப்பேட்டை

முனிசாமிநாயடுவினால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

சோபகிருது ஞு சித்திரைமீ.

Registered Copy-right.

முகவுரை.

படிவர்க ளமைத்தபல் வடிவமு நாமமுங்
கடிவதின் றேற்றருள் கடவுளின் கழல்களும்
போதனன் றுவகம் பொருந்தியெப் புலமையுங்
காதலி னுயிர்க்கருள் கலைமகள் கழல்களும்
இரவியி னெனதுளத் திருள்கடிந் திலகுறும்
பரவிரா மலிங்கப் பண்ணவன் கழல்களும்
அன்புட னிறைஞ்சியே யரியநூற் பயிற்சியா
லின்புல வருக்குமுன் னியம்புவ தியாதெனின் :—

தசேலோபாக்கியானமென்னும் இச்சரித்திரம் ஸ்ரீபாகவதத்துள், கண்ணபிரான் திவ்விய வைபவங்களை வகுக்குந் தசமஸ்கந்தத்தின் இடைக்கண் ணிலவுவது: பாகவதம்:—இதிகாச பாகவதம் புராணபாகவதஞ் சம்மிதாபாகவதம் உபசம்மிதாபாகவதம் விஷ்ணுரகசியபாகவதம் விஷ்ணுயாமளபாகவதம் கௌதம சம்மிதாபாகவதம் என ஏழென்ப. இவை, பரந்த கிரந்தங்களுடையனவாய்ப் பற்பல அவதார சரிதங்களையுங் கீதைகளையுந் தம்முளடக்கிக்கொண்டு விளங்குவன. இவையிற்றில் * இதிகாச பாகவதத்தை இற்றைக்கு (௪00) ஆண்டுகளுக்கு முன்னிருந்த வேப்பத்தூர் சங்க வித்துவான்களுள் ஒருவரான புலவர்திலகரென்னும் ஆரியப்பப் புலவர் செந்தமிழில் (௪௯௭0) செய்யுள்களில் இயற்றினர். புராண பாகவதத்தை இப்போதைக்குச் சற்றேறக்குறைய (௫௫௫) வருடங்கட்கு முன்

---

* இது புராண பாகவத மொழிபெயர்ப்பென்பதே பெரும்பாலார் துணிபு.

பிருந்த அருளாளதாஸரென்னும் மதுரகவி வரதராஜ ஐயங்கார் (௩000) செய்யுள்களில் மொழிபெயர்த்தனர். இவற்றுள், **இக்குசேலமுனிவர்** சரிதத்தைப் புலவர் (௨0) பாடல்களாலும் ஐயங்கார் (௩அ) பாடல்களாலும் மிகச்சுருக்கிக் கூறியுள்ளார். ஆந்திர பாகவதமியற்றிய பம்மெர - போதராஜரென்னும் மகாகவியும் (எ௨) எண்களில் பத்யகத்யமாகச் செய்திருக்கின்றனர். இது நிற்க ;

இச்சரித்திரம் பரம பாகவதருடையதும் பக்திசாரமானதும் வைராக்கிய விசேடத்தைச் செவ்விதின் விளக்குவதும் மோக்ஷ சாதனமானதுமாயிருத்தலையுணர்ந்த அன்பர்களின் விருப்பின்படி இந்நூலாசிரியரான வல்லூர் தேவராஜ பிள்ளையவர்கள், அம்பிகை யுபாஸகராய் மேம்பட்டிருந்த ஆந்திரகவி கட்டுப்பிரபுராமர் என்பவர் மிகச் சிறப்பாகச் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசவசனங்களமைய மூன்று அத்தியாயங்களாக வகுத்து (௩எஎ) பத்தியகத்தியங்களால் வரைந்துள்ள **குசேலோபாக்கியான**மென்னும் நூலையே பெரும்பாலுந் தழுவி, அவர் கூறியுள்ள பிரமாணங்களை அருத்த ரூபமாக வேண்டுமிடங்களிலமைத்துத் தமது புலமைதோன்ற இதை இயற்றியதாக நன்கு புலப்படுகின்றது. அந்தப் பிரமாணங்கள் இந்நூலிற் புகப்பெய்துள்ளமையை யுணருமாறு ஒவ்வொரு பக்கங்களினுங் குறிப்பித்த அடிக்குறிப்புக்களில் ஆந்திரலிபிகளாய் அச்சிட்டிருக்கின்றனன்.

இந்நூலாசிரியர் திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவானாக இருந்தவரும் மகாகவியென்று புகழ்பெற்றவருமான திரிசிரபுரம் - மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கராதலாலும் அவர் பார்வையிட்டபடி இற்றைக்கு (௫௪) வருடங்கட்கு முன்னர் ஒரு பதிப்பு பதிப்பித்திருத்தலாலும் அப்பிள்ளையவர்கள் அபிப்பிராயமும் இந்நூலிற் கலந்திருக்குமென

யூகிக்க இடமுண்டு. இது கல்வி பயிலும் மாணவர்களும் பிறரும் அறியவேண்டிய இன்றியமையாத இலக்கியமாய் அரிய பெரிய நூற்பிரயோகங்களையும் கற்பனை யலங்காரங்களையும் காப்பிய இலக்கணங்களையும் நல்லுணர்வு பயக்கத்தக்க அரிய நீதிகளையும் அறம்பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தமாதியவற்றையும் சமயோசிதமாகத் தழுவி நிலவுறும் ஓர் காப்பியமாகும்.

நூலாசிரியர்.

இந்நூலாசிரியர் தொண்டைநாட்டிலே வல்லூரில் கருணீகர் குலத்தில் கல்வியறிவொழுக்கங்களில் சிறந்திருந்த வீராசாமிப் பிள்ளையென்பவரின் புத்திரர். இவர் உரிய பருவத்திலேயே நல்லிலக்கணவிலக்கியங்களில் நன்கு தேர்ந்திருந்தனரென்பதை இந்நூலே சான்று புகலும். இவர் சைவசமயப் பற்றுடையராயினும் கிருஷ்ணபக்தியுமுடையவரேபோலும். இடைக்கிடைக் கண்ணபிரானைப் புகழுந்தோறும் வியந்துகூறும் விசேடணங்களே இதனைப் புலப்படுத்தும். இதன் நற்சிறப்புப் பாயிரங்களால், திருவூரில் பிரபுத்துவராயிருந்த வைஷ்ணவரான ஸ்ரீநிவாசப்பிள்ளை யென்பவரின் வேண்டுகோளின்படி இந்நூலியற்றி இவ்வாசிரியரின் சிறிய பிதாவாகிய வல்லூர் இராமசாமிப்பிள்ளை யென்பவரின் சபையில் அரங்கேற்றுவித்ததாக ஏற்படுகிறது. இவரியற்றிய வேறு நூல்களில் யான் கண்டன:—சூதசங்கிதை சேடமலைமாலை தணிகைமலைமாலை பஞ்சாக்கரதேசிகர்பதிகம் மேற்படி பஞ்சரத்தினம் என்பன. வேறு பல தனிப்பாடல்களுமுளவாம்.

பதிப்பு.

இது பலருங் கற்றற்குரிய நூலாகலின் எளிய விலையில் யாவரும் பெறும்படி, ஒரு பதிப்பு (௧௩) வருடங்களுக்குமுன் பதித்தனன். அது காண்போர் முக்கியகுறிப்புரையும் உடனிருக்கின் மிக்க நலமென விரும்பலின் அங்ஙனமே இப்பதிப்

பில் முன்னையிலும் (சஅ) பக்கங்கள் அதிகப்படுமாறு இன்றியமையாக் குறிப்புரையும், சில செய்யுள்களுக்கு உரையும் கருத்தும் வரைந்து, திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளவர்கள் முன்னிலையில் ஒருவாறு பரிசோதிப்பித்துச் சேர்த்திருக்கின்றனன். பல அரிய பெரிய நூல்களை ஐயந்திரிபற வுணர்ந்து தெளிந்தவரே நூலுக்கு உரையாவது குறிப்புரையாவது எழுதத்தக்கவர். அவ்வியல்பெய்தாதயானும் இத்தொழிலை மேற்கொண்டது என்னன்பர் ஊக்கிய ஊக்கத்துக்கு இணங்கவேண்டியவனாயிருந்தமையினென்க. ஆகலின், இதிற்காணும் குற்றங்களை எனக்கறிவித்துச் சீர்பெறுத்துமாறு நல்லோர்களை நாவார வேண்டுகின்றனன்.

ஒன்றுக்கும் பற்றாச் சிறியேனையும் இந்நன்முயற்சியிற் செலுத்திய கடவுளின் திருவருளையும், என்னாசாரியர் அடிமலர்களையும் அகத்தமைத்து அநுதினமுஞ் சிந்திக்கக் கடவன் என்பது. சுபம்.

இங்ஙனம்,
அன்புள்ள,
க. ஷ். திருவேங்கடன்.

ஸ்ரீ

இராமஜயம்.

குசேலமுனிவர் சரித்திரச்சுருக்கம்.

உலகினிற்சிறந்த உத்தரமதுரைக்கடுத்த அவந்தி நகரத்திலே அந்தணர்குலத்திற் றோன்றி சுதாமா என்னும் இயற்பெயர்பூண்ட குசேலமுனிவரென்பவர் ஒருவரிருந்தனர்.

அவர் பிரமசரியநிலையை மேற்கொண்டு, சாந்தீபமுனிவரை யடைந்து உரியதொண்டுபூண்டு, ஸ்ரீகண்ணபிரானோடு தாமும் வேதமுதலிய சகலகலைகளினும் வல்லராகி, ஆசிரியரநுஞைபெற்று, சுசீலா அல்லது க்ஷுத்க்ஷாமா என்னும் ஓர் கன்னிகையை மணமுடித்துக்கொண்டு, அந்நகரையடுத்த வனத்திலே அரிய சாந்திராயணமுதலிய விரதங்களையனுட்டித்துக்கொண்டு வருநாளில், இருபத்தேழ் புத்திரர்களுதிக்க; அதனால் வறுமை மேலிட்டும், ஒருவரிடஞ்சென்று இரத்த லிழிவெனக்கருதி, அவ்வனத்திலே மிகமுயன்றுபெற்ற நீவாரப்புல்லின் தானியங்களைக்கொண்டு, அதிதிக்குமுண்பித்து மைந்தர்களுந் தாமுமுண்டு யாதொன்றினும் பற்றில்லாதவராய் அச்சுதனை அனவரதமும் சிந்தித்துக்கொண்டு, காலங்கழித்து வருவாராயினர்.

இவரிங்ஙனமிருக்க; நற்குணநிறைந்த கற்புடை மனைவியார் தமது குழந்தைகள் பசிப்பிணிக்கு ஆற்றாதுபடும் வருத்தங்களைக்கண்டு மனம்வருந்தி ஒருநாள், கணவரைவணங்கி, "எம்பெருமானே! நங்குழந்தைகள்படும்பாட்டைத் தேவரீர் கண்ணுற்றிருந்தும் வாளாவிருப்பதென்னையோ? இனியேனும், தே

வீருடன் ஒருங்குகற்றுச் செல்வத்தாலே சிறந்துவாழும் ஸ்ரீ கோபாலனையடைந்தாயினும் இவ்வறுமையை நிவிர்த்தித்தருள முயலல்வேண்டும்" என்று பிரார்த்திக்க; அதுகேட்ட குசேலமுனிவர் செல்வநிலையாமைமுதலிய பலவிதநியாயங்களைப் புகன்றும், செல்வதற்கே உடன்படவேண்டி நேரிட்டமையால், "பெண்ணே! கடவுள், ஆசிரியர், அரசர் முதலியோர்பால் ஏதேனும் கையுறைகொண்டன்றிச் செல்வது விதியன்று; ஆகையால், அம்மாதவனிடத்திற்கும் ஏதேனுங் கையுறைகொண்டே செல்லல்வேண்டும்" என்று வற்புறுத்தினர். உடனே அவர்மனைவியார் தமதெண்ண முடிந்ததாகச் சந்தோஷமுற்றுத் தமதுகணவர் கொண்டுவந்துகொடுக்கும் நீவாரதானியத்தில் அன்றுமுதலாகத் தனக்குரியபங்கைச் சின்னாள்சேர்த்து, ஒருநாள், நறுமணங்கமழப் பதமுறவறுத்து, வெள்ளியதாக முறிவின்றியிடித்துக் கணவர்பால் இனிகிழிதற்கிடமில்லாதிருக்கும் கந்தையினது ஒருநுனியை இரண்டுமூன்றாகமடித்து அதிற் முடிந்துகரத்தளித்து வணங்கிநின்றனர்.

அதுபெற்ற முனிவர்பெருமான் வழிக்கொண்டு, சிலநாளுணவின்றிக் கடுகிநடந்து மேலைச்சமுத்திர தீரத்தையடைந்து, அங்குள்ள ஓர் மீகாமனைக்கண்டு, இனியவார்த்தை பலவுரைத்து, அவனுதவியாற் கப்பலேறித் துவாரகையைச்சேர்ந்து, அரசர் பலர்நெருங்கும் அரண்மனைவாயிலையடைந்து, தமதுவரவை வாயிற்காவலருக்குரைத்தனர். அதுகேட்டவருள்ளே சிலர் பெரிதும் இரக்கமுற்று, அம்மாயவனையடைந்துவணங்கி, முனிவரதுவரவை விண்ணப்பித்து, அனுமதிபெற்று விரைந்துவந்து, அப்பெருமானடைந்த விருப்பமிகுதியைத்தெரிவித்து, அவரை அந்தப்புரத்திற் கழைத்துச்சென்றனர். அங்கே அவர்வரவை நோக்கியிருந்த அக்கோவிந்தன் எதிர்வந்து பன்முறைவணங்கிப் பலவாறுபுகழ்ந்து ஆசனத்திருத்தி, அருக்கிய பாத்தியாச

மன தூபதீபாதிகளால் வழிபட்டுச் சிற்றுண்டிகளுடன் திருவமுது செய்வித்துப் பஞ்சணையிலே யெழுந்தருளுவித்து, அவருடைய பாதங்களை வருடிக்கொண்டே அவரதுமனைவி மைந்தர்களுடைய க்ஷேமங்களை வினவுதலோடு, தாங்கள் கல்விபயின்ற காலத்திலே குருபணியில் ஒற்றுமையுற்றிருந்த திறங்களையும் பாராட்டிக்கொண்டு அருகிருந்தனர். இருக்குங்கால், அம்முனிவரைநோக்கி, "நண்பரே! எனக்கு யாதுபக்ஷணங் கொண்டுவந்தீர்" என்று வினவி, அவர் உள்ளக்குறிப்பை யறிந்துகொண்டு அவர்கக்கத்திலிருந்த அவல்மூட்டையை வாங்கி யவிழ்த்து, அதில் ஓர்பிடி யவலையெடுத்து, அவருக்குச்செல்வம் பெருகுமாறு அதனதுசுவையை வியந்துகொண்டே உலகமுண்ட திருவாயாலுண்டருளி, அன்றிரவு பஞ்சணையிலே துயில்வித்தனர்.

மறுநாட்காலையில், முனிவர் நித்திரைவிட்டெழுந்து, நித்தியகருமங்களை முடித்து, அப்புண்டரீகாக்ஷனிடத்து யாதொன்றும்வேண்டிக்கொள்ளாது விடைபெற்று, அரிதிற்பிரிந்து, வழிநடந்து வரும்போதே, தமது திருமேனியில் ஒரு திவ்வியகாந்தியும்அரதனகுண்டலகடகமோதிரங்களும் உயர்ந்த பீதாம்பரங்களும் தெய்வீகமாக விளங்கக்கண்டு, "இது நம்பெருமான் திருவருள்போலும்" எனவியந்துகொண்டு, அங்கங்குள்ள அரசர்முதலியோர் எதிர்கொண்டுவணங்கி ஒரு புதிய இரதத்திலேற்றி விருதுகளுடன் புடைசூழ்ந்துவர நகரையடைந்தனர். இதற்குமுன்னரே அவ்வாசுதேவனருளால் அஷ்டஐசுவரியங்களும் அதிகரிக்கப்பெற்றுக் களிகூர்ந்து தம்வரவை நோக்கியிருக்கும்மனைவியும் மைந்தர்களும் நகரத்தாரோடெதிர்கொண்டுபணிந்து மங்கலவாழ்த்தெடுக்கத் தம்மனையடைந்து, அந்த ஐசுவரியங்களை அனுபவித்துக்கொண்டிருந்தனர். அந்நாளிலே ஒருநாள், முனிவர் தனியிடத்திலிருந்துகொண்டு, தாம்முற்பயின்ற தியா

னநிலைகளுக்குமாறுக நம்மைப் பந்தித்து நிற்கும் இப்போகங்கள் நிலையாதனவெனவும், இவற்றின்கண்ணே உவர்ப்புப்பிறந்தாலன்றி அப்பரந்தாமனடியை அடைய முடியாதெனவும், அங்ஙனம் உவர்ப்புப்பிறத்தற்கு அக்கடவுளைத் தியானித்தலே ஏதுவாவதெனவுந் துணிந்து, அப்பரந்தாமனது லீலாவிபவங்களைப் பலவகைப்பட எடுத்துத் துதித்து, அங்ஙனந் துதிக்குங்கால் அக்கடவுள் தரிசனந்தந்தளித்துக் கட்டளையிட்டவாறே சிலநாள் உலகில்வாழ்ந்திருந்து, பின்பு தேவர்கள் மலர்மாரி பொழிய திருவைகுண்டமடைந்து, அங்கே ஸ்ரீதரனது திவ்வியமங்கள சொரூபம்பெற்று வீற்றிருந்தனர்.

குசேலமுனிவர் சரித்திரச்சுருக்கமுற்றிற்று.

குசேலமுனிவர் திருவடிகளேசரணம்.

இந்நூலிலுள்ள

விஷயசூசிகை.

மூ- இ - மு - என்பன அத்தியாயங்களையும் எண்கள் செய்யுள்களையும் உணர்த்தும்.

அகழியுமதிலும் - மு - ௧௫ - இ - ௨௫ - ௩௩-௩௪-மூ-௧௧-௧௨.
அட்டமாசித்தியுட்சில - இ - ௧௨௩.
அண்டஜமுதலிய தோற்றம் - மு - ௧௨௮ - ௧௨௯.
அதிதி பூசை - மு - ௯௮ - இ - ௨௩௨.
அந்தணர் சிறப்பு - இ - ௧௧௪ - ௧௧௫ - ௧௧௬ - ௧௧௭ - ௧௧௮.
அந்தணர்வீதி - மு - ௨௭ - இ - ௪௧.
அமுதருத்தல் - மூ - ௯௪ - முதல் - ௧௦௪ - வரை.
அரசர்நட்பு நட்பன்றென்பது-இ - ௮௧ - முதல் - ௮௮ - வரை.
அரசர் வீதி - மு - ௨௬ - இ - ௪௪.
அரசவைபுகுவோர்க்கு வேண்டுவ - இ - ௭௭ - ௭௮.
அருளாற்போந்தவற்றை மறுத்தலாகாமை - மு - ௨௦௩.
அவையடக்கம் - மு - ௫.
* அறம் - இ - ௩௦௫.
அன்பு - இ - ௨௮௩.
ஆசீர்வாதமகிமை - இ - ௨௭௨.
ஆண்பெணலித்தோற்றம் - மு - ௧௩௩.
ஆரியனிரங்கிவந்தருளினமை - இ - ௨௭௦ - ௨௭௧ - ௨௭௨.
* இகல் - இ - ௮௧.
* இடைநகர் - இ - ௩௨.
இரப்பவர்க்கு ஆடையாதியன முக்கியமாதல் - இ - ௨௦.
இன்சொலிதம்பயப்பது - இ - ௨௧.
* இன்பத்திறம் - மூ - ௫௫ - முதல்.

இன்னவர்புத்தி கேட்கத்தக்கனவென்பது - மு - ௧௯௧.
உணவாலுயிர்நிற்பது - மு - ௮௫.
உணவின்சாரமேயுடற்குக்காரணமாதல் - மு - ௧௩௨.
உணவுபாகப்படுமுறை - மு - ௪௨௯ - ௧௩௦ - ௧௩௧.
* உண்ணகர் - மு - ௨ - ௩ - ௪ - ௪௫ - முதல் - ௩௧ - வரை - இ - ௨௩ - முதல் - ௨௬ - வரை ௩௩ - முதல் - ௫௮ - வரை - மூ - எ - முதல் - ௩௦ - வரை.
உரிமைபாராட்டல் - இ - ௨௩௪ - ௨௩௮ - ௨௩௯ - ௨௬௩ - ௨௬௪ - ௨௭௪ - முதல் - ௨௭௭ - வரை.
உருக்குமிணிதேவி விசேடம் - இ - ௨௯௫ - முதல் - ௨௯௯ - வரை.
உலோபிகள் - மு - ௪௦௬.
ஊழின்றிறம் - மு - ௮௭ - ௯௪ - முதல் - ௪௦௨ - வரை - ௪௨௨ - ௪௨௩ - ௪௨௪.
ஊழை வெறுக்க வொண்ணாமை - மூ - ௪௩.
ஏற்பதிகழ்ச்சி - மு - ௬௬ - ௬௭ - ௧௪௪.

---

* கடல், செய்தல் - இ - எ - முதல் - ௧௮ - வரை
* கடவுளியல்பு-காப்பு, மு-௧-௨-௩-௪-௫-இ-௧-௨-௫
* கடவுள்வணக்கம்-மு-அ-௯-௧௦-௧௧-இ-௩-௪-௧௮௫ - மூ - ௧ - ௨ - ௩ - ௪ - ௫.
* கடவுள்வாழ்த்து-மு-௬-எ-இ-௬.

(இம் மூன்றும் மங்களாசா ணை.)

கடவுள் வழிபாடு - மு - ௩௨ - இ - ௬௧.
கணவரை யூட்டுமுறை - இ - ௨௮௮ - முதல் ௨௯௩ - வரை.
கண்ணனன்பர்க்கருளுமுறை - இ - ௩௦௪.
கண்ணனுவளச்சிறப்பு - இ - ௧௪௪ - முதல் - ௧௬௧ - வரை.
கண்ணனுவளகத்தமர்ந்தவாறு - இ-௧௭௧-முதல்-௧௮௧-வரை.
கண்ணனோக்கின்வழித்திருநிற்பது - மூ - ௪௧.
கண்ணன் காதன்மேலீடு - இ - ௧௯௨ - ௧௯௩ - ௧௯௪ - ௨௦௧ - ௨௦௨ - ௨௦௬ - ௨௦௭ - ௨௦௮ - ௨௧௧ - ௩௧௦.
கண்ணன் கோயில்வாயில் - இ - ௬௦ - முதல் - ௬௭ - வரை.
கருப்பச்சின்னம் - மு - ௬௨.
கருப்பச்சிசுவுக்கு முன்னுணர்வுண்மை - மு - ௧௩௮.

கருப்போற்பத்தி - மு - ௧௩௩ - முதல் - ௧௩௭ - வரை.
* கலவியிற்களித்தல் - மூ - ௬௫ - ௧௪௯-முதல்.
காடு - மு - ௩௪ - முதல் - ௩௮ - வரை.
காடு நகராயினமை - மூ - ௭ - முதல் - ௩௦ - வரை.
* கார்காலம் - இ - ௨௪௦ - முதல் - ௨௫௪ - வரை.
குசேலராதுநகரமகளிர் கூற்று - மூ-௩௬ - முதல்-௪௬-வரை.
குசேல ருவகைமேலீடு - இ - ௫௯ - ௬௬ - ௨௦௪-௨௦௫.
குசேலரெண்ணல் - மு - ௧௯௧ - முதல் - ௧௯௫ - வரை - இ -
குசேலரெனும் பெயர்க்காரணம் - மு - ௫௬. [௧௧௧.
குசேலரைக் கண்ணன்பூசித்தல்-இ-௨௦௯-முதல்-௨௧௩ - வரை-
குசேலரை நகராரெதிர்கோடல் - மூ - ௩௩. [௩௧௦.
குசேலரொழுக்கம் - மு - ௪௮ - முதல் - ௫௭ - வரை - ௮௨ -
௮௩ - ௮௪ - இ - ௨௧௪ - ௨௧௫ - ௨௧௬ - ௨௧௭ - ௩௦௯.
குசேலர்துதி - இ - ௧௩௮ - ௧௯௦.
குசேலர் மனைவளங் காண்டல்-மூ-௮௮ - முதல் - ௯௨ - வரை.
குசேலர்மாட்டு நிகழ்ந்தவிபவம்-இ-௩௨௬-முதல்-௩௩௮-வரை.
* குசேலர் முத்திநிலைமைதேர்வு-மூ-௧௦௬-முதல்-௧௨௫-வரை.
குசேலர் மெலிவு-மு-௧௭௦-௧௮௮-௧௮௯-௧௯௦-இ-௨௮-௨௯.
குசேலர் வழிபட்டமை - மூ - ௧௮௦ - முதல் - ௧௮௮ - வரை.
குசேலர் வாயிலவர்க் குரைப்பு - இ - ௬௮ - முதல்-௭௨-வரை.
குசேலர் விண்ணப்பம்-மூ-௧௯௦-முதல்-௧௯௪-வரை-௧௯௭.
குருபரன்பணி - இ - ௨௩௯.
*குறிஞ்சியாதிய நால்வகை நிலம்-மு-௧௭௧-முதல்-௧௭௪-வரை.
குறும்பர் நகர் - மு - ௧௭௬.
* கூதிர்காலம் - இ - ௨௫௫ - முதல் - ௨௫௯ - வரை.
கையுறையோடு செல்லத்தகு மிடம்-மு-௧௯௨-௧௬௭. [௩௦௭.
கையுறையுட்கொண்டு களித்தல்-இ-௨௭௮-முதல்-௨௮௩-வரை.

---

* சந்திராஸ்தமயம் - இ - ௨௬௭.
* சந்திரோதயம் - இ - ௨௬௫ - ௨௬௬.

சயனம் - இ - ௧௭௩ - ௧௭௪.
சிவனர் சரிதம் - மூ - ௪௮ - முதல் - ௭௬ - வரை.
சிறப்புப் பாயிரம், பாயிரம் - ௧ - முதல் - ௧௦ - வரை.
சிவகருணை - இ - ௩௦ - மூ - ௩௯.
சுசீலை கையுறையீந்த தகைமை - மு - ௧௬௮ - ௧௬௯.
சுசீலைபாணிகழ்ந்த விபவம்-மூ-௭௯-முதல்-௮௫-வரை. [௨௨௯.
சுசீலையின் கற்பு-மு-௫௯-௬௦-௮௦-௮௪-௧௫௭-௧௫௮-இ-௨௨௮-
* சூரியாஸ்தமயம் - இ - ௨௬௦ - ௨௬௧ - ௨௬௨.
* சூரியோதயம் - இ - ௨௬௮ - ௨௬௯.
செல்வத்தினிழிபு - மு - ௧௦௪ - முதல் - ௧௧௧ - வரை.
செல்வமெனும் பெயர்க்காரணம் - மு - ௧௧௨.
செல்வ ரியல்பு - மு - ௧௬௩ - ௧௬௫ - இ - ௭௯ - ௮௦.
சோலையும் உய்யானமும் - மு - ௧௦ - முதல் - ௧௪ - வரை-இ - ௧௫௮ - முதல் - ௧௬௩ - வரை.

ஞானிக ணித்தியகருமம் விடாமை - இ - ௧௩௦ - ௨௩௩.
ஞானிகணிலைமை - இ - ௧௨௦ - முதல் - ௧௨௪ - வரை. ௧௨௯.
ஞானிகளியல்பு உலகரறியாரென்பது - இ - ௧௩௫.
ஞானிகளின் சினம் - இ - ௧௩௯.
ஞானிகளின் தரிசன விசேடம்-இ - ௧௩௧-௧௩௨-௧௩௪-௧௩௭.
ஞானிகள் பற்றற் றிருப்பது-மூ-௪௫-௪௬-௨௦௦-௨௦௧ - ௨௦௨-௨௦௩ - ௨௦௬.

தசாவதார விபவம் - மூ - ௧௨௬ - முதல் - ௧௬௮ - வரை.
தந்தையாகிய ரனந்தமென்பது - மு - ௧௨௦.
தரித்திரத்தனய ரியல்பு - மு - ௭௦ - ௭௧.
தரித்திரத்தாய ரியல்பு - மு - ௬௧ - ௭௨ - முதல் ௭௬ - வரை.
தரித்திரமெனும் பெயர்க்காரணம் - மு - ௧௪௨.
தரித்திரரை அவர்க்குரியவரும் பேணுமை-மு-௧௬௪.
தரித்திரர்க்குச் சந்ததிவிர்த்தி - மு - ௬௩ - ௬௪.
தரித்திரவியல்பு - மு - ௭௭ - ௭௮ - ௭௯ - ௮௮ - ௮௯.

தவம் - இ - ௩௩௮ - மூ - ௪௯.
தனிவாழ்த்து - மூ - ௨௧0.
திருமால் ஆஞ்ஞை - மூ - ௧௯௯.
திருமால் வெளிப்பாடு - மூ - ௧௭0 - முதல் - ௧௭௯ - வரை.
திருவடிப்பேறே செல்வமாதல் - மு - ௧௧௩ - ௧௨௫ - ௧௪௩.
துவாரகை மகளிர்கூற்று - இ - ௩௪௨ - முதல் - ௩௨௪ - வரை.
தெய்வவலிக் கெதிர்வலியின்மை - மூ - ௨0௪.

நட்பின்பேறு - மு - ௯௧ - ௯௨.
நல்லோர் நட்பு - இ - ௨௨0 - முதல் ௨௨௭ - வரை - ௨௩௫.
நதி - மு - ௧௭௭.
* நாடு-இ-௯௧-முதல்-௧0௬-வரை (௧௬) நாடுகளை வர்ணிக்கும்.
நாட்டுக்கு நேருங்கேடு - இ - ௨௩௭.
நூலிழையிட்டு மதியை வணங்கல் - மு - ௧௬௭.
நூல்வரலாறு - மு - ௧௫.
நூற்பயன் - மூ - ௨0௮.
நெருஞ்சி சூரியனையே நோக்குமென்பது - இ - ௨௩௫.

பரத்தையர்வீதி - மு - ௨௩ - இ - ௩௮.
புகழ் - இ - ௨௫௯.
* புடை நகர் - இ - ௩௧.
* புனல்விளையாட்டு - மு - ௯ - இ - ௪௭.
* புலவியிற்புலத்தல் - மு - ௧௭௫ - இ - ௪௩ - ௪௪ - மூ - ௧௬.
பூத, பூதசார, பூதபரிணமசரீரங்கள் - மு - ௧௨௭.
பேதையர் நட்பு - இ - ௨௩௬.
பேரின்பப் பேறு - மூ ௨0௭.
* பொருட்பேறு - மு - ௧௧௪.
* பொழில் விளையாட்டு - மூ - ௫௧ - ௫௨.
* போர்ச்செலவு - மூ - ௧௫0 - முதல்.
போலிஞானிகள் - இ - ௪௨௫ - முதல் - ௪௨௮ - வரை.

மகளிர்திறம் - மு - கஎ - முதல் - உக - வரை - இ - ருஉ - மூ - கஎ - கஅ - ககூ - உஅ.
*மக்கட்பேறு - மூ - சுக - சுரு - இ - உருO - உருக - மூ - கருசு - முதல் - கண்ணன் மகப்பேறுங் கொள்க.
மக்களிழிபு - மு - ககஎ - முதல் - கஉக - வரை.
மக்களைப் பேணல் - மு - அரு - கூO - கூரு - கருகூ.
மடவோர் மாற்றம்-இ-எச-முதல்-கூO-வரை-கOஎ-கOஅ-கOகூ.
* மணம் - மூ - சுச - கருசு - முதல் - என்மணம்.
மருதநிலம் - மு - ரு - முதல் - கச - வரை.
* மலை - மு - சO - முதல் - சரு - வரை. [ருOரு-வரை.
மற்றொருபிடியவலுண்பியாமைக் காரணம்-இ - ருOO-முதல்
மாதரிழிபு - மு - ககரு - ககசு.
மாநுடப் பிறவியருமை - இ - ககச.
* முடிகவித்தல் - மூ - கருஅ - கருக.
* முதுவேனில் - மு - கஎஅ - முதல் - கஅஅ - வரை.
முயற்சி - மு - கசஎ - முதல் - கருரு - வரை.
முனிவர்சாலை - மு - சரு - சசு - சஎ.
மூப்பு - மு - கஉசு.
யாக்கையிழிபு - மு - கசO - கசக - கசச - கசரு.

வணிகர்வீதி - மு - உரு - இ - சO.
வாவி - மு - அ - கூ - இ - கசுச - முதல் கசுஅ - வரை.
வித்தியாகுரு வணக்கம் - மு - கஉ - கரு.
வெறுக்கையெனும் பெயர்க்காரணம் - மு - ககO
* வென்றி - மு - ருO - இ - அஉ - முதல்.
வேளாளர் வீதி - மு - உச - இ - ருகூ.

இவ்விஷய சூசிகையிற் குறிப்பிக்கும் நகர் உவளகம் ஐவகை நிலமாதியவற்றையுணர்த்துறுஞ் செய்யுள்களில் இரதகஜதுரகபதாதிகளும், அந்தந்தநிலக்கருப்பொருள்கள் அந்தந்தநில

மாந்தர் செயலாதியவும் விளக்கப்பட்டிருப்பதும், இந்நூல் கண்ணபிரானையும் குசேல முனிவரையும் தந்நிகரில்லாத் தலைவராகக்கொண்டு பெருங்காப்பியத் திலக்கணம் விரவி வரப்பெற்றிருப்ப தறிவித்தற்கு அவற்றின் மட்டும் (*) இக்குறி யிடப்பட்டிருப்பதும், சில செய்யுள்கள் அவ்வவ் விஷயங்கட்குத் தக்கபடி தொகுத்தும் தனித்தனி வகுத்தும் காட்டப்பட்டிருப்பதும் உய்த்துணர்க. விரிவஞ்சி ஏனையவை காட்டப்படவில்லை. பெருங்காப்பியத்தினிலக்கணங்களை அணியியலில் விளக்கிய இலக்கணவிளக்க நூலாசிரியரும் மீட்டும், "கூறிய வுறுப்பிற் சில குறைந் தியலினும் - வேறுபா டின்றென விளம்பினர் புலவர்" என்றாராகலின், சில விரிக்கப்படா திருப்பினும் இந்நூல் அக்காப்பிய விலக்கணம் நிரம்பப்பெற்றதென்பதே தக்கார் துணிவு.

புத்தக விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளிடத்திலும், சிதம்பரம் மேலைக் கோபுரவாயில் ஷாப்புக்கடை மா. கந்தசுவாமி முதலியாரிடத்திலும், சென்னை முத்தியாலுபேட்டை கலாரத்நாகரம் பிரசிலும், ஷை பேட்டை ரிப்பன்பிரசிலும், நம்மிடத்திலும் விலைக்குப் பெறலாம். வெளியூரார் ரிஜிஸ்டர் செய்தேனும் - வி. பி. போஸ்டிலேனும் அழைத்துக்கொள்ளல் வேண்டும். தபாற்கூலி பிரத்யேகம். விலை - அணா - ௬.

இங்ஙனம்,

க. வ. திருவேங்கட நாயடு.

பச்சையப்பமுதலியார் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

சென்னை.

ஸ்ரீ

இராமஜயம்.

திரிசிரபுரம் மஹா வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ

மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

பூமலி குளிர்தென் புனற்பெருந் தடத்துக்
கவையடிச் செங்கட் கரும்பினார் மருப்புக்
கடமருள் செருத்தற் கவரிதுன் பரிக்கு
புழுக்கா லாம்பற் பூசனி மிசைவாய்
மீமுறெழுமு தாட்டைபைங் குட்டனை மிரிய
மடற்செழு நாரை வயிரெனப் பிளிறக்
கயமினை மடவார் கண்ணெனப் பிறழப்
சலஞ்சலப் புஞ்சந் தளைபுக் கொளிப்ப
முட்டாட் டாமரை மொய்த்தலை இடக்கு
மகஞ்சிறைத் தும்பி யகன்குலைப் பரப்பிற்
றேங்கமழ் பொங்கர்ச் செறிந்திறை கொள்ள
மாங்கனிக் கொள்ளை வரம்பில வுதிரக்
குறுங்கழுத் தரம்பைக் கூன்குலை முறிய
முட்புறப் பாகன் முதிர்கனி யிழியச்
செறிபசுங் கந்திச் செம்பழஞ் சிதறப்

பொலியிலாங் கலிமுப் புடைக்காய் வீழ
வெழுபுமீத் தகட்டகட் டிளவரால் பாயக்
கருங்கடற் பாயுங் கந்தர நிகர்ப்பக்
கதழ்விற் பாய்ந்து கலக்குபு ழிதந்து
கதிரிளம் பசும்புற் கறிக்கக் கல்லா
மழவிளங் கன்றைப் படர்ந்துவார்ந் தொழுகப்
பொழிபால் பெருகிப் புணர்திரைத் தீம்பா
லாழிகொ லோவென் றமரரு மயிர்ப்ப
மடையுடைத் தோடும் வரையாப் பெருவள
நல்லூ ரென்னும் வல்லூ ரதிபன்
பார்கரு ணீப்பப் பயில்குல மென்னுஞ்
சீர்கரு ணீகர் செழுங்குல சிகாமணி
மின்னப் பேந்திய வேணியற் கன்புறு
மன்னப் பேந்திரன் வரத்தினி லுதித்தோ
னிமையவர் தருவு மிமையாச் சுரபியுங்
கமஞ்சூன் முகிலுங் கதிர்கான் மணியு
மருநிதி யிரண்டு மழுக்கா றடையப்
பெருங்கொடை யெவர்க்குந் தருங்கர வள்ள
லொழுக்கமுஞ் சீலமும் விழுப்பெறு தவமு
மாரு வன்பு மானமும் பொறையு
நாடொறு நாடொறு நலம்பெற வளர்ப்போ
னீனிறஞ் சேரா நெடுமால் போல்வா
னுண்ணறி வுடையோர் நூற்பொருள் விரும்புந்
தன்னளி யிராம சாமிக் குரிசி
றன்னுடை யரும்பெறற் றமய னாகிய
தழைபுகழ் வீராச் சாமி மகிப
னுஞற்றிய தவத்தா லுதயஞ் செய்த
தேவ ராசச் செவ்வே ளென்பா
னற்குணம் பொறுமை* ஞான வொழுக்கங்

சிறப்புப்பாயிரம்.

குறையா தமைந்த நிறைவு பூண்டு
தொல்காப் பியமுதற் றோன்றிலக் கணமு
முன்னுமைங் காப்பிய முதலிலக் கியமும்
பற்பல சமய ரற்புறு நூலு
மற்றுள கலைகளுங் கற்றினி துணர்ந்து
மிகுவட நூலுளும் வேண்டிய தெரிந்து
சோதிட நூலுந் துரிசற வோர்ந்து
பிறங்குறு மறிவிற் பெரியோ னாகி
வன்புகழ்க் குசேல மாதவன் சரிதையைத்
தமிழிற் பாடத் தானஃ தறிந்து
தன்னவைக் களத்து மன்னுற வழைத்துத்
தொக்கள வில்லார் சூழ விருப்ப
விரித்துரைக் கென்று விருப்பிற் கேட்டுக்
கவிதொறுங் கிடக்குங் கற்பனை வியப்புஞ்
சொல்லுடை மாண்புந் தொகுபொருண் மாண்பு
மற்றுள சிறப்பும் வகைப்பட வாராய்ந்
தற்புத மற்புத மென்றக மகிழ்ந்து
விரிகடல் சூழ்புவி விளங்கப்
பரிவுட னச்சிற் பதிப்பித் தனனே.

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

ஸ்ரீ

இராமஜயம்.

குசேலோபாக்கியானம்.

பாயிரம்.

காப்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடலுடைப் புவிவா ழுயிரெலாங் களிக்கக் காத்தருள் கண்ணனோ டருநூ, லடலுறப் பயின்று பின்னவ னருளா லருந்திருப் பெறுகுசே லன்றன், மிடலுடைக் காதை விளம்பிட வூறு விரவிடா தளித்தருள் புரிய, மடலுடைக் கடுக்கைச் சடைமுடிக் கபோல மதக்கய மழவிளங் கன்றே.

கடவுள்வாழ்த்து.

குடத்தியர் துகிலைக் கவர்ந்தவன், முனிவர் கோதையர் மூரல் பண்ணியங்க, ளிடக்களித் துண்டோ, னிந்திர னேவ வெழிலி

குசேலோபாக்கியானம் — குசேலரது சரித்திரத்தைக் கூறும் நூல். குணசந்திபெற்ற வடமொழித்தொடர்; ஆறும் வேற்றுமைத்தொகை. கு + சேலன் - குற்சிதமான (பொலிவற்ற) ஆடையையுடையவன். இதனை முதலத்தியாயத்தில் (௫௬) வது செய்யுளானுமுணர்க. உபாக்கியானம் - கிளைக்கதை; இது ஸ்ரீபாகவதத்துள் தசமஸ்கந்தத்தில்வருவதோர் சிறுகதையாதலால். ஆக்கியானம் - கதை.

(௧) குடத்தியர்-ஆய்ச்சியர். மூரல் - சண்டு முனிவர் அவிர்ப்பாகத்திற்காக வைத்திருந்த அன்னம். கோவர்த்தனம் - பசுக்

கள் பொழிந்தகன் மழையைத், தடப்பெருங் கோவர்த் தனங் கரத் தேந்தித் தடுத்தவன், கமலைவாழ் மார்பன், வடப்பசுந் தளிரி னினிதுறை கண்ணன், மலர்தலை யுலகெலாங் காக்க. (க)

வேய்ங்குழ லிசையாம் வலியமர் திரத்தின் மேன்மைசால் யாதவர் குலத்துப், பூங்குழன் மடவார் தம்மைத்தன் வசமாப் புரிந்துவெ ணூட்டடிக் கலவி, யாங்கவர் பார்ப்பன் குனியற் றியசீ ராழியங் கரதலக் கொண்டல், வாங்குநீர்ப் பரவை யுலகுயிர்க் கென்றும் வழங்குக திருவொடா யுளுமே. (உ)

மலர்விழித் தேவ கிக்குமன் மகனாய் மகிதலத் தவதரித் ததன்பின், பலர்புகழ்ந் தேத்து நந்தகோ பாலன் பனிமதி யானன யசோதை, யலர்மனங் களிப்ப வாடுறாஉம் பால னாகிய வையனே நன்று, வலர்பரா வுறப்பல் வளங்களு முயிர்க்கு வழங்கி யாண் டருள்செய்வ னன்றே. (ங)

குடம்புரை செருத்தற் கோவுமந் தணருங் குறைவறு சுபம் பெற வென்று, மிடங்கொள்பல் லுலகு மிருசுக முறுக வென் றுமா ரியருமோ னியருந், திடம்பட வெண்ணு மெண்புரந் தி

கள் விருத்தி யடைவதற்குக் காரணமான மலை. இந்திரன் கன்மாரி பெய்வித்ததற்குக் காரணம் கோபாலர்கள் அவனுக்கியற்றும்வழிபாட்டைக் கோவர்த்தனத்துக்கியற்றக் கண்ணன்பணித்தமையின் என்க. கமலை - இலக்குமி. வடதளிரின் இனிதுறைதலென்பது பிரளயமுடிவில் உலகனைத்தையும் தம்முளொடுக்கிக்கொண்டு ஆலந்தளிரி னறிதுயிலமர்தலின்மேற்று.

(உ) வேணூல்-மதனுகமம். (ங) இச்செய்யுளோடு "ஒருத்திமகனாய்ப் பிறந்தோரிரவி லொருத்திமகனா யொளித்துவளர" என்ற ஆண்டாள் திருப்பாவையை ஒப்பிடுணர்க.

(ச-ரு) செருத்தல் - பால்மடி. 'குடம்புரை செருத்தற்கோவும், என்றும் 'விளங்குமாவினை' என்றும்; 'அந்தணருங்குறைவறு சுபம்பெற' என்றும் 'மறையவர்குழாத்தினைப் பேணுக',

டுகெ திரைக்கடல் கிழியமத் தெறிந்து, மடம்படு மவுணர்ச் சவட்டியொள் ளமுதம் வானவர்க் கூட்டிய முதலே. (௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரும்பும் யாம்வனை குேம்பதக் கடவுளே விளங்குமா வினைமிக்க, பெரும்பு கழ்ச்சிசான் மறையவர் குழாத்தினைப் பேணுக வெனவேத, மரும்பும் வாக்கிய முங்தொழி லாறினோரறையுமா சிகளோங்கிப், பரம்ப வெண்ணுறூஉம் பெரியவரெண்ணமும் பாலிக்க நெடுமாலே. (௫)

மேற்படி வேறு.

இளமழக்கன்றைப்பூட்டியெஞ்சியதீம்பால்வெள்ளம்
வளமலிகானவைப்புமருதவைப்பாகப்பெய்யுந்
தளர்வறுசெருத்தலாக்கடங்குரச்செந்தாள்குஞ்சி
யளவறவடைந்துசேப்பவவற்றினைப்புரந்தோன்வாழ்க. (௬)

என்றுங் கூறியது 'గోబ్రాహ్మణేభ్యశ్శుభమస్తునిత్యం' (கோப்பிராஹ்மணேப்யசுபமஸ்துநித்தியம்) — பசுக்களுக்கும் அந்தணர்களுக்குஞ் சுபமுண்டாகுக. என்ற வசனத்தையும்; 'பல்லுலகுமிகுசுகமுறுக' என்றது 'లోకాస్సుఖినోభవంతు' (லோகாஸ்ஸுகினோபவந்து) — உலகத்தோர் சுகங்களை அநுபவிக்கக் கடவர் என்ற வசனத்தையும்; 'தொழிலாறினோரறையுமாசிகள்' என்றது 'నమోబ్రాహ్మణ్యదేవాయగోబ్రహ్మణహితాయచ' (நமோபிராஹ்மண்யதேவாய கோப்பிரஹ்மணஹிதாயச) — பிராமணவருணங்களுக்குரிய தெய்வமாயும் கோக்களுக்கும் பிராமணர்களுக்கும் இதஞ்செய்பவனாயுமுள்ள கிருஷ்ணன் என்றவசனத்தையும்; 'பெரியவரெண்ணமும்பாலிக்க' என்றது, 'అమోఘాబ్రాహ్మణాశిషః' (அமோகா பிராஹ்மணாசிஷ:) — பிராமணாசிர்வாதம் வீணாகாது என்ற வசனத்தையும் உணர்த்திநின்றன. ஊட்டியமுதல் பெறவும் உறுகவும் எண்புரந்திடுக என்பது.

எண்-எண்ணங்கள். வாக்கியமும் எண்ணமும் பாலிக்கவென இயையும்

(௬) பால்வெள்ளம் பெய்யும் செருத்தலென்க. குரம்-குளம்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இமைத்தலில் விண்ணோர் மடந்தையர் சமழ்ப்ப விலங்குறு
மிளநல வெழிலா, ரமைத்தட மென்றோ ளாய்ச்சியர் விழியா
மம்புயத் தேமலர் மலரச், சமைத்தபூண் மார்பன் றேவகி
யீன்ற தநயன்போ ரேற்றவன் மல்லைக், குமைத்தருள் கண்
ணன் பேசருஞ் சீரிக் குரைகட லுலகின்வா ழியவே. (௭)

கலிவிருத்தம்.

தாவகிச்சிரத்தினிற்சரண்வைத்தாடினோன்
பூவகிற்கரும்புகைபோர்த்தபொற்குழன்
மாவகிர்க்கருங்கண்வேய்வாட்டுந்தோட்டுணைத்
தேவகிதநயனைச்சிந்தைசெய்குவாம். (௮)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏழிரண் டென்னும் புவனங்காத் தளிப்போ னெழில்வசு
தேவன்றன் மைந்தன், வீழியங் கனிவாய்க் கொடியழன் மக
ட்கு மென்றுகி லளித்தவைங் கொண்ட, ருழிருங் கூந்தற் பூத
னை யுயிரைச் சவட்டினோன் றவாநல முண்டோன், பாழியம்
புயத்துச் சேதிபற் றுணித்த பண்ணவன் மலரடி பணிவாம்.()

கலிவிருத்தம்.

மாதவர்பன்னியர்மனமென்றாமரைப்
போதகத்தனமெனப்பொலிந்தமாண்பினா
னாதவர்கோடியரருங்குகாந்தியான்
பாததாமரைமலர்பணிந்துபோற்றுவாம். (௧௦)

---

(௭) சமழ்த்தல் - நாணுதல். மல் - தொழிலாகுபெயராய்ச் சாணூரன் முஷ்டிகன்முதலியோரை யுணர்த்திற்று. பூணைச் சூரியனாக உவமித்தவாறு.

(௮) அகி-பாம்பு, (காளியன்.) வகிர்-பிளவு.

(௯) அழன் மகள்-திரௌபதை. தாவ+அநலம் - தாவாநலம்; அது தவாநலமெனக்குறுகிற்று. (காட்டுத்தீ.) சேதிபன்-சேதிதேயவரசன்; (சிசுபாலன்.) (௧௦) பன்னியர்-மனைவிமார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்ந்ததழ லிறைக்குமதிற் புரத்தரசு கரக்கொடிகட் கரிவா ளாகிக், கூர்ந்தமதி யிலாக்கஞ்சன் றூசுகொடு வருமீரங் கொ ல்லி வாழ்நா, டீர்ந்திடச்செய் விதியாகிக் கற்றுக்கட் குரிஞ்சு செறி தறியு மாகி, வார்ந்தகுழ லாய்ச்சியர்க்கோர் வேளாகி நின்றானை வழுத்தல் செய்வாம். ()

வித்தியாதருவணக்கம்.

சீராருந் திரிசிரா மலையின்வளர்ந் தெக்காலுஞ் சிறப்பி னோ ங்கு, மேராருங் கலைக்கடன்முற் றுண்டாங்கு நின்றெழீஇ யெ ன்வி வேக, வாராருந் தடகிரம்ப மனப்பறம்பி னினியதமிழ் மாரி பெய்த, பேராரு மீனாட்சி சுந்தரதே சிகமுகிலைப் பேணி வாழ்வாம். (கஉ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவபரஞ் சுடரி னிணையடி மலரைத் திரிகர ணத்தினும் வழாது, பவமறத் தினமும் வழிபடு குணாளன் பகர்திரி சிரபுரத் தலைவன், சிவமுறு தென்சொ லைந்திலக் கணத்திற் றெளிவுறச் சிறியனேற் கருளு, நவமுறு புகழ்மீ னாட்சிசுந் தரவே ளணன் மல ரடிமுடி புனைவாம். (கங)

நூல்வரலாறு.

மறைமுழு துணர்ந்த வியாதமா முனிவன் மைந்தனுஞ் சுக ப்பெயர் முனிவன், கறைதபு செங்கோற் பரிட்சித்து மன்னன் களிப்பொடு கேட்டிடப் புகன்ற, நிறைபுகழ்ப் பாக வதத்தி லோர் கதையாய் நிலவிய குசேலன்மாக் கதையைத், துறை கெழு செஞ்சொற் றீந்தமிழ்ப் பாவாற் சொற்றிட லுற்றனென் மன்னோ. (கச)

(கக) தழன்மதிலரசு - அக்கினியைக் கோட்டைமதிலாகக் கொண்ட வாணன். ஈரங்கொல்லி - வண்ணான், (இவன் கம்ஸன் தூசுகளை வெளுப்போன்.)

(கஉ) பறம்பு - மலை. (கச) தபுதல் - கெடுதல்.

அவையடக்கம்.

கனைகடன் முகிலைப் பார்த்தெனீ ருவரைக் கழிப்பிமன் னுயி
ர்க்கெலா மினிதாப், புனையெனக் கேளா தெனினுமம் முகிலே
புரியுமென் செய்யுளின் புகரை, நினைவரு முழுநூ லுணர்ந்தவ
ரகற்றி நீடுல கினுக்கினி தாக்க, வினையறை யான்கேளாதிருந்
திடினு மதுபுரிந் திடலவர்க் கியல்பே. (௧௫)

சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமேவு மணிமார்பன் மலரடிகண் மருவுதிரு மனத்தி னோ
ன்பொற், கோமேவு பொழிற்றிருவூ ரதிபதிசீர் கருணீகர் குல
வி சேடன், பாமேவு பெருஞ்சீர்த்தி மிகுநாரா யணவள்ளல்
பயந்த மைந்தர், தேமேவு மலர்மாலைக் கோவிந்த முகில்சீநி
வாசச் செம்மல். (௧)

இருவருநற் குசேலமுனி சரித்திரத்தை யுலகுள்ளோ ரின்ப
மெய்த, வொருவருமின் சுவைத்தமிழிற் பாடியரு ளுகவென
வுள் ளுவந்து கேட்பப், பொருவருசெஞ் சொற்சுவையும் பொ
ருட்சுவையு மணிநலமும் பொலிய வார்த்தி, மருவருகாப் பிய
வுறுப்பும் வயங்கநயங் காட்டியெழு வழுவும் வீட்டி. (௨)

இனிதமிர்த சுவையினுமிக் கஃதிதனின் சுவையதென வியற்
றி னானற், றனிதநிரை தவழ்மனைவல் லூர்வீராச் சாமியண்ண
றந்த மைந்தன், கனிதரும நல்லொழுக்கங் குணமனைத்து மோ

---

(௧௫) கழிப்பி - கழித்து.

**இச்சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் இந்நூலாசிரியர் காலத்தி
ருந்த வித்துவான்களா லியற்றப்பட்டன.**

ருருக்கொள் காட்சி போல்வான், புனிதமிகு கலையுணர்ச்சித் தேவரா சக்குரிசில் புலவ ரேறே. (௩)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏராருஞ் சகாத்தமா யிரத்தெழுநூற் றெழுபத் திரண்டி னிகழ் சௌமியநல் லாண்டுதனுத் திங்கள், வாரார்ரு மிருபத்து நான்காநாள் பரிதி வாரமொன்பான் றிதிசோதி சிங்கவிலக் கினத்திற், பேராருங் குசேலமுனி தனதுசரித் திரத்தைப் பெட்பினினி தருந்தமிழி னியல்செறியப் பாடித், தாராரும் புயத் தேவ ராசவள்ள லான்றோர் தழைந்துவகை பூப்பவரங் கேற்றி னனுண் மகிழ்ந்தே. (௪)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்வளர் குசேலோ பாக்கியா னத்தைச் செந்தமிழ்ப் பாவி னிற் செய்கென், றூர்வளர் திருவூர்ச் சீநிவா சேந்திர னோர்வ மீக் கூர்தரப் புகலக், கார்வளர் வல்லூர்த் தேவரா சப்பேர்க் கவிச்சக்ர வர்த்திசெய் தளித்தா, னோர்வள ரியன்முற் றுணர்ந் தநற் புலவ ரின்புளங் கொண்டிட மாதோ. (௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாமநறு முளரிதுயல் வருதடங்தோ ளெழில்வீராச் சாமி யீன்ற, காமருசீர்த் தேவரா சப்பெரியோன் பலகலைதேர் கவி ஞோ ருள்ள, மேமமுறக் குசேலசரி தம்பகரு நற்றிறன்மு னெண்ணி யன்றே, வாமனன்றிண் டோள்ககுபந் தாவவுடல் பூரித்தான் வையத் திரே. (௬)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருமறை நான்கு மன்புட னேத்த வரவணை தனில்விழி வளர்வோன், றிருவருள் பெற்ற குசேலமா முனிதன் சீர்வளர் சரிதநன் குரைத்தான், பெருவள மோங்குந் தொண்டைநன்

---

(௩) தனிதம் - முழக்கம். (௬) ககுபம் - திசை.

ளுட்டிற் பிறங்கும்வல் லூரினில் வாழ்வோன், மருவளர் மாலை
த் தேவரா சேந்திரன் வயங்குபல் கலையுணர்ந் தவனே. (எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பார்புகழுங் குசேலமுனி சரிதமதைத் தமிழ்ப்பாவிற் பகர்ந்
தான் றூய, சீர்தவழு நெடுஞ்சடிலச் சிவபிரான் பதயுகளீ நில
வு நெஞ்சன், கார்பொலியுஞ் சோலைபுடை யுடுத்தொளிர்வல்
லூராளி கவிஞர் போற்றுஞ், சீர்திகழுங் கருணீகர் குலத்துதி
த்த தேவரா சேந்திரன் மன்னே. (அ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சந்தத முற்ற விருந்தினை யோம்புந் தக்கவேங் கடகிரு — டி
ணப்பேர்க், கந்தவேள் பின்வந் துதித்தவன் றிருவூர்க் காவலன்
முட்பொதி பசுந்தாட், கந்தநற் கமல மாலைசூழ் ஃதாளான்
கலையுணர் சீநிவா; சப்பே, ரிந்திரன் வேண்ட வெழிற்றிரு வூர்
ப னிணையடிப் பூசனை யியற்றி. (கூ)

இல்லறத் திருந்தும் புளிம்பழ மேய்ப்ப வியைந்தவுட் டுற
வடை குசேல, னல்லதீஞ் சரித நாவல ருள்ள நனிமகிழ் தரத்
தமிழ்ப் பாவாற், பல்லவச் சோலை சூழ்வல்லூ ராளி பகருந்
தேவரா சப்பேர், வல்லவன் புரிந்த திறத்தையிற் றென்ன வகு
ப்பவ ருலகினி லெவரே (கo)

பாயிரமுற்றிற்று.

ஆகச் செய்யுள் - உகூ.

குசேலமுனிவர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

முதலாவது

குசேலர்மேல்கடலடைந்த அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலாம்புகழநாளுமுயர்மதிகுலத்திற்றோன்றி
யலகில்பல்லுயிருமின்பமடையவொள்குடைநிழற்றி
யிலகுசெங்கோல்கைக்கொண்டவெழிற்பரீட்சித்துவேந்தே
கலமுறிக்கதைகேளென்றுநற்றவச்சுகன்சொல்வானால். (௧)

குத்தரங் குடிகொண் டாங்குக் கொழும்பொன்மா ளிகை
க ளோங்கிச்; சுத்தரங் களவி லார்க டொகுப்புற வின்ப நல்கி,
யித்தரங் கஞ்சூழ் பூமிக் கெழின்முக மாகி,யென்று, முத்தர
மதுரை யென்னு மொருநகர் விளங்கா நிற்கும். (௨)

அந்நெடுநகரின்பாங்கரந்நலாருடிநீத்த,
தந்நெடுமணிக்கலங்கடமறுகூற்றுமுற்றத்
துன்னியவிருளைமேயத்துறக்கமென்றமரர்நாளு
மன்னியவிமைக்குஞ்சீர்த்திமாநகரவந்தியுண்டால். (௩)

---

(௧) பரீக்ஷித்து - கர்ப்பத்திலிருந்தபோதே நம்மைக்காத்த கடவுள் யாவரென்று பரீக்ஷித்த காரணத்தால்வந்த பெயர்.

(௨) குத்தரம் - மலை; பூதரமென்னும் பொருளது. ஆங்கு - உவமஉருபு. உத்தரமதுரை - இது முத்திநகரம் ஏழனுளொன்று; பின்கூறும்அவந்தியும்அது. முத்திநகரம் ஏழாவன:—அயோத்தி - மதுரை - மாயை - காசி - காஞ்சி - அவந்தி - துவாரகை.

(௩) மன்னிய - வினையெச்சம்.

செந்தமிழ்பழுத்தநாவிற்றிஞ்சுவைப்புலவரானு
மந்தமிழ்ச்சேடனானுமுரைதரமுடியாச்சீரச்
சுந்தரநகர்வளப்பஞ்சொலவெனக்கடங்காவேனுஞ்
சிந்தையிற்களிப்புத்தூண்டச்சிறிதனித்துரைப்பல்கேண்மோ.

துறைதுறைதோறுஞ்சங்கஞ்சூன்முதிர்ந்துயிர்த்தமுத்த
மறைபுனல்வாரியெக்கராக்கிடவரப்பிலேறித்
தறைசமஞ்செய்துவித்தித்தண்புனன்மள்ளர்பாய்ச்சக்
கறையடியாய்க்குஞ்செந்நெற்கதிர்க்குலைச்செறுக்கள்சூழும். ( )

கலிநிலைத்துறை.

வாவிமல்கியவனசமாமலர்பொழிதேனுங்
காவின்மல்கியகரிசறுமலர்கொழிமதுவும்
பூவின்மல்கியநதியெனப்புரண்டுமாலென்னத்
தாவிவாளைஞ்சாற்றருநெல்வயல்வளர்க்கும். (௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செம்பொனால்வெண்பொனால்விற்செறிபலமணிகளாற்செய்
தம்பொன்மாநகரந்துள்ளாலமைத்தனர்வேண்டாரற்று
னம்புநாம்புறத்தேநிற்றனனென்றெனக்கொண்டாற்போலும்
பம்புவார்கதலிகந்திபைங்கழைபொலியுங்காட்சி. (௭)

நெய்க்கருங்கூந்தன்மின்னார்நீர்குடைந்தகற்றுநான
மெய்க்கவின்மறைத்தசாந்தம்விண்ணுலாநதியுநாறச்
செய்க்கருங்குவளைமேய்ந்ததிண்மருப்பெருமைபாய
வைக்கழுக்கடையேபோன்மேல்வாளைபாய்வாவிமல்கும். (௮)

---

(௪) மோ - முன்னிலையசை.

(௫) எக்கர் - மேடு. கறையடி - யானை (அன்மொழித்தொகை.) மாய்த்தல் - ஈண்டுமறைத்தல்.

(௬) வாமனனாயணுகி வளர்ந்தோங்கிய திரிவிக்கிரமன்போல வானளவும் நெல்வயலைவளர்க்கும் என்க. (௭) கந்தி-பாக்குமரம்.

கலிநிலைத்துறை.

புள்ளவாமலர்க்கணையினனன்னபொற்பினரு
மெள்ளரும்புகழிரதியையேய்க்குமாதர்களு
முள்ளமிக்குவந்துடங்குகைகோத்தனர்சென்று
வெள்ளநீர்துளைந்தாடுறூஉமெழில்வளமேவும். (௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேதினிமுளைத்தவாற்றால்விண்ணவர்த்தெறுபாக்குற்றுங்
கோதுவிற்பத்திரங்கொண்டுறுதளிராற்சிவந்து
தாதிவர்தண்பூங்கற்பத்தருக்குலம்விதிர்விதிர்ப்பத்
தீதறுசுவர்க்கநாட்டைத்தினமுஞ்சென்றுரிஞ்சுஞ்சோலை. (௧௦)

பொங்குபல்லவப்பூஞ்சோலைபுதுமதுக்கனிகள்காய்க
டெங்கிளநீர்கண்மற்றுந்தேவருமரம்பைமாரு
மங்கிருந்தயிலநாளுமளித்திடுநல்லூழற்றோ
ரெங்கிருந்தாலும்வேட்டயாவையுந்துய்ப்பரன்றே. (௧௧)

கலிநிலைத்துறை.

வண்டர்பாண்செயமதுமலரசும்புபூம்பொழிலில்
வண்டலாட்டயர்மகளிர்தம்வளம்பொதிகிளவி
வண்டளிர்ச்சினைமாங்குயில்பயிலுறுமயிலவ்
வண்டலர்ந்தகையாருருச்சாயலைவெளவும். (௧௨)

கலிவிருத்தம்.

மஞ்சினமெனமடமாதரோதிகண்
டஞ்சிறைமயிலகங்களிகொண்டாடுவ

---

(௧௦) மேதினி மதுகைடவரென்னும் அசுரர்களின் மேதை சம்பந்தமுடையதாகலின் அதின்முளைத்தசோலையும் அக்குணம் படைத்ததுபோன்று இவ்வாறுசென்று உரிஞ்சுமென்பது. பாக்கு - வினையெச்சவிகுதி. விற்பத்திரம் - ஒளியுள்ளதளிர்கள், வில் வாள். சிவத்தல் - செந்நிறமடைதல், சினத்தல் என்க.

(௧௧) பல்லவம் - தளிர். (௧௨) வண்டர் இறுதிப்போலி. ஈற்றடியில் வண்டு - வளையல். (௧௩) சாம்புதல் - ஒடுங்குதல்.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

விஞ்சிருட்பூம்பொழின்மேவுகோகில
மஞ்சிவாய்திறந்திடாதழுங்கிச்சாம்புமால். (௧௩)

ஏவுலாமிருவிழியிபத்தின்மென்னடைப்
பூவலர்கருங்குழற்பொன்னனாபயில்
பாவுளர்வண்டினம்பருகத்தேன்பொழி
காவுசூழ்வனப்பினைக்கணிக்கலாகுமோ. (௧௪)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெண்மணி கொழிக்குங் கடனெடு நகர்மேல் வெகுண்டுமுற்
றியதென வொளிருந், தள்ளமதுப் பிலிற்றுந் தாமரை யாதி த
ளைந்ததாழ் கிடங்குமற் றதனை, யண்மையி னகர்கண் டஞ்சி
யுட் செல்லா தாற்றிய பெருந்தடை கடுக்க, வொண்மயி லாதி
யவனர்செய் பொறிக ளுறும்பெரு மதிலுஞ்சூழ்ந் தனவால். ()

கலிநிலைத்துறை.

மாதர்பண்பயின்றுடுறூஉமணியரங்கவண
காதளாவியகுழையினார்கண்வலைகடந்த
மாதவத்தினர்மன்னுறுமடங்களுமவண
வோதநீருலகோதுறுசாலையுமவண. (௧௬)

கலிவிருத்தம்.

வண்டிமிர்குழலினார்வதனப்பேரெழிற்
கெண்டகுமுழுமதியெதிரற்றேகுதல்
கண்டுமைதீட்டறிகுறியைக்காசினி
மண்டியகளங்கெனமயங்கியோதுமால். (௧௭)

---

(௧௪) பயில் கா எனக்கூட்டுக. (௧௫) கிடங்கும் மதிலுஞ் சூழ்ந்தனவென இயையும் பொறி - போரேற்றுவந்தோரை யொறுக்கச் சூத்திரத்தோ டமைக்கப்பட்ட மதிலுறுப்பு.

(௧௬) அவண - அவ்விடத்தன. (௧௭) இமிர்தல் - ஒலித்தல் களங்கு கடைக்குறை.

ஒழுஙகுறுசுடர்களையுற்றுவிக்குற
விழுங்குறுபாப்பிணம்விட்டொளித்திடல்
செழுங்கதிர்மாடமேற்சென்றுலாமயி
லமுங்கியசாயலார்க்கஞ்சிப்போலுமால். (௧௮)

கிஞ்சுகமங்கலார்கிளக்குந்தேமொழிக்
கஞ்சிடாதெதிர்த்தலினவற்றைநாடொறும்
வெஞ்சிறையிட்டெனவிளங்குபன்மணிப்
பஞ்சரத்திருவினுர்பாவையன்னவர். (௧௯)

வெஞ்சிறைப்பட்டவர்தமக்குவேண்டிய
வஞ்சவையுணவறவரசளித்தல்போல்
வஞ்சியரச்சுவாகதங்கள்வாய்மடுத்
துஞ்சிடக்கனிமுதலுணக்கனல்குவார். (௨0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறைபடுதம்மைநீத்தல்செய்தனல்லறனுமென்னுக்
கறைதபுமொழியின்வேண்டல்கடுப்பப்பைஞ்சிறையகிள்ளை
நிறைமலர்க்குழலாருள்ளநெகிழ்தரவினியதீஞ்சொ
லறைதருமவருநீக்கியங்கையினேந்துவாரே. (௨௧)

கலிநிலைத்துறை.

விண்டேவரிமைத்திலர்நோக்கவிளங்குபொற்பிற்
பண்டங்கணிவந்துயர்பற்பலவாவணத்தின்
றண்டாதபெரும்புகழிற்றெனச்சாற்றவல்லோ
ரொண்டாரணியிலிலையென்னிலுரைப்பதென்னே. (௨௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துறவறத்தடைந்தோரில்லந்துறந்தமைக்கிரங்கவில்லத்
துறவிருக்கின்றமாந்தருள்ளனவெல்லாமீந்து

(௧௯) கிஞ்சுகம் - கிளி. சுவாகதமென்பதும் அது. பஞ்சரம் - பறவைக்கூடு.

பிறர்நகைபொருமலந்தப்பெருந் துறவடையப்போகந்
திறமுறவிற்குமின் ஞர்மெய்ச்சிந்தருந்தெருக்கள்பல்ல. (உங)

வருவிருந்தெதிர்கொண் டேற்றமலர் முகமினிதுகாட்டி
யருமைசான்முகமன்கூறியறுசுவையுணவூட்டித்
திருமலிசுவிமுனேஞர்க்குச்செம்பொன்முன்னுதவிக் [ல.
பெருமைசான்றொழுகும்பின்னோர்பெருகிவாழ்தெருக்கள்பல்

அன்னியர்பொருளுந்தம்மருப்பொருளெனவுள்ளத்
துன்னியான்றனந்தமையவூர்ந்துமல்லலைத்தகண்ட
வென்னருமிறும்பூதெய்தமெய்மின்மிருப்பவணிகரென்று
மன்னிவாழ்வெய்துமக்கமறுகுகள்பலவுமங்கும். (உ௫)

தேசினிற்சிறந்தோர்செல்வத்திருந்தினியுயர்ந்தோராற்றும்
பூசலில்வென்றிகொள்ளும்போர்ப்புலியனையராய
வாசமார்மாலைமார்பர்மழையெனவிரவலாளர்க்
காசறுதானமீயுமரசர்வாழ்மறுகுமோர்பால். (உசு)

மறுவறுமுத்தியென்னும்வளர்ப்பவரைந்தென்றேனுந்
தெறுபுலனவித்தமேலோர்செய்யமாறுறுதுசெங்கேழ்
நறுமலருந்திபூத்தநாதனையனையராய
ராறுதொழிலாளர்வீதியவண்பலவயங்குமன்றே. (உஎ)

தேரொலிபுழைக்கைமாக்கள்சீறிசைபரிமாவோதை
வாரியைகழற்கால்வீரர்மணிப்புயந்தட்டுமார்ப்பு

(உங) இரங்க அடையவிற்குமென இயையும்.

(உ௫) என்னரும் - எத்தகுதியரும். இறும்பூது - ஆச்சரியம்.

(உசு) மழையெனஈயும் என்றது "கைம்மாறுவேண்டா" என்னுந் திருக்குறளின் கருத்து.

(உஎ) முத்தீ - ஆகவனீயம் தக்ஷிணாக்கினி காருகபத்தியம். இவை முறையே சதுரம் முக்கோணம் வில்வடிவுடைய குண்டங்களில் வளர்ப்பன. இவையே திரேதாக்கினியென்பர்.

நாரியர்சிலம்பின்சும்மைநரப்பியாழரவமின்னா
சேரவொன்றாகியேழுதிரைகள்வாயடக்குமன்றே. (உஅ)

கலிநிலைத்துறை.

அளகைவேந்தனையனந்தனைமதனனையரிய
பளகில்செல்வத்தாற்குறைவறுகல்வியாற்பகர
வளவின்மேனியின்வனப்பினால்வென்றமற்றவர்தந்
தளர்வில்சீர்த்தியைச்சாற்றிடவல்லனல்லேனே. (உகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெள்ளியகோட்டுவேழம்வென்றிவன்றிருகுகோட்டுத்
துள்ளியதகரின்வென்றிதுணர்க்கவிர்ச்சூட்டுமுட்காற்
புள்ளியசேவல்வென்றிபுகரிலாக்குறும்பூழ்வென்றி
யுள்ளியபிறவுநாளுமுலப்பறவீரர்கொள்வர். (௩0)

கோச்சகக்கலிப்பா.

தோடலர்நந்தனவனங்கடொறுமலர்பன்மலர்வாவி
நீடொளியகோபுரங்கணெடுமதிற்பொன்மாளிகைக
ளாடவர்கடுதிமுழக்கநாடொறுமின்னியமுழக்க
மாடலொடுபாடலறாவாலயங்கள்பலவாங்கண். (௩க)

கலிநிலைத்துறை.

தரங்கவாரிசூழ்தருந்தாத்திரிமாந்த
ரிரங்கும்வெண்டிரைவாவியின்மூழ்கிநந்தனத்திற்
குரங்கவார்சினைமல்கியகொழுமலர்நாளுங்
கரங்கொடன்புடனருச்சிப்பர்காலங்கடோறும். (௩உ)

கோச்சகக்கலிப்பா.

இன்னவளம்படைத்தெவருமிறும்பூதுகொண்டடையப்
பன்னரியவுத்தமத்திற்பயிலுநால்வகைக்குடியுங்

(உஅ) திரை-கடல்; சினையாகுபெயர். (உகூ) பளகு-குற்றம். (௩0) கவிர் - முண்முருக்கு. குறும்பூழ் - காடை. (௩உ) தாத்திரி - உலகம், சினை குரங்க எனமாற்றுக ; குரங்கல் - வளைவு.

துன்னுபுறக்குடிமூன்றுந்தொக்குறையவிளங்கிடுமப்
பொன்னகருக்கணித்தாகப்பொலிபெருங்காடொன்றுளதால். ()

மந்தாரங்கச்சோலம்வாழைசேவெட்பாலை
சந் * தார்பிடாவகுளஞ்சவ்பகங்கூவிளநாக
நந்தாதவேங்கைஞெமைமைமருங்கைமுருக்ககில் † யா
சிந்தாதவழைபுன்னைசிந்துவாரஞ்செருந்தி. (௩௪)

சிந்துரமாமராவராசுசெங்கடம்பேழிலைப்பாலை
குந்தமாதுளைஞாழல்குங்குமமுந்திரிகை ‡ யா
கந்திகளாவிளாந்தென்னைகடுக்கைதேக் ¶ கோமைமுத
லந்தில்பலசெழுந்தருக்களடர்ந்தொளிருமவ்வனமே. (௩௫)

மலரினிழிகொழுந்தேனும்வைத்தூவிருந்தசெழுந்தேனு
மலகில்பலகனித்தேனுமடைக்கலுழ்நீர்ப்பெரும்புனலு
முலவையிரண்டுடையகளிற்றூறியமும்மதப்புனலுஞ்
சலசலவென்றோட்டெடுத்துத்தடங்கடலேழெனப்பெருகும். ()

விளங்கனியுமாங்கனியுமினிர்பாகற்செழுங்கனியுங்
களங்கனியும்விளங்கருணைக்கனியுநாரத்தக்கனியும்
வளங்கனியுமிவைமுதலவாரெவரும்வாயூறி
யுளங்கனியும்வகைபழுத்தவொண்சினையதருக்களெல்லாம். ()

சந்தநறுமலர்ச்சேக்கைச்சதுமுகனுருகுநாளு
மிந்தவனக்கழிவின்றென்றியாவருநன்கெடுத்துரைப்பக்
கந்தமலர்தளிர்துறுமிக்காய்கனிபிஞ்சுகடேங்க
மந்திகளுமறியாதமரங்கள்பலவோங்கியதால். (௩௮)

---

(௩௩) புறக்குடி மூன்று - அனுலோமர் பிரதிலோமர் சங்கர ஜாதியார். (௩௪) * ஆர் - ஆத்தி. † யா - ஒருவிதமரம். (௩௫) மராவை ஸாலமெனவும் ஏழிலைப்பாலையை ஸப்தபர்ணமெனவுங் கூறுப; இது மெலித்தல்விகாரம். ‡ ஆ - ஆச்சா. ¶ ஓமை - ஒருவிதமரம். அந்தில் - இடத்தையுணர்த்தும் ஓரிடைச்சொல்; அசையுமாம். (௩௭) பாகல் - பலா. அருணம் - எலுமிச்சை.

கலிவிருத்தம்.

இறவுபாய்கடலேறுவர்நீங்குற
நறவுபாயுநறுமலர்க்கொம்பர்வின்
னுறவுகொண்டிடவுற்றவக்கானிடைக்
குறவரும்மருள்குன்றமொன்றுண்டரோ. (௩௯)

மஞ்சுலாவுமம்மாமலைச்சாரலில்
விஞ்சுவிற்றொழின்மேவியவேட்டுவர்
தஞ்சிறுருந்தரக்கின்பறழ்களுங்
குஞ்சரக்குழக்கன்றுங்குழுமுமால். (௪0)

ஊன்னுநற்கனிகந்தவுணவுண்டும்
பன்னுதோலுடுத்தும்படருங்குழ
றுன்னுமாறுதொடர்தரக்கட்டியு
மன்னுவேடருமாதவர்போல்வரால். (௪௨)

சிங்கம்யானைவெஞ்சீற்றப்புலியுழை
மங்குருந்திறன்மன்னுகுடாவடி
துங்கயாளிதுறுமியெழுப்புறும்
பொங்குமோதைபுவனம்பொதியுமால். (௪௨)

வாரணத்தின்மருப்புகுமுத்தமுங்
காருலாவுங்கழையுகுமுத்தமுஞ்
சீரளாவித்திகழ்கதிர்வார்கடற்
பாரெலாமிருளோப்பிப்பரக்குமே. (௪௩)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பருமணிச் சுடிகைப் பஃறலை யரவம் படரொளி மேருவைப்
பொதிந்தாங், கிருளற விமைக்குங் கதிரொளி சமழ்ப்ப வெறி
கதிர் மணிபல வேந்தி, மருவுவெள் ளருவி பொதிதர வான்

(௩௯) இறவு - இறமீன். (௪0) தரக்கு - புலி. பறழ்-குட்டி.
(௪௨) குடாவடி - கரடி. (௪௩) ஒப்புதல் - ஓட்டுதல்.

றேய் மால்வரை செறியமிக் குயர்ந்த, பெருவரை முடியி னுள்ளதொன் றளவாப் பெருந்தவ முனிவர்தஞ் சேரி. (சச)

அருமறை முழக்கும் வினைதபும் யாக வழற்கண்ணன் மந்திர முழக்கும், பெருமைசால் சுரரைக் கூயவி யளிக்கும் பெருமுழக் கமுமவ ரேற்குஞ், செருமலி முழக்கு முண்டபி னுசி செப்பிடு முழக்கமு மொன்றிக், கருநிறக் கரைகொன் றிரங்கெறி தரங்கக் கடன்முழக் கெழாவகை யடக்கும். (சரு)

தருப்பைகொய் குநருஞ் சமிதைதே டுநருந் தழைந்தமா விலைபறிக் குநரும், விருப்பொடு நல்லா னைந்துகூட் டுநரும் வியன்பவித் திரமுடி குநரு, மருப்புமென் மலர்நந் தனவனந் தன்னை யடைந்தெடுக் குநருறா லாய்ந்த, திருப்பொலி பெரியோர்க் குபசரிக் குநருஞ் செறிதர விளங்குமச் சேரி. (சசு)

சரியைய ரொருபாற் கிரியைய ரொருபாற் சார்ந்தயோ கத்தின ரொருபாற், பெரியஞா னத்தி னிற்பவ ரொருபாற் பெட்பொடு போதிப்பா ரொருபால், விரிதரு மோத்துக் கற்பவ ரொருபான் மெய்ப்பொருள் பொய்ப்பொரு ளிரண்டுந், தெரிதர விசாரஞ் செய்பவ ரொருபாற் றிகழ்தரப் பொலியுமச் சேரி. (சஎ)

ஆங்கதிற் குசேலப் பெயரினோன் முனிவ ரருங்குலத் தினிய பாற் கடலிற், பாங்குறு மதிபோற் றோன்றினோன் வண்டர்

(சச) பஃறலையரவம்-ஆதிசேடன்; கைலையில் சேடனையும் வாயுவையுங்கண்ட முனிவர்கள் சேடனைப்புகழ்ந்துபேச, அது காரணமாகப்பொறாமைகொண்டவாயு இம்மேருவை அசைக்குவார் வலியோரென வஞ்சினம் பேசியவழி,சேடன் மேருவைத் தனது பலதலையாற் பொதிந்தனன்; வாயு தனதுவலத்தால் அதனையசைக்கவுமுடியாது தோற்றபோது, தேவர் விரும்பியபடி சேடன் தோற்று வாயுவுக்கு வெற்றிதந்தனனென்பது புராணம். சேரி - சேர்தற்கிடமாயுள்ளது.

(சசு) ஆனைந்து - பஞ்சகவ்வியம். (சஎ) ஓத்து - வேதம்.

ாண்செய மணநறுக் கொழிக்கும், பூங்கம லத்தில் வாழ்பொ
ரி யிலகும் பொருப்பன நிறத்துமால் பதத்தைத், தாங்குறு
றளத்தன் பொறிகடீச் செயலிற் சார்வுறு தடக்குறு மே
லான். (சஅ)

தன்னுயிர் போல மன்னுயிர் புரத்தல் சான்றவர்க் குறுதி
யன் றென்று, மன்னிய மறைநூன் மொழிந்திடு மதுமன்
ாய்மையே யென்றுணர்ந் தவனுய்த், துன்னிய வுலகி லிரு
ிணை யுயிருந் தாங்கிய மகிழ்ச்சிமீக் கூர, நன்மையே புரிவான்
ன்னமு முளத்தி னுடிடான் றீமைசெய் தலேயே. (சக)

அடக்கமும் பொறையுங் கருணையு நன்பு மழுக்கறுத் திலா
மையு மென்றும், விடற்கருந் தவத்தோ டொருங்குற வளர்ப்
பான் வெகுளியுங் காமமு மயக்குங், கடக்கருந் தீமை நா
டாறும் விளைக்குங் கயவர்க டொடர்ச்சியுந் தன்னைத், தொ
ற்கரி தாக வடியறக் காய்ந்தோன் றூயர்க்குந் தூயவன் மா
தா. (ருo)

படியிலா மறைநூன் முற்றுணர்ந் தடுத்தோர் பக்குவத் திற
மதித் தறியா, வொடிவறு சரியை யாதியா நான்கு முற்று
ப் பயிற்றுசாந் தீப, னடிமல ரடையா விருக்குமுன் மூன்று

(சஅ) குசேலருக்கு வடநூலார். ஸுதாமா என்னும் ஒருபெ
ர் கூறுவர். பொறி-இலக்குமி. மால்பதத்தைத் தாங்குறு முளத்
ன் என்றது. 'ந தை௫வம் கேசவாத்பரம்'(நதைவங் கேசவாத்பரம்) -
கசவனைவிட வேறுதெய்வமில்லையென்ற துணிபையுணர்த்தி
ற்று. குலத்துத் தோன்றினேன் என இயைக்க.

சக) மறைநூல் மொழிந்தது என்றது 'ஆத்மவத்ஸர்வபூதாநி'
புத்மவத்ஸர்வபூதாநி)-தன்னுயிர்போற் பிறவுயிர்களையும் பார்த்
ல் வேண்டும் என்ற வசனத்தை. தன்னம்-சிறுமை. (ருo) அழு
கறுத்தல் - பொறாமை. காமம் வெகுளி மயக்கம் இவற்றை
க்குற்ற மென்பர்; இருவினைக்குக் காரணம் இவையாதலால்.

மையமுன் மூன்றும்விட் டோடக், கடிகெழு காயாம் பூங்க
திர் மேனிக் கண்ணனோ டமர்ந்துகற் றனனே. (ருக)

கொழுந்துவிட் டெரியும் பசித்தழ லவித்துக் கோதில்லை
ராக்கிய மிக்குற், றழுந்துபட் டிடாத சாந்திரா யணமு னளப்
பருஞ் செயற்கரு விரத, மெழுந்துவிட் டொளிரப் பற்பக லா
ற்றி யென்பொடு நரம்புக டோன்றிச், செழுந்தசை வற்றி
யிளைத்தயாக் கையனுய்த் திகழ்ந்தனன் சீர்த்தியந் தணனே.

கதிரவ னுதய கிரிமிசை வருமுன் கன்னலைந் தெனத்துயி
லொழிந்து, விதிவழி மலநீர் விடுத்தொளிர் கரக மென்புன
லாற்சுத்தி யமைத்து, மதிசெய்பற் கறைதீர்த் ததலினு ஞனம்
வயங்குறச் செய்துநற் சந்தி, யதிசமாஞ் செபம்வந் தனைமுத
னியதி யுறுதியற் றிடுந்தொழி லமைந்தோன். (ருரு)

ஒன்றுமெய் வாய்கண் ணுசிகா தென்ன வுரைத்திடும் பொ
றிவழி யூறு, துன்றிய சுவையொள் ளொளிமணஞ் சத்தஞ்
சொல்லுமிவ் வைம்புல னென்று, மொன்றுபட் டுள்ளக் குறிப்
பறிந் தொழுக வொருக்கிய தவவலி யினனுய், நின்றுளா னிவ
னைப் புகழ்தரா ரெவரே நீடிய பவத்தொடக் கறுப்பார். ((

(ருக) பக்குவத்திறம்-மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்பன. சரியையாதி - சரியை கிரியை யோகம் ஞானம். இருக்குமுன்மூன்றென்பது - வேதம் முன்னர்மூக்கூறுபட் டிருந்த தென்னும் வழக்கைநோக்கி. ஐயமுன்மூன்று - ஐயம் திரிபு அறியாமை. (ருஉ) அழுந்து - தாழ்வு; முதனிலைத் தொழிற்பெயர். சாந்திராயண விரதம் - சுக்கிலபக்கப் பிரதமைமுதல் உணவை ஒவ்வோர் கவளமுயர்த்தியும், கிருஷ்ணபக்கப் பிரதமை முதல் அங்ஙனங் குறைத்தும் உட்கொண்டு அநுஷ்டிக்கும் ஓரரியவிரதம். (ருரு) கன்னல் - நாழிகை. விதி என்றது ஸ்மிருதிகளில் கூறும் நித்யகருமநியதிகளை.

ஔளவிய மவித்த பெருந்தவத் தினர்க ளகம்புற மெனும்
குப் பிறந்து, மூவுல கமுந்தம் மிடமதா வசிப்ப ரெனமறை
மொழிவதற் கிசையச், செவ்விய மனத்தன் வீடுகா டென்னத்
தெரிந்துறை பகுப்பிலான் சினந்த, தெவ்வுடல் பனிப்ப வெள்
ளொளி நெடுவேல் செறிதடற் றகற்றுபு விதிர்ப்போய். (௫௫)

மெத்திய பற்பல் கிழிதுணி யிணைத்து, மெல்லிழைச் சரட்
டுறும் பொல்லம், பொத்திய சிதரே நல்லுடை யாகப் புனை
கா ரணத்தினுற் கடல்சூ, ழெத்திசை யவருங் குசேலனென்
றுருபே ரிட்டழைப் பர்கண்மதக் கலுழி, தத்திய கரடத்
துகன்மால் யானைத் தரியலர் கூற்றெனப் பொலிவோய். ()

மாற்கடல் கடந்த மனத்தனுய் வேத வரம்புகண் டிலங்கு
கிக் குசேலன், பாற்கடன் மிசையோர் கார்க்கடல் போலப்
பயர வணைமிசைத் துயில்வோன், சேற்கரு நெடுங்கட் டிரு
கள் வருடச் சிவந்துகாட் டிடுமரை மலர்த்தா, ளேற்குமென்
வுள்ளத் திருவியெங் நாளு மியற்றரும் பூசனை யியற்றும். ()

---

(௫௫) தம்மிடம் மூவுலகமதா வசிப்பர் எனக்கூட்ட. ஆக
ன்பது சுறுதொக்கிற்று; உவமவாசகம். இதனை 'స్వదేశం భువ
త్రయం' (ஸ்வதேசம் புவனத்ரயம்) - தானுள்ளவிடமே மூவ்
லகமாக நினைக்கத்தகும் என்றதனுனும்; வீடுகாடென்னும் பகு
பிலான் என்பதனை 'సతతమేకో నివాసః పట్టణంవా వనంవా' (ஸ
ததமேகோநிவாஸ: பட்டணம்வா வநம்வா) - எப்போதும் வசி
தல் பட்டணமாயினும் வனமாயினும் ஒன்றேயென நினைத்
தல் வேண்டுமென்பதனுனும் உய்த்துணர்ந்து கொள்க. பனித்
தல் - நடுங்கல். தடறு - உறை.

(௫௬) பொல்லம், பொத்தல் - தைத்தல். சிதர்-சீலைத்துணி.

(௫௭) வேதவரம்புகாணல் - வேதத்தைக்கடைபோக வுணர்
தல்; அந்தணர்க்கு அதுவன்றித் தொழிலின்மையில். இதனை
'వేదమూలమిదం బ్రాహ్మ్యం' (வேதமூலமிதம்பிராம்ஹம்) - பிரா
மணத்வம் வேதத்தையேகாரணமாகவுடையது; என்பதினறிக-

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திறலியைதவத்திவ்வாறுதிகழ்ந்திடுங்குசேலனென்பா
னுறலியையத்தவத்திற்குதவிசெய்பாக்குநாளு,
மறலியைகதுப்பினுளோரணங்கினைவதுவைசெய்தான்,
மறலியமன்னர்சென்னிமணிமுடியிடறுந்தாளோய். (ருஅ)

மணமகனுடம்புபோற்றவல்லவள்மனைவியேயென்
றுணர்வினார்மொழியுமாற்றமுவள்செயனோக்கிப்போலுந்
தணவறுமன்புஞ்சாந்தத்தன்மையுநன்மையான
குணமுமோருருவங்கொண்டோகுடிப்பிறந்தனையநீராள். ()

மாசிலாக்குலத்துவந்தாள்வருவிருந்துவட்டவூட்டு
நேசமிக்குடையாள்கொண்கனினைப்பதிந்தொழுகுநீரா
டேசுறுவாய்மையுள்ளாள்சினந்திடலென்றுமில்லாள்
பேசுதிண்கற்புவாய்த்தாள்பெற்றதேகொண்டுவப்பாள். (சுO)

அருண்மகப்பெறுகிலார்க்கணைகதிநாத்தியென்று
தெருண்மறைசெப்பலானுஞ்சிறந்ததன்குலநீடித்துப்
பொருண்முயங்கிடுமாறெண்ணும்புந்தியனுதலானு
மிருண்மருள்குழலன்னோளோடிருந்தவக்குசேலன்சேர்ந்தான்.

(ருஅ) மறல - பகை. இவ்வம்மைக்குச் சுசிலா என்றும், சுஷாத்க்ஷாமா என்றும பெயர்கூறுவர் வடநூலார்.

(ருகூ) மணமகனைப் போற்றவல்லவளென்பது "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி" என்பதனானும், 'భార్యాసమో నాస్తి శరీరపోషణ' (பார்யாஸமோ நாஸ்தி சரீரபோஷண) - சரீரபோஷணத்தில் மனைவிக்குச்சமானம் பிறரில்லையென்பதனானுமறிக.

(சுக) மகப்பேறில்லார்க்குக் கதிநாஸ்தி என்றது 'అపుత్రస్య గతిర్నాస్తి' (அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி) - புத்திரனில்லார்க்குப் புண்ணியலோகமில்லை என்பதுகருதி. பொருள் - புருஷார்த்தம் ஞானம்.

சேர்தலுநரம்புடைத்துச்சேல்விழிகுழிந்துகாட்ட
வார்முகங்கிழிக்குங்கொங்கைமருவுபால்சுரந்துகாட்டச்
சார்தருவயாவுநீடித்தணப்பில்பல்சுவைநாக்காட்ட
நேரிழைகருப்பம்வாய்ந்துநிரம்புநாண்மைந்தனீன்றாள். (௬௨)

பின்புமின்னாள்கள்செல்லப்பெய்வளைமக்கட்பேற்றி
னன்புறுமார்வமீட்டுமடரத்தன்முயற்சியாலே
கொன்பெறுகணவற்கூடிக்கூடிநன்குயிர்த்துயிர்த்திட்
டின்புறப்பெற்றாளின்றாளிருபத்தேழ்மைந்தர்சேர. (௬௩)

மலையிட்டசெல்வத்தார்கண்மகிழவோர்மகவுந்தாரா
னலையிட்டமுட்டாட்செய்யவம்புயத்துறைவோனேரேழ்
தலையிட்டவிருபான்மைந்தர்த்தந்தனன்பெருமையன்றே
சிலையிட்டதழும்புவாய்ந்ததெரியலந்தடந்தோள்வேந்தே. ()

தன்குலவிருத்திக்காகத்தன்மனையெண்ணம்வாய்ப்ப
நன்குலமறையோன்கூடிநலங்கொளிம்மைந்தர்ப்பெற்றான்
புன்புலத்தவர்கள்காமவிச்சையாற்புணர்ந்துபெற்றா
னென்பரானிற்கவன்றாற்கியைமிடிவெளிக்கொண்டன்றே. ()

பல்லெலாந்தெரியக்காட்டிப்பருவரன்முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ்சொல்லிநாட்டித்துணைக்கரம்விரித்துநீட்டி
மல்லெலாமகலவோட்டிமானமென்பதனைவீட்டி
யில்லெலாமிரத்தலந்தோவிழிவிழிவெந்தனோன்றும். (௬௬)

இருநிலத்தியாவர்கண்ணுமேற்பதையிகழ்ச்சியென்ன
வொருவியவுளத்தான்காட்டிலுதிர்ந்துகொள்வாருமின்றி,

---

(௬௨) வயாவு - கருப்பம். (௬௪) முட்டாட்செய்ய வம்புயத்துறைவோன் என்பதுசிலேடை. (௬௬) பருவரல் - துன்பம்.

(௬௭) அருகுதல் - ஆங்காங்குச் சிதறிக்கிடத்தல். உருவவொண்ணகம் - அழகிய ஒள்ளியநகம்; அன்றி, ஒள்ளிய நகத்தால் உருவும்படிக்கிள்ளி என்றுகூறுதல் சிறப்பு. இவ்வம்மையே தெ

யருகியநீவாரப்புற்றுனியமாராய்ந்தாராய்ந்,
துருவவொண்ணகத்தாற்கிள்ளியெடுத்துடன்சேரக்கொண்டு()
வந்துதன்மனைகைந்நீட்டவாங்கிமற்றவற்றைக்குற்றி,
யந்தமெல்லியல்பாகஞ்செய்ததிதிக்கோபாகம்வைத்துத்,
தந்ததன்பங்கயின்றுதவலருமுவகைபூத்து,
மந்திரமறைகட்கெட்டாமாலடிநினைந்திருப்பான். (சுஅ)

இற்றிவன்வாழ்க்கைத்தன்மையிருபத்தேழ்மைந்தருக்கு,
மற்றவப்பாகக்கஞ்சிமட்குழிசியைப்பால்வைத்துப்,
பற்றுகோரிகையான்மொண்டுவாக்கிப்பற்றுமைகண்டு,
வெற்றுடம்பாகிநிற்பன்மெலிவள்பினென்செய்வாளால் (சுகூ)

மேற்படி வேறு.

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைநீட்டு, முந்தி
மேல்வீழ்ந், திருமகவுங் கைநீட்டு, மும்மகவுங் கைநீட்டு, மென்
செய் வாளாற், பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழுமற்
றொருமகவு, புரண்டு வீழாட், பெருநிலத்திற் கிடந்தழுமற்
றொருமகவெங் ஙனஞ்சகிப்பாள் பெரிதும் பாவம். (எ0)

அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லையென
வழுமா லோசேய்; சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக்கன் றுயெ
னப்பொய் செப்பு மோசேய், முந்தாவத் தொருசேய்மி சை
யப்புகும்போ தினிலொருசேய் முடுகி யீாப்ப, நந்தாமற் றச்
சேயு மெதிரீாப்பச் சிந்துதற்கு நயக்கு மோசேய். (எக)

திருக்குற்றிக் கூவிகொண்டு மணமகனையும் மக்களையும் ஓம்பிவந்த னரென்பது மதுரகவி வரதராஜையங்கா ரருளிய பாகவதம்.

(சுஅ) அதிதியாவார்-முன்னறிதலுண்மையிற்குறித்தும் அவ்வின்மையிற் குறியாதும் உச்சிப்போதில் உணவுவேட்டு வருவோர்; இவரையுபசரித்தல் மானுஷயாகத்தின்பாற்படும். மந்திரம் - வேதத்தின் ஒருறுப்பு. (சுகூ) கோரிகை - அகப்பை.

இவ்வண்ணங் கலாம்விளைக்கு மைந்தர்களை நனிநோக்கி யிரங்கி யேங்கிச், செவ்வண்ணக் கரதலத்தா லணைத்துமடித் தலத்திருத்திச் சிறப்புச் செய்து, மைவண்ணக் கண்ணீரைத் துடைத்துமுகம் வெரிந்புறந்தை வந்து மாம்ப, லவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயத் தோர்விதத்தி லாற்றல் செய்வாள். ()

அடுத்தமனைச் சிறுனொருவ னின்றுநும தகங்கறியென் னட்டா ரென்று, தொடுத்துவினு யினனுலச் சொற்பொருள்யாததுதானெச் சுவைத்தன் ளுய்நீ, யெடுத்துரையென் றிடுமழவுக் குரைக்கிலது செய்யெனிலென் செய்வா மென்று, மடுத்தவஃ தறிந்திலே னெனமற்றொன் றுரைத்ததனை மறக்கச் செய்வாள். (எங)

வேறுமனைச் சிறுனயின்ற பக்கணங்கண் டோடிவந்து விழிநீர் வாரச், சீறுதலி லாதவனை முகம்பார்த்தின்" னுனின்னதின்று னென்வா, யூறுதலா லிப்பொழுதே செய்தளித்தியெனவுடுத்த வுடைதொட் டீர்க்குந், தேறுதலில் சிறுமகவையெடுத்துமார் பிடையணைத்துச் சிந்தை நோவாள். (எச)

குண்டலமோ திரங்கடகஞ் சுட்டியயன் மனையார்தங் குழவிக் கிட்டார், புண்டரீ கக்கண்ணனு யெனக்குநீ யிடாதிருக்கும் பொறுமை யென்னே, கண்டெடுத்திப் போதிடெனக் கரைமதலைக் கில்லாதான் கடன்றந் தானுக், கெண்டபச் சொல்வார்த்தையென நாளைக்கு நாளைக்கென் றியம்பிச் சோர்வாள்()

பருப்போடு குளமளித்தி யெனக்கென்று மெனக்கினியபால்வெண் ணெய்யும், விருப்போடு தருதியென்று மக்களமும்போதெல்லாம் விள்ளா ளொன்று, நெருப்போடு புகையுயிர்க்கு நிரியாணக் கரடமத நெடுங்கை யானைப், பொருப்போடுசெறுநர்படை முழுதுழக்கிச் சவட்டிவரும் புகர்வேல் வேந்தே.

(எடு) வெரிந் - முதுகு. (எகு) குளம் - வெல்லம். நிரியாணம் - கடைக்கண். சவட்டல் - வாட்டல்.

சிறியசித மணிப்பூணே யன்றிவே றொருபூணச் சேய்கட் கில்லை, வறியமர நாருரியே யுடையன்றி மற்றுடைக்ண் மருவ லில்லை, வெறியபொழிற் றழைத்தவிலை யுண்கலமல் லாதுகலம் வேறொன் றில்லை, குறியமனை வயிற்புகுமோ ரெறும்பினுக்கு மாங்குணவு கொடுத்தற் கில்லை. (எஎ)

நன்புகூர் தருமன்னப் பால்சிறிதல் லாமன்மற்றோர் நற்பா லில்லை, பண்புகூா தருதனையாக் கெஞ்ஞான்றும் பசிதீர்த்த பாடு மில்லை, கண்புகா விவ்வறுமை கண்டுமறை யவனுமுளங் கவற்சி யில்லை, யென்புகாப் புகழவன்றன் செயல்கண்டு மனை விவிருப் பிகத்த லில்லை. (எஅ)

வ்ருவாய்மிக் குடையரா யளவிறந்த செல்வத்தின் வளமுள் ளாரக்கு, மொருவாவன் பொருமதலை யெண்ணியவா றளித் தோம்ப லோல்லா தாகும், பொருவாவெங் கடுங்கூற்றாய்க் கொடுவிடமாய் வடவையாய்ப் புகுந்து வாட்டத், திருவாகின் றிடுமிடியிற் பன்மகவுள் ளாள்செய்கை யெற்றே யெற்றே. ()

இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலு ளழுந்தியுந்தற் கினி மை சான்ற, செவ்வாய்மை யந்தணனை வெறுத்துரையா ளலர் மொழிகள் சிறிதுஞ் செப்பா," டுவ்வாமை மைந்தர்கள்பான் மேறந்துமியற் றுளவடன் சுகுண மென்னே, யெவ்வாறித் துய ர்க்கடனீந் துவமெனுமோ ரெண்ணமுளத் தென்று முண் டால். (அ0)

கற்புடைய வருந்ததியே முதன்மடவார் புகழவருங் கற்பின் மிக்காள், பொற்பமையா மிடியென்னுஞ் சாகரத்து ளழுந்தி மனம் புண்ணே யாகிப், பற்பலநாள் செலவொருநா ளமைய

(எஎ) சிதமணி - வெண்மணி, (பாலமணி.) வயின் ஏழனுருபு. (எஅ) என் - அளவு. (எகூ) இருவா நின்றிடும் - இருவுகின்ற. எற்று - எத்தன்மைத்து. (அ0) அலர்மொழி - பழிமொழி துவ்வாமை - உணவருந்தாமை.

மதிந், துளந்துணிந்து பண்பிற் போற்றிச், சொற்பெறுநற் புக
ழ்க்கணவன் முகநோக்கி, யெண்ணியவை சொல்ல லுற்றாள். ()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காமம்வெங் குரோத முலோபந்தீ மோகங் கரைமத மாற்
சரி யமெனுந், தீமைசே ராறு பகையினைச் செற்றோய் செம்
மணி கொழிக்கும்வெண் டரங்கப், பாமமா கடலுங் காமுறு
மேனிப் பண்ணவன் மலரடித் துணையைத், தோமற வுள்ளத்
துள்கியேத் தெடுப்போய் துரிசறு மறைமுழு துணர்ந்தோய்.

உரைக்கருஞ் சிங்கஞ் சரபம்வெம் புலிக ளுலவையோ ரிர
ண்டுடை வேழ, நிரைப்படச் சரிக்குங் கானத்தி லணுகி நிகழ்
சரு கறல்வளி யருந்தித், திரைக்கடல் வினைக்கோ ராகர மாகு
ந் தேகத்தை வாட்டுமெய்த் தவத்தோய், நரைத்தவோ திமத்
தை யுயர்த்தருள் கமல நான்முக னனைய தூ யவனே. (௮௩)

துணிபடு கந்தை சூழ்ந்தமெய் யினரிற் றுணையிலா நற்றவ
முனிவ, வணிபடு மனையாண் மக்களி லருத்தி யமைக்கிலா
யென்றுமன் னியர்பா, னணியிரந் தேற்ற லொழித்தனை யடி
கே ளுனஃ துணர்ந்துளே னெனினும், பிணிபடு முளத்திற்
புகலுமென் மொழியைப் பெட்பொடு கேட்டியென் றியம்பும்.

கொழுந்துவிட் டெரியு முத்தழல் வளர்க்குங் கோதிலா முனி
வரஞ் சிறார்க, ளழுந்துபட் டேங்க வெழும்பசி யொழிக்க
வனமிலா துயங்கின ரந்தோ, முழங்குமீ ரோன்பான் புராண

---

(௮௧) அருந்ததி முதன்மடவார் - அருந்ததி அகலியை திரௌ
பதை சீதை தாரை மண்டோதரி சுநீதி சாவித்திரி அநசூயை
முதலியோர். (௮௨) காமமுதலிய இவ்வாறும் அரிஷ்டவர்க்க
மென்பர். பாமம் - பரவல். தோம் துரிசு - குற்றம். (௮௩) சர
பம் - சிங்கத்தை வெல்லும் ஆற்றலுடைய எண்காற் பறவை.
ஆகரம் - இடம். (௮௪) அருத்தி பெட்பு - அன்பு.

கன் கோர்ந்தோர் மூரலா லுயிர்கிற்கு மென்று, வழங்குவ ரச்சொன் மறிதிரைக் கடல்சூழ் மண்ணிடத் துன்மையே யாமே.

கான்மறை யுவரிக் கடல்புடை யுடுத்த நானிலத் துயிரெலா மின்பத், தான்மன மகிழூஉ வாழ்கஎன் கென்றுச் சாற்றிடு மதற்குமா றின்றிக் கான்வழிந் தொழுகுங் கற்பக மாலைக் கடவுளர் பராவுநற் புகழோய், தேன்வழிந் தன்ன மழலைவாய் மைந்தர் சிறப்புற வருளுதல் கடனே. (௮௬)

நித்திலங் கோட்டிற் கொழிக்கும்வெண் டரங்க நெடுங்கடல் புடையுடுத் தகன்ற, தத்தொளி மணிச்சூட் டுச்சியி லரவந் தாங்குமிந் நிலவல யத்தி, லெத்தகை யினரும் வெருவரு நிரப்பே யிசைந்தவர் பாவியர் செல்வ, மொத்துற வியைந்தோர் புண்ணிய ரன்றே வும்பருந் தொழத்தகு மேலோய். (௮௭)

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்தரவாட்டுந், தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ் சாற்றருமூலோபத்தை மிகுக்குந், தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே தடுப்பருங் கலாம்பல விளைக்குந், தரித்திர மவமானம் பொய்பே ராசை தருமிதிற் கொடியதொன் றிலையே. (௮௮)

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை சாற்றுமென்னங்கள்வா ழிடமாந், தரித்திரம் பற்ப றுக்கமுந் தோன்றத் தக்கபே ராகர மென்ப, தரித்திர நன்மை சாலொழுங் கென்

(௮௫) புராணம்-கஅ:—பிரமம் பதுமம் வைணவம் சைவம் பாகவதம் நாரதியம் மார்க்கண்டம் ஆக்கிநேயம் பவிடியம் பிரமகைவர்த்தம் இலிங்கம் வராகம் காந்தம் வாமனம் கூர்மம் மச்சம் காருடம் வாயவ்வியம் என்பன. (௮௬) நான்மறை சாற்றிடுமொழி முடிக்க. சாற்றுவாவது 'సర్వేజనాస్సుఖినోభవంతు' (ஸர்வேஜநாஸ்ஸுகிநோபவந்து) - பிராணிகளெல்லாம் சுகமடையக் கடவனவாம் என்பது. கான் - மணம்.

னுந் தழைவனந் தனக்கழ றழலாந், தரித்திரங் கொடிய வெவ
ற்றினுங் கொடிதத் தகையதை யொழித்தனன் றமே. (அகூ)

யாதவர் குலத்திற் றோன்றிய வரசர் யாவர்க்கு மதிபனு,
மிணையின், மாதவ னுடனீ பலகலைக் கடலை வாய்மடுத் தனை
யென வகுப்பா, ராதலி னப்பீ தாம்பரன் மருங்கி லணைந்தவன்
பாற்பெருஞ் செல்வந், தீதறக் கொண்டு கொடுத்துநஞ் சிறு
வர் செல்லலேனுய் தவிர்க்குதல் வேண்டும். (கூ0)

இளமையி னின்றோ டிருங்கலை கற்ற வெழிலிபோல் வண்
ணனிற் கண்ட, வளவையே யெல்லாப் பேசரும் வளமு மளிக்
குவ னையம தின்றாற், பளகறு நேச னொருவனைப் படைத்தல்
பருந்தனப் பொதிபெற்றாற் போன்மென், றுளமிகத் தெளிந்
தோர் புகலுநன் மாற்ற முண்மையாம் பொய்ம்மையா காதே.

உலகமோர் மூன்றும் வெருவரக் கொடிய வுருற்றிய கஞ்ச
னு தியர்க்கொன், றலகினன் னெறியோ ரின்புற வளிப்போ
னுதலி னுங்கவன் பாற்சென், றிலகுறுஞ் செல்வம் வேண்டிடி
னினக்கு மீகுவன் மற்றவன் மறுக்கிற், குலவவன் பாதங் கா
ண்டலே யமையுங் கோதறு வீடுமெய் தலினே. (கூஉ)

கண்ணனைத் துளப மாலிகை நிறத்திற் கமலைவாழ் தரவ
ருள் புரிந்த, மண்ணிய மணியைத் தினந்தினம் போற்று மா
சறு தவத்தின ருள்ளத், தெண்ணிய வெண்ணி யாங்களிப்
பவனை யெய்திநஞ் சிறுருயச் செல்வ, நண்ணிவா வென்று நங்
கைசொற் றிடலு நற்றவக் குசேலனீ துரைக்கும். (கூங)

(கூ0) யாதவர் - யதுகுலத்திற் பிறந்தவர். இடையருக்கு இப்பெயர்போந்தது பசுக்கூட்டங்களையுண்டைமயின் என்க; யாதவம்-பசுக்கூட்டம். பீதாம்பரம் - பொன்னுடை; பீதம்-பொன்.

(கூஉ) கஞ்சனுதியர் - பூதனை சகடன் திருணுவர்த்தன் கேசி முதலியோர். வீடு - முதனிலைத்தொழிற்பெயர் விடப்படுவது; (மோக்ஷம்.) "அற்றது பற்றெனி-னுற்றது வீடே" என்னும் பெரியார் மொழியானு முணர்க. (கூங) நிறம் - மார்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மக்களுக்கிரங்கிவாடுமடந்தையையணங்குகேட்டி.
தக்கமுற்பவத்திலான்றதருமநன்கியற்றினோக.
ளொக்கவிப்பவத்திலின்பமொருங்கனுபவிப்பரின்றேன்.
மிக்கவெந்துயரத்தாழ்வுரிதற்குளமெலிதலென்னே. (௧௪)

துப்பிதழ்மடந்தைநல்லாய்தோன்றியசீவரெல்லா
மிப்புவியிடத்துச்சாலவெண்ணுவரெண்ணியாங்கே
யெப்படிமுற்றுமுற்றுதெம்பிரானொருவற்கன்றி
யப்படிமுற்றிற்கீழ்மேலாம்பகுப்பிரண்டுண்டாமோ. (௧௫)

தேற்றமுற்பவத்திற்செய்தநீங்குநன்கெனுமிரண்டு
மாற்றல்சால்கருமமென்பரக்கருமத்தைநோக்கிச்
சாற்றுமிப்பிறப்பிற்றக்கதரித்திரஞ்செல்வநல்கிப்
போற்றுவனுயிரையெல்லாம்பொலிசுடாத்திகிரிவள்ளல். (௧௬)

மைந்தாகடம்மைப்போற்றவளர்கிதிவேண்டுமென்றாய்
நந்தியபறவைகானநயந்துறைவிலங்குமுன்னு
வந்தபல்லுயிர்க்குச்சேமவைப்புண்டோவருவாயுண்டோ
வெந்திடத்தேனும்போயொன்றிரப்பதுதானுமுண்டோ. (௧௭)

---

(௧௪) இதனை, 'అవశ్యమనుభోక్తవ్యం కృతంకర్మ శుభాశుభం' (அவஸ்ய மநுபோக்தவ்வியம் கிருதம்கர்ம சுபாசுபம்) — முற்செய்த கர்மத்திற்கிணங்க சுபாசுபங்களை அனுபவிப்பர் என்பதனும், 'అదానదోషేణ భవేద్దరిద్రః' (அதாநதோஷேண பவேத்தரித்திர:)—தானமளியாத தோஷத்தால் தரித்திரமுறுவர் என்பதனும் ஒப்பிட்டுணர்க.

(௧௬) போற்றுவன் திகிரிவள்ளல் என்றது 'సర్వం విష్ణుమయం జగత్' (ஸர்வம்விஷ்ணும்மயஞ்சகத்) — ஜகமெல்லாம் விஷ்ணுமயம்; எனவே, அவரால் போற்றப்படுகின்றன என்பதுகருத்து.

(௧௭) சேமவைப்பு - புதையல். நந்துதல் - வளருதல். எந்த இடம் என்பதில் அகரம் தொக்கது.

அல்லதுநாளைக்கென்செய்வாமெனுங்கவலையுண்டோ
வெல்லையிலொன்றினாலொன்றிடிப்புண்டுவாழ்தலுண்டோ
வொல்லுமவ்வுயிர்கடம்முளுணவிலாதிருந்ததுண்டோ
சொல்லரிபரந்தவுண்கட்டுடியிடைப்பேதைமாதே. (௯௮)

கல்லினுட்சிறுதேரைக்குங்கருப்பையண்டத்துயிர்க்கும்,
புல்லுணவளித்துக்காக்கும்புனத்துழாய்க்கண்ணியன்னை,
லொல்லுநின்மைந்தர்க்காவாதொழிவனோவொழியானுன்மை,
மெல்லியல்கொண்டதுன்பம்விடுவிடுமறந்துமென்னல். (௯௯)

உரைத்தகன்முதலிடப்பல்லுயிர்க்கெலாமுணவேயின்று
வரைத்தவவ்வுயிரவ்வாறுவழங்குதலியல்பேயென்னிற்
றரைத்தலைவர்தஞான்றேசலமலம்விடுத்தலுண்டே
விரைத்தபூங்குழலாய்துய்க்குமுணவின்றிமேவுமேகோல். ( )

அலரவன்றீட்டிவைத்தவாயுளினளவைசாறும்
விலகிலாவினைக்குத்தக்கவிருப்புணவெறுப்புணவு
மிலகவுண்டின்றேலின்றுமின்னுயிருடம்பின்வாழ்தன்
மலர்தலையுலகத்தென்றுவகுப்பானூலுணர்ந்தவல்லோர். (௧௦௧)

ஆதலினினதுமைந்தர்க்காயுளுள்ளளவைகாறு
மோதிருவினைக்குத்தக்கவுணவுண்டுபுந்திமாழ்கே
லேதுவந்தாலுமூழாலெனநினைந்திருத்தல்வேண்டு
மாதாவாண்முத்தமூரன்மயின்மருணடைப்பூங்கொம்பே. ( )

வளநிதிபடைத்தோமென்றும்வடிவவில்லுடையோமென்று
மளவில்சேயீன்றேமென்றுமனுபவித்தமைந்தோமென்று

---

(௯௯) மெல்லியல்-அன்மொழித்தொகை. (௧௦௦) கல்முதலிய இடம் - கல் கருப்பம் அண்டமுதலியன; அவற்றிலுள்ளவுயிர் தேரை முதலியன. (௧௦௧) உணவுண்டு என்பது '𑌆𑌯𑍁𑌰𑌨𑍍𑌨𑌂𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿' (ஆயுரன்னம்பிரயச்சதி)—ஜீவகாலம் உணவைத் தருகின்றது என்ற பிரமாணத்தா லெங்க.

மிளமையிற்சிறந்தோமென்றுமெழினலமுடையோமென்று
முளமகிழ்கூர்வர்சற்றுமுண்மைநூலுணர்ச்சியில்லார். (௧0௩)

உயிர்க்கொலைபுரிதலுன்னுமுணவுமாருட்டுஞ்செய்த
லயிர்ப்பிலாநண்பாமாட்டுமமைதரக்குய்யஞ்செய்தல்
பயிர்ப்புமிக்குறநல்லோரைப்பழித்தல்பொய்க்கரியுரைத்தல்
செயிர்ப்பிலாலயத்திடத்துஞ்சென்றுபட்டிமையியற்றல் (௧0௪)

இவைமுதற்பலவுமாந்தரியற்றிநாள்கழியாநிற்ப
ரவையெலாம்பொருணிமித்தமாகுமப்பொருளைப்பெற்றாற்
குவையுறப்புதைத்துவைத்துக்குதுகுதுப்படைந்துகாத்து
நவையுறுபணப்பேயென்னுநாமமும்பெறுவாமாதோ. (௧0௫)

ஒருசிறுதருமமேனுமுஞற்றிடாரிரப்போர்வந்து
தருகிகர்கரத்தாயென்றுசாற்றினுங்கொள்ளாராகிக்
கருணைசற்றின்றியெல்லைகடந்திடத்துரந்துமீள்வர்
மருவுபல்கிளையுமோம்பாவளம்படைத்தென்பெற்றால். ()

முறைதவிர்கொடுங்கோன்மன்னர்முனிவிற்குநணியுமச்சங்
கறைகெழுகரவுசெய்வார்கரத்திற்குமழற்குமச்ச
மறைவறுதாயமாக்கள்வெளவுவரென்றுமச்ச
மறைபொருள்பெற்றாரல்லரச்சமேபெற்றார்போலும். (௧0௭)

ஒல்லொழுக்கினரைத்தீயவொழுக்கரென்றுரைக்கச்செய்யும்
புல்லொழுக்கினரைத்தூயபுலத்தரென்றுரைக்கச்செய்யு
நல்லகற்புடையமாதர்நலத்தையுஞ்சாமைசெய்யும்
பல்வகைத்துயருஞ்செய்யும்பாழ்ம்பொருள்பற்றுளார்க்கே, ()

---

(௧0௩) இல் - மனைவி; இடவாகுபெயர். (௧0௪) அயிர்ப்பு - சந்தேகம். குய்யம் - வஞ்சம். பயிர்ப்பு - அருவருப்பு. கரி - சாக்ஷி. செயிர்ப்பு - குற்றம். பட்டிமை - களவு. (௧0௫) குதுகுதுப்பு - மிக்ககளிப்பு. (இரட்டைக்கிளவி.) (௧0௭) தாயமாக்கள் - ஞாதிகள்.

கோடிபொன்னளிப்பனின்றேகோடிரோர்மாத்திரைக்கு
ளூடியகிளைக்கோர்வார்த்தையுரைத்தடைகுவனென்றுலுங்,
தேடியகாலனூதர்சிமிழ்த்தல்விட்டொழிவரேகொல்,
வாடியமருங்குனங்காய்மாண்பொருட்பயன்கண்டாயோ. ()

பொருவறுபந்தமெல்லாம்புணர்த்திடுந்தெய்வசிந்தை
யொருவமேலிட்டுநிற்குமுறக்கமுமிறக்கச்செய்யுங்
கருவினுட்புகுத்துமின்னகரிசுகண்டதனுலன்றே
விருநிலத்திடைவெறுக்கையென்மனூர்புலமைசான்ருேர். ()

சிறியரேமதிக்குமிந்தச்செல்வம்வந்துற்றதூன்றே
வறியபுன்செருக்குமூடிவாயுள்ளார்மூகராவர்
பறியணிசெவியுளாருஞ்பயிறருசெவிடராவர்
குறிபெறுகண்ணுளாருங்குருடராய்முடிவரன்றே. (ககக)

பல்கதிர்விரித்துத்தோன்றிப்பாடுசெய்கதிரேபோல
மல்லனீருலகிற்றேன்றிமறைந்திடுநும்மைவிட்டுச்
செல்வமென்றுறுவதற்குஞ்செல்கவென்றுரைக்கும்பேர்நன்
றல்லலிலவிளைப்பதாகாதரும்பெறற்செல்வம்பாவாய். (ககஉ)

மதுமடையுடைத்துப்பாயும்வனத்துழாய்க்கண்ணிவேய்ந்து
விதுமுகப்பதுமைசெங்கைமெல்லெனவருடச்சேந்து
கதுமெனக்கருதுமன்பர்கருத்தினுட்புகுந்துவாழு
முதுமறைப்பெருமான்பாதம்பெறுதலேமூரிச்செல்வம். ()

(கOக) கோடிர்-கொன்னுதிர். சிமிழ்த்தல்-கட்டல். (ககO) வெறுக்கை - பொன்; வெறுக்கப்படுவது. என்மனூரென்பதில் மன் இறந்தகால இடைநிலை. (ககக) பறி - பொன், சுண்டுக்காதணி; (இலைச்சொல்.) (ககஉ) செல்வம் இரண்டில் முன்னது கட்பாட்டு எதிர்காலத்தன்மைப்பன்மைவினைமுற்று. பின்னது காரணக்குறிப்பெயர். (ககங) விது - சந்திரன். பதுமை - இலக்குமி. கதுமெனல் - விரைவைக்குறிக்கு மிடைச்சொல். கதுமெனப் புகுந்து என இயையும்.

கைப்பொருள்பெற்றஞான்றேகடவுளாலயத்திற்கீந்து
மெய்ப்படுபுராணநூல்கள்விருப்பொடுகேட்டுவந்தும்
வைப்பெனவிரப்போர்க்கீந்தும்வருபவருளரேற்கூற்ற
மொய்ப்புயத்தண்டடந்தப்பிமுன்னவனின்பத்தாழ்வார். (கக௪)

குடருநெய்த்தோருமென்புங்கொழுவும்வாரவுழும்புந்தோலுந்
தொடருநாடிகளும்வைத்துச்சுமத்தியதடியுங்கொண்டு
படர்தரச்செய்தபவ்வீப்பாண்டமாமடந்தைநல்லா
ரிடனுடைவடிவமந்தோவிதற்குமுன்மயங்காநிற்பர். (கக௫)

கோதுறவமைத்தபவ்வீக்குழம்புபஃறுவாரந்தோறு
மோதுறவழியுங்கும்பமூத்திரபாத்திரங்கை
யாதுபல்கிருமிக்குப்பையடர்ந்ததீநாற்றக்கூடிம்
மாதர்மெய்வடிவங்கண்டுமாழ்குவாராமாழ்கிநிற்க. (கக௬

முன்னமெத்தனைபேர்மைந்தர்முறைமைபாராட்டினரோ
வின்னமெத்தனைபேர்மைந்தர்முறைகொளவிருக்கின்றரோ
வன்னமைந்தரைத்தம்மைந்தரெனலறியாமையாகு
மென்னடைக்கரியவாட்கண்விரைக்கருந்தாழ்குழாலே. (கக௭

மதலையைப்பெறுநாட்டுன்பம்வளர்த்திடுநாளுந்துன்பம்
விதலைநோயடையிற்றுன்பம்வியன்பருவத்துந்துன்பங்
கதமுறுகாலர்வந்துகைப்பற்றிற்கணக்கிறுன்ப
மிதமுறலெந்நாள்சேயாலெற்றைக்குந்துன்பமாறைல். (கக௮

(கக௪) வைப்பு என - தனது பொருள்வைத்தற்கு ஈதேயி மென; இதனை "அற்று ரழிபசி தீர்த்த லஃதொருவன் - பெற்று பொருள்வைப் புழி." என்னுந்திருக்குறளாலுணர்க. (கக௫) நெய்த்தோர்-இரத்தம். தடி - தசை. பவ்வீ - பீ; (இடக்கரடக்கல் (கக௬) கைத்தல் - வெறுத்தல். (கக௭) தாழ்குழலென்ற அ மொழித்தொகை விளியேற்றது. (கக௮) விதலை-நடுக்கம். வ ன்பருவம் - பெருமையுற்றபருவம்; காளைப்பருவமென்றப பின்னர் தளர்வுறுபருவமென்பதும் அது. கதம் - கோபம்

இளமையிலியற்றுந்தண்டமேற்றுமெவ்வெறுப்புய்த்தாலு
முளநடுநடுங்கிப்பின்னியுற்றுறப்பற்றிநிற்பார்
தளர்வறுபருவஞ்சார்ந்தாற்றந்தைதாய்நடுங்கச்சீறி
யளமருதம்மனஞ்செல்வ்வாறேயொழுகிநிற்பர். (௧௧௯)

சாருறுதந்தையாருந்தாயருமனந்துஞ்சன்ம
ஆருமோரனந்தம்வாய்த்துவுறயுமோரனந்தம்பெற்ற
பேருமோரனந்தங்கன்மப்பெருக்குமனந்தங்கொண்ட
சீருமோரனந்தமின்னுஞ்சேர்வதுமனந்தமாமால். (௧௨0)

அத்தகுமைந்தரார்நீயாரிஃதுரைக்குநாறு
ரித்தரையிடைக்காப்பாற்றந்தியான்றிருநெடுமாலல்லன்
கொத்துறுமைந்தராசைக்கோட்டுவருந்துகின்றாய்
பித்துளார்செய்கையீதுபெரியரிம்மயக்கம்பூணார். (௧௨௧)

நல்வினையடைந்தகாலைநனிநலந்திளைப்பர்நன்மை
யல்வினையடைந்தகாலையல்லலிற்றுளைவரெல்லாந்
தொல்வினைவழியதாகுந்தோன்றனுபவங்கடந்தம்
புல்வினையாலென்றெண்ணல்புலமையோரிடத்தின்றாமால். ()

இம்மையிற்றருமதானமெழில்பெறவியற்றினோர்க
ளம்மையிற்றேவராகியமிர்தமுன்னனபோகஞ்
செம்மையிற்றுய்ப்பர்துய்த்துத்தீர்ந்தபின்புவியின்மீட்டுந்
தம்மையர்தாயரென்றேதிலர்த்தழீஇப்பிறப்பரன்றே. (௧௨௩)

---

(௧௧௯) இதனை, '𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍' (புத்ரம்மித்ரவதாசரேத்) - வயதுமிகுந்தவழி புத்திரனை மித்ரனாக எண்ணக்கடவர். என்பதனானுணர்க. (௧௨௧) கோட்படுதல் - கொள்ளப்படுதல்; கண்டிக்கவர்தல். (௧௨௩) இதனை, '𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿' (க்ஷீணே புண்யேமர்த்தலோகம்விசந்தி) - சேகரித்த புண்ணியம் அனுபவித்துமுடிந்தால் பின்னும் பூலோகத்திற் சனிக்கின்றார்கள் என்பதனானுணர்க. ஏதிலர் - அயலார்.

தழைவிரிகற்பகாடுசார்தலும்புவியில்யாரும்
விழைதருபோகந்துய்த்துமேவலுநல்லூழாமாற்
பிழைபடநிரையத்தாழ்ந்துபெருந்துயருறலுமண்மேற்
குழைமிடியாதித்துன்புகூர்தலுந்தீயூழன்றே. (கஉச)

இத்தகுதுன்பமின்பமெய்திடாரறிவுசான்றோர்
பத்தியின்வழாதுநின்றுபகரருச்சனையியற்றிக்
கைத்துமுற்செயலெலாநிட்காமியமாக்கியென்றும்
பைத்தகாவண்ணத்தெம்மான்பதமடைந்தின்பத்தாழ்வார். ()

சளசளவெனவாயூறறடையின்றியொழுகப்பற்போய்த்
தளாவொடுமெலிந்துகூனித்தசையறவற்றிமுற்றிக்
கிளாநடையொழிந்துபாயல்கிடைகொளுங்கிழவுத்தன்மை
யளவுகண்டிலாகொலுற்றவிளமையோக்கங்களிப்பார்.(கஉசு)

மேற்படிவேறு.

பாவமிகையாற்பூதத்துற்பவிப்பாநரகா புண்ணியங்கண்
மேவுமிகையாற்பூதசாரத்தின்விண்ணோருதித்திடுவர்
பூவினிடத்தவ்விரண்டாற்பூதபரிணாமத்துயிர்க
ளாவ வியன்மானிடம்விருகமனைத்தும்பையுளாவனவே.(கஉஎ)

(கஉரு) நிட்காமியம்-பலன்கருதாதுசெய்தல். (கஉசு) கொல் - ஐயப்பொருட்டு. ஏர் - அழகு. (கஉஎ) இதுமுதல் - கஙஅ-வரையும் வரும் கர்ப்போற்பத்திவிடயங்களைப் பாகவதம் கபிலகீதத்துவமுரைத்த வத்தியாயம் ௩அ - வது செய்யுள்முதலாகவும், சிவதருமோத்தரம் சனனமரணவியல் ௬-வது செய்யுள்முதலாகவும், தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலம் உகூஎ - வது செய்யுள்முதலாகவும் விரிவாகக் காணலாம். பூதத்துற்பவித்தல் - பஞ்சபூதத்தாலாயசரீரமெடுத்தல். பூதசாரத்துற்பவித்தல் - பூதங்களின் சாரமான சரீரமெடுத்தல். பூதபரிணாமத்திற்சனித்தல் - பூதங்களின் திரிபினாலாய சரீரமெடுத்தல்; பரிணாமம் - திரிபு. பையுளாவன - கருப்பையுட் கட்டுண் டுதிப்பன. இவற்றை ஜராயுஜம் என்ப; ஜராயு-கருப்பை; ஜம்-பிறத்தல்

பறவையுரகமுதலாயபலவுமண்டத்துதித்திடுமால்
உறவுற்றுதிக்குங்கசிவினிற்கீடாதி யுருவவித்திடமண் [டா
ணறல்கால்வெயிலுற்றிடவுதிக்குமறுகாற்பொறியஞ்சிறைவண்
றறவுண்டிசைபாடிடமலருநறியதருக்கண்முதற்பலவும். (கஉஅ)

அவ்வித்துயிர்ப்பவற்றரிய யவைமுன்செங்நெலீறுன
செவ்விப்பலத்தினசித்திடு மச்சிறந்தபலமானிடாக்குணவா யய
யெவ்வத்தகற்றிவளாக்கு மகத்திட்டவுணவுநீரிவற்றை
யொவ்வப்பருவமடுப்பவறல்கீழாவுணவுமேலாக. (கஉகூ)

பகுக்கும்பிராணன் பின்வளிபின்பகுக்குஞ்சாரந்துராலிர
ண்டா, வகுக்குமழலிதயஞ்சாரம்விதிந்துசமானனுற்பயிலுந்,
தொகுக்குநாடியெலா மற்றைத்துரால்பன்னிரண்டாய்வெளிக்
கொள்ளு, மிகுக்குஞ்சாரமென்பதுமத்துணைத்தாம் விரைப்பூங்
குழன்மாதே. (கங0)

இயக்கமிரண்டாய் மிடற்றுவழுக்காய் மூக்கிளகுளிநீராய்
நயக்கட்பீளையாய்ச் செவி நா நகம் பல் குய்யங் குதமழுக்காய்க்

(கஉஅ) அண்டத்துதிப்பன - அண்டஜம். வேர்வையினுதிப்பன-ஸ்வேதஜம்; ஸ்வேதம் - வேர்வை வித்தினுதிப்பன-உத்பிஜ்ஜம். (கஉகூ) யவை - ஓர்தானிய விசேடம்; வாற்கோதுமையுமாம். பலத்தினசித்தல் - பலன்தந்து நசித்தல். ஒவ்வு அப்பருவம் - சமமாகும்பருவம்; அது ஜீர்ணிக்கும் சமயம். அறல்கிழாக உணவு மேலாகும்படி நீரையும் உணவையும் பிராணவாயு பகுக்கு மென்க. (கங0) அவ்வுணவை அக்கினி பாகப்படுத்திச் சாரமுந் துராலுமாகப் பிரியும்படி வகுக்கும்; அவற்றை அபானவாயு அங்ஙனமே பகுக்கும் ; அச்சாரம் இதயத்திலிருந்து சமானனால் நாடியெலாம் பயிலுமென்பது. பின்வளி-அபானன். துரால்-அழுக்கு. நாடி—இடைகலை பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி சிஃகுவை அலம்புடை புருஷன் குகு சங்கினி என்பன.

கயக்குரோமத்துளைதோறுங்கசியும்வேராய்த் துராலகழியும்
வியக்குமருங்கற்புடையாரும்விரும்புமேன்மைமெல்லியலே.()

சாரமதனிற்றுவக் கதனிலுதிர மதனிற்றசைதிணமூன்
சேருந்தசையினரம்புமயிர் செறியுநரம்பினிடைநாடி
யோருமதிலென்ப தின்மூளையுகிர் மூளையிற்சுக்கில மதனிற்
சாருங்கரு விங்ஙனமீராறுகிப்பயிலுந்தன்மைத்தே. (கஙஉ)

கலிநிலைத்துறை.

பாயும்வெண்புனல்செம்புனலினுமிகப்பரவி
னேயுமாண் சுரோணிதமிகிற்பெண் ணிகர்த்திரண்டுங்
தோயுமேலலியாம் பிதாநுகர்சுவைபற்றிப்
போயுள்வெண்புனற்பட்டு யிரணைகருப்புகுதும். (கஙங)

உயிர்படுங்கருவற்றைநாட்குன் றியையொக்கும்
இயலுமைந்திற்புற்புதமொக்கு மேழின்மெல்லூனும்
பயிறரும்பதினைன்கிற்செங்கீர்பரவூனுஞ்
செயிரிலையைந்திற்பீசமுற்றிடுஞ்சிறிதாக. (கஙச)

சிரங்களம்புறமென்புநாண்முப்பதிற்செறியுங்
கரங்கடாளடிமருங்குமுனிருமதிகாணுந்
தரங்கொள்சந்திகள்வழிவின்மும்மதியிடைச்சாரும்
வரங்கொண்மாதராய்விரல்கணைன்மதியிடைமருவும். (கஙரு)

(கஙக) இயக்கமிரண்டு - மலஜலங்கள். குய்யம் - மர்மஸ்தானம். கயத்தல் - கசங்குதல். வேர் - வேர்வை. (கஙஉ) திணமூன் - திணமும் ஊனும். (கஙங) வெண்புனல் - சுக்கிலம். அலி - ஆண்தன்மையை யவாவிப் பெண்தன்மையை இழந்தது; பெண்தன்மையை அவாவி ஆண்தன்மையையிழந்தது பேடு. இப்பேதத்தைப் "பெண்ணோ வலிதானோ பேடோ வெனவுரைப் பார்" என்னும் கந்தபுராணம்தேவரையேவல்கொள்படலச்செய்யுளானுணர்க. (கஙரு) புறம் என்பு-முதுகும் முதுகெலும்பும்.

நாசியானனநகங்கன்னங்குய்யநன்னகையூன்
பேசுமைந்திலாறினிற்கன்னத்துளைபெறுமேழில்
ஆசிலாதபல்குறிகளும்விளங்கிடவமையு
நேசமாய்க்குதமுந்திமற்றங்கமுநிரம்பி. (௧௩௬)

ஓங்கிடும்பிராணன்முதல்வளிகளுமுற்றுத்
தேங்கிடும்மதியெட்டினற்றுய்நுகாசெறிபூண்
பாங்குறுஞ்சுவையுந்திவாயகட்டுறும் பற்றி
வாங்குமின்பதுன்பங்களுமறுதியானுகரும். (௧௩௭)

உற்றிடுங்கருப்பாசயப்பையுறுத்துதன்முற்
சொற்றிடுந்துயருழுந்திமுன்னிகழ்ச்சியுந்தோன்றப்
பற்றிடும் புவிப்பிறந்துநன்னெறிநின்றுபவநீ
வற்றிடச்செய்வாமென்றுள்ளிப்பிறக்கும்பின்மறக்கும் (௧௩௮)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இவ்விதமின்பமுத்தியெய்திடுங்காறுமாறு
தெவ்வநோயுறும்பிறக்குமிறக்குமித்துயரமோர்ந்த
செவ்வியமனத்தாமாயன்றிருவடிப்புணையாற்சென்மப்
பௌவமேழையுங்கடப்பாபரிந்துசோகாப்பாமற்றோர். (௧௩௯)

நாடிகளுரோமந்தந்தநகங்கள்வீரியமேபித்த
நீடியகபநிணந்தோனெய்த்தோருண்மூளையின்ன

---

(௧௩௭) பிராணன் முதல்வளி - பிராணன் அபானன் உதானன் சமானன் வியானன் நாகன், கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்பன. இவற்றில் முற்கூறிய வைந்தும் பஞ்சபிராணனென்பர். இவற்றின் றொழில்வகைகளைக் கட்டளைகளாலுணர்க. (௧௩௮) கருப்பாசயப்பை யுறுத்தல் முதலியன— கருப்பாசயப்பையுறுத்தல், அதிற் சலம்பூரித்தல், உதராக்கினியால் வேவுதல், பிரசூதவாயு முறித்துத் தள்ளுதல், யோனித்துவாரத்தி னெருக்குண்டல். முன்னிகழ்ச்சி-பூர்வஜன்ம வுணர்ச்சி. (௧௩௯) காறு - அளவையுணர்த்துமோரிடைச்சொல். சோகாப்பர் - துக்கிப்பர். (௧௪௦) தொடி - பலம்.

கூடியவிரண்டைந்நூறுதொடியெனக்கூறுநூல்க
ளோடியவிரண்டியக்கக்குறுத்தியவளவையின்றே. (௧௪0)

புலைத்தொழில்பயின்றவிந்தப்புன்புலாற்சுமையைநாளு
நிலைத்ததென்றெண்ணியெண்ணிநேயம்வைத்துறுகாப்பாற்றி
மலைத்தலைந்துழல்வதெல்லாமடமையோர்செய்கையாகுஞ்
சிலைத்தொழில்விளக்கியாங்குச்செறிகரும்புருவப்பாவாய். ()

தரித்திரமென்றுபல்காற்சாற்றினையெதிர்மறுத்தல்
பரித்திடுமச்சொறன்மைப்பன்மைமுற்றுகவல்லோர்
விரித்துரைபொருணீசற்றும்விளங்கிடவுணர்ந்தாயல்லை
யரித்தடங்கருங்கண்மாதேயாதலினிலைத்ததன்றால். (௧௪௨)

பாற்கடலடுத்தமீனப்பால்விரும்பாதுமற்ற
வேற்குமாவிரும்பினாற்போலெம்பிரான்றிருமுன்சார்ந்து
நாற்கதிகடக்குமின்பச்செல்வத்தைநண்ணிடாமற்
சேற்கருங்கண்ணாய்துன்பச்செல்வமோநண்ணுவேன்யான். ()

மானமற்றிழிவுபூண்டுவளமனைக்கடைதோறெய்தி
யீனமுற்றிரந்திரந்திவ்வுடல்பெருத்திடச்செய்தாலுந்
தூநகைக்கரியவாட்கட்சுடர்த்தொடிநிலைப்பதன்று
பேணமார்வெள்ளநீரிற்பிறந்திடுங்குமிழிபோலும். (௧௪௪)

நன்றியிலுடலைப்போற்றனன்றுளார்செய்கையன்று
வன்றிகண்மலத்தழுந்திமாசுகமென்றுற்போல

---

(௧௪௨) தரித்திரம் - வறுமை; இது வடமொழியேனும் நயங் கருதி எதிர்மறைத்தன்மைப் பன்மை முற்றாகக் கூறினார்; ஓரிடத்திற் றங்கிப்ரோமென்பது பொருள். அரி - ரேகை. (௧௪௩) ஏற்குமா சுறுதொக்கது; (மனம்போனபடி.) நாற்கதி - தேவகதி மனிதகதி நரககதி மிருககதி. (௧௪௪) இவ்வுடல் நிலைப்பதன்று என்பது '𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌮𑌰𑌣𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂' (ஜாதஸ்யமரணம் த்ருவம்) - பிறந்தவ னிறப்பது நிச்சயம் என்பதுகருதி.

வொன்றுமிக்குடும்பச்சேற்றிலுழன்றிடேனுழன்றிடேன்யா
னென்றுரைத்திறுத்தான்பற்றிலிருந்தவரேறுபோல்வான். ()

அந்தணனுரைத்தமாற்றமனைத்துமஞ்செவியிலேற்று
நந்தலிலுண்மையீதென்றுணர்ந்துந்தானயந்துபெற்ற
மைந்தர்பால்வைத்தவாசைமயக்கறாளாகிப்பின்னும்
புந்தியின்விரும்பிப்பாதம்போற்றிநின்றிதனைக்கூறும். (௧௬௬)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலைமுழு தோர்ந்து கரிசெலா மறுத்த காந்தனே பருமணி
யரவத், தலைகிடந் திமைக்குந் தாத்திரி யதனிற் சாற்றருந் தக்
கநன் முயற்சி, யுலைவறப் புரியா வொருவனுக் கெங்ங னுற்றிடு
ஞ் செல்வநன் னிலத்தை, நிலைபெற வுழுது வித்திலான் றனக்
கு நீள்பய னுற்றிடுங் கொல்லோ. (௧௬௭)

மானிட னொருவன் றனக்கருஞ் செல்வம் வாய்க்கவென்
றனுதின முயற்சி, தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத் தந்
தளிக் குவன தா லன்றே, வானபே ரறிஞர் திருவினை முயற்சி
யாக்குமம் முயற்சியில் லாமை, யீனமா ரின்மை புகுத்திடு மா
லென் றியாருநன் குணர்தர நவில்வார். (௧௬௮)

மக்களே தேவர் நரகரென் றறிஞர் வகுக்குறு முயர்திணை
யாதி, தக்கபல் லுயிர்க்குஞ் சக்கர முதலாச் சாற்றுமைம் படை
கரத் தேந்து, மைக்கடன் மேனி வள்ளல்வேண் டியவீ வா
னென வாய்மலர்ந் தனையான், மிக்கபன் முயற்சி புரிகிலார்
தமக்கவ் விண்ணவன் யாங்ஙன மருளும். (௧௬௯)

செய்த்தகு முயற்சி செய்திடிற் செயிர்தீர் செய்யவண் மணா
ளனு மிரங்கி, வியத்தக வேண்டு மியாவையு மளிப்பன் விளம்

(௧௬௫) வன்றி - பன்றி. இறுத்தல் - விடை. (௧௬௮) அதால்
அன்சாரியை பெறாத சுட்டடி வினையெச்சம். இது, "முயற்சி
திருவினையாக்கும்" என்ற திருக்குறளைச்சுட்டிநின்றது.

புறு முயற்சிசெய் யானே, ஊயத்தகு போக மளித்திடா னெ
ன்று நானிலத் தறிஞர்நன் குரைப்ப, ருயத்தகு நெறிமா லடி
யுன லென்றே யோர்ந்தமா தவப்பெருங் கடலே. (கரு0)

முன்புநல் வினைசெய் தவர்முயற் றின்றி முன்னிய வெலா
மூண்ப ரென்னி, லின்பவா லரியே முதலுப கரண மெலா
மினி துடையவ ரேனும், வன்புறு மடிதன் முயற்சியில் லாமை
வயிற்றெழு பசித்தழ லவிய, நன்பத மாமோ மறைமுழு துண
ர்ந்த நற்றவக் குணப்பெருங் குன்றே. (கருக)

கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங் கருதுறு முயற்சி
செய் யானே, லடலுறு செல்வ மடைகுவ னேகொ, லருங்க
லத் திட்டபா லடிசின், மிடலுடைக் கரத்தா லெடுத்துணு, தெ
ங்ஙன் வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்ப, னுடல்பவந் தனக்
கோ ராகர மாகு முடனனி வாட்டுமெய்த் தவத்தோய். ()

முன்பொரு கராவான் மொய்வலி சிந்து மும்மதக் கறைய
டிக் கயமும், வன்புடைப் பொன்னன் புரிகொடு மையினுன்
மனமெலி பிரகலா தனனு, மன்பினோ டேத்தி யழைத்தலா
னன்றே யலைகடல் வண்ணன்வந் தாண்டா, னென்பரா தலி
னுன் முயற்சிசெய் பவருக் கெய்தரும் பொருளுமொன் றுள
தே. (கருங)

கமலமே லவனைத் தோற்றிய வுந்திக் கமலன்வெந் தொட
ரெனப் பகரு, முமலவே ரறுத்த முனிவர்வேண் டாம லெங்

(கரு0) செய்யவள் - இலக்குமி; காரணக்குறி. வியம் - மேன்மை. நானிலம் - குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்; பாலை இந் நாலிடத்தடங்கலின் வேறு விதந்திலர். (கருக) முயற்று - முயற்சி; து தொழிற்பெயர்விகுதி. அரி - அரிசி. வால் - வெண்மை. பதம் - உணவு. (கருஉ) உடல் பவம் - வருத்தும் பிறவி.
(கருங) கரா - முதலை. கயம் - ஈண்டுக் கஜேந்திரன். பொன்னன் - இரணியன்.

யன முயறிரு வளிப்பன், விமலவே தியநீ யுளத்தின்வேண்
டுவையேல் வேண்டிய வேண்டியாங் களிக்கு, மமலநால் வேத
மாறுசாத் திரநன் காய்ந்தவா தமிழ்சிறந் தவனே. (கடுச)

முன்னரும் பற்பன் முனிவரர் பண்ணுண் முயலரு மருந்தவ
முயன்று, பன்னரும் பேறு மாதவ னளிப்பப் படைத்தனர்
பவளவாய்ச் செங்கா லன்னவே றுயாத்த நான்மறை முனிவ
னனையநற் பெருந்தவ ரேறே, யுன்னருஞ் செல்வ மன்னமா
லீய வுறிற்புக ழன்றிவே றிலையே. (கடுரு)

அப்பரந் தாம னிணையடி யன்றி யாதர விலையென வறிந்
தாய், செப்பரு மாசை பொய்கொடுஞ் சீற்றஞ் செற்றுளா
யெனினும்வின் னுளு, நப்புரந் தரனு தியாதொழு மன்னு
னண்ணுறுந் துவாரகை யணுகி, யொப்பில்பல் வளனுந் தருதி
யென்றிரக்கி லுறுங்கொலோ தாழ்வதி னுணாந் தோய். ()

மாசறு கற்பின் மடவர றனக்கு வகுக்கருங் கொழுநனே
யுலக, மாசறத் துதிக்கும் கடவுளா மென்னு வரியநான் மறை
சொலு மதனுற், பாசமுற் றிரியப் பலகலை யொருங்கு பனக
றத் தேர்ந்தநீ யெனக்குப், பேசருங் கடவு ளாமெளி யேனைப்
பெட்பொடு புரத்தனின் கடனே. (கடுஎ)

மடமையேன் றனக்குக் கடவுளு நீயே வகுக்கரு மிறைவனு
நீயே, யடலுறு தானந் தவமுதல் யாவு மாற்றுநின் பணிவிடை

(கடுச) மும்மலம் - ஆணவம் காமியம் மாயை. ஆறுசாத்தி
ரம் - வேதாந்தம் வைசேஷிகம் பாட்டம் பிரபாகரம் பூர்வமீ
மாஞ்சை உத்தரமீமாஞ்சை. (கடுசு) நப்புரந்தரன் என்பதிலு
ள்ள நகரம் சிறப்புப்பொருட்கண் வந்தது; நக்கீரனார் நப்பின்
னையார் என்பவற்றிற்போல. இரண்டாவது அத்தியாயத்தில்
உ௪௪ - வது செய்யுளில் வரும் நகரமும் இப்பொருளதே.
(கடுஎ) நான்மறைசொலு மென்றது - 'ಅನ್ಯಥಾ ಶರಣಂ ನಾಸ್ತಿ'
(அந்யதா சரணம்நாஸ்தி) - (நாயகனையன்றி மனைவிக்கு) வேறு
கதியில்லை யென்பதை.

யன்றோ, மடலவிழ் துளப மாலிகை புனைந்த வாசுதேவன்பத மலரைத், திடமுற நெஞ்சத் துன்னிவல் வினையைச் சிதர்தரச் செகுத்தமா மறையோய். (கருஅ)

வெண்டிரை வீசுங் கருங்கடற் புடவி விண்ணகம் பாதல மிவற்றுண், மண்டிய வுயிர்க ளெவற்றையுங் கமலை மார்பினன் புரப்பனே யெனினு, மண்டர்கள் புகழு மையநீ யுயிர்த்த வரிய மக்களையுமென் றனையும், பண்டைநூற் கியையப் பாதுகாத்தளித்தல் பகருநின் கடனெனப் பகர்ந்தாள். (கருகூ)

கலிநிலைத்துறை.

இடம்பாடிலாமைமுகன்சாம்பியிரங்கக்கூறுங்
திடம்பாடுகொண்டபெருங்கற்பினடேமொழிக்கு
மடம்பாடறுத்துக்கலைமுற்றுணர்வாய்மைசான்றோ
னுடம்பாடிலாமையுடையானலனாயினனே. (கசூ0)

கண்ணன்றனைக்கண்ணுறிற்கண்ணுங்கதியுநன்கு
நண்ணுஞ்சிறுமைந்தர்களாலுளநையுமின்னு
ளெண்ணுகிரம்புமெனச்சில்பொழுதுள்ளத்தெண்ணி
யொண்ணுமனையாண்முகநோக்கியுரைக்கலுற்றான். (கசூக)

தெய்வங்குரவனரசன்றிருமுன்னர்ச்செல்வோர்,
மெய்வந்தவன்றாருள்வேண்டிவிரும்பெதேனுங்
கைவந்தபெற்றுச்செலீஇக்காண்குவர்கண்ணன்முன்பு
மைவந்தகண்ணாயினிதென்கொடுவல்லைசெல்வல். (கசூஉ)

(கசூ0) இடம்பாடு - செல்வமுடைமை; இடம் - செல்வம். "இடனில் பருவத்தும்" என்னுந் திருக்குறளானு மறிக. உடம்பாடிலாமை யுடையானலனாயினன் - சம்மத மின்மையை யுடையவனல்லாதவனானான்; (சம்மதித்தா னென்றபடி.) பாடு நான்கும் முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்கள். (கசூக) கண்ணுதல் - கருதுதல். இன்னுள் அல்லது மின்னுள் என்று பிரிக்கலாம். எண்ணிவு. ஒண்ணும் ஒன்று மென்பதன் மரூஉ. (கசூஉ) ஏதேனும் என்றது - கையுறையை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெறுகி ரப்புளோர் வாழ்ந்திடு செல்வர்பாற் செல்வரேன்
மதியார்கண், மறுவு றுத்தவ மானமு மியற்றுவர் மானமுள்
ளவராயிற், குறுகு மவ்வவ மனத்தா லுயிர்விடு கொள்கையி
ற் றலைநிற்பார், நறும லர்க்குழா லாதலா லவரிடை நண்ணன
ன் றெனவெண்ணல். (கசுந)

இருங்க டற்புவி யிடத்தினில் லாரையெல் லாருமெள் ளுவ
ரென்று, வொருங் குணர்ந்தமுன் னோருரைத் திட்டவஃ துண்
மையென் றுளங்கொண்ணீ, நெருங்கு பற்றுறு தாய்தந்தை ய
ருநிரப் புறுநரை வெறுப்பாரேற், சுருங்கு மன்பின்மற் றெவர்
வெறுத் திடாதவர் தூநகை மலர்க்கொம்பே. (கசுச)

ஒன் றும் வேண்டல ராயினுஞ் செல்வாபா லுறுமிடி யவர்
சார்ந்தா, லின்று வந்தமை யாதினைக் கருதிமற் றிவரென வுள
த்தெண்ணிக், கன் று மாறுபல் குறிப்புரை நவிற்றுவா காதலி
னவர்பாற்போய், மன்ற வந்தது சிறுமையே யிவர்க்கன்றி மற்
றிலை யறிபாவாய். (கசுரு)

இந்த வஃறிவ னுரைத்தலென் னெனவுளத் தெண்ணிடே
லெக்காலும், பந்த மானிடர் தன்மையிற் றெனப்பகாந் தேன்
பரம் பொருளாய, சந்த மாமறைத் தலைவன்பா லுறுவது தகா
தென்றே னலன்கண்டா, யெந்த வாறுகை யுறையிலா தையன்
முன் யான்படர் குவன்மாதே. (கசுசு)

(கசுந) தெறு நிரப்பு - வருத்தும் வறுமை. எண்ணல் - எண்
ணற்க. (கசுச) இது "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்" "அற
ஞ்சாரா நல்குரவு" என்ற திருக்குறள்களின் பொருளது.
(கசுரு) இது '[illegible]' (யாசனாந்தம்வஸ்
கௌரவம்) - ஏற்றலால் கௌரவம்போம். என்றதைச் சுட்டி
, ற்று. போய் - போதலாலென்பதன் [illegible].
(கசுசு) சந்தம்-உதாத்த அநுதாத்த சொரிதங்கள்.

எழுகடற்கொரு புன்னுனிப் பனித்துளி யென்னுவகையைச் செய்யுங், கொழுமலைத்துணைத் தேவுக்கம் மலைத்துணை கொண்டுபோய்த் திடலுண்டோ, செழுமதிக்குசசின் னூலிழை பறித்திட்டுச் சிந்தித்த துறல்போல, முழுமுதற்குமே தாவது கையுறை கொண்டுமுன் னுறல்வேண்டும். (௧௬௭)

மேற்படி வேறு.

என்றுரைத்த கொழுநனுரை கேட்டுமகிழ்ந் திதற்கென்றே செயலென்னென் றெண்ணி, யன்றுமுத லுபவாசந் தானிருந்து, மாமுனிவ னரிதிற் றேடி, நன்றளிக்கு நெல்லினிற்றன் னொருபாகம் வேறெடுத்து நலக்கச் சோதுத், துன்றியவந் நெல்லையொரு தினந்தறலி னனைத்துவறுந் தெடுத்துத் தூய்நா. (௧௬௮)

கறையிட்டு நாணிகாண வுலக்கைகொடு மிக்கிடித்துக், கரிசு போக்கி, நிறையிட்ட வவலாக்கிக், குசேலமுனி கந்தையினி னேடி, யோராபான், மறையிட்ட வொழுங்குடையான் முடிந்து கொடுத், தினிதுபோய் வருக வென்றாள், சிறையிட்ட பவநீங்கும் வழிகண்டோன், வழிதேடிச் செல்ல லுற்றான். (௧௬௯)

முன்னுநெடுந் தூரவழி நடந்தறியான், றோட்கோப்பு முதலா தாரந், தன்னமுமி லான்பதிகா தமைவினவி வழிதொடர்ந்து, தடையிலாது, பன்னெடுங்கா வதம்போகிக், கவாவழிகள் டுளமயங்கிப் பரிந்து நின்றங், குன்னிமதிப் பாலிதுசெல் வழியெனத்தேர்ந், தவணின்று முற்றுச் செல்வான். (௧௭0)

---

(௧௬௭) எழுகடல்கள் - உப்பு கரும்பிரசம், கள் நெய் பால் தயிர் சுத்தஜலம் இவற்றினை யுடையன. செழுமதிக்குச் சின்னூலிழைபறித்திட லென்பது.—கன்னிப்பெண்கள் விரைவிலே கணவனைப் பெறும்பொருட்டு நிலாச்சோறு சமைத்துப் படைத்து வழிபடுங்கால் தமது முன்றானை நூலிழையை வஸ்திரப்பிரீதியாகப் பறித்திட்டுப் பிறைதொழுதலைச் சுட்டிநின்றது.

(௧௬௯) கரிசு - தவிடு உமி முதலியன. நேடல் - (இழியாத பாகத்தைத்) நாடல். (௧௭0) தோட்கோப்பு-தோளிற்கோப்பது; கட்டமுது. பதிகர் - வழிச்செல்வோர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாங்குவிற் கருங்கார் மருங்குற மருண்டு மையலம் பிடியெ
ன வணைத்த, தேங்குமும் மதம்பெய் களிற்றினைக் கண்டு சிறு
பிடி யூடவக் களிறு, பாங்குறப் போகி யடிக்கடி வணங்கிப் பரி
ந்துலைங் கற்பகந் தளிர்த்த, பூங்குழை யூட்டிப் புலவிதீர்த்
தணைக்கும் பொருப்புகள் பற்பல கடந்தான். (கஎக)

மிக்கசெந் தழலின் சிகைக்கொழுந் தெழுந்து மெய்வெதுப்
புறுமென வஞ்சித், தக்கபொன் னுலகத் துறைகுநர் முகிலைத்
தடையென நவின்றுகீழ்த் தாழ்த்தி, யொக்கலோ டொளிர்கற்
பகநிழன் மருந்துண் டுயிரையோம் புறக்கடுங் கொடுமை, தொ
க்கநீள் பரப்பு நிரப்புறு முரப்புச் சூழல்கள் பற்பல கடந்தான்.

ஆறலைத் துயிருண் டுடல்கவர்ந் தொளிக்கு மவர்க்குமவ் வுட
ல்கரு தாது, கோறலைக் குறித்த குடாவடி யியங் கொடுவரி வே
ங்கையெய் யாமான், மாறலைத் தெழும்போ தகமுத லாம்பன்
மாக்கட்கு மிடமதாய்க் கொடுமை, காறலைச் செய்யா தடர்ந்
துயர்ந் திருண்ட காடுகள் பற்பல கடந்தான். (கஎங)

மாங்கனி யுதிரப் புலியடிப் பைங்காய் வாழைக்கூன் குலைபல
முறியத், தேங்கனிந் தொழுகும் வருக்கைகள் கிழியச் செறி
கமு கம்பழஞ் சிதறத், தாங்குமுப் புடைக்கா யுடைதரப் பக
ட்டுத் தகட்டகட் டிளவரால் பாயும், வீங்குநீர்ப் பழன முடுத்
ததே யங்கண் மென்மெலப் பற்பல கடந்தான். (கஎச)

(கஎஉ) மருந்து - அமிர்து. முரம்பு - பருக்கைக்கல்; வலிந்து நின்றது. (கஎங) உடல் - திரவியம். எய் - முட்பன்றி. காறுதலைச்செய்யாமல் - தோற்றுவியாமல்; அன்றிச் சூரியவெப்பம் காலுக்குந் தலைக்குஞ் செய்யாமல் எனலுமாம். (கஎச) புலியடிப்பைங்காய்வாழை-புலியடிபோலும் காய்வரிசைகளையுடைய வாழை. வருக்கை - பலா; இது வரிசையாகச்சுளைகளையுடைமையின் ஆகுபெயரென்பர் நச்சினார்க்கினியர். அகடு - வயிறு.

காமனும் பெண்மை யவாவுறப் பொலிந்த காளையர் மார்பி டை வயிரத், தோமறு பூணிற் றங்கிழல் வேற்றுத் தோகைய ரெனநினைந் தூடிக், கோமள மடவார் மறுகிடை யெறிந்த குருஉமணிப் பூணவட் குறுகு, நாமநீ ளிருளை நக்கிவா ளெறி க்கு நகரங்கள் பற்பல கடந்தான். (கஎ௫)

துன்னிய வஞ்ச மழுக்கறல் வெகுளி தோன்றிடா வகையு ளத் தொடுக்கி, நன்னய முடையார் போல்வெளிக் காட்டி நா ட்டிய திறையுநன் குய்த்துச், சென்னிமே லிருகை குவித்துநன் கொழுகிச் செயிருறு சமயமுற் றறிந்து, மன்னரை யலைக்குங் கொலைத்தொழிற் குறும்பர் வாழ்நகர் பற்பல கடந்தான். ()

கந்தமென் மலரும் வயிரமும் பொன்னுங் கரிப்பெரு மருப் பும்வெண் முத்துஞ், சந்தனக் குறடுங் காழகிற் றுணியுந் தகை மயிற் பீலியு மெடுத்துச், சிந்துவெண் டரங்கக் கரங்களா லிரு பாற் செறிகுலை யுடைத்துவார் பரவை, நந்தலில் வயிறு கிழித ரப் பாயு நன்னதி பற்பல கடந்தான். (கஎஎ)

கோச்சகக்கலிப்பா.

மெய்த்தசையிலாதொடுங்கிமேலாயதவத்தொடுங்கா
னெய்த்தினிநாமற்றைவழியெவ்வாறுகடப்பதென
வுய்த்துணர்ந்துமென்மெலச்செலுறுபொழுதமறுகும்வகை
மொய்த்தெழுதீவெப்புடம்றுமுதிர்வேனில்வந்ததுவால் (கஎஅ)

மண்கொதிப்பவறல்கொதிப்பவளிகொதிப்பவெண்ணுவா
ரெண்கொதிப்பநறுநீழலியைமனைவிட்டகலார்க்குங்
கண்கொதிப்பக்கரங்கொதிப்பக்கால்கொதிப்பக்கற்பகஞ்சார்
விண்கொதிப்பவவ்வேனில்வெம்பருவமேவியதால். (கஎகூ)

(கஎ௫) நக்குதல் - நண்டுக்கெலித்தல். (கஎ௬) குறும்பர் - சிற்றரசர். (கஎஎ) குலை - கரை.

குலவுதனை விழுங்குவகைகொண்டகோட்கினமாகி
யிலகரவநாடனைத்துமிதுசமயமெனப்பரிதி
பலகதிரும்புகுந்துடற்றப்பண்ணியசெவ்வழிபோலு
நிலமகடனுடல்வெடிப்பநேர்தோன்றும்பெருங்கமர்கள். (க௭0)

நலக்கதிர்செய்நம்பகையைநான்மறையோரிதுகொண்டே
விலக்குவர்நாங்கொண்டிருப்பின் மேவாதெப்பகையுமெனப்
புலத்தமைத்துக்கவர்ந்தான்போற்பொய்கைகுளங்கானதிமுன்
னிலத்தமைத்தநீரெல்லாநெடும்பரிதிகவர்ந்தனனுல். (க௭க)

தெள்ளுபுனனைசமிக்குத்திரிமருப்பினிரலேயெலா
நள்ளரியபேய்த்தேரின்பின்றெடர்ந்துநலிந்திடுமால்
வள்ளலெனவெளிக்காட்டிவஞ்சிக்குமுலோபர்கள்பி [போல்
னெள்ளுவறுமைப்பிணியோர்தொடர்ந்துதொடர்ந்திளைப்பது

புறங்கொடாத்திறல்வீரர்பூம்போர்வைநெகிழ்த்தகற்றிப்
பிறங்குசாந்தாற்றிவிடுவளிக்களித்துப்பெரிதுவப்பா
ரறங்கொண்மாதருங்கணவரங்கையன்றித்தடவுதலின்
மறங்கொள்குயஞ்சிவிறிவிடுவளிதடவவம்பவிழ்ப்பார். (க௭௩)

காலோடைவாவிகுளமுதலாயகணக்கிலவன்
மேலோடும்புனல்வறப்பவவற்றுறைமென்பறவைகணற்
பாலானவொருவனிடம்பற்றியினிதுண்டகிளை
யேலாத்துன்பவனுறுங்காலிரிவதெனவிரிந்தனவால். (க௭௪)

வாவிகாள்குளங்காணீர்வற்றினீர்முன்னளித்த
மேவியவின்சுவைப்புனலால்வீங்கினேமிதுபொழுது
பாவியவப்புனலளிப்பேம்பற்றுமெனக்கால்வதுபோற்
பூவியன்மக்களுடம்புபொங்குவெயர்நீர்காலும். (க௭௫)

(க௭0) கோள் - ஈண்டு இராகு. கமர் - நிலவெடிப்பு. (க௭க) நம்பகையென்றது - சூரியனை மறைக்கவரும் மாந்தேயரென்னும் அசுரரை. இது வென்றது பொய்கையாதியவற்றிலுள்ள நீரை. (க௭௨) இரலை - மான். பேய்த்தேர் - கானலிற்றோன்றும் பொய்ந்நீர். (க௭௩) சாந்தாற்றி - சிவிறி. வம்பு - கச்சு. (க௭௪) அவல் - பள்ளம். நற்பால் - நல்லூழ்.

கண்ணருமிக்கொடும்பருவநகைதருவெள்ளொளிகாட்டி
யெண்ணுமனங்கரைந்துருகவிந்தியமுமுடனுருகத்
துண்ணெனும்வெந்தீவெப்பந்தொகுமைந்தர்க்குறுத்துதலால்
வண்ணமணிநகைத்துவர்வாய்மடவார்[illegible]மப்பொருவும். ( )
வாங்குகடலகம்புகுந்துவடவைவெந்திவதையறிந்தா
மோங்குகடல்சுவற்றவேனலுலவுரைத்தலதுபொய்யே
தேங்கியவிப்பருவத்தாற்செறிவெட்பிற்காற்றுமை
யாங்குகுளிரிடந்தேடியஞ்சியொளித்ததுபோலும். (கஅஎ)
இத்தகையவேனிலிடையிருப்பசியாலுறமெலிந்தும்
வைத்ததருநிழலிருந்தும்பள்ளமெலாமாராய்ந்தும்
தத்துபுனல்கிடையாமைத்தாகத்தால்வாய்புலர்ந்துஞ்
சுத்தவிரதத்தவநற்றுறைநின்றோன்செல்லுமால். (கஅஅ)
சுடர்மறையவூரகத்துத்துயில்வதற்காரிடங்கொடுப்பார்
படர்வழிச்செனமக்கிவ்வூர்ப்பழக்கமுடையாரிலரென்
றிடருடையமனத்தினனாயெதிர்கோயின்முன்னுறங்கி
யடர்கதிரோனெழுமுனெழுந்தாறுணர்ந்துநடந்திடுமால். ( )
கானவேன்முட்டைத்துக்காலூன்றமுடியாம
லீனமார்முள்வாங்குங்கருவியுமங்கில்லாமன்
மானமார்பெருந்தவத்தோன்மனமெலிந்துமுசம்புலர்ந்தோர்
தானமேவுறவிருந்துட்டைதயவிவையெண்ணுவான். (க௯0)
செறிதருதன்மனப்படியேசெய்தலொருவர்க்கினிதா
மறிவுறுக்குங்குருமொழிகேட்டாக்கலஃதினுஞ்சிறப்பா
முறிதருமேதிலர்சொற்கேட்டொழுற்றன்முனிதுயர்மனையாள்
வறியவுரைகேட்டொழுற்றன்மன்னிறனேர்கெடுதியுறும். (க௯க)
இதுதெரிந்துமனையாட்டியியம்பியசொற்கூடம்பட்டு
முதுவெயிலாலுடல்வருந்திமூர்ச்சித்துமெலிகின்றேன்

(க௯க) மன் இறல் நேர்கெடுதி - உலகு அழித்தலை யொத்த கெடுதி. 'ஸ்திரிபுத்தி: ப்ரளயாந்தக:' என்பதனையுமுணர்க.

கதுமெனப்பல்காவதங்கள்கடந்தேன்வண்டுவரைநக
ரதுவெனக்கேட்டிடிலெவருமின்னுநெடுந்தூரமென்பார். ()

மற்றைவழியுங்கடக்கவலியின்றோர்விதத்தினெ
லுற்றிடினுங்கருங்கடல்யாருதவிகொடுகடந்திடுவேன்
பொற்றவதுகடப்பினுமப்புரத்திலெனையார்மதிப்பார்
சற்றுமுணராதுவழித்தலைப்பட்டேனென்செய்தேன். (௧௧௩)

மாமகுடமுடிமன்னர்நணிவந்துகாத்திருக்குங்
கோமகன்றன்றலைவாயிலெவ்வாறுகுறுகுவல்யான்
பூமலியுமவ்வாயில்புகினுமவன்றிருச்சேவை
யேமமுறவேழையேற்கெளிதுகிடைத்திடுங்கொல்லோ. (௧௧௪)

கற்பகத்தைச்சார்ந்தும்வறுங்காய்கேட்கத்துணிவார்போற்
பொற்புடையவெம்பிரான்றிருமுனரிதிற்புகுந்து
மற்பமுறுதிருவேட்டலறிவேகொலெனவுளத்துப்
பற்பலவுமெண்ணியயர்வுயிர்த்தானப்பனவனே. (௧௧௫)

என்னதுயரினியுறினுமிதுகாறும்வந்தமையான்,
முன்னமனைக்குரைத்தபடிமுற்றும்போய்வருவலெனத்
தன்னுளத்திலெண்ணியெழீஇத்தனிநடந்துசின்றளின்
மின்னுமிழ்கார்முகில்பயிலுமேய்கடலின்கரையிருத்தான். ()

என்னவெடுத்துரைத்தசுகமுனிவனிணையடிவணங்கி
மன்னர்மணிமுடியிடறும்வார்கழற்கால்வயவேந்த
னன்னர்கொண்மற்றைக்கதையுநடத்துகெனநனியிரப்ப
வின்னலிலாதுயர்ந்தமுனியின்புறவாய்மலர்கின்றான். (௧௧௭)

முதலாவது
குசேலர்மேல்கடலடைந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௨௨௩.

---

(௧௧௨) துவரை - துவாரகா என்பதன்றிரிபு. (௧௧௩) பொற்ற - ஈண்டுநன்றாக என்னும்பொருட்டு.
(௧௧௫) அயர்வுயிர்த்தல் - சோர்வு நீங்கல்.

ஸ்ரீ

இராமஜயம்.

இரண்டாவது

குசேலர் துவாரகைகண்டு தந்நகர்ப்புறமடைந்தவத்தியாயம்.

கடவுள்வணக்கம்.

பஃறொடை வெண்பா.

பூமேவு நான்முகத்தோன் போற்றித் துதிப்பதுவுந்
தேமேவு பைந்துளவஞ் சேரக் கமழ்வதுவு
மாமேவு மாமறைகள் வாழ்த்தப் பொலிவதுவுந்
தாமேவு வஞ்சச் சகட முதைத்ததுவுந்
தீமேவு மாரணியஞ் சென்று திரிந்ததுவுந்
தூமேவு மன்பருளந் தோன்றப் பயில்வதுவும்
யாமேக வண்ணன் பதம். (க)

(க) தாமேவு - வலிமைமேவிய, தாமாகமேவிய. வண்டில் வடிவாய்வந்தவன் சகடாசுரன்; சகடம் - வண்டில்.

தீமேவுமாரணியஞ்சென்றது - இராமாவதாரசரித்திரமாயினும், அவதார ஒற்றுமையினால் கூறியதென்றேனும், "குடையுஞ் செருப்புங் கொடாதே தாமோதரனைநான் - உடையுங்கடியன வூன்றுவெம்பரற்களுடைக் - கடியவெங்கானிடைக் காலடிநோவக் கன்றின்பின் - கொடியேனென்பிள்ளையைப்போக்கினேனெல் லேபாவமே." என்ற ஆழ்வார் ஸூக்தியைக்கொண்ட இவ்வவதாரச் சரித்திரமாகவேனுங் கொள்க.

ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

நீரார்பைங் கொண்ட னிகர்திருமே னிப்பெருமான்
பாரார நின்றசெழும் பங்கயச்செம் போதடிக
டேர்வார் வினையிருட்குச் செங்கதிரோ னென்பரால்.

காயாம்பூ வொத்த கதிர்த்திருமே னிப்பெருமான்
பாயா ரணமணக்கும் பங்கயச்செம் போதடிக
ளாய்வார் வினைவாரிக் கார்வடவை யென்பரால்.

வற்றாக் கடனேர் வருதிருமே னிப்பெருமான்
பற்றார் கழலொலிக்கும் பங்கயச்செம் போதடிக
ளுற்றார் வினையரவுக் கோருவண மென்பரால். (உ)

வெள்ளொத்தாழிசை.

தின்ன மென்று தீய தீர
வெண்ண மொன்றி யென்று முள்வர்
கண்ணன் கமலக் கழல். (௩)

ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசை.

பற்றிற் பழுதியற்றும் பந்தத் துழனெஞ்சே
செற்றச் சகடுதைத்தான் றாள்குறியா தென்கொலோ
முற்ற வொழிந்து விடல்.

(உ) கொண்டல்மேனி, காயாமேனி, கடனேர்மேனி, என்றது கிருஷ்ணன் என்பதுகுறிக்க ; கிருஷ்ணன் - கருநிறமுடையவன். வினை -இரண்டு நல்வினை தீவினைகள் ; நல்வினையும் பிறப்புக்கேதுவாதலை "இருள்சேரிருவினையும்" என்ற திருக்குறளானுணர்க. (௩) தீயதீர கமலக்கழல் திண்ணமென்று எண்ணமொன்றி உள்வர் என்க.

குன்று பனம்விளக்கும் பாத்தழனெஞ்சே
கன்று குணில்கொண்டான் றன்குறியா தென்கொலோ
வென்று மொழிந்து விடல்.
உந்தும் வினைக்கிடனாய் பாந்தழனெஞ்சே
யுந்தி மருதிடந்தான் றன்குறியா தென்கொலோ
வந்தோ வொழிந்து விடல். (ச)

வெளிவிருத்தம்.

வேதந் தெரிந்தானும் வேதாந்தத் துள்ளானுங் கண்ணன்போலும், போதந் தருவானும் போந்தொளியாய் நிற்பானுங் கண்ணன்போலு, மேதந் தவிர்ப்பானு மெவ்வுயிருங் காப்பானுங் கண்ணன்போலும். (ரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முற்று விளமென் றளிர்க்கரத்தான் முனிவி லாது மெல்லெ னச்செம், பொற்று மரையிற் குடியிருக்கும் பூவை வருடிந் தொ றுஞ்சேக்கும், விற்று ரணிநற் பதமிரண்டும் வியன்மா நிலந் தீண் டிடநடந்து, கற்று மேய்த்த சிற்றுயன் காமா சீரத்தி வா ழியவே. (சு)

மேற்படி வேறு.

பலதலையனந்தனேடெண்பகடுமெய்ப்பாறிறிற்ப
மலாதலையுலகந்தாங்குமாலையந்தடந்தோள்வேந்தே
குலமறையுணாச்சிமிக்ககுசேலன்சென்றிறுக்கப்பட்ட
நலமலிநெய்தல்சார்ந்தநளிர்கடல்வளமிக்கன்றே. (எ)

(ச) செற்றம் - வஞ்சம். ஒழிந்துவிடல் - நினையாதொழிதல். கன்றுவடிவாகவந்தவன் - வசசாசுரன். மருதமரமாகவிருந்த வர் - நளகூபரமணிக்கிரீபர். (ரு) போலும் ஒப்பில்போலி, இசைநிறை யசையுமாம் (சு) பூவை - பூவைபோலும் இலக் குமி. தாரி பதத்திலணிதல - தாளிலவீழுமாறுதோளிலணிதல்.

(எ) அனந்தன் - அழிவற்றவன், (ஆதிசேடன்.) பிரளயத்து மழிவின்றிநிற்பவன். எண்பகடு - பூமியைப்பரிக்கும் எட்டியானை கள். எய்ப்பு - இளைப்பு. இறுத்தல் - தங்கல்.

சீருறுசங்கம்வாய்ந்துசெழுங்குவலயமுண்டாக்கி
யோருறுசுமடமீனவுருவங்கொண்டுயிர்களோம்பி
யேருறுபவளச்செவ்வாயியைந்துபொன்புணர்ந்துதன்னென்
காருறுநிறமுங்காட்டிக்கண்ணனைத்துணையும்வாரி. (அ)

ஓங்குதென்கடலின்மீனமுதலுயிர்மருவலாலே
வீங்கியபுலவுமாற்றிமிளிர்தரப்பூத்தசெய்த
றோங்கியமணங்கான்றுன்றசிறப்பினைச்செய்யுந்தம்மைத்
தாங்குறுகளைகணோர்தம்பழிமறைப்பார்போல. (௯)

அலையெறிமணியுமுத்துமலகும்பன்மீனுமற்றுந்
தலையயக்குற்றுமுன்றிற்சார்தருகுப்பையாகக்
குலமருங்கியற்றும்பெண்ணைமடற்புனைகுரம்பைதோறும்
வலைவளத்தொழின்மேற்கொண்டுவாழ்வனபரதச்சாதி. (௧௦)

அயில்விழிப்பகையாமென்பதறிந்துயிர்செகுப்பார்போலக்
குயின்மொழிப்பரவமாதர்குரைகடன்மீன்கள்போழ்ந்து
வெயிலிடையுணக்கிப்பின்னும்விற்றுளமகிழ்வார்யாரே
செயிருறுசீற்றத்தெவ்வைச்சிதைத்துளத்துவகைசெய்யார். ()

இணங்குகைத்தோணியேறியெறிவலைவீசுமார்ப்பு
மணங்குறப்பட்டபன்மீனருங்கரையுய்க்குமார்ப்பு
முணங்கன்மீன்கவர்புள்ளோப்புமார்ப்புமிக்கோசைபோக்கி
வணங்குநுண்ணிடையாரம்மீன்மாறிடுமார்ப்புமல்கும். (௧௨)

மீன்விலைக்கொளவச்சேரிவிருப்பொடுபுகுந்தமைந்தர்
வானவிற்போலுநெற்றிவலைச்சியர்கண்மீன்பாய

(அ) குவலயம்-நீலோற்பலம்; பூமிவட்டம். கொள்ளல் - கொண்டிருத்தல்; எடுத்தல். பவளச்செவ்வாய் - பவளமுண்டாகுஞ் செவ்வியஇடம்; பவளம்போலும் வாய். பொன் - பொன்; இலக்குமி. துணைதல் - ஒத்தல். (௯) பழிமறைத்தல் "அற்றமறைக்கும் பெருமை" என்ற பெருநாவலர் வாக்கியப்பொருண்மேற்று. (௧௦) அலகு-பலகறை பரதர்-வலைஞர்; பரவர் என்போருமிவர்.

மானமால்கொண்டன்னோர்சொல்வரம்பினைக்கடவாராகி
யீனமிக்குறப்பொன்னெல்லாமீந்தளித்தவையேகொள்வார்: ()

கொழுஞ்சுறுக்கொழுமீனோடுகூட்டிநன்கருந்தவாங்காங்
கெழுங்கரும்பெண்ணைதோறுமிறக்குகண்மாறப்புக்கார்
செழுங்கதிர்த்தரளக்குப்பைசேயொளிப்பவளஞ்சால
வழுங்கலில்பரதமாக்களிடைக்கிடையளிப்பக்கொள்வார். (கச)

பெருகியசெல்வருள்ளும்பயனிலாருளராற்பேணி
யருகியசெல்வருள்ளும்பயனுளாருளரென்றுய்ந்து
பெரியவர்சொலுஞ்சொற்றேற்றும்பெரியநீர்க்கடலுமாங்காங்
குரியவெண்மணற்சிற்றூரற்கேணியுமுரியநீரால். (கரு)

சிற்றிடைவலைச்சிமார்கடெருத்தொறுங்கூறிவிற்கும்
வற்றன்மீனாற்றம்போக்குமவர்மணிக்குழற்றாழம்பூ
பற்றுபரதர்கோட்டிற்பரப்புமீனாற்றம்போக்கு
மற்றவர்திணிதோள்வேய்ந்தநெய்தலங்கண்ணிமாதோ. (கசு)

மருங்கிலாப்பரத்திமார்கண்மடநடைகற்பான்வேண்டி
யொருங்குவந்தடைந்தாற்போலவுயர்கரும்புன்னைச்சேக்கை
யருங்குலப்பார்ப்பினோடும்பெடையொடுமென்னந்துஞ்சுங்
கருங்கொடியடம்புசூழ்ந்தகைதையங்கானல்வேலி. (கஎ)

(கங) மானமால் - பெருவேட்கை. (கச) கொழுமீன் - கொழுவியமீன்; இதனைத் திருக்கோவையார் கஅஅ-வது செய்யுளில் உரையாசிரியர் மீனின் ஓர்வகைச்சாதியென்பர். புக்கார் கொள்வாரெனமுடிக்க. இடை - அளவு. (கரு) பெரியவர்சொலுஞ்சொல்லென்றது, "எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்தும்" "மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்" என்னும் நாலடியார்முதலியமுதுநூல்களின்வசனங்களை. (கசு) கோடு-கரை; கொம்புமாம். (கஎ) சேக்கை - புட்கள்தங்குவது; (கூடு.) அடம்பங்கொடி. எனமாறுக. கருமை - பெருமை. கைதை - தாழை; கேதகை என்பதன்றிரிபு.

தினைமுதல்வரகுமுன்செஞ்சாலிமுன்விளைக்குமுன்று
வனைபுகழ்நிலத்தார்நன்குமழைவளம்வேண்டிநிற்பர்
பனைசெறியிந்நிலத்துப்படுமுப்புவிளைப்போரென்றும்
வினைதவாதுருற்றமிக்கவெயில்வளம்வேண்டிநிற்பர். (கஅ)

இவ்வகைவளங்களெல்லாமினிதுகண்விட்டுநோக்கிச்
செவ்வியவிறும்பூதெய்திச்சீகரந்துளிப்பத்தன்மெய்
யொவ்வவெல்வளிதன்னைன்னவருடவோர்புன்னைநீழ
லௌவியமவித்தமேலோன்சற்றிருந்தயர்வுயிர்த்தான். (ககூ)

இக்கலமுறைகைப்பாற்குப்பொன்னிம்மியுமீதற்கில்லே
மிக்கவன்கேளாதுய்ப்பவிரும்புறுசிறப்புமில்லே
சக்கசெங்கமலக்கண்ணன்சேவைக்குநடக்கிறேமென் [ன்.
ருக்கமெய்யுரைத்திட்டாலுமுன்மையென்றுள்ளங்கொள்ளா

என்செய்வாநன்சொற்கூறியிரப்பதேதுணிவென்றெண்ணிப்,
பொன்செய்தமலர்ப்பூம்புன்னைநிழலினின்றெழுந்துபோந்து,
வன்செயன்மீகாற்சார்ந்துமனமிரங்குரைபல்கூறி,
நன்செயலேறிநின்றனடைக்கலமேறிஞனே. (உக)

கூம்புடைக்கலமீகாறைற்குரைகடல்கிழியவோடித்,
தேம்பலிறுவாரகைக்குச்செஃறுறையிறுத்தலோடும்,
பாம்பணைக்கடவுள்பாதபங்கயமுள்ளத்துள்வேர்,
ஞெம்பலுற்றிறங்குவாரோடிறங்கிஞனுவகையெய்தி. (உஉ)

(கஅ) தினை சோளம் முதலியன குறிஞ்சியினும்; வரகு துவ ரைமுதலியன முல்லையினும், சாலி கரும்பு முதலியன மருதத்தி னும் விளைவன. (உ௦) இம்மி-மத்தங்காய்ப்புல்லரிசியென்பர் சிந் தாமணியுரையாசிரியர்; இது "தினைத்துணை நன்றி" என்னும் திருக்குறள்போல சிறுமைக்கெடுத்துக் காட்டுவதோரளவை. மிக்கவன் - மேலிடத்துள்ளமீகாமன்; இதனுனே மீயான் மீகான் என்று வழங்கலுமுண்டு. (உஉ) கூம்பு - பாய்மரம்.

இம்மி - பத்துலட்சத்து அறுபத்தையாயிரத்து இருநூறில் ஒருபாகம்.

கலிவிருத்தம்.

பானலந்துவரைப்பன்மினார்கண்வா
யானலந்துவரைப்பற்றுறாதவன்
வானலந்துவரைப்படுப்போன்பின்வாழ்
கானலந்துவரைப்பதிகண்ணுற்றான். (உ௩)

(இ - ள்.) பானல் அம் துவரை பன் - நீலமலரையும் அழகிய பவளத்தையும் (உவமை) கூறத்தக்க, மின்னார் கண் வாயால் - மின்போல்பவரான மங்கையரது கண்களாலும் வாயினாலும், அலந்து உவரை பற்றுறாதவன் - (மயல்கொண்டு) வருந்தி அம்மங்கையரைப் பொருளெனக்கொள்ளாத குசேல முனிவர், வான் நலந்து வரை படுப்போன் பின் வாழ் - தேவர்கள் நன்மையடையுமாறு மலைகளின் (சிறகுகளை) அறுத்த இந்திரன் பின்னவனான கண்ணபிரான் வாழ்கின்ற, கானலம் துவரைப்பதி கண்ணுற்றான் - கடற்கரையினையுடைய துவாரகைப்பதியைக் கண்டனர். எ-று.

பன் வினைத்தொகைப்பொருட்கண்வந்தவினைப்பகுதி. உவர் உகரச்சுட்டுப்பெயர். நலந்து நலக்கவென்பதன்றிரிபு. பின்னென்றது இந்திரன் தந்தையராகிய காசிப முனிவரிடம் வாமனராய்த்தோன்றி உபேந்திரபட்டம்பெற்று, உபேந்திரநகரத்தில் வீற்றிருத்தலால்வந்த முறைப்பெயர். முன்னிரண்டடி முறைநிரனிறைப்பொருள்கோள். பின் வான் நலம் துவரை படுப்போன் வாழ் துவரை கண்ணுற்றான் எனக் கண்ணழித்து, பின்பு (அக்குசேலர்) தேவர்கட்கு (ஆகத்தக்க) நன்மைகளை விரையச் செய்வோனான கண்ணன்வாழ்கின்ற துவரையைக் கண்டனர் என்றும், கானல் என்பதற்குச் சோலையென்றுங் கூறினும் அமையும். இதில் துவரை த்வரா என்பதன்றிரிபு. அன்றி, வான் அலம் துவரை படுப்போன் - சிறந்த அலாயுதத்தால் துன்பங்களைக் கெடுக்கத்தக்க பலராமர் எனக் கூறுதலுமுண்டு. துவர் - வெறுப்பு ; இச்செய்யுள் திரிபணி.

தருமந்தன்னகந்தங்கிப்பொலிவுறத்
தெருமந்தன்னகுபாவஞ்சிதைதர
வருமந்தன்னவன்வைகலினூரனூக்
கருமந்தன்னமுமின்றக்கடிநகா. (உச)

(இ - ள்.) தன் அகம் தருமம் தங்கி பொலிவுற - தன தகத்தில் தருமம் நிலைபெறத் தங்கிவிளங்கவும், அல் நகு பாவம் தெருமந்து சிதைதர - இருளையும் இழிப்படுத்தும் பாவம் கலக்கமடைந்து சிதைந்தொழியவும், அருமந்து அன்னவன் வைகலின் - அருமருந்தன்ன கண்ணபிரான் வீற்றிருத்தலால், அக்கடிநகா ஆா அரூா கருமம் தன்னமும் இன்று - அவ்விளக்க முடைய துவாரகையானது அரிய துன்புறுத்துங் கருமங்கள் சற்றுமில்லாததாயிற்று. எ - று.

தெருமரல் - கலங்கல். பாவம் இருளினுங் கருமையுடைமை நோக்கி அல் நகு பாவம் என்றா. அருமருந்து அருமந்து என மரீஇயிற்று. கண்ணன்வைகலால் அந்நகா தன்னிடம் தருமம்வைகவும், பாவம் சிதையவும், அரூரின்றி விளங்காநின்ற தெனவும்; கண்ணபிரான் தனதகத்தில் தருமம்வைகவும் பாவம் சிதையவும் வைகலால் அந்நகா அரூரின்றி நிலவிற்று எனவும் பொருள்படநின்றது. இன் கருவிப்பொருளது. திரிபு.

கொடியவிஞ்சிவட்காரைக்குனித்தடுங்
கொடியவிஞ்சிவட்காரைக்குனித்தடுங்
கடியகற்சிக்கிடங்கராக்காலுறுங்
கடியகற்சிக்கிடங்கராக்காலுறும். (உரு)

(இ - ள்.) கொடிய விஞ்சி வட்காரை குனித்து அடும் - (பொறிகளாற்) கொடுங்குணமதிகரித்துப் பகைவரை வளைத்துக்கொரல்லுகின்ற, கொடிய இஞ்சி வள் காரை குனித்து அடும் - கொடிகளையுடைய மதிலானது நெருங்கிய மேகங் களையசைந்து அடுக்கும், கடி அகற்சி கிடங்கு - விளக்கம்பெற்

ற அகன்ற இடங்கானது, அரா காலுறும் கடிய கல் சிக்கு இட
ம் கரா கால் உறும் - (பாதலத்துள்ள) அராவினுற் கக்கபபட்ட
ஒளியுடைய இரத்தினக்கற்கள் சிக்கிக்கிடக்கும் இடங்கடோ
றும் முதலையின் கால்கள் படியப் பெறும். எ-று.

எனவே, மதில் மேகமண்டலத்தினளவும், அகழி பாதலத்தி
னளவுஞ் சென்று நின்றன என்பதோடு, மதில் இறுமாந்து மே
ற்சென்றமையின் மேகமண்டலத்தைக்குனிந்தடுத்ததெனவும்,
அகழி தாழ்ந்துசென்றமையின் தன்னிடந்தங்குமுதலையும் ஆதி
சேடனது முடியை மிதித்தற்கு ஏதுவாகிய உயர்வையடைந்த
தெனவும் தொனிப்பொருள் தருவதுமுணாக. இப்பொரு
ளைத் "தாழ்ந்தோ ருயாவ ரென்றுமிக வுயாந்தோா தாழ்வா"
என்னும் பிரபுலிங்கலீலை மாயையுற்பத்திகதிச் செயயுளானு
முணாக. குனிந்து வலித்தலடைந்தது. அடுக்கும் என்பது
அடுமெனநின்றது. இது ஈரடிமடக்கு. இதனை அடிதோறும்
பொருள்முடித்துக் கூறலுமுண்டு.

குவலையங்கமலங்குலவாம்பன் மல்
குவலையங்கமலங்குகுதிக்குமுன்
குவலையங்கமலங்குறதகேதாற்றிநன்
குவலையங்கமலங்குயிற்றங்கா. (உகா)

(இ - ள்.) குவலயம் கமலம் குலவு ஆம்பல் மல்கு வலை
யம் கம் - குவளையும் கமலமும் விளங்கும் ஆம்பலும் நிரம்பப்
பூத்த வட்டமாகிய (அகழியின்) சலத்திலே, மலங்கு குதிக்கு
முன் - மலங்கென்னு மீன்கள் துள்ளுதற்குமுன்னா, கம் அலங்
குற தோற்றி நன்கு வலையம் குவலை யம் கமலம் குயிற்று அங்
ககா - ஆகாயமானது விளங்கததோற்றி நன்கு வட்டமாகப்
பூமியில் ஜலத்திலே பத்தது (போல்வது) அங்ஙகா - எ-று.

மூன்றுமடியிலுள்ள கம் ஆகாயம். அது இடவாகுபெய
ராய் அங்குள்ளநகரங்களை யுணாத்திற்று. ஆகாயத்திலுள்ள

உலகங்களின் பிரதிபிம்பம் ஆகாயத்தையே அதிலுள்ள உலகங்களோடு பூமியிலே சலத்திற் பதித்தாற்போல்வது என்பதாம். மலங்குகுதிக்கில் நீர்கலங்கிப் பிரதிபிம்பந்தோன்றாமை பற்றி முன் என்றார். போல்வது என்பது எஞ்சிற்று. இப்பொருளைக் "குடவளைக்குலம் வயிறுளைந் தினமணிகொழிக்கும்" என்னும் நைடதச்செய்யுளானுமுணர்க. இது யமகம்.

இன்னமாநகர்க்காண்டலுமேர்முகி
லன்னமேனியற்காண்டலொப்பாமகிழ்ந்
தின்னதீர்தரவெட்டிவிசைகொளீஇ
நன்னர்நெஞ்சனடக்கத்தொடங்கினன். (உஎ)

பரிக்கொதுங்கியும்பாய்தருமும்மதக்
கரிக்குந்தேர்க்குமொதுங்கியுங்கார்க்குழ
லரிக்கண்மாதர்க்கொதுங்கியுமாழ்வினை
பரிக்கலாதான்படருகின்றனரோ. (உஅ)

முன்னும்பார்க்குமுதிரொலிதோன்றலாற்
பின்னும்பார்க்கும்பெருநிலத்தூருயி
ருன்னும்பார்க்குமுறுவர்குழாமெலா
மின்னும்பார்க்கவெழுதிடுஞ்சீர்த்தியான். (உக)

சீதநீழற்செலிற்சிற்றுயிர்த்தொகை
போதச்சாம்புமென்றெண்ணியபுந்தியா
னாதவந்தவழாறுநடந்திடுங்
காதலன்கைவிரித்துக்கவித்தரோ. (௩0)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாகுவன் டொலிப்பப் படுங்கடச் செருக்கா னுடொறு மின் பிடி யூட்டும், பாகுடல் குமைக்குங் கறையடிக் களிறு பாவிய

(உஎ) ஏர் - எழுச்சி. (உஅ) அரி - வண்டு, செவ்வரி. (உக) ஊருயிர் - எறும்புமுதலியன. உறுவர் - பெருமையை யுடையவர் (முனிவர்.) (௩0) போத - மிக. ஆதவம் - வெய்யில்.

கூடமுங் கடுங்கா, லேகுவாம் பரிமந் திரங்களும் வாட்போரி
லைகுகல் லூரியும் விண்ணிற், போகுய ரிரத நிலைகளு மிகுத்த
புடைவளப் பெருநகர் கடந்தான். (௩௧)

கூந்தலம் பிடியுங் கோணைமாக் களிறுங் கூடியாட் டயர்ந்
தென மணிப்பூ, ணைங்கெழி லிளமங் கையருமைந் தரும்
பொன்னியைதரு சிவிறியும் பந்துஞ், சேந்தகைத் தலங்கொ
ண்டொள்ளற லிறைத்துச் செறிகளி யின்புவந் தாடும், பூந்
தடமலிந்து பலவள நிறைந்து பொலிதரு மிடைநகர் கடந்
தான். (௩௨)

செப்பரு மருதூன் மடந்தபு தேர்ச்சிச் செந்தமிழ்ப் . புலவர்
தந் தூக்கிற், றிப்பிய வணியும் பலபொருள் வாய்ப்புந் தெளி
தரு நீர்மையுஞ் சீருந், தப்பிலா ழமுங்கொண் டலர்மண மு
டைத்தாய்ச் சாற்றுதோ றகலமுற் றெவரு, மொப்பருங் குரை
த்தென் றுரைத்திடப் பொலியு முன்னைக ரகழியைக் கடந்
தான். (௩௩)

படங்கிள ரரவப் பாயுடைப் பகவன் பாரளந் திட்டநாள்
வளர்ந்தாங், கிடங்கொள்விண் ணுலகம் போழ்ந்துமேல் வள
ரா வெதிர்தரி யலருயிர் மடங்க, முடங்குளை மடங்க லடங்கரு
மூழை முதற்கொடும் பொறிபல வுடைத்தாய்த், தடங்கொ
ளீஇ நின்ற மதிற்பெரு வாயிற் றடையையுந் தடையறக் கடந்
தான். (௩௪)

உட்புகு மரசை முன்புகுந் திருந்த வோரர செதிர்கொளுங்
காலை, விட்புலம் புகழு மற்றுமோ ரரசு விரைவினுட் புகுவது

---

(௩௧) பிடி - கவளம். செருக்கால் குமைக்கும் என்க. பாவல்-
பரவல். கல்லூரி - கல்விபயிலிடம். (௩௨) கோணை - வலிமை.
சிவிறி - நீர்த்துருத்தி. (௩௩) தூக்கு - பாட்டு. திப்பியம் - திவ்வி
யமென்பதன்றிரிபு. அருங்குரைத்து - அரிது; இதில் குரை
அசை. இதுசெய்யுளுக்கும் அகழிக்கும் சிலேடை. (௩௪) கொ
ளீஇ என்பது சொல்லிசையளபெடை.

காணூஉ, நட்புடை யிவ்வீ ரரசுநன் கெதிர நடப்பவிவ் வாறரு துறலாற், கட்புலம் புகாதா நெருக்கிடை யொதுங்கிக் கரங் கண்மேற் றூக்கியுட் புகுந்தான். (௫௫)

விடம்படு வழியான் மள்ளருக் கொதுங்கின் விரைவினவ் வொதுங்கிடம் வளிபோற், றிடம்படு பரிக டாவிட மதற்குந் திரிந்தொதுங் கிடுமிடஞ் சீறிக், கடம்படு களிறு பாயிட மதற் குங் கண்டொதுங் கிடுமிடங் கொடிஞ்சி, யிடம்படு மிரத முன் பினு ரிடமற் றெவ்விட மிவனடந் திடுவான். (௫௬)

போதரு மிடங்க டொறுநெருக் குறலாற் பொன்வரை யனை யதோன் மைந்தர், மேதகு மார்பத் திலங்குமா லைகளும் விரைகெழு கலவையு மிளமை, மாதர்மெய்ப் பூசுங் குங்குமச் சேறு மான்மத மளாவியைந் தூற்றுக், காதநா றிடுசெஞ் சந் தமுங் குசேலன் கந்தையு நாறின மாதோ. (௫௭)

வெளிவரு வாரு முட்புகு வாரும் வீதியிற் கலாம்விளைப் பாரு, மளிமலர் மாலை சாந்தமுன் கொடுபோ யலங்கரிப் பாரு முன் வாயி, லொளிபெறு கதவந் தட்டிநிற் பாரு முழலுகின் றுருமாய் மைந்தர், களிதரப் பயிலப் போகம்விற் றுண்ணுங் கணிகையர் சேரியைக் கடந்தான். (௫௮)

சங்கரிந் தெடுத்தாற் போன்றவா லரியாற் சமைத்திடப் படு புழுக் கலுந்தீம், பொங்குபாற் குழம்பு மனையுமாச் சியமும் பொருவில்பல் சுவைக்கறி களுந்தேன், றங்குமுக் கனியு மமை த்துண்பார்க் குதவத் தக்கபொன் முதலவுள் ளனவென், றெங் குமா ராய்வுற் றழைத்திடும் பின்னு ரிருந்தெரு நோக்கியுண் மகிழ்ந்தான். (௫௯)

குருமலர் வெண்பொற் கட்டிமுன் றமைத்த குமுதத்திற் பொற்கலஞ் செறித்துப்,பொருவறு பணிநீ ருலைமின்முத் தரிசி

(௫௭) மான்மதமளாவி நாறிடுஞ்சந்தமெனக. மான்மதம்-கஸ் தூரி; மிருகமத மென்பதுமிது.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

புகடியொன் மணித்தழ லிட்டுத், திருவில்லித் துரும விக்
தன மடுக்கித் திருமலி வணிகர்தங் தெருவி, னருமைசால் சிறி
ய பிணுக்கள்பன் னையினு மடுங்தொழில் கற்பது கண்டான்.()

ஆப்பியான் மெழுகி முத்தநுண் டுகளா லிவிர்தரு கோலமு
மியற்றிப், பூப்புனை கூந்தற் பார்ப்பன மகளிர் பொலிமற்றைப்
பணிதலை நிற்பத், தூப்பயி லுபக ரணங்கொடு மறையோர்
துணர்த்தழல் வளர்த்தவி யமரார்க், கூப்பிடு பளிக்கும் பன்
மகச் சாலைக் கூட்டமாங் காங்குகண் டுவந்தான். (௪௧)

கறைதபு கலைத்தோன் முடிந்தபூ ணூலர் கவின்றரு முஞ்
சிநா ணரையி, னிறைதரு தானைச் சொருக்குமுன் றூங்க நீள
விட் டவர்குழாங் கூடி, மறைபல கற்குங் கிடைகளு நடைதேர்
மாண்புடை யாசிரி யன்சொற், குறைவற வுணர்த்தும் பெரு
மையுங் கண்டுங் கேட்டுமுள் ளுவகைகூர்ந் தனனால். (௪௨)

சீதளப் பளிக்கு மாடமேன் மடவார் செறிதரு புலவியில்
வெறுத்த, தீதறு மணிபொன் றரளமா விகைகள் செல்பவர்
காலுறப் பின்னி, மாதர்மேன் மைந்தர் மைந்தர்மேன் மாதர்
மாறிவீழ் தரவடிக் கடிசெ, யேதமி லரச வீதியிற் புகுந்தா
னிருந்தவக் குசேலமா முனிவன். (௪௩)

---

(௪௦) குரு - ஒளி. குமுதம் - அடுப்பு. வித்துருமம் - பவளம். பிணுக்கள் - பெண்பிள்ளைகளுக்கும் உரித்தாதலை "பன்றி புல்வாய் நாயென மூன்றும் - பின்றுக் காட்சிப் பிணவொடு வருமே" என்ற பிங்கலந்தையார் "விளம்பிய பிணவும் பெண்பெயர் மேற்றே" என்ற சூடவர்வகையில் விதந்தமையாலும் அறிக. (௪௧) துணர் - (எழுவகைச்) சிகை; இவை இரணியை கனகை இரத்தை கிருஷ்ணை சுப்பிரபை அதிரத்தை வெகுருபை எனவழங்குவர். கூப்பிடுபு அளிக்கும் எனப்பிரிக்க. அவி அளிக்கும் என இயைக்க. (௪௨) கிடை - கல்லூரி. கண்டுகேட்டல் முறைநிரனிறை. (௪௩) புலவி - அமளியிற்றேன்றும் சிறுபிணக்கு. பின்னிவீழ்தரச் செய்யெனக்கூட்டுக.

மணிகள்கால் யாத்த மாளிகை தோறு மருவிய புலவிதீர் பாக்குப், பணிதரு மைந்தர் சென்னியிற் புயத்திற் பதமெடுத் தோச்சிடு மாத, ரணிகிளர் சிலம்பி னொலியும்பின் னெழு பொன் னவிர்தரு காஞ்சியி னொலியுங், குணில்பொரு முரச முதலிய மடங்கக் குமுறுதல் கேட்டுள்ளே நகைத்தான். (சச)

வரைமிசை முளைத்த கழைநுனிக் கழன்ற மாசுண வுரியய சைந் தாற்போ, னிரைபடு மாடச் சிகைநடு பதாகை நெடுமரத் துகிலசை வதுவும், புரைதபச் செறித்துக் கட்டிய மணியாற் புனைந்ததோ ரணங்களின் மீது, திரைநரை மூப்பி லமரரூர் விமானஞ் சிக்குண்டு கிடப்பதுங் கண்டான். (சரு)

பாற்றினஞ் சுழலும் வசிநுதி நெடுவேற் பார்த்திபர் முன் கடிப் போச்சு, மேற்றுரி முரசு வேற்றிடி முழக்க மெழுதலும் வெளிறபுத் தெழுந்து, கூற்றுமுன் னடுங்க வெதிர்பரிக் காரர் குறுகிடா வகைசெலுங் களிறு, காற்றுவெம் பரிவி லாழிநீர்ச் சேற்றிற் கால்பதிந் தெழாவகை கண்டான். (சசு)

தம்மிடை யேற்ற ரவரிடைச் சிறந்த தரணிமன் னவரும் வந் தேற்பச், செம்மையிற் கொடுக்கும் பொருளுட னொழுக் குஞ் செழுங்கர கப்புனல் பெருகி, மும்மைநல் லுலகும் விய ப்பநீ ணதியாய் முடுகிடக் கதிரவ னுறுத்தும், வெம்மைதீர் பாக்குச் சிறுவர்கைத் தோணி விட்டுலா யாடுதல் கண்டான்.()

(சச) கால்யாத்தல் - பதித்தல்; கால் பொருளின்றிய வோரி டைச்சொல். இதனைவடநூலார் உபசர்க்கமென்ப. காஞ்சி - மகளிரிடைக்கணியும்அரதனவணி; இது எண்கோவையாலாக் கியது. குணில் - குறுந்தடி. (சரு) சிக்குண்டல் - தடைபடல். (சசு) வெளில் - கட்டுத்தறி. பரிக்காரர் - ஈண்டுயானையைக்கா க்கும் குதிரைவீரர். விலாழி - குதிரைவாயூறுநீர், யானைத்துதிக் கையிலூறு மதநீருமாம். களிறு எழாவகையென இயையும்.

(சஎ) கை - சிறுமை.

தெள்ளிய தரள நீற்றிய சுண்ணந் தீற்றிய மாடவாய்த் தோறும், வெள்ளியாற் பொன்னாற் பதுமரா கத்தால் வித்துரு மத்தினா னமற்றை, யொள்ளிய மணியா லமைத்தகந் திகண்மீ யுயர்கத லிகள்பசுங் கமுக, ளுள்ளிய வானத் தலமர நிறுத்தி யுறுத்தபல் லணிகளுங் கண்டான். (சஅ)

தம்மையூ ரிறைவ னகாவளங் கண்ட சலதரக் குலமவன் பின்னோன், செம்மையா ரரசு புரிநகா வளத்தின் சிறப்புநோக் கிடல்குறித் தாங்குத், தும்முதீப் பொறிய வேலின மைந்தா துணைவிய ரோடுமின் பமரும், விம்முவான் செல்வ மாடமா ளிகையின் மேற்றவழ்ந் திடுவன கண்டான். (சகூ)

மன்னாதம் பவளக் காற்குடை பிச்சம் வரைந்திடு கேதன மொலிய, னன்னாகொள் சிவிறி யாலவட் டங்க ணனிதுவன் றுலிருள் பரப்பப், பன்னக மணியும் வயிரமு முத்தும் பதித்த பொன் மகுடமுங் குழையு, மின்னல்செய் வாகு வலயமும் வாளும் வெயிலுறப் பரப்புதல் கண்டான். (ரு௦)

வெண்மையிற் றிகழ்ந்த மேனிலை மாட வியலுப ரிகையிடை யிருந்து, நுண்மையிற் புனையப் புகுந்தவோ ரைமந்த னுவல ருங் காமத்தான் மயங்கிப், பண்மையிற் பொலிந்தாள் வழக் கறுத் தமாக்கும் படாரிக் கண்ணித னுதலென், றண்மையிற் செறிந்த சிறுபிறை யிடைப்பொட் டணிந்துவெள் கிடுவது கண்டான். (ருக)

(சஅ) உறுத்தல் - அலங்கரித்தல் (சகூ) சலதரம் தவழ்வன கண்டான் எனக்கூட்டுக ஜலத்தைத் தரித்திருப்பது (மேகம்.) சுந்தரமென்றும்போல (ரு௦) பிச்சம் - மயிற்றோகைக்குஞ்சம். துவியல் - ஓர்வகை வஸ்திரத்தாக்கு. (ருக) வியல்-அகலம்; "விய லென்கிளவி யகலப்பொருட்டே" என்பது தொல்காப்பியம். ஆள்வழக்கறுத்தல் - காதலித்துமயங்கிய ஆடவரைப் புடை பெயர்ச்சியறச்செய்தல். "ஆள்வழக் கொழியநீண்ட வணிமலர்த் தடங்கண்" என்ற சிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் ௬௬ - வது செய்யுளாலுமுணர்க.

பொற்றகன் மாடத் தும்பரோர் மடந்தை புரிகுழற் றாள வெண் பிறையு, மற்றொரு மாடத் தும்பரிற் றங்கு மங்குலிற் செறிந்தவெண் பிறையுங், கற்றவர் புகழும் பெருந்தவ முனி வன் கண்டிரு பிறைகளுள் ளனவோ, வுற்றவித் தன்மை யெ ன்னென மயங்கி யுண்மைதேர்ந் துண்ணகை கொண்டான். ()

நவமணி மாட மீமிசை யிட்ட நறும்பரி யங்கத்தி னன்கு, துவளிடை மடவா ரொடுநல னுகர்ந்த தோள்வலி மைந்தாக ளவர்பூ, விவர்குழல் சோத்துக் கட்டிடக் கதிர்நா ணெடுத்த னர் மயங்குபண் மையிற்ற, மூவர்குடி குயினிற் கட்டின ரத னை யுறுமின்னே யென்னவுட் கொண்டான். (ருங)

பாயொளி விரிக்கும் பொற்றக டிணங்கப் பதித்துநன் கியற் றிய மறுகின், மேயின வரசர் வில்லிடு மகுட மிடைதலி னொ ன்றொடொன் றுரிஞுச், சேயடன் மணியும் வயிரமு மற்றுஞ் சிதர்தர வுதிர்ந்துதங் குவதாற், காயும்வெம் பரல்போற் பசல் லுகின் றார்தங் காலிடை யுறுத்துதல் கண்டான். (ருச)

மாங்குயின் மருட்டு மழலையங் கிளவி மதர்த்தரி படர்ந்து மை தோய்கட், பூங்குழன் மடமா தாகளொடுங் கண்ணன் பொன்னுல கோரழுக் கறுப்பப், பாங்குறப் புரியு மின்பநற் கலவிப் பகுப்பெலாங் கைவலாற் கொண்டு, தேங்குமந் நகரா தங்கண்மா ளிகைமுன் சித்திரித் திருப்பன கண்டான். (ருரு)

தரைமிசைக் கொடுங்கோ னடவிய கஞ்சன் சாளவ னேசிசு பாலன், வரைநிகர் தோட்கா லயவன ஞதி மாற்றலர்ச் செருத் தபோர்க் கண்ணன், விளைகேழு வென்றிப் பெரும்புகழ் யாப்

(ருஉ) பிறை - தலைக்கோலத்துளொன்று. (ருங) பரியங்கம் - கட்டில். பண்மை - அழகின்றன்மை. உவர் - கடல்; பண்பாகு பெயர், குயின் - மேகம். (ருச) உரிஞு - உராய. (ருரு) அழுக் கறுத்தல் - பொறாமைப்படல்.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

பின் மேவர வியைத்திடந் தோறுந், திரைசெறி கடல்சூ ழுல கினர் வியப்பத் தித்திக்கப் பாடுதல் கேட்டான். (ருசு)

தன்வயிற் றுலக முழுவது மடக்கித் தந்துமீட் டளித்திடு பிரானே, மின்வயிற் பொலிய வுயர்ந்தமா ளிகையென் வியன் வயிற் றடக்கிமீட் டுமிழும், பொன்வயிற் பொலிந்த விந்நகர் வளப்பம் புகலுதல் சேடற்கு மரிதான், முன்வயிற் காண லிந் திரன் றனக்கு முடிவரி தாலென மதித்தான். (ருஎ)

மாந்தளிர் மேனி யிலக்குமி மணாளன் மலர்தலைப் புவிவருக் குறுங்காற், றேந்தட மலராற் கணிநக ரிம்மா திரிகைசெய் யெ னத்தெரி விப்பச், சேந்ததன் ஞன்கு கரங்களாற் சிருட்டி செயப்படு மாநகர் போலும், வேந்தாக ணொருங்கு முரசுகண் படாவிவ் வியனக ரெனவுமுட் கொண்டான். (ருஅ)

சிறந்தவந் நகர வளத்திலிவ் வாறு சிறிதறிந் தற்புத முற லால், விறந்தபல் காத வழிநடந் ததஞன் மேவிய வருத்தமு மிளைப்பும், பறந்தன பசியு மொழிந்தது நாவிற் பைம்புன லூ றிய துறவு, மறந்தழை மனத்தா னுடலமுஞ் சிறிது தளிர்த் ததா லதிசயம் பயப்ப. (ருகூ)

(ருசு) சாளவன் - ஸாலவன்; உருக்குமிணிதேவியைத் தான் மணத்தல் தவறினமையின் பகைகொண்டெதிர்த்தவன். காலய வனன் - யவனதேசமிலேச்சவரசன்; இவன் ஜராசத்தன் றோழன். (ருஎ) மின்வயின் - மின்னுகின்றஉள்ளிடம். என் - என்கின்ற. முன் வயின் - எதிரிடத்தில். (ருஅ) முரசு - மங்கலம் வீரம் கொடை களைப்பற்றியெழும் மும்முரசுகள்; இவற்றுள் வீரத்திற்குப்பதில் தியாகமுரசுகூறுகின்றது புறநானூறு ருஅ - வது செய்யுள்.

(ருகூ) விறப்பு - செறிவு, வெருவுதல். "விறப்பும் உறப்பும் வெறுப்புஞ் செறிவே" "விறப்பேவெருஉப்பொருட்டுமாகும்" என்னுந் தொல்காப்பியத்தானுணர்க. உறவும் பைம்புனலூறி யது என்க. துறவும் அறமும் தழைமனத்தன் எனலுமாம்.

ஐந்துதுந் துபியின் முழக்கமு மன்ன ரவிர்கழ லொலியும்
வாம் பரியி, னந்தலி லார்ப்புங் கந்தடு களிற்றி னரலலுந் தே
ரர வமுஞ்சோர், தந்திரினின் றெழுந்து விண்முக டுடைக்க
வளவில்பல் வளத்தவாய்ப் பொலியுஞ், சந்தமார் கண்ண பிரா
ன்றிருக் கோயிற் றனித்தலை வாயிலைச் சார்ந்தான். (சுo)

கண்டனன் றலைவா யிற்பெருஞ் சிறப்பைக் கழியவு முள்
ளத்துத் திகைப்புக், கொண்டன னடங்கி லாவிறும் பூதுங்
கொண்டன னெண்ணிடு தற்கும், விண்டசிற் றிடமு மின்
றெரு கற்ப மேவினாங் காத்திருந் திடினுந், தண்டலி னெருக்
கந் தவிர்ந்திடா துள்ளாற் சாவதெவ் வாறென நினைந்து. ()

கன்னல்பல் கழிதல் கண்டுபா ணித்தல் காரிய மன்றினித்
துணிந்திம், மன்னிய நெருக்கிற் புகுந்திடி னமக்கு வருவன
வருகவென் றோர்ந்து, துன்னினு னங்கோ ரரசனைச் சூழ்ந்த
சுடார்ந்தகஞ் சுகப்படி வுடையார், மின்னிய வாளாற் பற்பலா
துரப்ப வெரீஇயினுன் சேயிடை யகன்றான். (சுஉ)

மீட்டுமுட் டுணியா வணிகொளாங் கொருசார் மென்மெல
மேவின னுங்குத், தாட்டுணை பணிந்து கண்ணனுக் களக்குந்
தயங்குசெம் பொற்பொதி குவித்த, மோட்டிட மதனுற் காவ
லா பலரு முடுக்கினுர் வாளுறை கழித்துத், தீட்டரும் புகழோ
னென்செய்வா னடுங்கித் தியங்கியோட் டம்பிடித் துய்ந்தான்.

பின்னரொங் கனம்யாம் புகுவதென் றுளத்துப் பெரிதும
ராய்ந்துநின் றிடுபோ, துன்னருங் கடவுட் கண்ணனை தருள்
போ லோவருந் தானைதற் சூழ, மன்னனுங் கொருவ னடைந்
தனன் கண்டான் மற்றவன் சேனையுட் புகுந்தான், பன்னரும்

(சுo) ஐந்துதுந்துபி - தோற்கருவி தொளைக்கருவி நரப்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி. (சுக) எண் - என். கற்பம்- ஊழிகாலம் (சுஉ) கன்னல் - நாழிகை பாணித்தல் - தாமதித்தல். கஞ்சுகம் - மேற்சட்டை. (சுச) ஓவல் - நீங்கல்.

வ்ருத்த முடங்குறல் யாவும் பரித்தனன் மென்மெல நடந் தான். (சுச)

நெருக்கினுட் படலா லுடலை பட்டு நீளிடைக் கானிலத் துறுமல், வெருக்கொளச் சென்றுங் கரங்கண்மே லெடுத்தும், விடாதுகை யிடிப்புண்டும், வளைந்தும், பெருக்குறு வெயரின் மூழ்கியு மிரண்டாம் பிறப்பிது நமக்கென வுணர்ந்து, திருக் கிளா துவார பாலாநிற் கின்ற செவ்விய விடத்தினை யடைந் தான். (சுரு)

நெடியவ னடியா ரிவரென வெவரு நிகழ்த்திடத் தகுமடை யாளம், படியறப் புனைந்து பொலிவுறுந் துவார பாலரைக் கண்டனன் மகிழ்ந்தான், மடிவில்லை ளவசி காமணி களாகு மற்றிவர் வைகுந்தத் துறையுங், கடிதலில் செயவி சையர்க ளே யிவரைக் கடப்பவ ரிலரென நினைந்தான். (சுசு)

முகத்திடை நீண்ட வுரோமமிக் கவனென் முடிதற்கு மிட மற யாரு, நகத்தகு பற்ப றுளையுடைக் கந்தை நயந்துகொண் டவன்மதிப் பிலாமை, மிகத்தரும் யாக்கை யுடையவன் று வார மேவுமப் பாலர்முன் குறுகி, யிகத்தலில் குணத்தீர் கேட் டருள் வீரென் றியம்புறத் தொடங்கின னன்றே. (சுஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மக்களுண் மிக்கீர் நீலவண்ண னுக்கடியீர் தாய்தாத்
தொக்கபுண்ணியத்தீர்பாவந்தொலைத்தமா தவருஞ்செய்ய
நக்கபூங்கமலத்தோ னுநண்ணரும்புகழ்பெற்றுள்ளீ
ரொக்கலைகளினும்வல்லீரியம்புமென்றுசிகொண்மின். (சுஅ)

(சுசு) அடையாளமாவன:—தாமரைமணிமாலை துளசிமணி மாலை ஊர்த்தபுண்டரமுதலிய வைஷ்ணவ சிந்நங்கள். படி - ஒப்பு. ஜயவிஜயர்கள் - ஸ்ரீவாசற் காவலர்கள். கடித்தல் - உவம வாசகம். (சுஎ) மிகுதிப்பிலாமைதரும் யாக்கை எனக்கூட்டுக.

உங்களைநோக்குந்தோறுமுவரியும்வெஃகுமேனிச்
செங்கண்மாறனைக்கண்டாங்குச்செறிந்திடுமுவகையந்தக்
கொங்கவிழ்கமலச்சேக்கைக்கோமளவல்லிமார்பன்
றுங்கநற்சேவையாற்றித்தூயராதலினலன்றே. (௬௯)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எளியனேன் மறையோர் தங்குலத் துதித்தே,னென்பெயர் குசேலன்மிக் கொலிக்கு, நளிகொள்வெண் டரங்கப் பாற்கடலுப்ப ணுகணைத் துயிலொழிந்,தடியார்க், களிசெய்தல் லார்க்கீ றுறுத்திட வவதா ரஞ்செய்த,கண்ணபி ரானே, டிளமையிற் பற்பல் கலைபயின் றுள்ளே,னிசைக்குமுக் குற்றமு மகல.

கத்துவெண் டரங்கக் கடலைமீ காணூற் கடந்துவண் கரைப்படரொருவற், செத்துமண் டியபன் னெருக்குடை வாயிற் செழுங்கட றன்னைநல் லருளே, பொத்துநெஞ் சகநும் மாற்கடந் தடியார் பொருள்பெறு முதநியங் கரையென், றொத்துமா மறைகள் சொலப்படுங் கண்ண னிடையடை தரவுனநினைந்தேன். (௭௧)

வச்சிரத் தடக்கை வாசவ னேவ, மஞ்சினம் பொழிசிலாமழையை, நச்சும்விண் ணுரிஞ்சும் போகுயர் குவட்டோர் நாகமேந் தித்தடுத் தருளு, மச்சுதன் பாற்சென்,றேழையேன் வருகை யறிவித்தென் றனையவட் சேர்த்தன், மெச்சுறுங் கடனென் றுரைத்தன,னெவரும் விரும்புறு குசேலமா தவனே. ()

(௭௰) யாரெனவினவற்குமுன் விடைபகரல் எற்போரியல்பு; இக்கருத்து தொல்காப்பியச் சூத்திரவிருத்தியினுமுணர்க. அவதாரம்-மேனுலகிருந்துகீழிறங்கல். (௭௧) செத்து-உவமவாசகம் "துணைப்ப மலையத் தாக்கே செத்தொடு" என இலக்கண விளக்கம்விளக்கவுரையுணர்க. உநீதி - நீர் தங்குமிடம்; (உதம்-நீர்.) ஒருவனையொத்துக் கடத்து கரையென்றுசொலப்படும் கண்ணனிடையடைதர என்க. (௭௨) நாகம் - மலை.

இன்னணம் வாயில் காப்பவர் தம்மோ டிங்கிவன் புகன்மொழி கேளா, வன்னவர் பக்க லுறுஞ்சிலர் மடமை யாலட ரப்படு மனத்தா, ருன்னரு மறைநன் கோர்ந்தவிக் குசேல ைெளிர்முகத் திணை விழி பரப்பிப், பன்னரு மிழிசொற் புகலலுற் றாரற் பரவைசூ ழுலகெலாம் புரப்போய். (௭௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வருத்தபல்லுலகும்போற்றமாற்றலர்கூற்றூர்மேவச்
செருத்தரசாளுங்கண்ணச்செம்மலெங்கேநீயெங்கே
யிருத்தபஃறுவாரக்கந்தையேழைப்பார்ப்பானேசற்றும்
பருத்தநிந்திடலற்றுய்கொல்பயனின்மூப்படைந்தாய்போலும்
மின்மைசெய்பகைஞர்மோலிமிதித்திடுகழற்காற்கண்ணன்
றன்மையுமேழையாநின்றன்மையுந்தெரிந்துநோக்கில்
வன்மைசெய்புழைக்கைமாவுமசகமும்போலும்வாரிக்
கொன்மைசெய்நீருமாவின்குளப்படிநீரும்போலும். (௭௫)
கனகமால்வரையுமண்ணங்கட்டியும்போலுஞ்செங்கேழ்த்
தினகரவொளியுமோர்கத்தியோதத்தொளியும்போலு
மனகமார்தருவும்புன்சீழ்கம்புலும்போலுஞ்சேடப்
பனகமுஞ்சிறுநாங்கூழும்போலும்பாய்மிடிப்பார்ப்பானே. ()
பொருணனியுளனென்றியாரும்புகலுமோர்வார்த்தைவேண்டு
மிருகையுங்கடகம்வேண்டுமிலங்குகுண்டலங்கள்வேண்டும்
வருவிரலாழிவேண்டுமார்பிடைமதாணிவேண்டு
முருவமுத்தாரம்வேண்டுமுயர்ந்தபட்டாடைவேண்டும். ()
சிவிகைமுன்னூர்திவேண்டுஞ்செழும்பொருட்செலவுவேண்டு
குவிகையேவலரும்வேண்டுங்கோலமார்ந்திருக்கவேண்டுங் [ங்

---

(௭௫) மோலி - கிரீடம்; மௌலி யென்பதன் சிதைவு. கொன்மை - பெருமை. குளப்பு வலித்தல் விகாரம். (௭௬) கத்தியோதம் - மின்மினி (கம் - ஆகாயம், தியோதம் - விளங்குவது.) சீழ்கம்புல் - ஒருவகைப்புல். நாங்கூழ் - நாகம்போலும் பூச்சி.

கவிகைதாங்குநரும்வேண்டுங்கையுறைசிறப்பவேண்டு
மவிகையில்விளக்கம்வேண்டுமேரசவைகுறுகுவார்க்கே. (எஅ)

சிறப்புறச்செல்வராகிற்சிறப்புறுமுகமன்செய்வா
பெறப்படுமிடியராகிற்பிடர்பிடித்துந்துவார்கள்
வறப்பிலுன்முன்ஞணட்பைமறந்திடாதிருக்கின்முன்கொ
லிறப்பநேற்றுண்டகூற்றையின்றியாமறப்பமாகில். (எகூ)

இலகுமோர்நகரச்செல்வரிடத்தினுஞ்செல்வர்நட்பே
நிலவுறநிற்குமேழைநீரமையர்நட்புநில்லா
தலகில்செல்வத்தனுகியரசாயாவருந்தற்போற்ற
மலர்தலையுலகங்காக்குமன்னன்மாட்டுன்னட்பெற்றே. (அ0)

நிலத்திருவேட்டுநாட்டுநெடும்புகழ்த்தும்பைசூடி
யுலப்பெருந்திணிதோண்மாற்றாருயிர்தபவுடற்றுங்காலை
கலப்படுந்தந்தைமைந்தர்நந்துமுன்ஞேர்பின்ஞேர்தங்
குலப்படுமற்றோரேனுங்கொல்பவர்நட்பென்னுமால். (அக)

மாற்றலர்ச்செற்றஞான்றேமற்றவர்நகரமுற்றும்
வேற்றுவண்கழுதையேரின்விளைதரவுழுவித்துண்ணப்

(எஅ) விளக்கம் - தீபம்; ஈண்டுத் தீவர்த்தி. எஎ - எஅ - ல் கூறுபவை, 'వస్త్రముఖ్యమలంకారం' (வஸ்திரமுக்கியம் த்வலங்காரம்) - அலங்காரத்துக்கு வஸ்திரம் முக்கியமானவை என்ற வசனம் போல்வன. (அக) தும்பை பகைவரொடு பொருவார்க்குரிய மாலை. "செங்களத்து மறங்கருதிப்-பைந்தும்பை தலைமலைந்தன்று" என்னும் புறப்பொருள்வெண்பாமாலையானுணர்க.

(அஉ) உப்பு-அளவு, (இலக்கணை.) இது உழிஞைத்திணைத்துறையுளொன்று; உழிஞைத்திணை - உழிஞைமாலைசூடிப் பகைவருடையமதிலைவளைப்பது. அதனுள் இத்துறை உழுதுவித்திடுதலெனப்படும். இதனை "எழுதெழில் மாடத் திடனெலா மறிக் - கழுதையேர் கையொளிர்வேல் கோலா - வுழுததற்பின், வெள்

போற்றலில்வரகுகொண்முற்பொலிதரவிதைப்பித்துப்பிற்
சீற்றமாற்றிடுவோர்நட்போசிறந்ததுமிடிக்கோட்பட்டாய். ()

ஆவுமாணியற்பார்ப்பீருமாடமைத்தோளினீரு
மேவுநோய்க்கோட்பட்டீருமிளிர்பிதிர்க்கருமஞ்செய்யப்
பூவினன்மகப்பேருள்ளீரும்புந்தியினீருமம்பு
தூவுமுனரணஞ்சேர்மினென்பர்பின்றோன்றவாயார். (அங)

கோதறுகல்விசாலூர்க்குடியிருந்தறியானேனு
மோதருஞ்செல்வமிக்கோனொருவனேசிறந்தோனவன்
காதலின்வேதமுன்னுங்கலைகள்கற்றுணர்ந்தோனேனுந்
தீதமைமிடியனாயிற்சிறந்திடான்வேத்தவைக்கே. (அச)

காமமேவெகுளியேயுட்கலந்திடுமயக்கமேயென்
றாமவையமையப்பட்டோரவற்றொரோவொன்றுதோன்றின்
மாமறைமுழங்கிக்கூறிவருவிதிவிலக்கயர்ப்பர்
தோமறுமமைச்சிடித்துச்சொல்வதுங்கொள்ளாரம்மா. (அரு)

வரகு கொள்வித் திடினும் விளியாதாற் - கல்விரவுதாரான் கதம்'' என்னும் புறப்பொருள்வெண்பாமாலையானு முணர்க.

(அங) ஆனியல் - ஆனின்சுபாவம், அது சாந்தம். இது பாடாண்டிணையுள் இயன்மொழித்துறை: பாடாண்டிணை - ஒருவனுடைய கீர்த்தியும் வலியும் கொடையும் அளியுமாகிய இவற்றைத் தெரிந்து கூறுதல். இயன்மொழி - தலைவனெதிர் சென்றேறி அவன் செய்தியையும் அவன்குலத்தோர் செய்தியையும் அவன்மேலேற்றிப் புகழ்தல். இச்செய்யுளோடு, "ஆவு மானியற் பார்ப்பன மாக்களும் - பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித் - தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும் - பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும் - எம்மம்பு கடிவிடு தும்முரண் சேர்மினென் - றறத்தாறு நுவலும் * * * எங்கோ" என்னும் புறநானூற்றுச் செய்யுளை ஒத்துக்காண்க.

(அரு) தோன்றின் அயர்ப்பர் கொள்ளாரென்பது. அயர்த்தல்-மறத்தல்; வேதங்களாற் கூறப்பட்டுள்ள விதிவிலக்கென்பது.

கலைபயிஞணட்பென்றுகரைந்தனையந்தநட்பிச்
சிலைவலாற்கிருக்குமாயிற்சென்றபற்பலவாண்டிற்கு
ளுலைவருமுடங்கறீட்டியொன்றிரண்டனுப்பலாமே
மலைவறுதூதுய்த்துன்னைவருகவென்றழைக்கலாமே. (அசு)

அந்தநாட்டகுதிக்கேற்பவாக்கினன்போலுநின்னட்
பிந்தநாட்டகுதிவானத்திறைவனுமணுகொணுதம்
முந்தைநாணட்பையெண்ணிமுடுகிநீசெலக்கூடாதா
லெந்தநாளினும்பூபாலாயாவர்க்குநட்பரல்லர். (அஎ)

அல்லதுமிகுநட்பேயென்றற்றநோக்காதுசெல்லி
லொல்லையினினக்குண்டாயிற்றுறுமவமானமெய்யே
நல்லதன்மனையின்வாக்குநறுநெயுண்டொளிர்வதேயென்
றெல்லடர்சுடரைமுத்தமிடிற்சுடாதமைவதுண்டோ. (அஅ)

பழியிலுன்குலத்தோர்செய்யப்படுந்தொழினன்கியற்றி
யிழிவறவுண்டுடுத்தலின்றிமிக்கெண்ணங்கொண்டு
வழிநடந்திளைத்தாய்மெய்யும்வாடினையந்தோவானிற்
கழிமதிவருகவென்றுட்கசிந்தழுமழவுபோன்றாய். (அகூ)

மாத்திருந்தளகைவேந்தும்வானரசளிக்கும்வேந்தும்
பாத்திருந்தியசீர்கேட்டுப்பரிவுறப்போகந்துய்க்கு
மேத்திருந்தியவில்வல்லான்சேவைக்குவந்திவ்வாயில்
காத்திருக்கின்றமன்னர்க்கண்டிலைபோலுமாலோ. (கூ0)

இந்திரதிருவனென்னவீங்குநிற்கின்றவள்ளல்
பந்தியின்மடநலார்பொற்பங்கெதிர்ந்தாடனோக்கி
நந்தியபொழிலிற்றேமாநறுங்கனிபறித்துக்கொண்டு
மந்தியுமாடல்செய்யுமகதநாடாளுமன்னன். (கூக)

(அஅ) அற்றம் - சமயம். உண்டாயிற்று - துணிவுபற்றியகா லவழுவமைதி. (அகூ) குலத்தோர் செயுந்தொழில்:—"ஓதலோ தவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈத லேற்ற லென்றிவை யாறு [illegible]க்காலத் தந்தணர் தொழிலே." என்பன. (கூ0) ஏ-அம்

படுங்கடக்கரிபோன்றுங்கோர்பரிக்கருகாநிற்கின்றா
னெடுங்கலில்வருக்கைகையாவொழுகுறுசெழுந்தேனொடி
யடுங்கருப்பாலைவீழ்த்தியடர்புலியடிப்பசுங்காய்க்
கொடுங்குலைக்கதலிசாய்க்குங்கொங்கணநாட்டுவேந்தன். ()

ஒளிர்நுதிவடிவாளேந்தியூங்கெழிறநிற்கின்றா
னளிசெறிமலர்நீர்வாவியடாமருப்பெருமைபாயக்
களிதருசெருக்கினோடுகால்விசைத்தெழுந்துவாளை
குளிர்மதிகிழியப்பாயுங்கூர்ச்சரநாட்டுவேந்தன். (௧௩)

மலையெடுத்தனையதிண்டோள்வலயம்வில்லிடநிற்கின்றான்
குலையெடுத்திருக்கும்வாழைக்கூன்குலைமுறிந்துசாய
நிலையெடுத்துறையுங்கந்திநெடுங்கழுத்திறப்பன்முத்த
மலையெடுத்தெறியும்வாவியங்கநாடாளும்வேந்தன். (௧௪)

மேவருமதனனென்னவெண்குடைநிழனிற்கின்றான்
றூவருநகர்களெல்லாந்தயங்குபொன்மனைகடோறு
மாவகிர்க்கண்ணாராக்குமண்டுகுய்ப்புகையெண்ணூற்றுக்
காவதங்கமழுஞ்செல்வக்காம்போசநாட்டுமன்னன். . (௧௫)

வாகைவேல்வலத்தினேந்திமடங்கலேறெனநிற்கின்றா
னோகையங்களிப்புமீக்கொண்டொளிவளாரங்குதோறும்
பாகைநேர்மொழியாராடப்பைந்தளிர்ச்சோலைதோறுந்
தோகைமாமயில்களாடுந்துளுவநாடாளுமன்னன். (௧௬)

காளையர்சூழமோலிகதிரெறிந்திடநிற்கின்றான்
வாளைபாய்நீத்தம்வந்தவலம்புரிகமுகினேறி
வேலைவாய்த்திடப்பன்முத்தம்விருப்பொடுகாண்போர்கந்தி
பாளையீன்றதெனவீனும்பல்லவநாட்டுமன்னன். (௧௭)

---

(௧௫) வகிர் - பிளவு. குய் - தாளிதம்.
(௧௭) வலம்புரி வேலைவாய்த்திட ஈனும் எனமுடிக்க.

வயிரவொண்குழைமதாணிவாளெறித்திடநிற்கின்றோன்
பயிருறுகளைகட்டோம்புமபான்மொழியுழத்திமார்தஞ்
செயிரறுவதனங்கண்டுதிங்களென்றெண்ணியெல்லுங்
கயிரவமலரும்பண்ணைக்கலிங்கநாடாளுமன்னன். (௯௮)

அளவில்பல்சேனைசூழவமரணிகொடுநிற்கின்றோன்
வளமலிநறும்பூமல்கும்வாவியிற்றாண்டில்வாய்நின்
றுளம்வலித்தெழுந்தவாளையொய்யெனக்கற்பகத்தின்
கிளாகழுத்தொடியப்பாயுங்கேகயநாட்டுவேந்தன். (௯௯)

கொழுநிணந்தின்றுசோரிகுடிக்கும்வேலொடுநிற்கின்றோ
னெழுகதிரப்பரிவாய்க்கௌவவெழுந்தசெஞ்சாலிச்செய்யிற்
குழுமுபல்கயன்மெய்கீளக்குதித்தெதன்றும்பாய்தலாலே
செழுமுகிற்பொழிவுறுதசிங்களநாட்டுமன்னன். (௧௦௦)

பாயசீரப்போர்வைபோர்த்துப்படாகதிரொனநிற்கின்றோன்
மேயபூம்பொய்கைவெண்டாமரையைமென்சேவலன்ன
நேயமோடணைப்பக்கண்டுநெறிபிழைத்தாயென்றூடித்
தூயபேடொதுங்கிமாழ்குஞ்சோனகநாட்டுமன்னன். (௧௦௧)

குஞ்சரக்குழாத்துநாப்பட்கோளரிபோனிற்கின்றோன்
கஞ்சமட்டொழுகப்பூத்தகழனிகாலோடைக்கண்ணின்
றஞ்சிறையுகுத்தகூாவாய்ப்பெருங்கிழநாரையாரல்
வஞ்சனைத்துயில்கொண்டுண்ணும்வங்கநாடாளுமன்னன். ()

பொத்தியகவசமெய்யிற்பொலியநிற்கின்றகாளை
கத்திகைக்குழலாராடுங்காமருமஞ்சணீர்பாய்ந்
தெத்திகையினும்வளார்ந்தகதலியின்குருத்தேழ்மாவை
மத்திகையெனப்புடைக்குமராடநாடாளும்வேந்தன். (௧௦௩)

---

(௯௮) கட்டல்-பறித்தல். கயிரவம்-செவ்வல்லி. (௧௦௦) கௌவ-விழிபடல். (௧௦௨) ஆரல் - ஒருவகை மீன். (௧௦௩) கத்திகை - மாலை. திகை - திசை. மத்திகை - குதிரைச் சம்மட்டி.

அயலெலாஞ்சேனைசூழவணிந்துநிற்கின்றசிங்கங்
கயலெலாம்வெருவுங்கண்ணாகளையரிக்கழநீரோடிச்
செயலெலாஞ்செயும்படப்பைச்செழுங்கரும்போங்கப்பாய்ந்து
வயலெலாம்விளைக்குஞ்செல்வமச்சநாடாளுமன்னன். (௧௦௪)

கருகிருண்மோலிமேயக்கடாக்களிறெனநிற்கின்றான்
வருவிறன்மடங்கன்மன்னன்வருடைதேளதிபன்முன்னும்
பெருவிடைதுலாக்கோன்பின்னும்பிரிவின்றிச்செலச்செல்கா
குருமுகின்முழங்கிப்பெய்யுங்குடகநாடாளும்வேந்தன். [லுங்

கையுறையொடுநிற்கின்றான்கவின்முழுசலராசிக்க
ணையமாமதிநின்றன்னூற்கைந்தேழான்பானிலோகட்
செய்புகரோனும்வெய்யோன்சேயேனுநிற்குநாள்போற்
பெய்முகிலென்றுமாறாப்பெருமைக்காந்தாரவேந்தன். ()

இத்தனைமன்னாதம்முள்யாரைநீயொப்பாய்கந்தை
பொத்தியமேனியோயெண்ணிரட்டியாயிரம்பொனன்னா
மெத்தியமனததராகிமேவுறப்பொலியுங்கன்ன
வித்தகன்சேவைகாணலெண்மையின்மேவுஞ்சொல்லோ. ()

மூடங்குகைகாலோபேதைமூரிவானனவுங்கோட்டி
ணிடம்படுதேத்திருவுக்கிச்சைவைத்ததனைப்போலுந்
தொடங்கியசிராத்தவில்லந்தோறுஞ்சென்றிரத்தனீத்து
விடங்கொள்வான்மன்னற்காணவிருப்புவைத்தஃதுமாதோ. ()

---

(௧௦௪) அரி - அரிசி (௧௦௫) மடங்கன் மன்னன் - சிங்கராசிக் குரிய சூரியன். வருடை தேள் அதிபன் - மேடவிருச்சிக ராசிக ளுக்குரிய செவ்வாய். விடை துலா கோன் - இடபதுலாராசிக ளுக்குரிய சுக்கிரன். மழையின்மைக்குக் காரணமாகிய கிரகநிலை கள் குறித்தபடி (௧௦௬) சலராசி - மீனராசி. ஐ - அழகு. புகர்- சுக்கிரன், வெய்யோன்சேய் - சூரியபுத்திரனாகிய சனி, கண் - இடம், க்ஷேத்திரம். மழை பெய்தற்குரிய கிரகநிலைகள் குறித்த படி. (௧௦௭) எண்ணிரட்டி யாயிரம் பொன்னன்னார் - பதினாயி ரம் இலக்குமியனை யொத்த கோபிகைகள்.

இத்தலைவாய்நிற்கின்றவிவர்க்கெலாமிரும்பொனுண்டு
மெத்தியவேவலாளர்மிகவுமுண்டாதலாலே
யெத்தனைபற்பனுள்காத்திருக்கினுங்குற்றமில்லை
பொத்துநோய்மிடிக்கோட்பட்டநினக்கிதுபொருந்தாதாகும்.

ஆதலின்வந்தவாற்றையறிந்துநின்னூர்க்குப்போதன்
மேதகுகருமமென்றம்மடமையோர்விளம்பலோடுந்
தீதறுகுணத்தான்மாண்டசெழுந்தவக்குசேலமேலோ
னேதமிக்குறத்தன்னுள்ளத்திவையிவையெண்ணுவானல். ()

மின்செய்தமதாணியாமுத்தாரமாம்விளங்குபட்டாம்
பொன்செய்தவூர்தியாமிப்போதியாம்பெறுவதெங்கே
நன்செயனம்மூதாதைநாளினுங்கேட்டதின்று
லென்செய்வாமெண்ணுதொன்றையியற்றுதலென்றுந்தீதே.()

கந்தையிற்பொதிந்தநந்தங்கையுறைகண்டாராகி
னந்தலிலிகழ்ச்சிபொங்கநகைப்பரோயெனவுட்சாம்பி
யந்தினின்றுயங்குங்காலவ்வடர்மடமையனைநோக்கிச்
சுந்தரவறிவின்மாண்டதுவாரபாலகர்சொல்வாரால். (கக௨)

யாரொனநினைத்தீரிந்தவிருந்தவத்தலைவன்றன்னைச்
சேருறுபொய்மையில்லன்செறிந்தகோன்புழுந்தநல்லன்
வாருறுமறைகள்வல்லன்மற்றெங்குஞ்செல்வானல்ல
னேருறுமினியசொல்லனென்னவேயாமுட்கோடும். (கக௩)

மேற்படி வேறு.

உலகினின்மா னுடப்பிறப்பே யரியதிழி குலமொருவி யுயர்ந்த பின்னோர், குலமுறுத லரியததனினும்வசியர் குலமரிதுகொற்ற வேந்தர், நிலவுபெருங் குலமரிய ததனினுமற் றஃதி

(ககக) "எண்ணித்துணிககருமம்" என்றதிருக்குறட்பொருட்டு. (கக௩) வாருறுமறை என்பது - சாகோபசாகைகளையுடையவேதம்.

னுமிக் கரிய நீரால், பலர்புகழந் தணர்குலத்துத் தோன்றிட லென் றருமறைகள் பகரு மன்றே. (கக௪)

அந்தணரோ யரசர்முதன் மூவருக்கு மாசிரிய ரருளார் தெய்வ, மந்தணரோ மறைக்கிழவன் முதலாய தேவரினு மாற்றல் சான்றோ, ரந்தணரோ யாவதற்கு மழிவதற்குங் காரணமா யமைந்தநீரா, ரந்தணரே தெய்வமெனக் கென்று கண்ணனுரைக்கவுமியா மயிர்த்த லென்னே. (கக௫)

மறையவருக் குயர்தெய்வத் தலங்களிடத் தமர்மாடம் வகுத்து ளோரு, நிறையுமுப நயனமண மகமாதி புரிதரப்பொன் னோர்ந்து ளோருங், குறைவறுபாற் செருத்தலா னிலன்முதற் பல் வகைத்தானங் கொடுத்து ளோரு, மறையுமறு சுவையுணவு விலாப்புடைவீங் கிடவுணுமா றளித்து ளோரும். (கக௬)

தீயபுலி முதல்விருகத் தாற்கொடுங்கோன் மன்னவராற் றீயா னீரான், மேயகொடுங் கள்வரான் மற்றெவைக ளாலுமிடா விளைந்த போதி, லாயவிடாக் கந்தோவென் றுளமிரங்கி விரைந்துபொரு ளாதி நல்கி, நேயமுறப் பேருதவி புரிந்தினுங் காப்பமென நிகழ்த்து வோரும். (ககஎ)

(கக௫) அந்தணரே தெய்வமென்றது - "தைவாதீனம் ஜகத்ஸர்வம் - மந்த்ராதீ நந்து தைவதம் - தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீனம் - ப்ராஹ்மணோமமதைவதம்" என்ற பாரதவசனத்தைக் குறித்தது. (கக௬) மகம் - அக்நிஷ்டோமம் - அத்யக்நிஷ்டோமம் - உக்தியம் - சோடசீ - வாசபேயம் - அதிராத்திரம் - அப்தோரியாமம்; அக்னியாதானம் - அக்னிகோத்திரம் - தரிசபூர்ணமாஸம் - சாதுர்மாஸ்யம் - நிரூடபசுபந்தம் - ஆக்கிரயணம் - சௌத்திராமணி; அஷ்டகை - பார்வணம் - சிராத்தம் - சிராவணி - ஆக்கிரகாயணி - சைத்திரி - ஆசுவயுஜி - என்பன. இவை முக்கியயாகமாம். இராசசூய முதலியவேறும் பலவுள.

இம்மையிற்பல் பெருஞ்செல்வ மிடையரு துறப்பெருகவீன்
ற மைந்தர், செம்மையிற்செய் வினைநல்லோர் தமைச்சூழச்
செழும்போகஞ் சிறப்பத் துய்த்திட், டம்மையிற்கற் பகநாடு
களிதூங்கத் தேவரா யரம்பை மாதா, கொம்மைவரி முலைப்
போகஞ் சேணாட்டுய்த் ததற்பின்முத்தி கூடுவாரால். (௧௧௮)

இத்தகைய மறையவனை யெளியனென நினைப்பதெவ னிவ
ணிற் கின்ற, வித்தகமா மறைத்தலைவன் றன்னைமுழு ஞானி
யென விளம்பல் வேண்டு, மெத்தகைமை யாலெனின்மெய்ஞ்
ஞானியாதங் குணங்குறியு மிகத்தி லாசைச், சித்தமொரு
வாதுழல்பொய்ஞ் ஞானியாதங் குணங்குறியுஞ் செப்பக் கே
ண்மின். (௧௧௯)

கம்மாலுஞ் செயற்கரிய செயற்றலைநின் றொருவழிநாற் கர
ணஞ் செல்ல, வம்மாலு மறைப்பொருளி னிலக்குறுத்தி யயிற்
கணு ராசை முன்னு, வெம்மாலுங் கடந்தாக்கு மணியாலும்
பொன்னாலு மெந்த வேந்தா, தம்மாலு மும்மாலு மெம்மாலு
மாம்பயனென் சாற்று வீரோ. (௧௨0)

வலங்கொள்செழு முகிலூரறி யுருமேறு பலவுதிர வழங்கி
னாலும், விலங்கலைவே ரோடேற்றித் தொன்றினையொன் றடர
வளி வீசி னாலுங், கலங்கலையா ழொழுகடலு நிலைபெயர வுலக
நிலை கலங்கி னாலு, நலங்கிளர்தந் நிலைபெயரா ருண்ணடுங்கா
ரவைகண்டு நகையா நிற்பரா. (௧௨௧)

புகழ்ந்துரறு விரைக்கலவை பூசிடினும் புல்லியவைப் போல
நோக்கி, யிகழ்ந்துபல பேசிடினும் விருப்புவெறுப் பென்பத
வர்க் கென்று மில்லை, யகழ்ந்தமலக் கிழங்கினராய்ப் பசி
வேலை கிடைத்தவற்றை யமுதாத் துய்த்துத், திகழ்ந்திடுவர்
சிறிதேனு நாளைக்கு வேண்டுமெனச் சிந்தை செய்யார். (௧௨௨)

---

(௧௧௮) சேண்நாள் - தேடுநோன். (௧௨0) கம் - பிரமன். அம்
ஆலும் - அழகமைந்த. கடந்தார்க்கு ஆம்பயனென இயையும்.

விண்ணிடையே குதன்மீளப் பாதலத்திற் புகன்மீட்டுப் புவியின் மேவ, லண்ணியபல் பரகாயப் பிரவேசஞ் செயலுறையு மவ்வி டத்தே, யெண்ணியவெ லாம்வரச்செய் திடன்முதற்செய் சித்திகளை யென்றும் வேண்டார், புண்ணியபாதகமிலார் பெருமையிலார் சிறுமையிலார் பொய்மெய் யில்லார். (௧௨௩)

ஆடுவா ருன்மத்தர் போற்றிரிவா நகைத்திடுவா ரங்கை கொட்டிப், பாடுவா ரின்றிருந்த விடநாளை யிருக்கமனம் பற்றார் சுற்றிக், கூடுவார் தமிழ்க்கூடார் கந்தையன்றி வேறுடுக்கை கொள்ளா ரன்றா, நீடுவார் புகழ்ப்பெருமை யிற்றென்று மதிப்பவரார் நிகழ்த்து வாரார். (௧௨௪)

உற்றதலை மயிர்பறித்துப் பீலிகரத் திடைக்கொடுபா யுடைபுனைந்து, கற்றதவம் போலவமே பெருக்குவது ஞானமன்று கந்த மைந்தும், வற்றநெடுஞ் சீவரம்போர்த் தொளிர்வதுவு ஞானமன்று மற்றோர் போல, நற்றவம்வேண் டிலநாமே பிரம மென நவில்வதுவு ஞான மன்று. (௧௨௫)

ஓங்குபெரு ஞானியர்போற் பேசுவா ரவருண்மை வேடம் போலப், பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமஞ் செய்வோர் தம் பக்க மேகி, நீங்குகவென் றொழிப்பாரிந் நிலைமேலாம் பிரமத்தி னிலையே யென்பா, ரீங்கிவர்க டாங்கெடுவ தன்றிமற்றோ ரையுங்கெடுக்கு மெண்ணம் பூண்டோர். (௧௨௬)

---

(௧௨௩) விண்ணிடை * * * மேவல் - இவை அட்டமாசித்தியுள் பிராத்தியென்னுஞ் சித்தி. பரகாய *** வரச்செய்திடல் - இவை பிராகாமியமென்னுஞ் சித்தி. மற்றயவற்றைத் திருவிளையாடல் அட்டமாசித்தி உபதேசித்தபடலத்துணர்க.

(௧௨௫) கந்தமைந்தாவன:—உருவக்கந்தம் வேதனைக்கந்தம் குறிப்புக்கந்தம் பாவனாகந்தம் விஞ்ஞானகந்தமாம். இவற்றின்விரிவைச் சீவகசிந்தாமணி முதலிய நூல்களுட்காண்க.
சீவரம் - துவராடை.

பொன்முதற்பல் பொருளிடத்து மிச்சையற்றூர் போற்று றவு பூண்டு பின்னர், வன்மைசெறி மனத்தபக்கு வர்க்குபதே சமூகவிற்றி வருவ தெல்லா, நன்மைதரு முன்னேரொண் கா ளெருழுகப் பள்ளையென நயந்தோ ராயன், புன்மையுறப் பற்றி யஃ துடனழிந்தா னென்றகதை போலு மாலோ. (கஉஎ)

மிக்கவறி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும் விடு த்தார் போன்றுந், தக்கவழக் கிடந்தினுயர் திணைவினையஃ றிணைவினையாய்ச் சமையச் சொற்றுந், தொக்கபடர்க் கைப் பெயர்முன் னிலைப்பெயரா கிடவுரைத்துஞ் சுழல்வ தெல்லாம், பக்குவமின் மடவோரை மயக்கியவர் கைப்பொருளைப் பறித் தற் கன்றே. (கஉஅ)

சிறப்புறுமில் லறத்தினிதுன் டுடுத்துமனை மக்களொடுஞ் செறிந்தா ரேனும், பெறப்படுமப் பற்றடையார் மெய்ஞ்ஞான நெறியுணர்ந்த பெரிய ரீரா, றறப்பெரிய துறவறஞ்சார்ந் தவர் க்குமிவ ரதிகமென வறையு நூல்கள், விறப்புறுமஞ் ஞானிய ரெவ் வறத்தினுமெவ் வகைச்சிறப்பு மேவி டாரால். (கஉகூ)

இம்மறையோன் முழுஞானி யாயிருந்துஞ் சற்கரும மிழந் தா னல்லன், செம்மைபெறு மக்கருமத் தாலினைத்த திவனுட ம்பு தின்ன மீதே, மும்மையுல கிடத்துமொரு ஞானியரி யவ

(கஉஎ) ஆற்றெருழுக்கிற்சென்ற எண்கைப் பள்ளையென அவா விளற்பற்றி அதனுடனிறந்த இடையன்கதையைக், "குட்டித் திரட்கரடி யாரெருழுகக் கோன்குதித்துக், கட்டிப் புதைந்த கதையாகும் - துட்டமலப், பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற் றும் பேதையர்க்குப், புத்திபோற் காட்டும் பொருள்." என்னும் ஒழிவிலொடுக்கச் செய்யுளாலும் உணர்க. (கஉஅ) உயர்திணை வினையை அஃறிணை வினையாச்சொல்லல்:—சுவாமி வந்தது, போ யிற்று என்றிங்ஙனம் கூறுவது. படர்க்கையை முன்னிலையாக வுரைத்தல்:—நீர் என்பதைத் தாம் எனக் கூறுவது.

னென்றே முழங்கு நூல்க, ளெம்மையினி தாண்டருள வெழு
ந்தருளி னானென்றே யென்னலங் கோடும். (௧௫௦)

ஆதியினாற் கலையுணரு நாட்பழக்க மென்றுரைத்த தமைய
மெய்யே, நீதியகம் மரசனைக்கண் டிடும்விருப்ப மீக்கூர நேடி
வந்தா, னோதியவிவ் வன்றியிவ னரசரிடைப் பெறுங்கரும
மொன்று மின்றாற், காதியதீ வினையுடையே மாதலினால் யா
மின்று காணப் பெற்றேம். (௧௫௧)

ஆவாவிம் மறையோனைக் காண்டொறுமுள் ளகத்துவகை
யரும்பா நின்ற, தோவாது மெய்யினிடைப் புளகமெழு கின்
றனகண் ணுருகா நின்ற, நாவாரத் துதிப்பதற்குத் துடிதுடிக்
கின் றதுவிரைந்து நாம்போ யின்னே, தேவாதி தேவனுக்கித்
தவன்வரவை விண்ணப்பஞ் செய்ய வேண்டும். (௧௫௨)

கலிவிருத்தம்.

என்றறியாமையினிகழ்ந்துகூறிய
வன்றிணிமனத்தினார்வாயடங்கிடக்
கன்றலிலுரைபலகரைந்துமாதவக்
குன்றனான்றிருமுகநோக்கிக்கூறுவார். (௧௫௩)

மறையெலாமுணர்ந்துமெய்வாய்ந்துவெம்பவச்
சிறையெலாங்கடந்தமாச்செல்வவேதிய
தறையெலாம்புகழுநின்வருகைத்தன்மையாற்
குறையெலாந்தவிர்ந்தனங்கூர்ந்தனங்களி. (௧௫௪)

**(௧௫௦) சற்கருமம் - ஈண்டு யாகம் தபம் விரதம் நியமமாதி
கள். மும்மை - மூன்று; மை பகுதிப்பொருள்விகுதி; "இருமைவ
கைதெரிந்து" என்ற திருக்குறளிற்போல. (௧௫௧) இவ் - இவை;
சுட்டுப்பன்மைப்பெயர். காதியதீவினையுடையேம் என்றது
அருங்கேடன் என்றாற்போல்வது. (௧௫௩) கன்றலில் உரை -
இன்னுரை. (௧௫௪) மெய் - மெய்யுணர்வு(ஆகுபெயர்.) செல்வ
மென்றது ஈண்டறிவுடைமை. "அறிவுடையா ரெல்லா முடை
யார்" ஆதலின். அன்றி "பிராம்ஹணானாம் தனம் வேத:" என்ற
படி வேதச்செல்வ மென்னலுமாம்.**

ஆய்ந்தநின்பெருங்கலையருமைப்பாடுஞ்சீர்
வாய்ந்தமாதவம்வளர்மறுதசெல்வமுந்
தோய்ந்தவுட்டேய்மையுந்துகளிறன்மையும்
பாய்ந்தமாலுலகமோபகுத்தறிந்திடும். (கரு௫)

சிறியவர்மடமையிற்செறித்தவார்த்தையைக்
குறிபெறநின்றிருவுளத்துக்கொண்டிடே
லறிதருமுளத்திடைக்கொள்ளிலம்மவோ
மறிவரும்பீழைநோய்க்கடற்கண்மாய்வரோ. (கரு௬)

கங்கையேமுதனதிகளிற்படிதலும்
பொங்குமாதானங்கள்புரிந்துமிட்டிக
ளிங்குபற்பலசெய்துமெய்தும்பேறெலாந்
துங்கநின்றரிசனமொன்றிற்றோன்றுமே. (கரு௭)

காலமூன்றையுமறிகருத்தபோற்றிநற்
சீலமார்தருமறைச்செல்வபோற்றிமெய்
வாலறிவுடையவவரதபோற்றியெம்
பாலருள்சுரந்தருள்பனவபோற்றியே. (கரு௮)

சற்றுநீயிவ்விடமிருக்கிற்சார்ந்தியாங்
கொற்றமார்கண்ணனற்குன்வரவுகூறுபு,
முற்றுவமென்றவன்முன்வணங்குபு,
பொற்றவவ்விடனின்றும்போயினாரரோ. (கரு௯)

கலிநிலைத்துறை.

திரண்டமாமணிகுயிற்றுபுசெம்பொன்செயெழுபத்
திரண்டுவாயிலும்விரைவினிற்கடந்தனரிலங்கி

(கரு௬) மறிவரும் பீழைநோய்கடல் - மீளக்கூடாத துன்பக் கடல் (நரகமென்றபடி.) "எரிவாய் நிரயத்து வீழ்வர்கொலோ ......பரிவதூஉஞ் சான்றோர் கடன்" என்பதுங் குறிப்பித்தவாறு. (கரு௭) இட்டி - யாகம். (கரு௮) வால்-தூய்மை. (கரு௯) கொற்றம் - வெற்றி. பொற்ற-பொலிவுள்ள (குறிப்புப்பெயரெச்சம்.)

முரண்டவாமுடிமன்னவர்மொய்த்திடுஞ்செல்வ
வரண்டவாத்திருவோலக்கமடைந்தனர்காணூர். (கசo)

அந்திடத்தமர்வாரைநம்மரசமர்கின்ற
தெந்திடத்தெனவினவினரிலங்கெழிறருபொற்
பந்தடுத்தகையாரொடும்பயின்மணிச்சிகரத்
திந்தடுத்தபேருவளகத்தெனவவரிறுத்தார். (கசக)

கேட்டகாலையின்ஞேரெலனக்கிளருவளகப்பா
லோட்டமீதெனப்படர்ந்தனரொளிர்நுதிவடிவேற்
கூட்டம்யாவையுங்குமைத்துமைதோய்ந்துபொற்குழைபாய்
நாட்டமாதரார்காவல்செய்வாயினண்ணினரால். (கசஉ)

நெடியநீர்மையித்துவாரபாலகர்செயனிற்க
படியிலாவளம்பரந்தவவ்வுவளகப்பண்பை
முடியயாவரேயெடுத்துரைப்பவர்நசைமுளைத்துத்
துடிதுடித்துநாவெழுதலிற்சிறிதுசொற்றிடுவாம். (கசங)

பொன்னினுற்செய்துமணிகள்கால்யாத்தவண்புரிசை
மின்னினுற்பொலியப்படுமுகில்விராய்த்துயில்வ
துன்னினுற்கடலுலகுசொல்கண்ணனெண்ணிறத்தை
மன்னினுற்பெறலாமெனமதித்தனபோலும். (கசச)

மண்ணகந்தவப்பதிதரநீலமால்வரைசாய்த்
தெண்ணகந்தபக்கொணர்ந்தகல்லடுக்கிமேலெழுப்பிக்
கண்ணகங்கவர்வேதிசெய்திருபுறங்கதிர்ப்பப்
பண்ணங்கம்பொலிவயிரயாளிப்படியமைத்து. (கசரு)

(கசo) அரண் - காவல். ஓலக்கம்-கொலுமண்டபம். (கசக) அந்திடம் எந்திடம் என்பவற்றில் பெயரெச்சத்தகரம் தொக்கன. (திசைச்சொல்லுமாம்.) எழில் - அழகு, எழுச்சியுமாம். உவளகம் - உள்ளிடம். இறுத்தல் - விடைதரல். (கசஉ) ஞெரேல் - விரைவுக்குறிப்பு. (கசச) கால்யாத்தல் - கால் - உபசர்க்கம். யாத்தல் - கண்டுப்பதித்தல். (கசரு) யாளி - துதிக்கையோடுகூடிய ஒருசிங்கவிசேடம்.

இலங்குவெண்பொனிட்டிகைகளாற்சுவர்த்தலமெழுப்பி
நலங்கொள்பன்மணிபதித்தபொன்னிலைகளுநாட்டித்
துலங்குமாமரகதப்பலசாளரங்தொகுத்து
வலங்கொள்வச்சிரவிருநிலைக்கதவமும்வயக்கி. (கச௬)

நிறையுமேதகத்தாற்பலதூணடிநிலைவைத்
துறையுமேற்பலமணிகடைதூணங்களுறுத்தி
யறையுமப்பலதூணெருத்தத்துறவணிந்த
தறைபுகழ்ந்திடுசெந்துகிர்ப்போதியுஞ்சார்த்தி. (கச௭)

அன்னபோதிமேல்வெண்பொனுத்தரமியைத்தடுப்ப
நன்னராக்கியவிடங்கமுமுறுத்திமேனயப்பப்
பன்னுபொற்றகடடுக்கிவேய்ந்ததற்குமேற்பரிதி
மன்னுமாமணிக்குடநிறீஇயமைத்தனமாடம். (கச௮)

ஓங்குசந்திரகாந்தமாளிகைகளையுரைக்கோ
வீங்குநாசிசோபானவன்மையைவிரித்திடுகோ
தேங்குசூளிகைச்சிறப்பினையிற்றெனத்தெரிக்கோ
பாங்கியற்றியசித்திரத்தொகுதியைப்பணிக்கோ. (கச௯)

மற்றுநாற்றியபன்மணிமாலையைவகுக்கோ
சுற்றுநாற்றியபொன்மலர்ப்பிணையலைச்சொல்கோ
கற்றையங்கதிர்ச்சாமரைத்தூக்கினைக்கரைகோ
விற்றவென்றுரைத்திடவெளியனவலயார்க்கும். (கரு0)

தங்குமேனிலைமாடமேல்வெள்ளிடைதணப்ப
வெங்கும்வார்கமஞ்சூன்முகிற்குழாம்பொலியியக்கஞ்

(கச௬) இட்டிகை - கல். நிலை - வாயில்நிலை. (கச௭) மேதகம் - கோமேதகம் (முதற்குறை.) எருத்தம் - பிடர் (உச்சி.) போதி - போதிகை. (கச௮) விடங்கம் - கைமரம். (கச௯) உரைக்கோ - உரைப்பேனோ? இதில் கு - தன்மையொருமைவிகுதி. நாசி - சிற்பவிதியாலமைக்கும் ஓர் சித்திர உறுப்பு.

சிங்கலற்றவிண்ணவர்கள்கண்ணூறுசேராமைப்
பொங்குநீனிறக்கஞ்சுகஞ்செறித்ததுபோலும். (கருக)

அன்றியுங்குடஞ்சுட்டினம்புரந்தவந்நாளின்
மன்றவேய்ங்குழற்கோவலர்மகிழ்தரக்கொண்ட
வென்றிவார்குடையாகியவிலங்கலங்குவட்டிற்
றுன்றிடுந்தடித்தொடுசெறிந்தமையையுந்துணையும். (கருஉ)

நீத்திரட்பொறிகாரணமின்றியுஞ்சிதறக்
காத்துமேனிலைவிழித்துநிற்பவாகைவாளொளியுந்
தூத்துளிப்படுகுயின்குழாமின்றொகுமொளியும்
பாத்தறிந்திடத்தேவர்க்கும்யாவர்க்கும்படாவால். (கருங)

சிறந்ததன்குலத்துதித்தவன்செல்வத்தினுறையு
மூறந்தபன்மணிமாளிகைதனக்குமிக்குரித்தென்
றுறந்தவாதெழுமதிவிசும்பாறுசெல்வருத்தந்
துறந்திடும்படிசற்றுறைந்தகலுநாடோறும். (கருச)

திருவிற்கான்றிடுசோமகாந்தச்செழுஞ்சிகர
முருவச்சந்திரனெழுதலுமுறைத்தநீர்பெருகி
மருவிக்காலெனவழியருவியுழவண்வயங்கும்
பருவக்கோவைமுத்தாரமும்பகுத்திடலரிதே. (கருரு)

மேயமேனிலைமாடங்கள்வெள்ளொளிவிரித்துப்
பாயதாரகைக்கணத்தொடுபயிலுறுகாட்சி
தூயபாற்கடல்சங்கநாடொறுந்தன்பாற்றுறந்த
சேயமுத்தொடுபொங்கிமேலெழுந்தெனநிலவும். (கருசு)

(கருக) சிங்கல் - அழிதல். கண்ணூறு - கண்ணால் உறுவது; (திருஷ்டி தோஷம்.) (கருஉ) குடஞ்சுட்டு - பசு. (கருச) உறந்தல் - மிகுதல். (கருரு) உருவச்சந்திரன் - பூரணசந்திரன். உறைத்தல் - துளித்தல்.

ஐயநுண்ணிடையயிலைத்தமர்த்திடுமரிக்கண்
மையன்மாதரார்பற்பலாதனித்தனிமருவச்
செய்யகாற்பரியங்கமெல்லணையொடுசெறித்த
வெய்யவற்றெறுடுசிகையளவில்லதைவிளங்கும். (கருள)

வருக்கைவாழைதேமாக்கமுகாறப்பலத்தென்னை
முருக்குநாரமுண்மாதுளைமொய்த்தமுந்திரிகை
பருக்குமின்சுவைக்கனியுடைமற்றைப்பாதவங்கள்
பெருக்கியென்றுநல்வளர்தருசோலைகள்பிறங்கும். (கருஅ)

கண்ணனுவயின்வருந்தொறுங்களிமயிற்கூட்டம்
விண்ணின்மேற்பயின்மேகமிம்மண்விரவியதென்
றெண்ணிடக்கடையிலாத்தழைகோலியின்பகவும்
பெண்ணணங்கனையாரைத்தம்மினமென்றுபெட்கும். (கருகூ)

குழைகிழித்தயிறடற்றுறத்துறந்துநோகுறுகு
மழைகிழித்தொளிநோக்கினுருசலாட்டுவப்பும்
பிழைகிழித்தபொற்கந்துகவாடலின்பெருக்கு
மழைகிழித்தவச்சோலையின்மறுதென்றும்வயங்கும். (கசுo)

கோங்குமாதவிபாடலங்குராவழைபுன்னை
தேங்குசண்பகங்குங்குமஞ்சந்தனஞ்செருந்தி
யோங்குகைதைமந்தாரமாலதியொளிர்கற்பு
வீங்குசாதிமுற்பலவுளவிரைத்தவுய்யானம். (கசுக)

சாலமெய்யிற்பெண்குறியினனுய்ப்பழிதழைந்தோன்
பாலமர்ந்திடறகாதெனநீங்கியபண்பே
போலமன்றலங்கற்பகமாயிடைப்பொலிந்து
கோலமார்ந்தளவிடற்கருவளங்கொழித்துறையும். (கசுஉ)

(கருஅ) பாதவம் - மரம்; (வேரால் நீரையுண்பது; பாதபம் என்பதன்றிரிபு.) (கருகூ) தழை - பீலி. (கசுக) வழை - சுரப் புன்னை. மாலதி - காட்டுமுல்லை. கற்பு - முல்லை.

அன்றியும்பலநாள்கண்முன்னேனிடத்தமர்ந்தா
மொன்றுபின்னவனிடத்துமவ்வாறுறவுறைவா
மென்றுவந்துறைகின்றமையும்பொரூஉமிலங்கித்
துன்றுபைந்தருவைந்துமாவயிற்பொலிதோற்றம். (௧௯௩)

ஈர்ந்தெடுத்தவெண்பளிங்கினை நிலனுறவிருத்திச்
சார்ந்தநாற்புரம்வெண்பொனாற்படித்தலஞ்சமைத்துக்
கூர்ந்தமுத்தவெண்மணலடிப்பரப்பிமேற்குலவ
வார்ந்ததண்புனனிரப்பியதடங்களும்வயங்கும். (௧௯௪)

நீண்டவாட்கருங்கண்ணிளையாரொடுநீதி
பூண்டமாமணிநிறத்தவனுடல்செய்பொய்கை
வேண்டுமேற்புனல்பெருகவுஞ்சுருங்கவும்விளக்குஞ்
சேண்டுலங்கியதூம்புகள்பற்பலசெறியும். (௧௯௫)

செய்யதாமரைபற்பலவாவயிற்செறிந்த
வையசெம்மணிப்படியொளிகதிர்த்தலாலல்லு
மையில்செஞ்சுடர்க்கண்டெனமலருமற்றுங்கு
நையலின்றியஞ்சம்பலபயிறருநாளும். (௧௯௬)

குலவுபூர்தடநடுவமர்குடிமிமாமாட
நிலவுவெள்ளொளிவிரித்தலாற்றன்னரைநிரம்பச்
சுலவுபாசடைசுற்றநின்றிடுதலாற்சுடர்விட்
டுலவுவெண்பளிக்குருவநீலுடைப்பிரானுறழும். (௧௯௭)

மருவிடம்புரிவலம்புரிசலஞ்சலம்வயிற்றுக்
கருவுளைந்துசோபானத்திற்கான்றபன்முத்தந்
திருவனாரடிப்படுங்கொறுமுறுத்துமச்செல்ல
லொருவுமாசிறிதத்தலைப்படிந்தபூவுளுற்றும். (௧௯௮)

---

(௧௯௫) தூம்பு - உட்டுளைப்பொருள். (௧௯௭) நீலுடைப்பி
ரான் - நீலவாடையையுடையபலராமர். (௧௯௮) சோபானம் -
படி. சலஞ்சலம் - வலம்புரிச்சங்கம் ஆயிரஞ்சூழவிருப்பதோர்
சங்கு; 'வலம்புரியாயிரஞ்சூழ்ந்ததுசலஞ்சலம்' (பிங்கலந்தை.)

பெருமைசேர்புகழ்க்கண்ணனெண்கயலெனப்பிறழுங்
கருமைதீட்டியகண்ணினர்பலரொடுங்கவின
வொருமையன்பின்வீற்றிருக்குமத்தன்மையையுணரி
னருமையுற்றவைகுந்தமுமதற்கிணையாமோ. (கசுகூ)

நன்னயத்தபல்வளம்பெறுமுவளகநடையி
லென்னசொற்றனன்சிறிதும்விண்டேனலனினிமேற்
பன்னகத்துயிற்பகவன்வீற்றிருக்குமப்பண்பிற்
றன்னம்விண்டுவிள்ளாதசீர்க்கதைசொலச்சமைந்தேன். (கஎ0)

துன்றுசந்திரகாந்தத்தினமைத்தவொண்சுவர்க்க
ணென்றுமாறுசெஞ்சந்தனங்கருப்புரமொருவா
தென்றுநாறியமான்மதங்குங்குமமின்னு
நின்றபல்விரைவருக்கமுநிறைதரக்கூட்டி. (கஎக)

விரைதுவன்றியமென்பனிநீரிடைக்குழைத்துப்
புரையகன்றிடப்பூசியொண்காரகில்புகைத்துத்
தரைசெறிந்திடநறுமயிரப்படாந்தவவிரித்து
வரைவில்பன்மணிக்கம்பலமேலுறவயக்கி. (கஎஉ)

அமைத்தசீர்மணிமாளிகைநாப்பண்வாளவிரச்
சமைத்தபன்மணியழுத்தியதடப்பரியங்கத்
திமைத்தமூவகைப்பஞ்சியன்மயிரனத்தூவி
குமைத்தியற்றியவைந்தணையடுக்கிமீக்குலவ. (கஎங)

உரகமெல்லுரிபரலெனக்குழையும்வெள்ளொளிப்பட்
டிரவெழுஞ்சுடர்க்கதிர்தவழ்ந்தெனவிரித்தியக்கி

(கஎஉ) நறுமயிர்ப்படாம் - கம்பலம். மணிக்கம்பலம் - இரத்தின கம்பலம். (கஎங) மூவகைப் பஞ்சு - வெண்பஞ்சு செம்பஞ்சு பூளைப்பஞ்சு. ஐந்தணை - மேற்கூறிய முப்பஞ்சினோடு மெல்லியமயிரும் அன்னத்தூவியும் சேர்த்துத் தனித்தனி யியற்றிய மெத்தைகள்.

யரவமேகலையாரமைத்திட்டவப்படுக்கை
விரவுபாற்கடற்படுக்கையிற்சிறப்புறமேவி. (கஎச)

அரும்புசீதளப்பாற்கடற்றுயிலுநாளவிரும்
விரும்புசெந்துகிரோடலைக்கொழுந்தெழீஇவிழல்போற்
கரும்புபோன்மெனக்கரையுமஞ்சொல்லினர்கவரி
யிரும்பொற்கால்பிடித்தேக்கழுத்தம்பெறவிரட்ட. (கஎரு)

அல்லிரிக்குமுத்தோரம்வைத்தலங்குசாந்தாற்றி
மெல்லியற்கவினொருத்திகைப்பற்றுபுவீச
வல்லியிற்பொலியொருமகண்மாடகந்திரித்து
கல்லியற்படுவீணையினரப்பொலியெழுப்ப. (கஎசு)

குலவுகப்புரமிலவங்கமேலமுற்கூட்டி
நிலவுவெண்ணகையொருத்திமென்பாகடைநீட்டக்
கலவமாமயில்வெருவுறுசாயலங்கருங்க
ணிலவிதழ்க்கொடியொருத்திபொற்படியகமேந்த. (கஎஎ)

வண்டுவார்குழலாருளமயக்குநின்னுருவங்
கண்டுபாரெனவொருத்திநேர்கண்ணடிகாட்ட
விண்டுமென்பனிநீருறைத்திடுமிதின்விரைமிக்
குண்டுகொண்டிடென்றொருத்திபூஞ்செண்டுகையுதவ. (கஎஅ)

இழையிடைக்கொடியொருத்திபொற்சிரகநீரேந்தத்
தழையொளிச்செழும்பாதுகையொருத்திகைத்தாங்க
வழைமலர்த்தொடைவன்டரற்றிடநறவாக்கு
மழைமுகிற்குழலொருத்திமெல்விரைப்புகையயக்க. (கஎகூ)

(கஎரு) ஏக்கழுத்தம் - தலையெடுப்பு. (கஎசு) சாந்தாற்றி - விசிறி. மாடகம் - முறுக்காணி. (கஎஎ) முகவாசம் மூன்றுகூறினும் உபலக்கணத்தால் மற்றைய இரண்டுங்கொள்க. அவை, வால்மிளகு சாதிக்காய். இவற்றைமுற்கொண்டு பின்பு பாகுவைக்கொள்ளல் வழக்கு. அடை - இலை (வெற்றிலை.) படியகம் படிகம். (கஎஅ) பனிநீர் விண்டு உறைத்திடும் எனக்கூட்டுக

ணியவிழ்ந்துமட்டேற்றிவண்டடர்தரப்பிறங்கும்,
ணிவளைந்தவொண்கருங்குழல்வெண்ணகைக்கனிவா,
ணிசிறந்துரிபடர்ந்தகன்னனங்கெனுமுருக்கு
ணிவளங்கெழுகவான்மிசைமுடித்தலைவைத்து. (கஅ0)

ூதரத்தினன்புகுற்றுவர்க்கருண்மலரடிகள்,
ாதீங்கொளக்கூற்றொடும்பொருங்கொலைக்கருங்கண்
ாதர்சத்தியபாமைதன்கவான்மிசைவைத்துச்,
ீதரப்பிரான்படுத்திருந்தனன்களிசிறந்தே. (கஅக)

ஆயவேலையிற்றுவாரபாலகராழகமைந்த
வாயில்காவல்செய்மாதரார்வாண்முகநோக்கிப்,
போயுரைத்திடுமெம்வரவிறைக்கெனப்புகன்றார்,
ேயமாதரும்விரைந்துசென்றதுநிகழ்த்தினரால். (கஅஉ)

மன்னரேறுகேட்டெழுந்திருந்தவர்வருகென்று,
னன்னமர்தருஞ்செலவிடநடந்தனரடைந்தார்,
மின்னுதாரகைக்குழாத்திடைவிளங்கொளிமதிபோற்,
றன்னுமாதருட்டோன்றிடுந்தோன்றலைக்கண்டார். (கஅங)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சிந்தையுண்மகிழ்ச்சிபொங்கச்சிரமிசைக்கரங்கள்கூப்பிச்,
சந்தமார்நிலத்தின்வீழ்ந்துதாழ்ந்தெழீஇக்குடந்தம்பட்டு,
முந்துதானையுமொடுக்கிமுன்னர்நிற்பாரைநோக்கி,
வந்தகாரியமென்னென்றான்வகுத்துரையாடலுற்றார். (கஅச)

(கஅ0) கணி - கண்ணி. கவான் - தொடை. (கஅக) காதரம் - அச்சம். (கஅச) குடந்தம்பட்டு - வணக்கம்பட்டு என்பது திருமுருகாற்றுப்படையில் "குடந்தம்பட்டுக் கொழுமலர் சிதறி" என்றவிடத்து நச்சினார்க்கினியர் குட என்பது தட என்பதுபோல வளைவை யுணர்த்துவதோர் உரிச்சொல்லாகலின் அதனடியாகப்பிறந்த பெயருமாம் என்று வரைந்தமையுங் காண்க. நாலுவிரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி, நெஞ்சிடை வைப்பது குடந்தமாகும் எனக்கோடலும் ஒன்று.

மாமறைத்தலைவபோற்றிமதிக்குலவிளக்கேபோற்றி
காமரிந்திரன்முன்னோர்காண்பதற்கரியாய்போற்றி
தாமரைக்கண்ணாய்போற்றிதரியலரேறேபோற்றி
தோமறுசெல்வம்வாய்ந்ததுவாரகைக்கிறைவாபோற்றி. ()

ஆதிநாளையகின்னோடொருங்கலைகற்றுளானும்
போதவுஞ்சிறந்தநட்புப்பூண்டுகொண்டவனுங்கந்தை
மேதகக்கொண்டநீரான்மெய்ம்மறையவர்குலத்தான்
கோதறுகுணத்தின்மிக்கான்குசேலனென்றியம்பினன்பேர்.

வற்றியென்பெழுந்தயாக்கைமாதவனின்மேல்வைத்த
பற்றினையெம்மனோரோபகுத்தறிந்தளக்கவல்லா
ரிற்றைநாள்வந்துவாயிலிருக்கின்றனெனதிர்ந்தபோரில்
வெற்றிகொள்கழற்கால்வேந்தேவிண்ணப்பமிதுவேயென்றார்()

என்றலுமுவகைவிம்மவெழின்முகமலர்ச்சிகாட்டப்
பொன்றவில்கருணைபொங்கிப்பொழிதரவிரைவினிற்சென்
றின்றுநம்வாயில்வந்தவிருந்தவத்தலைவன்றன்னை
மன்றவிங்கழைப்பீரென்றுவாய்மலர்ந்தருளினானே. (கஅஅ)

கேட்டனர்துவாரபாலர்கிளர்ந்தெழுகளிப்புத்துள்ள
வாட்டமின்மனத்தராகிவாயில்கள்பலவுநீத்து
நாட்டுதங்காவல்வாயினண்ணினராங்கிருக்குங்
கோட்டமின்மனத்துச்செய்யகுசேலமாமுனியைச்சார்ந்தார்.()

ஆதரம்பெருகநெற்றியணிநிலந்தோயத்தாழ்ந்து
மாதவரேறேபோற்றிமறைக்குலச்சுடரேபோற்றி
காதரம்பெருக்குஞ்சன்மக்கடல்கடந்தவனேபோற்றி
நாதனுக்கினிமைமிக்கநண்புடையவனேபோற்றி. (ககூ0)

என்றுபஃறுதிமுழக்கியாங்கள்பல்வாயினீந்தித்
துன்றியகதுப்பின்மாதர்சொற்படியுவளகம்போ
யொன்றுபல்பிடிகள்சூழவுறுங்கடக்களிறுபோன்று
மின்றிகழ்மடவார்சூழவீற்றிருந்தானைக்கண்டு. (ககூக)

ரின்னுடைவரவுரைத்தேநிருபனுக்கப்போழ்துற்ற
பன்னருங்களிப்பையாமோபகர்ந்திடவல்லமைய,
முன்னமங்கிருந்தவின்பமுழுவதுமறந்துநின்ற,
னன்னாநெஞ்சுடையநீரார்நட்பினிற்சிறந்ததுண்டோ. (௧௯௨)

தாயதுவருகைகேட்டதனியிளங்குழவிபோன்று
நேயமிக்குடையனாகிநெஞ்சினுளுவகைபூப்பப்
போயழைத்திடுமினின்னேபோயழைத்திடுமினின்னே
போயழைத்திடுமினின்னேயெனவிரைபொருளிற்சொற்றான்.

இலக்கணமின்மைநோக்கியிதற்குமேற்சொற்றானல்லன்
மலக்குறும்பறுத்துயர்ந்தமாதவத்தலைவரேறே
பலப்பலசொல்லியென்னைபாணித்தல்கருமமன்று
நலக்கநீவிரைவினெய்தாவிடினவனென்னுமிங்ஙன். (௧௯௪)

ஆதலினெம்பிரானுக்ககத்துமிக்குவகையுய்ப்ப
வேதமின்முனிவரேறேயெழுந்தருளுகவென்றங்கைப்
போதகங்கூப்பினார்கள்பொருக்கெனவெழுந்துசெம்மை
வேதீமுற்றுணர்ந்தவையன்விரைதரநடக்கலுற்றான். (௧௯௫)

அன்னதுகண்டுமுன்னரறிவிலாதுரைத்தநீரா
ரென்னகாரியஞ்செய்தேமிப்பெரியனையெளியனென்று
சொன்னதீங்குரைகளெல்லாஞ்சுடுகின்றநம்முளத்தை
மன்னவனறிவானாகில்வாராததீங்குமுண்டோ. (௧௯௬)

---

(௧௯௩) இவ்வடுக்கு விரைவுப்பொருளது; இதனை "விரை சொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்" என்ற தொல்காப்பியத் தானுமுணர்க. (௧௯௪) இலக்கணமின்மையாவது:—விரைவு முதலிய பொருணிலைக்கண் மூன்றுமுறைக்குமே லடுக்கலாகா தென்பது; இதனை "அசைநிலை பொருணிலை" என்னும் நன்னூ லானு முணர்க. (௧௯௬) சுடுகின்றதென்பது, "தன்னெஞ்சறி வது பொய்யற்க" என்ற திருக்குறட்பொருளது.

அருண்மிகப்படைத்தசிந்தையந்தணனுதலாலே
தெருண்மிகப்படைத்தமன்னன்செவியறிவுறுப்பானல்லன்
பொருண்மிகப்படைத்தவேந்தாபோற்றிடுஞ்சிறப்புற்றானென்
றிருண்மிகப்படைத்தநெஞ்சரின்னவாறியம்பிநிற்க. (ககூஎ)

மன்னனைக்காணுமன்பும்வாயில்காவலருமுன்னே
நன்னயத்துடனடப்பநடப்பவனுங்காங்குள்ள
பன்னரும்வளங்களெல்லாம்பார்த்தனனிறும்பூதுற்றான்
பொன்னகர்சிறந்ததென்பார்புல்லியரெனவுட்கொண்டான். ()

பன்மணிவாயிலெல்லாம்பின்னிடும்படிகடந்து
நன்மணிமோலிவேந்தர்நயந்தபேரவையுநீந்தி
யன்மணிவிளக்கும்வண்ணனணங்களொடிருக்கும்
பொன்மணிவாயிலந்தப்புரத்தினுக்கணியனானான். (ககூகூ)

ஓவியத்தொழில்வல்லாருக்கொள்பொருள்வெறுப்பவீசி
நாவியற்கருமென்கூந்தனங்கைமாரெழுதிவைத்த
பூவியற்படமாங்காங்குப்பொலிவதுகாணுந்தோறுங்
கோவியற்கண்ணனென்றுட்கொண்டுபின்றெளிவனம்மா. ()

ஈங்கிவனிவ்வாறெய்தவின்னம்வந்திலனென்றையன்
பூங்கதிர்வரவுபார்க்கும்பொற்றபுண்டரீகம்போலுந்
தீங்கதிர்வரவுபார்க்குஞ்செவ்வரக்காம்பல்போலு
மோங்குமைவரவுபார்க்குமொண்டழைமஞ்ஞைபோலும். ()

பொருந்துதாய்வரவுபார்க்கும்புனிற்றிளங்கன்றுபோலுந்
திருந்துதன்வரவுபார்க்குஞ்செம்மனத்தொருவன்போலு

(ககூஎ) அருண்மிகப் படைத்த சிந்தையந்தணன், என்றது "அந்தண ரென்போ ரறவோர்" என்ற திருக்குறளை நோக்கியது. (ககூஅ) அன்பும் காவலரும் முன்னே நடப்ப எனவியைக்க. (ககூகூ) அல்மணி - நீலமணி.

மருந்துநீர்வரவுபார்க்குமறனசையுடையான்போலுங்
கருந்துழாய்க்கண்ணியண்ணல்கமழ்நறுஞ்சேக்கைமீதே. ()

வளர்மறையுணர்ச்சிமிக்கான்வரவுபார்த்திருப்பவந்த
வளவிடற்கரியமேலோனாடமைத்தோளினல்லார்
கிளர்தரநின்றுகாக்குங்கேடில்வாயிலுங்கடந்து
தளர்வில்பன்மாதர்சூழுந்தனியிடத்தணுகுங்காலை. (௨௦௫)

வருந்துமோர்மிடியன்சேமவைப்பெதிர்கண்டாற்போலு
மருந்துணவிழந்தோன்விண்ணோரமுதெதிர்கண்டாற்போலும்
பரிந்துவெப்புழலுவோன்கற்பகமெதிர்கண்டாற்போலுஞ்
சரிந்தபற்றினன்மெய்யாசான்றனையெதிர்கண்டாற்போலும் ()

எண்ணனைக்கிலங்குமார்பமீத்தருள்பிரானைநீல
வண்ணனைத்திகிரிசங்கம்வலமிடமுறக்கொண்டானை,
மண்ணனைத்தும்புரக்கும்வாசுதேவனைமணக்குங்
கண்ணனைத்துளவத்தாமக்கண்ணனைக்கண்ணிற்கண்டான். ()

காண்டலுமுவகைபூத்துக்கால்விசைகொடுநடந்தா,
ளாண்டகையவனுங்கண்ணுற்றணையுடைத்தெழுநீத்தம்போ,
லீண்டபூம்பள்ளிநீத்துநிலவுபேரன்புபொங்கப்,
பூண்டமாதவன்முன்சென்றுபொன்னடிவணங்கினாளால். ()

---

(௨௦௨) புனிறு - இளமை. ஒருபொருட்சொற்கள்; "புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே." என்பது தொல்காப்பியம். (௨௦௪) பற்று - யானென்றபிமானிக்கும் அகப்பற்றும், எனதென்றபிமானிக்கும் புறப்பற்றுமாம். (௨௦௬) ஈத்து என்பது ஈந்தென்பதன் வலித்தலன்று; அதுவே முதற்சொரூபம். "ஈத்தலும் ஈதலும்போலப் பாத்தலும் பாதலும் ஒன்று என்று" ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுதலால் என்க. கண்ணனைத் துளவம் - தேனையும் அரும்புகளையுங்கொண்ட துளவம். (௨௦௯) கால் - சிலேடை. ஆண்டகை - ஆணின்தகுதி; அவை, அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்ப.

திலகமண்டோயவையன் றிருவடிவணங்கிப்பின்னர்
நிலவுமெய்ப்புளகம்போர்த்துநிரம்புறத்தழுவிக்கொண்டான்
குலமறைத்தலைவனென்றுங்கூர்ந்தமெய்நட்பனென்று
மலர்தலையுலகங்கூறும்வாய்மைகாத்தருளினேனே. (உ0எ)

பாக்கியமுற்றதிந்நாள்பாக்கியமுற்றதிந்நா
ளாக்கியவறம்பலித்தவாக்கியவறம்பலித்த
யோக்கியமடைந்ததிந்தமனையுமென்றுரைத்துரைத்துத்
தேக்கியபுகழினன்கொண்டாடினன்சிலேவலோயே. (உ0அ)

அங்கொருமாடத்துள்ளாலரதநபீடத்தும்பர்
மங்கலமறைவலாளன்மகிழ்ந்தெழுந்தருளப்பண்ணிப்
பொங்குபொற்குடம்பூரித்தபுதியமஞ்சனநீராட்டித்
திங்களங்கதிரேயென்னத்திகழ்ந்தவொற்றுடைசாத்தி. ()

கதிரொளக்கதிர்க்குஞ்செம்பொற்கவின்செய்பட்டாடைசாத்தி
பிதிர்கருப்பூரநானம்பெய்விரைச்சாந்தஞ்சாத்திப்
முதிரொளிவிரிக்குந்தண்ணென்முத்தவக்கதையுஞ்சாத்தி
யதிர்தரவண்டுந்தேனுமலங்குபூந்தொடையல்சாத்தி. (உக0)

(உ0எ) கண்ணன் அடிவணங்கல: — அவதாரத்துற் கிணங்க அந்தணர்க்கு ஆற்றவேண்டிய அருநெறியீதெனக் காட்டவோ வியற்றிய தென்க. "வான்முறையால வந்த நான்மறை யாள ரை - மேன்முறை யாற்றங் குரவரைப் போலொழுக - னான்மு றையாளர் கடன்." என்னும் ஆசாரக்கோவையுங் காண்க. கக0-வது செய்யுளுக்கும் ஈதொக்கும். (உ0கூ) மஞ்சன நீரென்றது, உபலக்கணத்தால் அர்க்கியபாத்திய ஆசமனங்களையுங் குறிக்கும். (உக0) வண்டும் தேனும் என்றதால் இவற்றினினமான கரும்பு ஞிமிறுந் தொள்க. வண்டின் பேதம் நான்கென்பது சிந்தாமணி குணமாலையாரிலம்பகம் சஉ-ல் "கரும்புகான் - வண்டு நான்மகிழ் தேனினங் காண்மது - வுண்டு தேக்கிடு மொண்ஞிமி றீட்டங்கள்" என்று கூறுதலானு முணர்க.

விரைதருதூமங்காட்டி மேவுநெய்விளக்கங்கோட்டி,
யுரைபெறுபளிதநீராசனக்கலமொளிரச்சுற்றித்,
திரைசெய்நல்லமுதமன்னதீஞ்சுவையுணவுநல்கிக்,
கரையறுதவத்தோன்வாயுங்கையுமொள்ளடலிற்பூசி. (௨௧௧)

பாகடைசிறப்பநல்கிப்பயன்பெறுமுகமன்கூறிப்,
போகுயர்மாடத்திட்டபொற்றதன்படுக்கையேற்றி,
மோகமிக்கருகிருந்துமுதுகுதைவந்துபின்னுங்
கோகனகப்பூங்கையாற்குளிர்செய்பொற்சவரிவீசி. (௨௧௨)

வழிநடந்திளைத்தவெயிம்மலரடியிரண்டுமென்று,
கழிமகிழ்சிறப்பமெல்லவருடினான்கமலக்கண்ணன்,
பழியில்பல்லுபசாரங்கள்பண்ணவுந்தெரியானாகி,
யொழிவறுதவக்குசேலனொன்றும்பேசாதிருந்தான். (௨௧௩)

பித்தருன்மத்தர்பாலர்பிசாசர்தங்குணத்தராவர்
நத்தவஞானயோகரெனமறைநவிலுமாற்றாற்
சித்தம்விட்டகலாதையன்றிருவுருத்தியானஞ்செய்து
புத்தமுதூறுமின்பிற்புணர்ந்தசைவற்றிருந்தான். (௨௧௪)

வழுவில்பைங் குளவி யோசை யன்றிமற் றொன்றுந் தேராப், புழுவென விருக்குந் தன்மை பூண்டமற் றிவனோ பொங் கும், பழுதில்கற் புடையா டன்சொற் படிவறுஞ் செல்வம் வேண்டுங், கொழுநிணங் குதட்டி மாற்றார்க் குமைத்தெழும் வடிவேல் வேந்தே. (௨௧௫)

---

(௨௧௧) நீராஞ்சனம்-கண்ணேறு கழிக்கும் ஆலத்தி. (௨௧௨) பாகு அடை - அடைக்காயமுது. போகு உயர்மாடம் - மிகவுயர்ந்த மாடம். கோகனகம் - கோகனதமென்பதன்மரூஉ. சக்கரவாகங்கள் விளையாடப்பெறுவது; கோகம் - சக்கரவாகம். (௨௧௩) ஒன்றும்பேசாதிருத்தல் - பரவசப்பட்டிருத்தல். (௨௧௪) உன்மத்தர் - சித்தவேறுபாடுடையவர். புத்தமுது - புதியவமுது. (௨௧௫) குதட்டல்-வாயடங்க மெல்லுதல். வடி-கூர்மை.

உருவினைக்கண்டுங்கண்டத்தொளிர்வனமணங்கவர்ந்து
மருமைசான்முகமன்கேட்டுமமைந்தமெய்ப்பரிசமுற்றும்
வெருவினற்றிருநாமங்கள்விருப்பினுட்டுதித்துமைந்தும்
பொருவிலானந்தமெய்தப்பொலிகடத்தீபம்போன்றான். ()

நீருறுமுப்புப்போலுநெருப்புறுபளிதம்போலு
மேருறுவடிவத்தண்ணலிடத்துத்தன்மனங்கலப்பப்
பேருறுபவஞ்சவாழ்க்கைப்பிணிப்பொழிந்தகலக்கஞ்சத்
தாருறுமாபத்தையன்றன்னையுமறந்திருந்தான். (உகஎ)

இன்னணமிவனிருப்பவிவன்வரவனைத்துஞ்சொல்லா
முன்னரேயுணர்ந்துகொண்டமுழுமுதற்கண்ணனென்பான்
மன்னியவுவகைபூத்துவழிதருமனத்தனாகி
யன்னவன்வதனநோக்கியனமயவின்னனசொல்வானால். ()

கோச்சகக்கலிப்பா.

மன்னுடையமறையனைத்தும்வகுத்துணாந்தமாதவனே
யுன்னுடையதரிசனத்தாலுடம்புபூரித்தனன்யான்
மின்னுடையவிளங்கொளிவேல்வேந்தருளுந்தேவருளு
மென்னுடையபெறலரும்பேறியாபெற்றாயார்பெறுவார். ()

பூன்றதையையென்னிடத்தெப்போதுநீவைத்தருள்க
வான்றவெனதுளத்தினைவிட்டகன்றிலையிந்நாள்காறுஞ்
சான்றகுணத்தாயின்னுஞ்சந்ததமுநினைந்திருப்பேன்
றோன்றவனேகம்பெறினுந்தொன்னட்பிற்சிறந்தனவோ. ()

ஆயின்மறைமுதற்கலைகளனைத்துமுணர்ந்தறமறம்பாத்
தேயினிதுநன்றிதுதீதென்றுணர்த்துமவர்நட்பை

(உகசு) வனம் - துளவமாலை. கடத்தீபம் போல்வது - உள்ளொளி பெற்றுப் புறந்தோன்றாதிருத்தல். (உகஎ) பவஞ்சம் - பிரபஞ்சம். தன்னையுமறத்தல் - கண்ணனிடங்கலந்த புலமுடைமையால் நேர்ந்த அவசம். (உகஅ) முழுமுதல் - திரிமூர்த்திபரன் என்றபடி. (உஉ0) பூன்றல் - பூரணமாதல்.

வீயினுந்தாமறப்பர்களோமேதையோர்மறப்பரே
ஞயினுங்கீழ்ப்பட்டவர்களவர்காணிந்நானிலத்தே. (உஉக)

நல்லார்சொல்விரும்புவதுநல்லாரைக்காண்பதுவு
நல்லார்க்கொன்றுதவுவதுநல்லாரைப்புகழ்வதுவு
நல்லார்நன்றென்றுரைப்பநவிற்றியவிவ்வெலாமடங்க
நல்லார்நட்பென்றுமுறனன்றன்றேநான்மறையோய். (உஉஉ)

பொன்னுள்ளான்பூமியுள்ளான்புந்தியுள்ளானுயிடினு
மென்னுள்ளானுவனவனிருந்தவர்தநட்பிலனேற்
பொன்னில்லான்பூமியில்லான்புந்தியில்லானுயிடினு
மென்னில்லானுவனவனிருந்தவர்தநட்புளனேல். (உஉஙு)

பேயோடுபழகுதினும்பிரிவதரிதரிதென்று
தூயோர்கண்மொழிவராற்றூயோரும்புகழ்தூயோ
ராயோர்கள்பெருநட்பையருந்தவத்தாற்பெறலன்றி
யேயோவெண்மையிற்கிடைப்பினிகழ்வரோவிகழ்வில்லார். ()

சம●ம்வரினிடித்துரைப்பார்தக்கவழிச்செலச்செய்வா
ரிமையவர்தமுலகுறவுமிருளுலகம்பகையுமா
யமையவறிவுறுத்துவாரங்தோறூல்கற்றுணர்ந்த
கமையுடையார்நட்பெவர்க்குக்காண்கிடைக்குமரிதரிது. ()

(உஉக) இது "அறனறிந்துமூத்த" "உற்றநோய் நீக்கி" என்னுந் திருக்குறளாதிய தழீஇயது. பாத்து - பகுத்து. (உஉஙு) இது "மூத்விலார்க் கூதியமில்லை" என்னுந் திருக்குறளாதிய தழீஇயது. (உஉச) இது "விலங்கேயுந் தம்மோ டேனுறைதன் மே வும் * * * இன்றுதே - பேஎயோ●டானும் பிரிவு". என்னும் பழமொழி "பரிஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்று - மரீஇப் பின்னைப் பிரிவு" என்னும் நாலடியாதிய தழீஇயது. (உஉரு) இது "அழிவி னவைநீக்கி" "அழச்சொல்லி யல்லதிடித்து" என்னுந் திருக்குறளாதிய தழீஇயது.

கூடுதற்குக்கூடாதகூட்டத்துப்படுநட்பு
வீடுதற்குத்தக்கதாய்நாடோறுமெலிந்தொழியு
நீடுதற்குத்தக்கதுநன்னெறிநின்றோர்நட்பொன்றே
தேடுதற்குக்கிடைக்காததிரவியமுமஃதாமால். (உஉசு)

முத்திக்குவித்தாகுமுழுதுணர்ந்தோர்பெருநட்பே
இத்திக்குநாடோறுந்தேவர்பெறற்கருந்திருவுஞ்
சித்திக்கும்படியருளுஞ்செப்பரிதாலதுநிற்க
வெத்திக்கும்புகழுநினக்கியன்மனைநன்காயிற்றே. (உஉஎ)

நின்னுடையமனைக்கிழத்திநிரம்புபெருநீர்மையளே
மன்னுடையசொற்காத்துச்சோர்விலாமாண்பினளே
தன்னுடையவுயிராநின்றனைப்பேணுந்தன்மையளே
யுன்னுடையவருவாய்க்குத்தக்கசெலவுஞற்றுவளே. (உஉஅ)

சொன்னகாரியமனைத்துஞ்சொன்னபடியியற்றுவளே
யென்னமிடிவரினும்வெளியெடுத்தியம்பாவியலினளே
தன்னமுநாயகன்பழிதூற்றுதமையத்தக்கவளே
பன்னருமாமறையுணர்ந்தபளகறுநற்குணக்குன்றே. (உஉகூ)

பைங்குதலைவாய்மைந்தர்பலர்பிறக்கவேண்டுமே
யெங்குமரும்புகழுடையாயெத்தனைமைந்தர்கள்பிறந்தா
ரங்கவரைப்பேரவையோரணிதரச்செய்செயலனைத்துஞ்
சிங்கலறப்புரிந்தனையோசெய்தனையோவுபநயனம். (உ௩0)

இவர்தந்தையென்றோற்றுனென்றறிஞருரைக்கும்வகை
யிவர்இன்றமனத்தினராயிருங்கலைகற்றுணர்வரே

(உஉசு) இது "நிறைநீர நீரவர்கேண்மை" என்னுந் திருக்குறள் "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை" என்னும் நாலடியாதிய தழீஇயது. (உஉஎ) இது "அரியவற்று ளெல்லா மரிதே" என்னுந் திருக்குறளாதிய தழீஇயது. (உஉஅ) இது, "தற்காத்துத் தற்கொண்டான்" "மனைத்தக்க மாண்புடையள்" என்னுந் திருக்குறளாதியவற்றைத் தழீஇநின்றது. (உ௩0) பைங்குதலை - இனிய மழலைச்சொல்; பதமை - இனிமையின் மேற்று.

யுவர்கொண்டகடலாடைபுடையுடுத்தவுலகமெலா
மூவர்கொண்டகுணமெவர்க்குண்டெனமொழியவுயர்வரே. ()

நிறைகின்றசிறுமைந்தர்நினைத்தவையெலாங்கொடுத்துக்
குறைவின்றிநடத்திவருகின்றனையேகொடும்பகலி
லுறைகின்றபசிவருத்தத்துறுநர்மாலெனச்சுருதி
யறைகின்றதாலவருக்கன்னமிடுகின்றனையே. (உ௩உ)

நானமுதற்சந்திசெபநன்குநடக்கின்றனவே
யானவிவைசெயமெய்திடமாகியிருக்கின்றதே
மானமுறுமறைப்பொருளில்வைத்ததியானஞ்சிதறு
தீனமறநிற்கின்றதேயெவருஞ்சொலற்கரியாய். (உ௩௩)

சீரார்நின்னூர்நின்றுசேரவிவண்வருவாரா
னீரார்நின்றன்மையெலாநென்னல்வரைக்குந்தவறு
தாராய்ந்துகொண்டிருந்தேனகன்றபலநாள்களின்பி
னேராரின்பஞ்சிறப்பவிருவேமுங்கூடினேம். (உ௩ச)

நள்ளார்களண்மைக்கணிருந்தாலுநட்புறுத்தார்
வுள்ளார்கள்சேய்மைக்கணிருந்தாலும்விருப்பொழியார்
தள்ளாதபல்பொருள்கடனைச்சூழவிருந்தாலு
முள்ளாதவன்கதிரையுறநோக்குநெருஞ்சியே. (உ௩ரு)

(உ௩க) இது, "மகன்றந்தைக் காற்றுமுதவி" என்ற திருக்குறளாதிய தழீஇநின்றது. (உ௩உ) சுருதி யறைதலாவது:—'அப்யாகதஃஸ்வயம்விஷ்ணுஃ' (அப்யாகதஃ ஸ்வயம் விஷ்ணுஃ) - அதிதியாக வந்தவர் விஷ்ணு ஸ்வரூபர் என்பது. (உ௩ரு) இது "புணர்ச்சி பழகுதல் வேண்டா" என்றதிருக்குறளின் கருத்தது. நெருஞ்சிப்பூ சூரியனைநோக்கியேநிற்குமென்பதை:—"நீள்சுடர் நேதியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்" என்ற சிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் ௫௩-வது செய்யுளாலும், "நெருஞ்சிப் பசலை வான்பூ - ஏர்தருசுடரி னெதிர்கொண்டாஅங்கு" மென்னும் புறநானூற்று - கசு௫-வது செய்யுளானு முணர்க

மடமையாருறுநட்பேமருவுபெருஞ்சுகங்காணும்
திடமுறவெவ்வாறென்னிற்செப்பக்கேள்செழுமறையோ
யுடனுறைதலொருவுமிடத்தொருதுன்புமுறலின்று
படர்தலுமின்றொருவேளைபகர்தலுமின்றுருகுமால். (உகசு)

ஐயநீகுடியிருக்குமணிநாட்டிலதிகமழை
பெய்யுமழையின்மைகிளிவிட்டின்முதற்பெருங்கேடு
வெய்யகொடுங்கள்வர்வனவிருகமுதற்பலகேடு
நையவினிதுயிரெலாநன்குதழைக்கின்றனவே. (உகஎ)

இருவேமுமுன்னுளிலிலங்குசாந்தீபமுனி
வருகாமரடிவணங்கிமாமறைகற்றுணர்ந்திடுநாட்
பெருகார்வத்தொடும்பேசிக்கொண்டிருந்தபேச்செல்லாந்
திருகாராவுளத்துநினைத்திருக்கின்றுயோசிறப்ப. (உகஅ)

கொள்ளைமறையுணர்ச்சிமிகுகுருராயன்பத்தினியாந்
தள்ளைநமைப்பார்த்தமுதுசமைப்பதற்கிந்தனமின்றின்
றெள்ளருநன்மைந்தர்காள்கொடுவாருமெனவேவ
விள்ளருமோர்பெருங்காட்டுள்விறகொடித்துத்திரிந்தனமே. ()

(உகசு) படர்தல் - நினைத்தல். இது, "பெரிதினிது பேதை யார் கேண்மை பிரிவின்கட் - பீழை தருவதொன் றில்" என்னும் திருக்குறளாதிய தழீஇயது. (உகஎ) அதிகமழையை அதிவ்ருஷ்டி என்றும், மழையின்மையை அநாவ்ருஷ்டி என்றும், வடநூலார்கூறுப. இச்செய்யுள் "பெரும்பொருளாற் பெட்டக்கதாகி" என்ற திருக்குறளின் உரைக்கருத்தது. விட்டில் முதல் என்றதனால், எலி அரசன்மையுங் கொள்க. இதனை "மிக்கபெயலோடுபெய லின்மையெலி விட்டில்கிளி - அக்கணர சன்மையோ டாறு." என்றதனானுமுணர்க. அரசன்மையாவது - வேற்றரசன் அந்நாட்டெல்லையினருகிருத்தல். நைதல் - குன்றுதல்.

(உகக) ராயன் - ராஜனென்பதன்றிரிபு. தள்ளை - தாய்; (திசைச்சொல்)

கலிவிருத்தம்.

ஆயகாலைவிண்ஞான்றெழுவெண்முகி
னேயநெய்தனிறைவளநோக்குவான்
பாயவன்னம்பறந்தனபோன்மெனத்
தோயமாக்கடற்றுன்னுபுசென்றவே. (௨௪௦)

நீணிறக்கடல்வற்றிடநீரம்வா
யாணிரப்பவியப்பருகுற்றெழீஇ
வானிடைப்படர்மஞ்ஞைக்குழாமென
மேனிபைத்துவிரைவினின்மீண்டவே. (௨௪௧)

பெட்டுநீர்மழைபெய்துவளர்த்திடு
மட்டுநீங்குபைங்கூழ்மரமாதிகள்
பட்டுநீங்கவெப்பம்புரிகோடையை
வெட்டும்வாளெனமின்னல்விதிர்த்தவே. (௨௪௨)

எமருணற்கிடமாயவிருங்கட
லமர்தல்கொண்டறலைச்சுவற்றுந்தழற்
சமர்தணிப்பமின்னேயெனச்சாற்றல்போற்
றமரம்விண்ணுஞ்சலிப்பவெழுந்தவே. (௨௪௩)

மேதினிப்பகைமேலம்புதூற்றிடச்
சாதிநன்மலர்க்கற்பதருவினன்
காதிவாங்கியகார்முகமென்றுல
கோதிநிற்கவொருவில்விண்டோன்றிற்றே. (௨௪௪)

நம்மையூரிறைவற்பகைநாகங்க
டம்மையாமென்றுஞ்சாரறகாதிவண்
வெம்மைதீரிடமென்றுவிராயபோற்
கம்மைமேகமக்காட்டைவளைந்தவே. (௨௪௫)

---

(௨௪௧) நீரம் - ஜலம். (௨௪௨) பெட்டல்-விரும்பல். (௨௪௩) தமரம் - ஒலி. (௨௪௪) மேதினிப்பகை - இவ்வுலகவடிவாகிய அசுரன். (௨௪௫) கம்மை மேகம் - நீருண்ட கரிய மேகம்.

விரவுமின்னினொளிக்கும்வெருவிடி
யுரவொலிக்குமுளம்பதைத்தஞ்சுபு
பரவுதம்மிறைபாற்சரண்சார்தல்போ
லரவம்யாவுமளைபுக்கொளித்தவே. (உசசு)

இடிமுழக்கமுழவமியைதர
நெடியகானவரங்கநிலவுற
வடிவமஞ்ஞையெனுமடமாதரா
ரடிபெயர்த்திடுமோடன்மலிந்ததே. (உசஎ)

பெட்டுநூல்பெருகப்பயிலாதவ
ரொட்டுசெய்யுணினைத்துநினைத்துளங்
கட்டுறுத்திக்கரைவதுபோன்மென
விட்டுவிட்டுறைமென்மெலவீழ்ந்தவே. (உசஅ)

ஆன்றகல்வியறிவினிரம்பிய
சான்றதன்மையர்சற்றுந்தடையின்றித்
தோன்றயாப்படங்கத்தொகச்சொற்றல்போற்
கான்றவேபெருந்தாரைக்கணமழை. (உசக)

பாயமாவும்பறவையுமஞ்சுற
மேயகானும்பனிப்புறவெண்மைய
தாயநீறுடலார்தரவீங்கிய
காய்நிகர்ப்பக்கனோபலம்வீழ்ந்தவே. (உரு0)

மன்றலங்குருந்தத்தடிவைகியுங்
கொன்றைமூலங்குறுகியுமற்றுள
துன்றுசிற்றிலைப்பாதவத்தார்தொறுஞ்
சென்றுந்தெய்யதிகைத்துநின்றேமன்றே. (உருக)

(உசஅ) கட்டுறுத்தல் - யாப்பாகத் தொடுத்தல். (உரு0) பனிப்புற வீழ்ந்த என்க. நீறணிந்தகாய் - பூசணிக்காய். கனோ பலம் - ஆலங்கட்டி. (உருக) ஆர் - புதர். தெய்ய-அசை.

கொய்மலர்த்தருத்தோறுங்குறுகியு
மொய்சிகைத்தலைமுன்னனைந்தானன்கு
கைநனைந்திருகானனைந்தும்மவோ
மெய்நனைந்துவிறகுநனைந்ததே. (உருஉ)

மேலுமேலும்விடாமழையாகலாற்
சாலுநீர்புறந்தாளளவாய்க்கணைக்
காலுமாய்முழங்காலளவாய்ப்பினு
மாலுநீத்தமரையளவாயிற்றே. (உருங)

வானிலாவுமதிமுடியண்ணல்போற்
றேனிலாவுகடுக்கைதிகழ்தர
மானிலாவுறவேந்திவயங்கொடு
கானியாறுகலித்துநடந்ததே. (உருச)

ஊற்றுமாரியொழிதலின்றென்னினி
யாற்றலென்றிருவேமுமுள்ளாய்தர
லேற்றகாலையெழுந்தோர்கொடுங்குளிர்க்
காற்றுவந்துகடுகிச்சுழன்றதே. (உருரு)

மோதுகாற்றின்முளிசினைமாமரத்
தோதுசாகையுலோலித்தொலித்திடன்
மீதுகையமைத்தவ்வனம்விண்மழை
போதுநில்லெனல்போலவிருந்ததே. (உருகா)

அன்னகாலையிடியொலியார்முகி
னென்னல்காறுநிரம்பியவெப்பெலா
மின்னறீரவிரிந்தனவோவென
மன்னக்கேட்பதுமானவிருந்ததே. (உருஎ)

காலுமின்னுவிளக்கமிக்காட்டினுக்
கேலுமாமழையின்னமும்வேண்டுங்கொல்

(உருஉ) அம்ம - உரையசை. (உருகா) முளி-உலர்வு. உலோவித்தல் - அசைதல். மழை விண். (உருஎ) ஒலி இருந்தது என்க.

சாலுமீதிற்றழைந்தகொலென்றுமை
யாலுந்தீபங்கொண்டாய்வதையொத்ததே. (உ௫அ)

உள்ளயாவுமுதவிப்புகழ்ப்படாங்
கொள்ளுநற்கொடையாரிற்குயின்குழா
மள்ளனீர்முழுதும்மளித்தாம்புகழ்
விள்ளலின்றிக்கொண்டென்னவிளர்த்தவே. (உ௫௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாற்று விதமில் பறவையெலாம் வாய்தாழ்க் கொண்டு மரந் தோறும், போற்று குடம்பைப் புக்கொளிப்பப் பொருமா வனைத்தும் போத்தொளிப்பக், காற்று குளிருக் காற்றுன் போற் கரங்கள் யாவுந் தொகமுடக்கிப், பாற்றி யிருளைப் பகல் செய்யும் பரிதி மேல்பான் மறைந்தனனே. (உ௬0)

ஒருவா வன்பிற் றணந்தார்க ளுற்று நோக்கி வெய்துயிர்த் து, வெருவா நின்று கண்பனிப்ப விளங்கு நெடியோன் றிரு மார்பிற், பொருவா விரைக்குங் குமங்குழைத்துப் பூசி வைத் தாற் போற்றோன்றுங், கருவா னெழுந்த செவ்வானங் கடல்சூ ழுலகு வளைந்ததே. (உ௬௧)

நிலைசேர் வான மகள்கூந்த னீள விரித்து விட்டாற்போற், கலையா ருணர்ச்சி யொடுகேள்வி கழித்து நிற்பா ருள்ளம்போ, லுலையா துலகிற் பரக்குமா றாற்று கருமைக் குழம்பேபோற், கொலைசூ ழுநர்தந் தீவினைபோற் குருட்டுக் கங்குல் செறிந் ததே. (உ௬உ)

ஒருவர் கரமற் றொருவர்பிடித் துறுமே டவலென் றுண ராமன், மருவுங் குளிர்காற் றுனடுங்கி மயங்கிக் காலால் வழி

(உ௫அ) மை - மேகம். ஆலுந் தீபம் - அசையுந் தீபம். (உ௫௯) குயில் - மேகம். (உ௬0) மாற்று விதம்-குளிரைப்பரிக ரித்துக் கொள்ளும்வகை. போத்து-விலங்கில் படுக்கை. (உ௬உ) குருட்டுக்கங்குல் - கட்புலனை மறைத்தற்கேதுவாய இருள்.

தடவி, யிருள்போ மளவு மிவணுறைவோ மென்றே ரிடமுற் றிருந்தனமே, குருமா முல்லை நமைக்கண்டு கொண்ட நகை போன் மலர்ந்தவே. (உகூங)

மாட்டும்விறகுதேடப்போய்மயங்கியிருந்தநமக்கிரங்கிக்
காட்டுமரங்களல்லா துகண்ணீருகுப்பாராங்கில்லை
வாட்டுமீரப்பதமன்றிவயிற்றிற்செறிக்கும்பதமில்லைப்
பாட்டுமுழக்குமூமனன்றிப்பார்ப்பார்களுமற்றில்லையே(உகூச)

இந்த வாறு தவமயங்கி யிருக்குங் காலை நங்குலத்து, வந்த மைந்த னட்போடும் வருந்த வருத்து மிவ்விருள்போய்ச், சிந் தச் சிதைப்ப லெனச்சினந்து செழுவான் முகட்டி லெழுவான் போற், சந்தக் கதிர்க ளுறப்பரப்பித் தண்ணங் கதிரோ னுதி த்தனனே. (உகூரு)

வானி னெழுந்த செழுமதியம் வயங்கப் பொழிவெண் கதி ராலக், கானின் மிடைகார்க் களிறெல்லாங் காம ரயிரா வத மெனவு, மான களவின் கனியெல்லா மமைவெண் ணாவற் கனியெனவு, மான முறுபுல் லினமெல்லா மடங்க லெனவும் விளங்கியவே. (கூகூகூ)

திருவ மொருவற் குறறெறியச் சிற்சில் குறிமுன் றோன்று தல்போன், மருவு முலகுக் கிருளோ துக்கி வயங்கு கதிரோன் வரறெறியப், பருவச் சிலபுள் ளெழுப்பொலியும் பாய கீழைத் திசைவிளர்ப்புங், குருவிட் டொழிதா ராகணமுங் குறியாய் முன்னர்த் தோன்றினவே. (உகூஎ)

இருவர்சிறுவர்மழையினனைந்திளைத்திக்காடுகோட்பட்டார்
மருவுமவரென்னுற்றாரென்றெட்டிப்பார்க்கவருவான்போற்
பருவமரைகண்முகமலரப்பற்றற்றிருளும்போயொளிப்ப
வெருவுநாமுங்களிதூங்கவெய்யோன்குணபாலெழுந்தனனே()

(உகூச) பதம் - வழி, உணவு. ஊமன் - கூகை. (உகூகூ) புல் - புலி. (உகூஎ) திருவம் - இதில் அம்சாரிலை. குரு - நிறம்.

கல்வியறிவுமேலிடலுங்கரிசில்பல்லோரியற்றியநூற் [னபோல
சொல்லும்பொருளும்வெளிப்படையாய்த்தோன்றவிளங்குவ
வல்லையனுக்குமிரவியெழவாங்காங்கமருமரும்பொருள்க
ளொல்லையின்னவின்னவெனவுணருமாறுவிளங்கினவே. ()

வெய்யோனெழுந்தவப்பொழுதேவிமலவாசாரியனான
செய்யோன்மறைச்சாந்தீபமுனிதேடிநம்மைமுகம்புலரா
வையோபிரமசாரிகளெங்கடைந்தாரென்னுற்றனாகொலென
கையோகையின்வந்தக்காட்டுணைன்னணநாமுங்கண்டனமே. ()

கண்டுவணக்கஞ்செய்துநின்றகாலையளவில்கருணையனாய்த்
தொண்டுபுரிமாணாக்கர்களிற்றூயீர்நும்மைப்போல்பவரா
மண்டுமறைசொலென்னிமித்தமழையினனைந்தீர்வருத்தமிகக்
கொண்டுநின்றீர்கற்றகடன்கொடுத்தீர்விடுத்தீர்கோதனைத்தும்

சீரார் நுமக்குக் கல்விபோற் செல்வப் பொருளுஞ் செழுந் தொடையற், காரார் கூந்தன் மனைவியருங் கனிவாய் மழலை மைந்தர்களுங், நாரார் தருசுற் றமும்வாழு நாளு மதிக மாகுக வென், றோரார் தருநல் லாசிபகர்ந் தில்லி னமைக்கொண் டேகினனே. (உஎஉ)

இன்னவெல்லாமுளத்துநினைந்திருக்கின்றயோநீயென்னப்
பன்னவரியமறைகதறும்பகவனுண்மைதோற்றும
லுன்னவரியகைதவனாயொருமானுடவன்றனைப்போல
கன்னர்வினவிப்பின்னுமிதுநயந்துகூறத்தொடங்கினனால். ()

மேற்படி வேறு.

பந்தனையகன்றமேலோய்பற்பலநாட்குப்பின்பு
வந்தனையெனக்கென்கொண்டுவந்தனையதனையின்னே
தந்தனையாயினன்றுதருசுவைப்பக்கணத்தென்
சிந்தனைநின்றதென்றான்றெரிவரும்வஞ்சக்கள்வன். (உஎ௩)

(உகக) அனுக்கல் - கெடுத்தல். (உஎ௩) பந்தனை-யானென தென்னுஞ் செருக்கு. கள்வனென்றது:—அனைத்துயிரினும் அக

இனியசிற்றுணவேதேனுமின்றிநீவருவாய்கொல்லோ,
வினியநின்னுள்ளமின்றேவெண்ணியானறிதல்வேண்டு,
மினியநின்மனைவிவாளாவேகிவாவென்பளோமற்
றினியவெற்கன்றியார்க்குக்கொண்டுவந்திருக்கின்றாயே. ()

இருந்தவிங்களித்தியென்றுசெங்கரமலர்த்திநீட்டப்
பொருந்தவின்பாலுண்பான்பாற்புளித்தகாடியைக்கொடுத்திட்
டருந்திடென்றுரைத்தல்போலிவ்வவற்கொடையென்றுவாளா
விருந்தனன்குசேலமேலோனிவனுளமறிந்தகண்ணன். (உஎசு)

கடலைதீர்ந்தவன்மெய்ப்போர்த்தநாள்பலகண்டகந்தைப்
படர்தலைச்சுருக்கிவாங்கிப்பாங்குவைத்தினிதினாய்ந்து,
விடலருங்கற்புவாய்த்தமின்னனார்வணங்குந்தெய்வந்
இடமுறமுடிந்துவைத்தசிறுபொதிகண்டுகொண்டான். (உஎஎ)

மலிதருமன்பின்வந்தவண்பொதியவிழ்த்துநோக்கி,
வலிதருமவற்றுணன்றுவாய்த்ததுநமக்கிதென்னா,
வொலிதருகழற்காலையுனொருபிடியவலைக்காதல்
பொலிதரவெடுத்துவாயிற்போகட்டுக்கொண்டான்மாதோ. ()

செறிதருசுவைத்தீதென்றுந்தேவர்க்குமரியதாகு
மறிதருவிருப்பினில்வினைமைத்ததேயபழைதுமன்று
குறிதருவிலைப்பாற்சென்றுகேடிலிவ்வளத்ததோவென்
றறியனைவாரியுண்டோனொருபிடியவறின்றானே. (உஎகூ)

முன்னுமிவ்வவலொன்றேனுமுனைமூறிந்ததுவுமின்று
பன்னுமுட்டையுமின்றுகும்பட்டவங்கையுமணக்குங்

மும் புறமும் நிறைந்திருந்தும், சிலர்க்கு வெளிப்பட்டும் சிலர்க்
குமறைந்தும் நிற்கின்ற ஆச்சரிய குணவிசேடம் பற்றி யென்க.
(உஎசு) கொடை போலாமென ஆக்கச்சொல் வருவிக்க. (உஎஎ)
கடலை வஞ்சனை, பொய். (உஎஅ) அவிழ்த்துக்கொண்ட அவற்றுள்
ஒரு பிடி என்க. போகட்டென்பது போட்டென மருவிவழங்கு
கின்றது. இதில் போகவே பகுதி. (உஎகூ) பழைது-பழையது.

கொன்னும்வாய்செறிப்பினம்மகுளமும்வேண்டுவதின்றென்னா
வுன்னுபல்லுலகுமுண்டோனொருபிடியவறின்றானே. (உ௮௦)

பாங்கிருகொடிற்றொதுக்கிப்பதமுறச்சற்றிருத்தித்
தேங்குறமென்றுமென்றுசிரம்பலதரமசைத்துக்
கோங்கிளமுலைப்பூங்கோதைகுமுதவாய்ப்பைந்தேனூற
லோங்குமின்சுவைகொள்வாயானொருபிடியவறின்றானே. ()

நாட்டுமிவ்வவல்விருப்பநமக்குமிக்குள்ளதென்று
கேட்டுளாய்கொல்லோமுன்னுங்கிளந்திருப்பதுமன்றேயென்
றேட்டுமென்மலாப்பூந்தொங்கலிமையவர்க்கமிர்தமுன்னா
னூட்டியபுகழின்மேலோனொருபிடியவறின்றானே. (உ௮உ)

அரியவன்பிணிற்கொடுத்தலிழிந்ததாயினுஞ்சிறந்த
திரியுமன்பிணிற்கொடுத்தலிழிந்ததேசிறந்ததேனும்
பெரியவர்புகழப்பட்டபெருந்தவக்குசேலமேலோ
னுரியவன்பினையுங்கூட்டியொருபிடியவறின்றானே. (உ௮௩)

மற்றொருபிடியெடுத்துவாயிடப்போகுங்காலை,
முற்றிழைத்திருவுருக்குமணியெனுமுத்தமூரற்
பொற்றொடிப்பூங்கொம்பன்னாள்பொருக்கெனவோடிவந்து,
கற்றவர்புகழ்தன்கேள்வன்கரத்தினைப்பிடித்துக்கொண்டாள்.

நெய்யடைகவளங்கொள்ளுநெடுங்கடக்களிற்றின்கையைத்
தெய்யவார்த்தோடிவந்தோர்சிறுபிடிபிடித்தல்போன்ற
தையனுண்ணிடைக்கலாபமடிச்சிலம்பலம்பவோடிப்
பொய்யிலான்கையைத்தேவிபொருக்கெனப்பிடித்ததோற்றம்.

(உ௮௦) முட்டை - தவிடு. (உ௮௩) உ௭௮ - முதல். உ௮௩ - வரையும், ஒருபிடியவலையே விதந்தநுவதித்தார். அநுவாதமாவது - முன்னர்ப் பெறப்பட்டதொன்றையே வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னும் வேறு அணிப்படக்கூறுவது.

கலிவிருத்தம்.

இருங்கிளிப்பெயரிருடியின்னவா
ரொருங்குகூறலுமுவந்துதாழ்ந்தெழீஇப்
பருங்கைமால்வரைப்பகையுழக்குபு
பொருங்கைவேலினன்புகறன்மேயினன். (உஅசு)

என்னவற்புதமெடுத்துரைத்தனை
பன்னுநாயகன்பரிவிற்றுய்த்திட
றன்னேயூறுறத்தடுக்குமாதரார்
நன்னர்நீரரோகவையில்கேள்வியாய். (உஅஎ)

கடுத்தகார்விடங்கயிலேக்கண்ணுத
லெடுத்துண்காலையுமிடத்துமேவிய
தொடுத்தபூங்குழற்றோகைமாமயி
றடுத்ததில்லையேசாற்றுமேன்மையோய். (உஅஅ)

கணவன்றுய்த்திடக்கருதெவற்றையு
மிணர்மென்கூந்தலாரெடுத்தெடுத்தளித்
தணவநின்றுபசரிப்பதல்லது
குணமிலாரெனத்தடுத்தல்கொள்கையே. (உஅகூ)

வாயுமுன்பிணிவகுத்ததிற்றிடு
மாயுள்வேதியரகற்றுமொன்றனே
நாயகன்கொளநயந்துநிற்பனேற்
றீயதென்பர்பின்சிந்தைநோவரே. (உகூ0)

கண்டன்வேறொருகருமநெஞ்சகங்
கொண்டுமற்றையகுறைத்திருப்பினு
மண்டுமன்பின்யாதானும்வைத்துக்கொண்
டுண்டுபோரெனவூட்டுநீரரே. (உகூக)

(உஅசு) இளிப்பெயரிருடி-சுகப்பிரமருஷி. (உகூ0) வாயுமுன்பிணி-வாதபித்த சிலேஷ்மரோய்கள். (உகூக) கண்டன்-நாயகன்.

ஆரமைச்சுநேர்மதியமைந்துமிக்
கோரடிச்சியாய்ப்பணியினூணிடச்
சாரிலன்னையாய்ச்சமைவர்கற்புடை
நாரிமாரெனநவில்வர்நல்லவர். (உகஉ)

கோற்றொடிக்கருங்கூந்தன்மாதராண்
மாற்றலார்கெடமாட்டும்வைந்நுதிக்
கூற்றமன்னவாட்குரிசிலெண்டப
மாற்றிநின்றதென்வழங்குவாயென்றான். (உகங)

சேரலார்முடிதேய்க்குமொண்கழல்
வீரனிங்ஙனம்வினவிடக்குறு
மூரல்கொண்டருண்முகத்தனுகிய
வீரமாதவனிறைகொடுக்குமே. (உகச)

மேற்படி வேறு.

சொற்பிறங்கியநற்குலத்தோற்றத்தாள்
கற்பினுக்கரசாயகனங்குழை
விற்பிறங்கியவாணுதன்மெல்லியல்
பொற்பினுக்கொருபொற்பெனுந்தன்மையாள். (உகரு)

நிலவுவெண்டிரைப்பாற்கடனின்றெழு
கலவமாமயிலன்னகருங்குழற்
குலவுமாமகள்கூற்றினிற்றோன்றினு
ளலகினற்குணங்கட்கெல்லையாயினுள். (உகசு)

இலக்கணங்கணிரம்பியவேற்றத்தாள்
விலக்கரும்புகழ்வாய்ந்தவிளங்கிழை
நலக்குமன்பற்குநன்மையல்லாதொன்று
கலக்கச்செய்குவளோபுவிகாவலோய். (உகஎ)

(உகஉ) மதியில் அமைச்சாய், பணியில் அடிச்சியாய், ஊணி-டுதலில் அன்னையாய்ச் சமைவர் என்பது. (உகங) கோலம் தொடி - அழகியவளை; கோல் - கடைக்குழை. (உகரு) சொல்-புகழ்.

மேவுமன்பன்மனக்குவிரோதமா
யாவுஞ்செய்யகிலாளயர்ந்தாவது
நாவினுனுநவிற்றுகிலாளுளம்
பாவுமாறுபடர்தலுஞ்செய்கிலாள். (உகூஅ)

கோச்சகக்கலிப்பா.

பலகலைகண்முற்றுணர்ந்தபளகிலாத்தவமறையோர்
குலகமிறும்பூதடையவொழியாதபெருஞ்செல்வ
நிலமிசையுண்டாகவெனநினைந்தவலோர்பிடியெடுத்து
நலமுறத்தின்றனனென்றுமறிந்தாளங்நன்னுதலே. (உகூகூ)

தகத்தின்றபிடியவற்கேசகங்கொள்ளாப்பெருஞ்செல்வ
மிகத்துன்றுமஃதன்றிமீட்டுமொருபிடியெடுத்து
நகத்தின்றுவிடுவானேனுள்பலவுமன்னவற்குத்
தொகத்துன்றுமடிமையாய்ச்சொற்பணிகள்கடவாளுய். ()

தானமரவேண்டுமெனுந்தக்ககருத்துளத்தமரக்
கானமருங்கருங்கூந்தற்கதிரமருமதிவதனக்
கூனமரும்விற்புருவக்குயிலமருமென்மொழியா
டேனமருந்தார்மார்பன்செங்கைபிடித்துத்தடுத்தாள். (௩0க)

அன்றியுமத்தொழுகுலத்தானணிமனைக்குவேண்டுவது
துன்றியசீர்ச்செல்வமேதுன்னலார்முடியுரிஞ்சும்
வென்றியமர்கருங்கழற்கால்வெள்ளொளியவேல்வேந்தே
மின்றிகழுமணிமார்பன்பணிசெயல்வேண்டுவதின்றே. ()

ஆதலிற்றன்னாயகனுக்கமைந்தவிதமாகும்விதங்
காதமர்பொற்குழைகிழித்துக்கருங்குவளைக்குலஞ்சவட்டி
மோதுகூற்றொடும்பொருதமுடங்கல்விடுந்தடங்கருங்கண்
மாதர்புரிந்ததையன்றிமற்றொன்றுபுரிந்திலளே. (௩0௩)

(உகூஅ) படர்தல் - நினைதல். (௩0க) தானென்றது கண்ணபிரானை (௩0௨) தொழுகுலம் - எவருந் தொழத்தக்க பிராமணகுலம், (௩0௩) பிராட்டியின் கண்களுக்கும் இங்ஙனங் கூறியது பொருத்தன்மையினும், ஆகும்விதம் புரிந்ததை என்க. ஐ சாரியை,

வன்புடைமாற்றலாநெய்த்தோர்வாய்மடுத்துத்தசைகுதட்டி
யின்புடையீருளுஞ்சுவைத்திட்டெழுங்கதிர்வாட்கண்ணபிரா
னன்புடையார்க்கிதுகொடுத்தலாகுமிதாகாதென்று
தன்புடையாயினுமெண்ணத்தக்கவனோதார்வேந்தே. (௩௦௪)

வாரிதிசூழுலகினொருமானுடவனறியாது
சீரியலச்செய்தவறஞ்சிறிதேனுமப்பயனாற்
பேரியலுஞ்சுவர்க்கத்திற்பெரிதின்பந்துய்ப்பனெனிற்
கூரியலும்வடிவேலாய்குசேலமுனிக்கிஃதரிதோ. (௩௦௫)

நீடுபுகழ்ப்பகவனடிநீங்காதுவளருளத்தா
னோடுபொறிச்சேட்டையெலாமொடுக்கியமாதவனன்றே
யேடுசெறிமலாமார்பாவிம்மறையோனெனப்புகன்றிட்
டாடுபுகழ்ப்பெருந்தவத்தோனப்பாலுஞ்சொலப்புக்கான். ()

தேவியாற்றடைபட்டுச்செறிதரக்கைக்கொளுமவலைப்
பாவியவண்புகழானப்பழங்கந்தைதனின்முடிந்து
மேவியவோர்பிடியவலின்மிசமகிழ்ச்சியுடையானாய்
நாவியலுந்துதிமுழக்கினன்முகமன்பலசொற்றான். (௩௦௭)

அன்றிரவோர்மென்படுக்கையணிந்துதவவதின்மேவி
மன்றிகழவ்வுவளகத்துவளம்பலவுங்கண்டதனாற்
றுன்றியபேரானந்தமொழியாதுதோன்றியெழக்
கன்றியதீப்பொறியவித்தோன்கண்படைகொண்டருளினான் ()

கதிருதிக்குங்காலையெழீஇக்கடன்பலவுமுற்றியடர்
முதிர்புலன்செற்றருஞானமுயன்றடைந்தோனாதலினான்,

---

(௩௦௮) கண்படை - கண்படுதல். (தூங்குதல்.) (௩௦௯) கடனாவது:—"வைகறையாமந் துயிலெழுந்து தான்செய்யும் - நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற் - றந்தையுந்தா யுந் தொழுதெழுக வென்பதே - முந்தையோர் கண்ட முறை" என்பது. முயன்றடைதல் - கேள்வி விமரிசம் பாவனைபாலடைதல்; கேள்வி-கேட்டல், விமரிசம்-சிந்தித்தல். பாவனை-தெளிதல்.

மதிகுலத்துமன்னவன்பால்வாய்திறந்தொன்றுங்கேளா
னிதியமிகப்பெற்றவனாய்நினைந்தூர்க்குவழிக்கொண்டான். ()

அக்காலைக்கண்ணனுந்தன்னணிவாயில்வரைவந்து
மிக்கார்வத்தொடுமடியில்வீழ்ந்துவணங்கிடமகிழ்ந்து
தொக்காசிபலகூறித்துவாரபாலகர்வாயி
லெக்காலுமின்பமருன்கடந்தப்பாலேகிடுங்கால். (௩௧0)

விண்டார்தம்மணிமௌலிமிதித்துழக்குங்கருங்கழற்கால்
வண்டாடுநறுந்துளபமாலைதுயல்வருதடந்தோட்
கொண்டாடும்புகழ்க்கண்ணன்களிகூர்ந்துகோயில்புகக்
கண்டார்களாங்கிருக்குங்கார்க்குழன்மின்னார்பலரும். (௩௧௧)

மலர்வதனஞ்சாய்க்குநருமணியதரம்பிதுக்குநருஞ்
சிலதியரைச்சினக்குநருந்திருமிநடப்பவருமாய்க்
குலவுமறையவற்கொன்றுங்கொடுத்திலன்போவென்றுனென்
சிலைவிதழ்ச்செய்யவாயியன்றனவெலாமுரைப்பார். (௩௧௨)

கலிநிலைத்துறை.

தாயெதிர்வுற்றசேயெனவுள்ளந்தழைவுற்றான்
போயெதிர்கொண்டான்காலில்விழுந்தான்புனைவித்தா
னேயமுளானென்றூரறிவித்தானிங்கென்றான்
செய்மையனைத்தானன்றிதுவென்றார்சிலமாதர். (௩௧௩)

பார்த்திபர்பல்லோர்காத்தனர்நிற்கப்பாரானாய்க்
கூர்த்தழிதிப்பூசுரனெதிர்கொண்டான்கொண்டாடிப்
பூர்த்திமிகுந்தானந்தோவாளாபோகென்றான்
சீர்த்திமிகுந்தானன்றேயென்றாசிலமாதர். (௩௧௪)

தூன்றியவன்பிற்கட்டியணைத்தான்றொழுதிட்டான்
பொன்றிகழ்பள்ளிமீதமர்வித்தான்புகழ்ந்திட்டா
னொன்றுமளித்திட்டானலனுதயத்துன்னூர்க்குச்
சென்றிடுகென்றானன்றிதுவென்றார்சிலமாதர். (௩௧௫)

(௩0௬)நிதியம் இதில் அம் சாரியை. (௩௧௨)சிலதியர்-தோழிகள்

எளியோன்பாவமித்தனை தூரமேன்வந்தா
னெளியாதேனேபாலேயெனவினி தாப்பேசிக்
களியாகின்றோகாசும்மீயான்கழிகென்றான்
றெளியாநல்லோரிவனுரையென்றாசிலமாதா. (௱கசு)

காடுநாடுந்தீந்தினனுகிக்கழியன்பி
னீடுகிரப்புநீங்கிடுமென்னுகினைவுள்ளஞ்
சூடுபுவந்தானிங்கொருவேளைச்சோற்றுக்கே
தேடுவாசான்றேரிவன்புகழென்றாசிலமாதா. (௱கஎ)

குன்றலன்றுமாரிதடுத்தசோமான்மற்
றென்றநன்பனென்றிவன்வந்தானுறவுள்ள
மன்றுனயன்னுன்கொடுவெந்தையும்வாரித்
தின்றனென்றுமீந்திலனென்றாசிலமாதா. (௱கஅ)

ஒழுங்குறமுற்றவமில்லவாயாநட்புற்றலென்,
விழுங்குமிடித்துயாதீருநீரினாமெய்யீதா,
லழுங்கலிலாதுலகாள்பவாதேவியராலுஞ்,
செழுங்கைதரிப்பதுமண்வளையென்றாசிலமாதா. (௱கக)

2 அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இங்கிவனம் மறையோன்பால் வைத்ததயை யெலாமறிந்தோ 4மென்னே யென்னே, கங்களைங்கண் ணுறுவதற்குக் கண்ணடியும் வேண்டுங்கொல் 3கருங்கண் ணீகா, 5டுங்கமுட னொருவேளைச்சோறுண்ட துயார்தவரை துளைத்துப் போகி, யங்குவரு சிகரியொன்று பிடித்தபோ லாயிற்றென் றறைந்தார் சில் லோர். (௱உ0)

(௱கஅ) உறவு உள்ளம் அன்றுனய் - உறவு உள்ளத்திலில்லாதவனுய்; எனவே, புறத்திலுள்ளவன்போலநடித்து என்பது.
(௱கக) சுமங்கலிகள் அரதனவளைகளை அணிந்தவராயினும் மங்கலத்தில் மண்வளைகளையே அணிதல்போல நற்றவமில்லார் செல்வரை நீட்பாகப்பெறினும் தமது வறுமையையே மேற்கொண்டிருப்ப ரென்பதுகருத்து. (௱உ0) சிகரி - ஏலி.

நரபதிபால் வேண்டுவன பெற்றுவருந் தலைவனென நடவை பாாத்துப், பிரவுபுகழ் மனையிருக்கு மந்தோரன் மைந்தருமப் பரிசே நிற்பா, விரவிலிவ னென்செய்வான் சிந்துபழங் கந்தை யன்றி வேருென் றில்லான், புரவுடையா னென்பனொரு கலையு மளித் திலனென்று புகன்ரு சில்லோா. (௫௨௧)

எத்துணைய செல்வமிகுத் திருந்தாலு மீத்துவத்த லிவன்பா லில்லை, மெத்துநய மொழிகளான் மயங்கியொன்றுங் கேளா னாய் விரைந்து போனான், பித்துறுமா மறையவனு மிவனுமகி ழ்ந் தாறனுப்பிப் பெயாந்து வந்தான், கொத்துறுமிந் நட்பிரு ந்தென்னிராதொழிந்தா லென்னென்று குயின்ரு சில்லோர்.

அம்மறையோ னொருபொருளுங் கேளானாய்ச் சென்றதை யா மறிந்தோ மன்ற, மம்மாதபுத் தீத்துவப்பாாக் காணிலன் றே கேட்பவாக்கு வாயுண் டாகும், விம்மலுறு நசையினரு மிவ னிடத்துக் கேட்பதற்கு மேவா ரென்ருற், றம்மையுணாந் துய ர்ந்தவரோ கேட்கத்தக் கவரென்ரு தடங்கட் சில்லோா. ()

என்னினைத்து வந்தானோ வவனிவனும் யாதுநினைத் திருக் கின் ருனோ, பன்னரிய விவன்செய்யு மாயையெவ ராலறியப் படும்வாய் வந்த, வின்னனவெ லாம்பேச லறிவன்று நமக்கெ னவண் டிரங்குங் கூந்தன், மின்னனைய நுண்ணிடைப்பே ரம ர்க்கண்மட மாதாசிலா விளம்பி னாரே. (௫௨௪)

சிற்றிடைப்பே ரமாக்கண்மட மாதாபல ரிவைமுதலாச் செ ப்பி நிற்கக், கற்றவரேத் தெடுக்குமுனி துவரைநெடுந் தெருப்

(௫௨௧) நடவை - வழி. மனை - மனைவி. புரவு - காத்தல். ஒரு கலையு மளித்திலனென்பது முன் ௨௪௦ - ற்கூறியபடி சாத்திய உடையினையும் விரும்பாது விட்டுச்சென்றனென்பது குறித்து நின்றது. (௫௨௨) மெத்துதல் - அதிகரித்தல். குயிறல் - சொல் லல். (௫௨௩) காத்தல் களவிலுந்தேற்றுதார்மாட்டு இரத்தலும் [illegible]தலேபோலுமாகலின், அத்தகையரைக்காணிலன்றோ இரக்க வாயெழும் என்பது. மேவல் - விரும்புதல்.

பலவுங் கடந்து போகி, வற்றுதலில் பெருங்கடலு நீங்குபுதன் ஊர்க்கேகும் வழியைக் கூடி, நற்றவமாந் தன்னிலக்கிற் சிந் தையுற மிகமகிழ்ந்து நடக்குங் காலை. (௩௨௫)

அருந்தவர்கள் புகழ்சாத்தி யமைந்ததிருக் கண்ணபிரா னரு ளினாலே, பொருந்துவிர தாதிகளான் மிக்கிளைத்த தன்னுடம்பு பூரிப் புற்ற, திருந்தபழங் கந்தைசெழும் பொன்னுடை யாயி ற்று, இலங்குங் கண்டப், பெருந்துளப மணியாரம், பெருவிலை முத் தாரமாப் பிறங்கிற் றன்றோ. (௩௨௬)

செவியணிபுல் லியபொருள்க ளரதநகுண் டலமாகித் திக ழ்ந்த, வான்ற, சவியணிகை விரற்றருப்பைப் பவித்திரம், பொன் னாழியாய்த் ததைந்த தோங்கும், புவியணியுங் கட்டழகு, காம னுங்கா முறுசிறப்பிற் பொலிந்த தம்ம, கவியணியு மதகளிற் றுக் கதிகமாம் வலியுமுடற் கலந்த தன்றே. (௩௨௭)

பாயபெரு மிடிமுன்னே தனக்கொழிந்த வவித்தையெனப் பாறி மாய்ந்த, தேயவழி நடையிளைப்பு முதலியவெ லாஞ்சற் று மின்றாய் விட்ட, காயவெயில் குளிர்ந்ததுபா லையுநீரு நிற் றிளமென் காலும் வீசிற், றுயவிவை யனைத்துமுணர்ந் திறும் பூது மிகக்கொண்டா னன்ன காலை. (௩௨௮)

கலிவிருத்தம்.

ஒழுகுங்கடவரையுங்கதிருறழ்செம்பொனிரதமு
மெழுவெங்கதியுளைபொங்கியவியறங்கியபரியுங்

---

(௩௨௫) இலக்கு - குறிப்பு. (௩௨௬) ஆதியென்றதால்வறுமை யுங் கொள்க. (௩௨௭) சவி - விளக்கம். கவியணிதல் - கவிகளால் புனைந்து கூறல். (௩௨௮) அவிச்சை - விபரீதஞானம்; அது மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லெனு மாலிது ப்பட்டுமயங்கல். காய - குளிர்நீங்கக்காயும்படி என்க. பாலை - நீர்க்கைக்கு இடனுய நீருறுப்பாலநிலம். பாய ஆய என்பவற் றிலுள்ள யாகரவொற்றுக்கள் இறந்தகால இடைநிலைகள்.

கொழுநின்றவையயில்கொண்டவர்குழுவும்பலகுழுமப்
பழுதென்பதிலவர்மன்னவர்பலர்வந்தெதிர்கொண்டார் (௩௨௯)

மணிவார்முடிமண்டோய்தரமறைமாமுனிதாளிற்
பணிவார்சிலர்துதிப்பார்சிலர்படரன்பினில்வழிபட்
டணிவார்சிலர்பார்ப்பார்சிலரார்ப்பார்சிலராகிக்
கணிவார்புயவிறல்வேந்தர்கள்கழலாக்களிப்புற்றார். (௩௩0)

பொன்னார்வடவரைமேற்கதிர்ப்புத்தேளெனப்பொலிய
மின்னார்கதிருமிழும்மொருவியன்மாமணித்தேர்மேன்
முன்னார்மறையோனைப்பலமுகமன்புகன்றேத்தி
நன்னாரொடுபெருவேந்தர்கள்சூழநடந்தனரால். (௩௩௧)

மண்ணென்பதுதெரியாவகைவானத்திடையமரர்
கண்ணென்பதுநுழையாவகைகற்பத்தருமலரை
யெண்ணென்பதுமின்றும்வகையிறைத்தார்களித்தார்த்தார்
புண்ணென்பதுபொலிவேலவர்பூத்தாரிறும்பூது. (௩௩௨)

கடன்மேலெழுந்தார்த்தாலெனக்கடனீருறப்பருகி
யுடன்மேகங்களார்த்தாலெனவுயர்வான்முகடதிர
மடன்மேலெழுதார்வானவர்வண்டுந்துபியைந்தும்
விடன்மேலுளதாகாவகைமேலும்பெரிதார்த்த. (௩௩௩)

கலிநிலைத்துறை.

அளவிலாமகிழ்தலைசிறந்தோங்கிடவ்விர்ந்து
பளகிலாதுயர்தருப்படர்கொடியசைந்தென்ன

---

(௩௨௯) கடவரை - மதநீரையொழுக்கும்மலை; எனவே குறிப்பாலியானையையுணர்த்திற்று. உறழ்-ஒப்பு. வை-கூர்மை. பழுதில்-காமாதிகள். (௩௩0) கணி - மாலை. (இடைக்குறை.) (௩௩௧) தேர்மேற்பொலிய வேந்தர்கள் ஏத்திநடந்தனர் என்க. நார்-அன்பு. (௩௩௨) அமரர் இறைத்தார் என்க. புண் - (பகைவர்) மாமிசம். (௩௩௩) என என்பன உவமைவாசகம். மடல் - பூவிதழ். துந்துபி மேல்விடல் உளது ஆகாவகைஆர்த்தல் - ஓயாதொலித்தல்.

வளநிலாவியமின்னுகணடித்தெனமணிவாய்த்
தளவமூரல்விண்மடந்தையர்நடித்தனர்தயங்க. (௫௫௪)

பிரகலாதனன்பராசரன்பெருஞ்சவுனகன்சீர்
வரவியாதனம்பரீடன்புண்டரீகன்முன்மற்றோர்
கரவிலாதவுள்ளத்தராய்க்கழிமகிழ்சிறப்ப
விரவிநின்றுதோத்திரமெடுத்தியம்பினர்மேன்மேல். (௫௫௫)

இன்னபல்வகையதிசயமெதிருறக்கண்டு
நன்னர்மாமறைக்குலத்தவனயகன்பாதத்
துன்னுநெஞ்சகம்பெயாத்திலனுறுவனவெல்லாம்
பன்னுமெம்பிரானருளெனநினைத்தனன்படர்வான். (௫௫௬)

அரசரேமுதலாயினாரனைவருமடுத்துப்
பரசியேவலாபோற்பிரியாபின்புபடரப்
புரசைமால்கரிபரிமுதற்படைகளும்பொலியத்
தனைசெய்பேறெனவிளங்குதன்னூாப்புறஞ்சார்ந்தான். (௫௫௭)

பரியுநீள்பழங்கந்தைகொளுடையணிப்பரிசு
பெரியமாதவாவேந்தாகண்முதலியோர்பெரிதுந்
தெரியுமாபுகழ்ந்தேத்திடச்சிறந்தனனென்னி
லுரியதாகியதவத்தினிலுயர்ந்ததொன்றுண்டோ. (௫௫௮)

என்றுரைத்தமாமுனிவரனிணையடியிறைஞ்சி
நன்றுசொற்றனைமற்றதுநடத்துகென்றுடையார்க்
கொன்றிரத்தம்வாய்மடுத்திடும்வாட்படைக்குரிசி
றுன்றுமற்பொடுகேட்டலுஞ்சுகமுனிசொல்வான். (௫௫௯)

குசேலர் துவாரகைகண்டு
தந்நகர்ப்புறமடைந்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - ௫௬௨.

---

(௫௫௮) பரிதல் - கிழிதல்.

ஸ்ரீ

இராமஜயம்.

மூன்றாவது

குசேலர்செல்வநுகர்ந்து வைகுந்தமடைந்தவத்தியாயம்.

கடவுள்வணக்கம்.

இன்னிசை வெண்பா.

ஒருதிடந் தான்கதிக்க ணுய்க்குமெனச் சொல்ப
கீருதிடந் தானவன் காமர் குலத்தான்
பொருதிடந் தானவா பொன்றவமர்த்தான்
மருதிடந் தானடிய வா. (க)

வேற்றெலிவெண்டுறை.

கருங்கடலி னடுவெணெழு கதிரெனக்கார் நிறத்துமணி
கதிர்ப்பக் காமர்
பெருங்கனக வரையெனச்செம் பொன்னுடை நான்றபுயம்
பிறங்கப் பாயல்
வென்றிவா ளரவமுந் தொடரமென் றாமரைத்
துன்றுமா மங்கையுந் தொடரவாய் விட்டெழீஇ
மன்றவே தங்களுந் தொடரவான் சுவையமிர்
தொன்றுசெந் தமிழ்தொட ரொருவர்பின் தொடர்தரச்
சென்றவன் றிருவடி தேருவார் யாருமே. (உ)

(க) கருதும் என்பதில் உம்மை தொக்கது. தானவன் - சந்திரன். மருதிடந்தான் அடிஅவா கருதுங்கால் தான் கதிக்கண் உய்க்கும் ஒருதிடம் என்க. (உ) கார் நிறம் - கரிய நிறமுடைய திருமார்பு. மணி - கௌஸ்துபமணி. தமிழ்தொடர் ஒருவர் - தமிழ்ப்பாசுரமருளிய திருமழிசையாழ்வார்.

கலித்தாழிசை.

2
காமர்நறு விரைத்துளபக் கண்ணியனைப் புண்ணியனை
மாமகடன் கொழுநனை வழுத்துவீர் மானுடர்காண்
மாமகடன் கொழுநனை வழுத்துவீ ராமாகிற்
றாமரைப் பெருமுதலுஞ் சாரற் கரியகதி சார்வீரே. (௩)

ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த வஞ்சித்தாழிசை.

மாதர்களில் வருந்தாமே, போதமுறப் புரிந்திடுவீர்
சீதமலர்த் திருமார்பன், கோதறுசீர் குறிப்பீரே.
மங்கையரில் வருந்தாமே, பொங்கமுறப் புரிந்திடுவீர்
செங்கமலத் திருமார்பன், கொங்கலர்சீர் குறிப்பீரே.
வனிதையரின் வருந்தாமே, புனிதமுறப் புரிந்திடுவீர்
கனிமொழிச்செந் திருமார்ப, னினியசீர் குறிப்பீரே. (௪)

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

2
வண்டாடு பூந்துளப மாலையனை வானோர்கள்
கொண்டாடுஞ் சீர்த்தியனைக் கோவலர்பா டித்தயிர்நெ
யுண்டாடு சீதரனை யொப்பிலா வற்புதனைக்
கண்டாடு மன்பருளங் காதலிக்கும் புண்ணியனைத்
தொண்டாடு வன்றியெனச் சொல்லித் துதிமுழக்கி
யொண்டாடு ணைக்கொண் டுயர்வீ ருலகீரே. (௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்றிகழ்பிறழ்பற்கூற்றம்விலாப்புடைவீங்கவுண்ண [தே
வென்றிகொள்செறுநர்ச்சாய்த்துவிருந்திடும்வெள்வேல்வேந்

(௩) தாமரைப்பெருமுதல் - தாமரைவாசியாகிய பிரமன். (௪) புரிதல்-விரும்பல். கொங்கு - கண்டேப்புகழ்மணம். (௫) [illegible]ன்றித்தொண்டாக ஆள்கவென்று ஒள்ளியதிருவடிகளைத் [illegible]யாகக்கொண்டு உயர்வீரென்க. துணை - இரண்டெனு[illegible]

யொன்றியபுகழ்க்குசேலனூர்ப்புறஞ்சார்ந்தகாலை
நன்றிமிக்குறுமச்சீறூர்நலப்பெருநகராயிற்றே. (சு)

மற்படுகானமெல்லாமாடமாளிகையேயாகிச்
சொற்படுபுலவரானுஞ்சொலற்கருஞ்சிறப்புவாய்ந்து
விற்படுமமரர்நாடுவீழ்ந்துமண்ணிறைகொண்டாற்போ
லற்படுத்தொளிர்ந்ததையனருளினிற்சிறந்ததுண்டோ. (எ)

இமைக்குமந்நகரங்காணூஉவெறுழ்வலிக்காதிமைந்தன்
சமைத்தவேற்றுச்சிருட்டிதனிற்றயித்தியரைச்சாயக்
குமைத்தரும்போகந்துய்த்துக்குலவுநந்நகர்க்குமாறு
வமைத்தபொன்னகரோவென்னவமரருண்மயங்கினாரே. (அ)

அறன்கடைநயக்கும்வெஞ்சூராருயிர்சவட்டிவாங்கித்
திறன்படுசுரர்கால்யாப்புச்செறிகழல்வித்துச்சீர்த்தி
நிறங்கிளர்வெள்வேலையணிறைகுடியேற்றுநாளிற்
பிறங்கியதுறக்கநாட்டின்பெற்றியந்நகரின்பெற்றி. (கூ)

அருநிதிதவமென்றாராய்ந்தமைதரவீட்டியீட்டித்
தருநிதியனையகண்ணன்றன்னருள்பெற்றமேலோன்
பெருநிதிநகரநோக்கிற்பிறங்கியசெல்வம்வாய்ந்த
விருநிதிக்கிழவன்வாழ்க்கையெழினகர்சிற்றூராமால். (க0)

(சு) செறுநர் - பகைவர். நன்றி - நன்மை. சீறூர்-சிறியவூர். (எ) மல்-வலிமை. இறைகொளல் - தங்கல். அல்படுத்து - இருளையழித்து. (அ) காதிமைந்தன் - விசுவாமித்திர முனிவர், அவர் சமைத்த சிருட்டிதனிலமைத்த பொன்னகரோவென அந்நகரங்காணூஉ அமரர் மயங்கினரென்பது; திரிசங்குவின்பொருட்டுத் தேவரொடுமுரணிப்படைத்தமையின் வேற்றுச்சிருட்டியெனப்பட்டது. தைத்தியர் - திதியின்புதல்வராய அசுரர். (கூ) அறன்கடை - பாவம். கால்யாப்பு - காலிற் பிணிக்கப்படுவது (விலங்கு.) (க0) தவமே அருநிதி என்றது வேண்டியவே [illegible]யாங்கெய்தற் கேதுவாதலால் என்க. குசேலர் நகரத்திற்குக் குபேர நகர் சிற்றூரா மென்றவாறு.

நயந்தருநடுவுள்ளானைநல்லறஞ்சூழ்ந்தாற்போலப்
பயங்கெழுநகரஞ்சூழ்ந்துபாசநீத்தறிவின்மேலா
முயர்ந்தவர்க்கினிதுசெய்தவுதவிபோலுயாந்துமிக்க
வயங்கொளப்பொலிந்தன்றெஞ்சாமஞ்சுசூழிஞ்சிமாதோ. (௧௧)

கொன்பெறுமயிர்தங்கொள்ளைகொண்டுளார்நகரைமோதென்
றின்புறுகிரவாழியினியநீர்க்கடலையேவ
வன்புறுமதுவிதேவானவர்நகரென்னச்சூழ்ந்து
மன்பெறப்பொருதல்போன்றதகழிநீமதிலைமோதல். (௧௨)

பற்பலவடுக்குமாடம்பரந்தவிண்டாங்கநோக்கி
யற்புறுநந்தம்பொன்னுடந்தரநிற்றலாலே
விற்படநிலத்தெவ்வேலைவீழுமோவென்றுட்கொண்ட
கற்பகமாலைத்தேவர்காதரமொழிந்ததன்றே. (௧௩)

பற்றையார்த்துயர்ந்தவோங்கற்பரிசன்னபைம்பொன்மாடத்
தெற்றையான்புனைவல்லானுற்றிருபுறநெருங்கிநிற்கும்
கற்றையார்ந்தெழுந்தமாடங்கவிழ்தரவொட்டாதென்னு
மொற்றையாருருளைத்தேரைநடத்துவோனுவகைபூத்தான். ()

இந்திரநீலமேடையெழுங்கதிர்க்கற்றைமீப்போய்க்
கந்தடுவெண்களிற்றைக்கருங்களிறாக்கநோக்கி

---

(௧௧) நடு - நடுநிலைமை. இஞ்சி சூழ்ந்து உயர்ந்து பொலிந்தன்று எனமுடிக்க. (௧௨) நீரம் கூழீரமென்பதன்றிரிபு. (பால்.) (௧௩) வில்பட - ஒளிகெடும்படி. நோக்கி - நோக்கலாலென்னும் வினையெச்சத்திரிபு; நோக்கலால் ஒழிந்ததென்பது. வேலை - சமயம். காதரம் - அச்சம். (௧௪) பற்றை - சிறுதூறு; செங்காந்தள். எற்றை - எதனை. புனைவல் - அலங்கரித்துக் கூறுவன். அந்தர மார்க்கத்தில் மாடநெருங்கிநிற்றலால் நமது தேரைக்கவிழ விடாது என்று சூரியன் களித்தானென்பது.

முந்தைநாட்சாபமீட்டுமுளைத்ததுகொல்லென்றஞ்சிச்
சிந்தையுளாய்ந்துபின்னரிதுவெனத்தெளியுமாலோ. (௧௫)

வஞ்சிநுண்ணிடையினார்மேன்மாடமேடையினிருந்து
வெஞ்சினப்புலவிமூளமணிவடம்வெறித்ததோளி
லஞ்சுமூடலின்விண்மாதரெறிந்தமுததாரம்வீழ
விஞ்சைவல்லவனங்கேள்வனென்னவுளம்வியந்துகொள்வார். ( )

சுதைபயின்மாடந்தோறுஞ்சுடாமதிதவழுந்தோற்றங்
குதைவரிச்சிலையைவாட்டுங்கோடியபுருவநுண்கூர்ப்
புதையிகல்கண்ணினாரம்போருகமுகத்தைநேரத்
ததையுடற்களங்கந்தேய்த்துக்கழிப்பதுதகையுமன்றே. (௧௭)

மணிநிலாமுற்றமேவிமாதரார்வயங்குகண்கட்
கணிநிலாவுறுமைதீட்டவதிகமையுகிரிற்கோத்துத்
துணிநிலாவிசும்பிற்றுள்ளத்தெறித்திடுதோறுமாங்குத்
தணிநிலாமெய்யிற்சார்ந்துதயங்கிடுங்களங்கமென்ன. (௧௮)

வெள்ளியமாடந்தோறும்விளங்கெழின்மணிப்பூணல்லா
ரள்ளொளிக்கற்றைவீசவணிந்துநிற்கின்றதோற்றந்
தெள்ளுவண்டிரைசுருட்டுஞ்சிறந்தபாற்கடலினுப்ப
ணெள்ளலில்பவளவல்லியெழுந்துநின்றிடுதலேய்க்கும். (௧௯)

இரசிதத்தமைத்தமாடமெறிசெறிதிரைப்பாலாழி
வரவதன்மீதுதுஞ்சுமஞ்சுமாறடித்துமாவாம்
விரவுசெம்மேகங்கற்றைவிளங்கிடுசெம்பொனுடை
யுரவுவெண்பிறைவெண்சங்கமுடுக்களச்சங்கின்முத்தம். (௨0)

---

(௧௫) முந்தைநாட்சாபம் - துருவாசராலடைந்தசாபம்; இதனைத் திருவிளையாடற்புராண முதலியவற்றானறிக (௧௬) விஞ்சை-ஈண்டுமாயவித்தை (௧௭) குதை-நாண்பூட்டுமிடம் புதை-அம்பு தகைதல் - ஒத்தல். மதி உராயுந்தோற்றம் மங்கையர் முகத்தைநேர்தற்குத் தன்களங்கத்தைத் தேய்த்துக்கழிப்பதொக்கும் என்பது. (௧௮) தணிதல் - குளிர்தல்; செழித்தலுமாம். (௨0) வரம் - மேன்மை. தடித்து-மின்னல்.

விலங்கல்வின்னுயர்ந்தமாடம்வியன்கொடிமுடங்கலாங்க
ணிலங்குறுமதியந்தேத்திருன்மடமாதர்மஞ்ஞை
நலங்கொளம்மதியங்கண்டுநகைநிலாமணிபெய்தெண்ணீர்
கலங்கலிலருவியீட்டங்கார்கடக்களிநல்யானை. (உக)

அண்ணலங்களிநல்யானையார்ப்பும்வாம்பரிமுழக்கு
மொண்ணலங்கொடிஞ்சித்திண்டேரோதையும்வயவரார்ப்பும்
பண்ணலங்கனிந்தீஞ்சொற்பாவையர்கலன்களார்ப்பு
மண்ணலம்புனைந்தவாடைவாரிவாயடைக்குமாதோ. (உஉ)

மறைபயில்சிறார்தங்கூட்டம்வயங்கியகிடையுமற்றைக்
கறையறுகல்விகற்குங்காமர்சாலையுங்கார்க்கூந்த
னறையொழுகலங்கன்மாதர்நடநவில்சாலையும்பொன்
னிறைபலவறமுமோங்குநெடியசாலைகளும்பல்ல. (உங)

பரிநிரைசெண்டுபோகும்பைம்பொன்வார்மறுகுநீள்கைக்
கரிநிரைகடம்பெய்தேகுங்காமருமறுகுஞ்செம்பொன்
விரிமணியுருளைத்திண்டேர்விரைந்துசென்மறுகும்வீர
ரரியினமஞ்சவாளாட்டாடிடுமறுகும்பல்ல. (உச)

கழிந்தகாமுகர்தநெஞ்சங்கனிந்தசிரணங்கனூர்பா
லெழுந்துசெல்கதியுந்தோற்பத்துனைவினினேகும்பாய்மா
வழிந்திடுநீர்மைமுட்டவாவுவவிண்ணும்வாயு
வழுந்துறச்செல்வமென்னுவறிதரத்தெருட்டல்போன்ற. (உரு)

விற்றவழ்குழியானைமிகப்பொழிதானம்பாய்ந்து
முற்றவும்வழுக்கலுற்றவீதியின்முனியுமூடற்
பொற்றொடியவரெறிந்தமணிக்கலன்பொலிதலாலே
யுற்றகால்வழுக்கிவீழ்தலொழிந்தனர்நடப்பார்யாரும். (உசு)

(உக) முடங்கல்-மூங்கில். (உங) நவிலல் - பழகுதல். (உச) சென்டு - குதிரைநடையின் பேதம்; இதனை வையாளியென்ப. (உரு) பாய்மா நீர்வழித்திடும் மைமுட்டவாவுவன வாயுவென மூன்றிடப்பட விண்ணினுஞ் செல்வமெனத் தெருட்டல்போன்ற என்க. (உசு) குழி - யானைமுகத்திடுபடாம்.

கொன்னுனைமருப்பியானைக்குழாம்பொழிதானம்வாவுந்
துன்னுளைப்பரிவிலாழிநலங்குமாகரநின்றும்
பன்னுமண்ணுலகமெங்கும்பரந்தலாவழுக்குமென்று
நன்னிலங்காரோபாமனடக்கின்றாதுறக்கவாணர். (உஎ)

நயக்குமாதாகடங்கூட்டதந்திரநறும்புகைவின்மாதா
வயக்குமெய்சூழ்தரேனுக்காரமணமவாக்கியற்கையென்ப
ரியற்கையைச்செயற்கையாகச்செயற்கையையியற்கையாக
மயக்குமற்றவரைக்கேட்கினிலக்கணவகையாமென்பார். (உஅ)

மங்கலப்பொலிவுமிக்க மாடமாளிகையும்வாசத்
தொங்கலங்கூந்தலார்தொகுதியும்விருந்தையூட்டும்
பொங்கியகளிப்புநீகைப்புகழ்ச்சியுநல்லோர்வாழ்த்தும்
டங்கமின்மக்கட்பேறும்பன்னபுமிக்கஃதம்மூதூர். (உகூ)

பிணைபுகைமிகுதியாலேயடாதழன்மிகுதிதானித்
துணையமென்றுணாவாராபோலச்சொற்றவிச்சிறப்பினாலே
மணமலிபுகழ்க்குசேலன்மனைசசிறப்பினையுமோதி
யணவுறுமஃதெதந்தன்றுவினவற்கவரசரேறே. (௩0)

ஊராப்புறமரசர்முன்னோருடன்றுறவிறுத்தவேதச்
சீரப்புகழ்க்குசேலன்மனையாண்செய்வமையேநகரநோக்கித்
தாரப்பொலிமார்பக்கண்ணனான்றன்னருள்வலியாலின்னும்
பாரப்பனபலவுமென்னெண்ணுப்படாந்தனனுகிச்சென்று. (௩க)

(உஎ) துன் உளை - நெருங்கிய பிடர்மயிர் (உஅ) மயக்குமவர் - நண்பிப்புலவர், சொற்பொருளின் சம்பந்தக்குறிப்பது இலக்கணை; அஃதாவது கங்கையின்கணிடைச்சேரியென்னுங்கால் கங்கையென்னுஞ் சொற்குப் பொருளாகிய வெள்ளத்தின் சம்பந்தத்தானே கரையென்பதும் உணர்த்தாநிற்பது. (உகூ) விருந்து - புதுமை; அஃது ஆகுபெயராய்ப் புதியவர்மேனின்றது. மிக்கஃது இதில் ஆய்தம் விரித்தல்விகாரம். (௩0) பிணைத்தல் - இணைத்தல். புகைமிகுதியைக் கொண்டு நெருப்பின் மிகுதியை புணர்வது அநுமானப்பிரமாணமென்பர்.

பெருமதில்வாயிலெய்தப்பிறங்குமந்நகரத்துள்ளா
ரருமைசால்களிப்புப்பொங்கவமைந்தகையுறைகளோடுந்
திருமலிமங்கலங்கள்சிறப்புறவேந்திக்காரும்
வெருவுபல்லியமியம்பவிரைந்தெதிர்கொள்ளவந்தார். (௫௨)

வாழ்ந்தனம்வாழ்ந்தேமென்னுமலாமுகங்கொடுமண்டேயத்
தாழ்ந்தனாதேர்மேல்வந்தசாந்தனையந்தகாரம்
போழ்ந்தொளிாசிவிகையேற்றிப்பொலங்குடைநீழல்செய்ய
வாழ்ந்தவன்புடையராகியமைதரக்கொண்டுசெல்வார். (௫௩)

பல்லியமியம்பச்சில்லோாபைம்பொற்காற்கவரிவீசச்
சில்லியந்தடந்தோமுற்பல்சேனையுமிடைந்துசூழ
கல்லியன்மங்கலங்களுன்மறையவாகள்பாட
வல்லியங்கமலக்கண்ணற்கன்புளான்வீதிசாாந்தான். (௫௪)

இருபுறத்துள்ளமாடத்திலங்குசாளரங்கடோறு
மருவுறவதனம்வைத்துமங்கைமாாமகிழ்ந்துநோக்கிப்
பொருவிலிம்மறையோன்செய்தபுண்ணியமெற்றோவிந்த
விருமைசால்சிறப்டையுற்றானென்றுபற்பலசொல்வாரால். ()

இள்ளுபுபற்றுதற்குங்கெழுமுறுதசையிலாமெய்
யெள்ளுபுகழிக்குங்கிறலியைபழங்கந்தையென்றுங்

---

(௫௨) மங்கலம் எண்வகை:—அவை கண்ணுடி - விடை - தீபம் ஸ்ரீவத்ஸம் (பெண்குழந்தை இடையில் வைத்திருப்பதாயமைக்கும் பெண்வடிவம்) சாமரம்-வலம்புரிச்சங்கு-சுவஸ்திகம் (மண்டபவடிவம் அல்லது மேழிவடிவம்) பூர்ணகும்பம் என்பனவாம்' அன்றி, கொடி - முரசு கண்ணுடி - பூர்ணகுடம் - மணி அல்லது இணைக்கயல் - நெய்த்தீபம் - அங்குசம்,அவரியுமாம்; இருதிறவகைத் திருவிளையாடல் திருமணப்படலம் ௩௭ - ௧௪௩-வது செய்யுள்களாலும், கந்தபுராணம் திருக்கலியாணப்படலம் "இருவகைப்படுமெண்வகை மங்கலம்" என்னும் ௧௪-வது செய்யுளாலுமுணர்க. (௫௪) சில்லி - தேருருள். அல்லி - அகவிதழ்.

கொள்ளுபுதிரிவோனம்மாகுளிசிலைமாரனெனுப்புந்
தள்ளுபுபழிக்குமெய்யன்சார்ந்தனன்பாரீரென்பார். (௩௬)
கந்தமூலம்புசித்துங்கான்முதலிடம்வதிந்தும்
பந்தமதொழித்துஞ்சாலப்பன்னுவர்தவம்பல்லோர்க
ட்குதுநேரொசிமருங்குற்றுமவார்கருங்குழாலே
யிந்தமாமறையோன்றன்பேறியாவரேபெற்றாரென்பார். (௩௭)
அருமைசாலறம்விருத்தியாகுகவென்றுமென்று
பெருமறைமுழங்குமன்றேபேரறம்பற்பலனு
மொருமையன்பினிலுஞற்றிவர்தனனுதன்விருத்தி
யிருமையிச்செல்வங்கண்டீரினுமென்பெறுமோவென்பார். ( )
ஏவரெவ்வுயிரிடத்துமிலங்கருள்செலுத்திநிற்போர்
தேவரிலுயர்ந்தோரன்னோரெனயறைசெப்புமாற்றான்
மூவரும்புகழ்க்குசேலன்மூதறிவுடைமைக்கிந்தப்
பூவருமுயர்வோவின்னும்பொலிவுவேறுண்டாலென்பார். ( )
மனமொழிகாயமென்னவகுத்திடுகரணமூன்றுங்
கனம்விளர்ப்பெனக்கறுத்தகண்ணன்றனடிக்கேயாக்கித்
தினமுநன்னெறியினிற்குஞ்செயிரிலாச்சீர்த்தியானிப்
பனவனுக்கிதுவோசெல்வம்பகரிதினுமுண்டென்பார். (௪0)

(௩௬) கிள்ளுபு - கிள்ளி. கிறல் - கிழிவு. (௩௭) கந்தம் - கிழங்கு. மூலம் - வேர். தந்து - நூலிழை. கருங்குழால் - விளியேற்ற அன்மொழித்தொகை. (௩௮) அறம்விருத்தியாகுக என்றது 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌰𑍍𑌧𑌤𑌿 𑌵𑌰𑍍𑌧𑌤𑌿 (தர்மோவர்த்ததி வர்த்ததி) - தருமம் மிக்க விருத்தியைத் தருகிறது என்றவாக்கியக்கருத்தது. (௩௯) உதன் - இதில் உகரம் சுட்டு. மறைசெப்புதலாவது - 𑌯𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑌤𑍋 𑌜𑌯𑌃 (யதோதர்மஸ்ததோஜயம்) - எங்கு (சகலபூதங்களுக்கும் இதத்தைவிளைக்கும்) தருமகுணமுண்டோ அங்குஜயமிருக்கிறது என்பது. பூவரும் - பூமியிலுண்டாகும். (௪0) கனம் - மேகம்.

புயனிகாவண்ணத்தன்னைப்பொருவிலம்போருகக்க
ணயனுறச்செல்லுமாறேநற்றிருமகளுஞ்செல்வாள்
பயனுறிப்பனவன்மேலப்பாரவைமிக்காயிற்றந்தச்
செயலினுக்கேற்குமாறத்திருவும்வந்துற்றுளென்பார். (௪௧)

பைத்தகானகம்வதிந்தும்பருப்பதக்குகைவதிந்து
மெத்துணைநற்றவங்களியற்றினன்குயார்தாரேனுந்
தத்துநீருடைமண்ணுளுந்தன்மைவந்துற்றதாகின்
மெத்தியமனத்தராகிவிரும்பிடாராயவரென்பார். (௪௨)

குமைத்தபற்றிகந்தாரேனுங்கடவுளாற்கொடுக்கப்பட்ட
தமைத்திடுநன்றேயாகவல்லநதீங்கேயாக
விமைத்திடுமளவேயாகவெக்காலுமாகவின்றேன்
சமைத்தமென்மொழியீசற்றுந்தள்ளுவாருளரோவென்பார் (௪௩)

கரிசறுமனைவிபல்கால்வேண்டிடக்கண்ணன்பாற்சென்
றுரியவன்போடுந்தன்றனுதவியதளிந்துக்கண்டு
வரிசைகண்மிதப்பப்பெற்றுவளாடெருதிருவும்பெற்றிப்
பரிசுவந்தனனம்போல்வாராபாக்கியமனையாரென்பார். (௪௪)

சான்றவாதிருவுற்றுந்தகுதியின்மிடியுற்றுழு
மான்றதந்நீர்மைகுன்றாடல்வலிச்சனகனென்பா [த்
னேன்றசெந்தன்மைவெம்மையிடைச்சமங்கொண்டாற்போல
தோன்றுவாமயக்கம்பூணாதுடியிடைமடவீரெ[illegible]ர். (௪௫)

பற்றறத்துறந்தோனுக்கிப்படாபெருந்திருவும
முற்றிழையவாமுயக்குநன்றுகொலென்பாமுன்னா

---

(௪௧) இதனை "அணங்கனையாரிதயமுந்தம் மருட்கொழுநரிதயமுமொன்றுருத்தாரே" என்னும் திருவாரூர் நான்மணிமாலையானும் உணர்க. (௪௫) இதன் கருத்தை "வெறுப்பிலசந்தனை மெய்யெலாம்பூசி" என்பதனானுமுணர்க. (சிகாளத்திபுராணம் கண்ணப்பச்சருக்கம் (௧௨௧)

நற்றவச்சிவனரென்பானயந்தருமிளமைவாய்த்துப்
பொற்றொடிப்போகம்பன்னாட்புரிந்திருந்திலனோவென்பார். ()

கோச்சகக்கலிப்பா.

என்றுரைத்தசுகமுனிவனிணையடித்தாமரைவணங்கித்
தன்றலாத்தாரா துயல்வருதிண்டோள்வேந்தன்சிவனரெனு
மின்றவத்தன்யாரிளமையெங்ஙனடைந்தான்மடவாண்
மன்றலுற்றதெவ்வாறுவகுத்துரைத்தியெனவுரைப்பான். (சஎ)

பேருலகுகொண்டாடும்பிருகுவெனும்பெருந்தவத்தோன்
சீருறுநற்றிருமைந்தன்சிவனரெனும்பெயருடையான்
ருருருவப்பூண்மாராபாதயங்கிமயகிரிப்பாலோர
வாருலவைப்பூங்கானம்வதிந்துதவம்புரிந்தனனே. (சஅ)

பற்பலநாளிருக்கையெழாப்பரிசிருந்துதவம்புரியும்
பொற்புறுமாதவனுடம்பைப்புற்றுமூடியததன்மேற்
கற்புமுதற்கொடிபடர்ந்துகாமருபல்லரும்பீன்று
சொற்பெறுமாமலாபரப்பித்துதைந்தனவாலந்நாளில். (சகூ)

கையாதிவ்வுலகுயிர்க்கணடோறுமருள்சுரப்போன்
பொய்யாதிகடிந்ததவப்புனிதரடிமுடிக்கொள்வோன்
மெய்யாதிநற்குணங்கள்விரும்பியடைதரப்பொலிவோன்
சையாதியெனுநாமந்தரித்தவொருதாரவேந்தன். (ருo)

அன்னவன்றன்மகள்வானத்தணங்கினாக்குமணங்கனையாள்
கொன்னவில்வேல்விழியினுள்கோதறுதேமொழியினு
ளென்னுநறுங்குழலினுள்சுகன்னியெனும்பெயருடையான்
மன்னுசிலதியரொடும்பூக்கொய்வானவ்வனம்வந்தாள். (ருக)

புரக்கியர்கடற்சூழப்பாங்கெங்குந்தவமலாந்த
ழுங்கொம்பாபோனடந்துபொலிவிளைப்பன்மலர்கொய்வா

(சஅ) இக்கதையைப் பாகவதம் சையாதிகதையுரைத்த அத்தியாயத்தும், பூவாளூர்ப்புராணம் இந்திரனருச்சனைச் சருக்கத்தும் காண்க.

டெங்குறவெள்ளெனப்பூத்துத்திகழ்முல்லைசூழப்பட்
டாங்குயாவன்மீகங்கண்டாவத்தின்வந்தடுத்தாள். (௫௨)

மாதாநறுங்கொடிபடாவன்மீகத்துள்ளிருப்பதுதான்
யாததனையறிவாமென்றில்லியூடுநோக்குதலுந்
தீதகனற்றவப்பெரியோன்செய்படவிழிதோன்றவிறும்
பூதுடையளாகியிதுபொன்வண்டோவெனநினைந்து. (௫௩)

ஒருசிறியதிரணமெடுத்துறச்சுவிச்சென்றிடலு
மருவுபெருந்தவயோகங்கழிந்தரவிம்மவிழிப்புற்றி
னருகுறவந்தியாரிதுசெய்தாரறிவலெனப்பார்த்தான்
கருநறுமென்குழலாளைக்கண்ணுற்றான்மாதவனே. (௫௪)

தாமரையில்வாழுமொருதையலோவயிராணி
மாமகளோவிரதியோமற்றிவளென்றுளநினைந்தான்
காமனுமாங்கஃதறிந்துகழைகுழைத்துநாண்பூட்டித்
தேமலர்வாளிகளைந்துஞ்சிந்தினன்மேன்மேலும். (௫௫)

பொங்கியெழுபெருங்காமப்புலிங்கத்தக்கொழுந்தோடி
மங்குதலிலாதழற்றவாற்றுனாய்மாதவத்தோன்
றங்கியபுற்றுச்சிதைந்துதரைவீழக்கரநீட்டிக்
கொங்கலாமென்குழன்மடவாள்கோற்றொடிக்கைபற்றினன். ()

வெருக்கொண்டுபதைபதைத்துவிதிர்த்துதறிக்கரம்பறித்துக்
குருக்கொண்டசிலம்பலம்பக்கோலவளையும்புலம்பத்
தருக்கென்றுமவிழ்ந்திடைத்தயங்குமேகலையாற்றப் [வே.
பொருக்கென்றுபாங்கியாபாற்போய்விழுந்தாள்பொற்கொடி

(௫௨) வன்மீகம் - புற்று (௫௩) இல்லி - துவாரம். (௫௪) திர ணம் - துரும்பு. (௫௫) மலர் வாளிகள்:—தாமரை மா. அசோகு முல்லை நீலம் என ஐவகைப்படுதலின் பலவென்றார். (௫௬) புலி ங்கம் - தீப்பொறி. (௫௭) மேகலை - இடையிலணியும் ஒரணி. இதுபோல்வன காஞ்சி கலாபம் விரிசிகை என்பன. இவ[illegible] இவ்வத்தியாயத்தின் ௮௪ - வது செய்யுளானுணர்க.

வாய்புலர்ந்துகண்சாம்பிமயங்கினாள்செயனோக்கிப்
பாயவனத்தெதன்கண்டோபயந்தாண்மற்றிவளென்று
தேயுமிடைப்பாங்கியர்கள்சிவிறியால்வீசியுடற்
றோய்புழுதிதுடைத்துமிகவுபசரிப்பத்துயாதீர்ந்தாள். (ருஅ)

அன்னபொழுதடற்பரியூர்ந்தரசன்சையாதியென்பான்
பொன்னனையமனைவியாநாலாயிரவர்புடைசூழ
மின்னவிரப்பூஞ்சோலைவிநோதநிமித்தமதாகத்
துன்னினான்பரியிழிந்துசூழும்வளம்பார்த்துவப்பான். (ருகூ)

மன்புற்றினின்றுவெளிவந்துநின்றான்றனைக்காணூஉ
வன்புற்றுக்கொண்டாடியடிபணிந்தானுருநோக்கி
யின்புற்றவிழியிடைநீர்வாரவிதுசெய்தவரெவ்
வன்புற்றமனத்தரெனவனமுழுதுமாராய்வான். (சுo)

இலகுபெரும்பாங்கியரோடிருந்தமகடனைக்கண்டா
னலகிறவமுனிக்கிடுக்கணார்செய்தீரெனக்கேட்டான்
சிலதியர்யாஞ்செய்திலோமென்றெழிந்தார்செய்தமக
ணிலவுறவர்தடிவணங்கிநிகழ்ந்தனவெலாமுரைப்ப. (சுக)

என்செய்தாய்பேதாயென்றிரங்கிவிரைந்தாங்கெய்தி
மன்செய்தமுனிவனடிவணங்கியடியேன்புதல்வி
புன்செய்கைதனைப்பொறுக்கவேண்டுமெனப்புகன்றிரப்ப
நன்செய்கையுன்செய்கையென்றுநவில்வான்முனிவன். (சுஉ)

இப்பொழுதேயுன்மகளையெழின்மன்றன்முடித்தெனக்குத்
தப்பறநீதருவாயேற்பொறுத்திடுவன்றாராயேல்
வெப்புறுமென்சாபத்தால்வீடிடுநின்குலமென்று
ஞெப்பில்புகழ்மன்னவனுமுடன்பட்டான்மகட்கொடைக்கு. ()

[illegible]டங்கதிசைதிசையுய்த்தியாவரையும்வரவழைத்துத்
[illegible]மகிழ்தலைசிறப்பத்தழன்முன்னர்விதிப்படியே

கணிதமில்வன்புகழ்மன்னன்கலியாணவினைமுடித்து
மணிநகைவாய்ப்பசுங்கொடியைமாதவன்கைக்கொடுத்தனனே.

சீலமிகுசிவனரெனுந்திருமுனிவன்சுகனியெனுங்
கோலமடவரற்கூடிக்கொடுந்துயாரீத்துளங்களித்தா
னேலநறுங்குழன்மாதுமிருங்கற்பிற்சிறந்தனளாய்ச்
சாலவுமெய்ப்பணியெவையுந்தலைக்கொண்டுவாழ்ந்திடுநாள். ()

ஆன்றசிறப்பவ்வனத்திலசுவினிதேவாகளொருநாட்
டோன்றினர்களெதிர்நிற்குஞ்சுகனிதிருவுருக்கண்டு
மான்றவுளத்தினராகிமாரவேள்கணைக்கிலக்கா
யூன்றுபெருங்காமத்தினுள்ளுடைந்துமொழிவாரால். (சுசு)

கற்பகத்தின்பூங்கொம்பேகாமருபூம்பசுங்கொடியே
பொற்பவிருமதிக்கொழுந்தேபொலியிரதச்செங்கரும்பே
சொற்பெறுநிற்பெறுதந்தையாவன்மணித்தூமுறுவல்
விற்புருவப்பைங்கிளிநின்பெயர்யாதுவிளம்புவையால். (சுஎ)

அமாருடற்பிணிதவிர்க்குமசுவினிதேவர்கள்யாங்கள்
சமாமிகுவேளாற்றறவிர்த்தெமையாளென்றிரப்பத்
தமரமிகுகருங்கழற்காற்றரியலர்கூற்றெனப்பொலிவேற்
பமரமிகுதார்ப்பெருமான்பாராள்சையாதிமகள். (சுஅ)

என்பெயர்யாதெனிற்சுகனியிருந்தவத்துமேலானுய்
மன்பெறுமாமுனிசிவனர்மனைக்கிழத்தியாதலினும்
கொன்பெறுநும்முளத்தெண்ணங்கூடாதிவ்வாறுநினைந்
தென்பெறவல்லீர்போமென்றெடுத்தெறிந்துபேசினளால். ()

புறவடிநோக்குபுமொழிந்தபொன்னனையாள்சொற்கேளா
விறவுளதன்மையராகியெழிற்பொலிவுமிகவாய்த்த

(சுச) முடங்கல் - ஓலைச்சுருள்; (மணவோலை.) கைக்கொடுத்தல் - பாணிக்கிரகணஞ் செய்வித்தல். (சுசு) அச்சுவினிதேவர் - சருடனு மொருவிருமாயிருக்கும் தேவவைத்தியர்.

வறவடிவத்தெம்போகம்போலநரைதிரையமைந்த
துறவிதரும்போகமோசக்கன்னிக்குத்தக்கதே. (௭0)

மலர்பொதுளித்தீர்த்தத்துன்மகிழ்நனும்யாழும்படியிற்
குலவுவனப்புறவாய்த்துக்குலையாதவிளமையொடு
நிலவுவமவ்வுருமூன்றினினக்கியைந்தசீருருவைந்
திலகநுதன்மடமாதேசேர்ந்துதழுவிக்கோடி. (௭௧)

என்றுரைத்தவார்த்தைதனக்கிலவவாய்நெகிழாளாய்ச்
சென்றுமகிழ்நனுக்குரைப்பத்திரைநரைமூப்பிவையாலே
துன்றியெழுவருத்தமிறத்தொலையாதவிளமைபெற
னன்றியலுங்காரியமென்றுளத்தோர்ந்தானற்றவனும். (௭௨)

மங்கைதிருமுகநோக்கிமற்றவர்சொற்குடம்படெனப்
பங்கமறுதவன்மனையைமுன்போக்கிப்பின்படர்ந்தா
னங்கவருமகிழ்ந்துமுனிவரனொடுமத்தடம்படிந்து
பொங்குமிளமையும்வனப்பும்பொலிவுற்றுர்வெளிவந்தார். ()

செங்கதிரோனுதயமெனத்திகழ்மூவருருநோக்கி
மங்கையர்சூளாமணிதான்விடுவுருதொழிதரவென் [ங்
பொங்கியல்கற்பினுக்கென்றுப்பொருக்கெனத்தன்மகிழ்நனுர
கொங்கைஞெருமுங்குறத்தழுவிக்கொண்டுமகிழ்கூர்ந்தனளே. ()

மாதவனுங்களிகூர்ந்துமனஞ்சமழ்ப்பமுகஞ்சாம்பிப்
போதவஞர்க்கடலழுந்தும்புலவரிருவரைநோக்கி
மேதகையீர்மூப்பகன்றுவிரும்பிளமைபெறப்புரிந்த
வேதமினல்லுதவியைநானென்றுமறவேனென்றான். (௭௫)

அருள்செய்மகமொன்றியற்றியவிப்பாகம்பகிர்ந்தளித்துப்
பொருள்செயவர்மனமகிழப்பொலிவித்துப்போக்கியபின்

---

(௭0) இறவு - இறத்தல். தக்கதே என்பது தக்கதன்றென்பது தோன்றநின்றது. (௭௧) இத்தீர்த்தத்தை ஸித்தி தீர்த்த மென்பர். (௭௪) ஞெருமுங்கல்-அழுந்துதல். (௭௫) அச்சுவினி தேவரைப்புலவரென்றது தேவவருக்கம் ௩௩-ல் கலந்தவராதலாலென்க.

றெருள்செயுளமுனிவேந்தன்சீரவேந்தண்டயந்தவிருண்
மருள்செய்குழலொடுகூடிவாழ்ந்திருந்தானதுநிற்க. (எசு)

மாதர்பலரிவ்வாறுவகுத்துரைப்பமணிச்சிவிகை
மீதுபுரந்தரனுலவும்விழவுமிகச்சமழ்ப்படைய
வாதரவிற்பல்லோருமகமகிழ்ச்சியுறச்சென்று
தாதவிழ்தாமரைமார்பன்றன்மனைவாயிலையடைந்தான். (எஎ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாயிலை யடைந்த மறைக்குலத் தலைவன் மாமணி யானநின்
றிழிந்து, மேயதன் முன்னர்க் கந்தைபோற் றுவார மிக்கசிற்
றிலைக்குடி திரிந்து, தூயசெம் பொன்னு லமைத்திடப் பட்ட
சுடர்ப்பெரு மாளிகை யாகிப், பாயபல் வளனு நிறைதரப்
பொலியும் பண்பினை நோக்கின னின்றான். (எஅ)

மனைக்குரி மரபிற் றனக்கிணை யில்லா மடநடைக் கற்புடை
யாட்டி, கனைக்குமொன் முகிலைக் கிழித்தெழு செங்கேழ்க்
கதிரெனக் கவின்குடி யிருந்த, நனைக்குழ லணிசெம் மணித்த
கட் டணியு நாடுமிந் திரவிலம் மங்கு, றனைக்குழூ முற்றுச் சூ
ழ்ந்தெனப் பலவீத் தன்னணா றுந் தொடையலும் பொலிய. ()

அம்முகி னின்று வழுக்கியோர் மின்ன லவிர்பிறை மேற்கி
டந் தாங்குத், தெம்முனை மழுங்க வளையும்விற் புருவச் செம்
பொன்செய் பட்டமுங் கதிர்கள், விம்முமப் பிறையி னுரோ
கணி யுள்வாய் வீற்றிருந் தெனவியன் கற்றை, பம்முமொள்
வயிரப் பொட்டுமேற் றணிந்த பல்கதிர்ப் பணிகளும் விளங்க. ()

(எசு) இம்முனிவராற்றான் இவருக்கு யாகத்தில் அவிர்ப்பாக மேற்பட்டதென்பர். மருள்செய்குழல் - அன்மொழித் தொகை.
(எகூ) கற்புடையாட்டி பொலிய விளங்க பொலிய ஒளிர [illegible] போர்ப்ப நடந்துவந்தாள் என - அடு - ல் முடிக்க. வீ - மலர். தகட்டணி - சடைப்பில்லை யென்னும் அணி.

இலவித ழுள்வாய்க் கற்பின தம்மை யிணைத்தென வாய கத் திணைந்து, நிலவுபல் லழகைக் காணநிற் பதுபோ னிற்கு மூக் கணிப்பரு முத்து, மலரிதழ்ச் செந்தா மரைகொலிம் முக மென் றறிதரக் கதிரிரண் டிருபாற், குலவவுற் றிருந்தா லென ச்செவி யணிந்த குருமணி யோலையும் பொலிய. (அக)

வலம்புரிக் கழுத்தைக் கண்டமென் றடுத்த மாதருஞ் சொ லாவகை மறைத்த, நலம்புரி பதக்கங் கோத்தபன் மணிச்சின் னல்லணி களுமெழில் வாய்த்த, பொலங்கெழு குவட்டிற் பன் னிற வருவி பொலிந்தெனக் கொங்கைமேற் றதும்பு, மிலங்கு வெண் டரளம் பவளமா ணிக்க மெரிபொன்மா லையுநனி யொளிர. (அஉ)

தோளடி நிலையி லரதநத் தொடியுஞ் சுடர்தரு முன்கைவெ ள் வளையும், வாளவிர் வயிர கடகமுஞ் செம்பொ னிடைக்கி டை வைத்தசெந் துப்பு, நீள்சுடர்த் தொடரு மமைந்தகு டக மு நிரைவிர ரெறுமெழு கதிரை, யாள்சுடர் மணிவைத் திழைத்தவா ழிகளு மந்தகா ரங்குடி யோட்ட. (அங)

பெருவிலைச் செம்பட் டுடுத்திய விடையிற் கவ்விய வொட் டியா ணமும்பே, ருருவவெண் கோவைக் காஞ்சியுஞ் செங்கே ழுமிழெழு கோவைமே கலையும், பொருவறு மீரெட் டிரட்டிய கோவை புரிகலா பமும்விரி சிகையு, மருவுசெம் பரிதி மின் மினியாக வழங்கொளி திசையெலாம் போர்ப்ப. (அச)

காலணி செம்பொற் சதங்கையந் தொடருங் கதிர்மணித் தண்டையுஞ் சிலம்புஞ், சாலவு மொளிர்ந்து கலின்கலி னென னத் தழைந்தபூங் கற்பகக் கொம்ப, ராலென நடந்து மங்கல மேந்தி யளவறு யாங்கிய ராய, கோலமா மடவார் சூழ்ந்தன ரீட்பக் கொழுநனை யெதிர்கொள்வான் வந்தாள். (அரு)

(அங) சூடகம் - கைவளை.

வந்தனை புரிந்து பைம்பொ[illegible]னு தனத்தின் மகிழ்நனை நிறுத்தி யுண் மகிழ்ந்து, சந்தமென் மடவார் செம்மணிச் சிரகத் தண் புனல் வாக்கிடத் தன்பொற், செந்தளிர்க் கரத்தாற் றிருவடி விளக்கிச் சிறந்தவெண் பட்டினு லொற்றிக், கந்தநல் வருக்கம் பூசிமென் மலராற் கட்டிய மாலையுஞ் சாத்தி. (அசு)

விரைகெழு தூமந் தவழ்தரக் கோட்டி, மிளிர்தரு விளக்க முங் காட்டிக், கரையில்பன் மணிநீ ராஞ்சனம் வளைத்துக் கடி திரு பாலினு மெறிந்து, புரையில்கற் புடையாள் வணங்கின னிற்பப், புயலெனப் பல்லியங் குளிற, வரையெனப் பணைத் துக் கதிரொளி மழுக்கு மாளிகைக் கெழுந்தரு ளினனே. ()

இரசிதக் குவையுங் காஞ்சனக் குவையு மிலகுறு செம்மணிக் குவையுந், தரளவெண் குவையும் வச்சிரக் குவையுஞ் சாற்றரு மரகதக் குவையும், பரவிய கிரணச் செந்துகிர்க் குவையும் பாயமே தகப்பெருங் குவையு, மரதந வகையின் மற்றுள குவையு மறைதொறுங் கிடப்பன கண்டான். (அஅ)

பொற்கலப் பேழை மணிக்கலப் பேழை புரையில்வெண் பொற்கலப் பேழை, விற்படு விசேடக் கலனிறை பேழை மேவிய விருபத்தேழ் மகாரு, மற்புற வணியத் தனித்தனி வகுத்த வணிகலப் பேழைபன் னிறத்த, சொற்பெறு விலைப்பட் டடுக்கிய பேழை தொகையிலா திருப்பன கண்டான். (அகூ)

குருமலர் செம்பொற் கலமெதிர் வைத்துக், கோதறு வெள்ளிய மூரல், பருகுதற் கமைந்த வின்சுவைக் குழம்புப், பால் விரா யுபசரித் தூட்டத், திருகுபு வேண்டா வென்மரு மதனைத் திருமிப்பா ராதுசெல் குநரு, மருகிய பசியு மில்லையென் மருமா, யணிமகார் செருக்குதல் கண்டான். (கூO)

(அள) குளிறல் - ஒலித்தல். (அஅ) இரசிதம் - வெள்ளி. காஞ்சனம் - பொன். மேதகம் - கோமேதகம்.

வயிரவொண் சுட்டி நுதன்மிசைப் பொலிய மார்பிடை யைம்படை விளங்கக், கயில்செறி தொடருங் கடகமுங் கரத்திற் காதிலம் பொற்குழை துயங்கச், செயிரறு பொன்னு ணைமிசைக் கதிர்ப்பச் சிறுசிலம் படிகளிற் கவினப், பயிறரு மைந்தர் கலகல கலெனப் பண்பினின் றுடுதல் கண்டான். (௬௧)

தளவருந் தூனைய சரிசில்வா லரியுந் துயங்குசெம் பொன்னிறப் பருப்பும், வளமிகு குறையாக்.கறிகளுங் குறைத்த மாண்கறிக் குப்பையு மட்டைக், கிளாதரு முபக ரணங்களு முலோக மேழினுங் கெழுமுறச் செய்த, டளகறு கலங்கள் பல்லவு மடுமிற் பரப்பெலாம் பொலிவுன் கண்டான். (௬௨)

கலிநிலைத்துறை.

கரையில்பல்வளஞ்சென்றுலாய்நோக்குமக்காலைப்
புரையில்சற்புடைமனைவியார்விரையமுன்போந்து
விரைநறுஞ்செழுந்துயிலககாட்பிடுடெனுள்விரும்ப
வுரைசிறந்திடுநானஞ்செய்தருளுமென்றுரைப்ப. (௬௩)

அங்கொராதனமிட்டனளொருத்திவந்தன்மேற்
றுங்கமாமறைத்தலைமயோனிருந்தனன்றனைந்தோர்
மங்கைபொன்செய்தவள்ளத்துத்தைலமுன்வைத்தாள்
செங்கைபற்றியோர்நங்கைபொன்சிவிறியைவீச. (௬௪)

மாந்துளிர்க்கரத்தந்நறுந்தயிலத்தைவாக்கிப்
பூந்தடங்கணோர்மடக்கொடிசென்னியிற்பூசி

(௬௧) ஐம்படை - விஷ்ணுவுக்குரிய டஞ்சாயுதங்களையும் கதவற்பொருட்டுப் பொன்வட்டத்தகட்டிலெழுதிப் பூசித்தணியும் மணி. கயில - [illegible]ணைக்கடைப்புணர்வு. உலோகம் ஏழ்:— பொன் வெள்ளி செம்பு இரும்பு ஈயம் வெண்கலம் தரா. அடுமில் - பாகசாலை. (௬௩) விரும்ப நானஞ்செய்தருளுமெனக் கூட்டுக. இடு - வினையெச்சம். உள் - உள்ளம்.

வாய்ந்தவங்கத்துமப்பினள்வயங்குடாசனங்க
ளாய்ந்தநீர்நிறையாடிடம்புகுந்தனளம்மா. (கூரு)

ஆங்குமாதர்கள்குழுமிசெய்யகற்றிவெட்படுநீர்
பாங்கின்வாக்கிடமூழ்கிமெய்யீரமும்பாற்றி
யோங்குவேறுடையுடீஇநியதிக்கடனுவகை
தேங்குமாமுடித்தனன்புகுந்தனளுணுந்தேஎத்து. (கூசு)

இந்திரன்றிசைநோக்கினளுயர்த்திருந்தா
ளந்தரம்பையம்பேரிருபாசிலேபக்க
மூந்தரிந்தவாய்வலம்படமுன்புபோசட்டா
சிந்தையன்பொடுகரகநீர்புரோக்கித்துத்திருத்தி. (கூஎ)

நிலவுமெய்ப்பணிமாதராரெடுத்துக்கைநீட்டக்
கலவமாமயிற்சாயலங்கற்புடைமனையாள்
குலவுதன்கையாற்குய்கமழ்கறிநல்வறையல்
பலவுமின்புளிவிரவிடாப்பாயதீங்கறியும். (கூஅ)

அறையைநேர்ததியையவியளாவியகறியு
முறையின்முற்றவேவாதடுமுதிர்சுவைக்கறியுங்
குறைவில்புன்னிலப்பயறுடுகூட்டியகறியு
நிறையுநெய்ப்பசையருநிகராறுபுளிங்கறியும். (கூகூ)

கதிக்குமற்றையகறிகளுமூறியகாயு
மூதிக்குநோலையுமடையுமற்றுள்ளசிற்றுணவும்

(கூரு) பாசனம் - பாத்திரம் (கூசு) தேஎத்து - தேயத்து என்பதன் மரூஉ என்ப. தேயம் - இடம். (கூஎ) இந்திரதிசை - கிழக்கு; நித்திரை உணவு எண்ணெய் சௌளம் இவைகொள் வற்கு ஈது உரியதிசை யென்பர். இலை அரிந்தவாய் வலம்பட வமைத்தல் வேண்டுமென்பதை அப்பூதிநாயனார் புராணத்திலு முணர்க. (கூகூ) அறைநேர்ததி - பாறையொத்துறைந்ததயிர். ஐயவி - கடுகு.

விதிக்குஞ்சித்திரவனங்களுமேவுபாளிதமும்
பதிக்குமஃதொடுபேரிலைபுதைபடப்படைத்து. (௧௦௦)

முல்லைவாயிலோர்கோதருமூரலும்பலடத்து
வல்லபொன்னிறப்படருப்படுதிரளையும்வைத்து
நல்லவானசெய்கருடங்கவிழ்த்திவ்வகையிட்ட
வெல்லையின்மறையவர்க்குணவைந்தருக்கும்பாங்கியற்றி. (௧௦௧)

உவந்துமுன்னாநின்றுண்கமாவென்றுபசரிப்பத்
தவந்தழைத்தமாமறையவன்றருவனவுண்ணு
மிவர்ந்தவாசையின்விலாப்புடைவீங்கவுண்டெழுந்து
நிவந்தவேதியர்குழாத்தொடுமெழுந்தவணீந்தி. (௧௦௨)

வளங்கொணீரில்வாய்பூசினனியதியின்வகையுங்
களங்கமின்மறையவரொடுமியற்றினன்கந்து
துளங்கொள்பூந்தொடைவிரைகெழுபாகடைதாங்கி
விளங்குமன்னர்முன்யாவர்க்குமிவ்வகைவிரும்பி. (௧௦௩)

விருந்துசெய்தனன்சாந்தம்பூப்பாகுவெள்ளிலையுந்
திருந்துநல்கினனவரவரிடம்புகச்செலுத்திப
பொருந்துமிவ்வகைப்போகத்திற்சிறசிலர்போகக்
கருந்துழாய்கமழ்சேவடிகமழ்தருமுளத்தான். (௧௦௪)

ஒருதினத்தினிலுவளகவரைப்பிணையுற்றுக்
கருதுமக்களுமனைவியுமுருவகைகழிப்பி
யிருகவாடத்தைதாக்குபுதாழக்கோலிறுக்கி
மருவொருத்தனுயிருந்தனனின்னனவலிப்பான். (௧௦௫)

---

(௧௦௦) நோலை - ஒருவிதசிற்றுண்டி. பாளிதம் - பாற்சோறு. (௧௦௧) வீ - அரும்பு (௧௦௨) உண்க. உண்ணக்கடவீர். மா என்பது வியங்கோளசைச்சொல். (௧௦௫) தாக்கல் - மூடல். வலித்தல் - நினைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இம்மைதனின்மற்றிரும்பொருளையீட்டல்காத்தலிழத்தலென
வெம்மைபுரிமூவகைத்துயரும்விளையாநிற்கும்பாவத்தா
லம்மைநிரையத்துயருமுறுமந்தோசீசீயிப்பொருளைச்
செம்மையுடையோர்வேண்டுமெனச்சிந்தித்திடுவரோமறந்தும்

ஊழின்வலியாற்பெருஞ்செல்வமுறினுங்காலுமுண்டாக
வாழுங்கருத்தராய்த்துணிவுற்றடங்கத்துறப்பரறிவுடையோர்
தாழுமருள்போயொழிதலன்றித்தகுமிம்மையிற்கரணமூன்று
வாழியிலக்கிட்சிதருளைமருவப்பெறும்பேரின்பத்தால். [ம்

உடன்முற்பொறிகடமக்குரியவூறுமுதலைம்புலங்களையு
மடனற்றெழிலப்புலனிமித்தமாசப்படைத்தவனைத்தினையும்[ம்
விடன்மிக்கதுவாலெவற்றினுக்கும்விருப்பிற்சிலவுள்ளனவேனு
படருமனமற்றவ்வழியேடயக்குமளவில்லவந்தொடர்ச்சி. ()

பருவந் திடச்செய் பவத்தொடர்ச்சி பாற்றத் துணிந்த பண்பினர்க்கு, மருவிந் திரிய வுணர்விறெடும் வழங்கும் பிராணவாயுவொடு, மொருவில் காம வினை விளைவி னெடுங் கூடு மனவுடம்பு, முருவ வுடம்பு மிகையானூற் றொடர்ப்பா டின்னு முளவேகொல். (௧௦௯)

தீனல்லுடலையானென்றுந்தன்னோடுரிமையல்லாமை
யீனமுறுபல்பொருளனைத்துமென்ன ன்றுமுறநினைத்து

---

(௧௦௬) இதுமுதல் (௬)செய்யுள்க. குறளின் துறவதிகாரக்கருத்தாதலோர்க இது "யாதனின்யாதனின்" என்னுந் திருக்குறளின் உரைப்பொருட்டு. (௧௦௭) இது "வேண்டினுண்டாகத்துறக்க" என்றதன் உரைப்பொருட்டு. உண்டாகத் துறப்பரென்க. (௧௦௮) இதில், எவற்றினுக்கும் என்பதுவரை "அடல்வேண்டும்" என்றதிருக்குறளும்; மற்றது "இயல்பாகும்" என்ற திருக்குறளும் ஒப்பிட்டுவரைநோக்குக. (௧௦௯) இது, "மற்றுந் தொடர்ப்பாடெவன்" என்ற திருக்குறளின் உரைக்கருத்தது.

மானவயாபற்றினுக்கே துமயக்கமதனைமாய்ப்பவனே
வானவருஞ்செல்லருமுலகம்புகுவானென்னுமறைநூல்கள். ()

பற்றலாகாவிருவேறுபற்றையிறுகப்பற்றினரைப்
பற்றலாகாவெனவருாகள்பரிந்துகண்ணோட்டஞ்செயுமே
பற்றவெல்லாமறத்துறந்தபண்பினோரேதலைப்பட்டார
பற்றலுடையாரேஞ்ஞான்றுங்காண்பாரிலையில்பல்லவையும்.

பொருவிறேவுமிருபயனும்பொய்யாதணுகுமறுபிறப்பு
மருவுமுயலின்கோடாமைமயிராக்கம்பலம்விண்மலரெனுநூ
லொருவுமதியற்றுறப்பற்றலுறுமஞ்ஞானம்விபரீத
மிருவும்பிறப்பினெஞ்ஞான்றும்தனெலொழிதலின்பமே. (௧௧௨)
பகருந்தெய்வமம்மைவினைப்பயனுண்டோவின்றோவென்னும்
புகாகொண்டிடுசங்கையினீங்கிப்பொலியுஞானவனுபவத்தா
ணிகரிலுண்மையறிந்திடுதனீளுந்தொறும்வனுபவமற்
றிகவில்பழையவுலகவாசாரஞானமிரிந்திடுமே. (௧௧௩)

(௧௧௦) இது, "யானெனதென்னும்" என்ற திருக்குறளின் உரைத்திறம் (௧௧௧) பற்றத்தகாத உட்பற்று புறப்பற்றுகளை இறுகப்பற்றினவரைப் பிறவித்துன்பங்கள் யாம் இவரைப்பற்றலாகாவென விரும்பிக் கண்ணோட்டஞ் செய்யுமோ? (செய்யாதனவாய் இறுகப்பற்றி விட்டகலா) ஆகவின்; பற்றுயுள்ளனயாவும் முற்றத்துறந்த குணமுடையவரே வீட்டினைத் தலைப்பட்டவராவர்; அவ்வாறன்றிப் பற்றுதலுடையார் என்றும் பிறந்திறந்து வருகின்ற நிலையாமைபலவுமேகாண்பார். எ-று. இது, "பற்றிவிடா" "தலைப்பட்டார்" "பற்றற்றகண்ணே" என்ற திருக்குறள்களின் பொருளது. (௧௧௨) இது முதல் ஆறு செய்யுள்கள் மெய்யுணர்தல் அதிகாரக் கருத்தாதலறிக.—இது, "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்" "இருணீங்கி யின்பம்பயக்கும்" என்ற திருக்குறள்களின் உரைப்பொருட்டு. (௧௧௩) இது, "ஐயத்தினீங்கி" என்பது முதலிய திருக்குறள்களி னுரைப்பொருட்டு.

முதல்வெம் பவத்துக் கெனுமடமை முற்று மொழியச் செம்பொருளைச், சுதமென் புதற நினைத்தலே தூய சமாதி யென்பாரவ், விதநின் றிடிற்பன் னுண்டலை விடுங்கால் வேறெண் கலவாது,, மதமொன் றுறவே றெண்கலப்பின் வீருமே யதற்குத் தகுபிறப்பு. (ககச)

அன்றே யுள்ள வவித்தையென லஞ்ஞா னம்பல் விதமதித்தியா, னென்றே யெழுத லசங்கார, மிதுவேண் டுவதென் றறமுதலவா,,சென்றே யதுபற் றுதலாசை, மறுப்பிற் சேறல் சினமைந்து, நின்றே யிடரோ யொழியுமென நிகழ்த்தா நிற்கு நிரம்பிய நூல். (ககரு)

எல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்று மெழுமைப் பவமு மீன்றிடும் வித், தொல்லா வவாவே யப்பவத்தி னுறுதுன் பறிந்தோ னுதியாமை, யல்லான் மற்றும் வேண்டுமோ வேண்டா னலவ் வுதியாமை, சொல்லாந் திலங்கும் வேண்டாமை தன்னை வேண்டத் துனைவின்வரும். (ககசு)

அன்றேவன்றேவேண்டாமையன்னமேன்மைப்பெருஞ்செல்
மென்றேகாணப்படுமீண்டுமின்றுகேட்கப்படுஞ்சிறப்பின் [வ
யின்றாண்டுமஃதொப்பதின்றாலெனினவ்விழுச்செல்வந்
தன்றாதரவிற்பெறுவார்க்குச்சாற்றுமுவமையுளதேகொல். ()

(ககச) இது, "பிறப்பென்னும்பேதைமை" "சார்புணர்ந்து" என்றதிருக்குறள்களினுரைப்பொருட்டு. முதல் - மூலகாரணம். சுதம் - கேடு. (ககரு) இது, "காமம் வெகுளி மயக்கம்" என்னுந் திருக்குற ளுரைப்பொருட்டு. (ககசு) இது முதல் (ச) செய்யுள்கள் அவாவறுத்த லதிகாரக் கருத்தாதலறிக:— இது, "அவாவென்ப வெல்லா முயிர்க்கும்" "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்ற திருக்குறள்களின் உரைப்பொருட்டு. (ககஎ) இது, "வேண்டாமையன்ன" என்னுந்திருக்கு[illegible] திறம். அன்றே அன்றே - இரக்கக்குறிப்படுக்கு. [illegible] வுலகம். ஆண்டு - அவ்வுலகம்.

அற்றானென்றுசொலப்படுவானுசையற்றானொருவனே
மற்றுதரவினஃதொன்றும்வைத்துப்பிறவேதுக்களெலாஞ்
செற்றானெனினுமவையாக்குஞ்செயிர்த்துன்பகன்றானேயன்றி
யுற்றாவணங்குமவன்போலவொழிந்தான்கொல்லோவுறுபிறவி

மெய்யையுணர்தன்முடிவாகவேண்டுங்கருவியெலாம்பெற்றுச்
செய்யமுத்தியடைவதற்குச்சிறந்துளோனைமறவிவழிப்
பையநுழைந்துபவமீட்டும்பாய்த்திக்கெடுக்கவல்லதவா
வையவதனுக்குளாடுங்கியஞ்சிக்காத்தலறிஞாதொழில். (ககக)

ஆதலாலிம்மனைவாழ்க்கையகத்தேயிருந்துமுத்திதனைப் [பைக்
போதவடையத்துணிவதுதான்புணையாம்ஞ்சுதுயில்பொருப்
காதன்மிகுதியாற்பெயாத்துக்கத்துந்தரங்கக்கடலிடையிட்
டேதமகலவதுபற்றியொருவன்கரையேறுதல்போலும்.(கஉ0)

மனையிற் பெருஞ்செல் வத்துறைவோன், மருவு தியான முற
ச்சிறிது, நினையிற், காண வருவாரை நோசென் றழைத்துத் தழு
விடவும், வினையத் தினும்வினே தத்தினும், விருப்பிப் பேசி ட
வுமவர்க், ணினையப் பட்ட தளித்திடவும், பொழுது கழியு, நினை
ப்பழியும். (கஉக)

ஒன்றும் பெறுத லிலனெனினு முற்ற பெருஞ்செல் வத்தினர்
பாற், சென்று கொளுநட் புடையரெனத் தேயஞ் சொலற்கே
சிலர்சூழ்வார், மன்ற வென்று யினுமொர்பயன் வழங்க லாகு
மெனவூட, றுன்று நறுநெய்க் குடத்தெறும்பு சூழ்தல் போ
லுஞ் சிலர்சூழ்வார். (கஉஉ)

பொறையின் றேனும் பொறையுடையாய் புகழின் றேனும்,
புகழுடையாய், நிறையின் றேனு நிறையுடையாய் நீதி யுடையா

(ககஅ) இது, "அற்றவரென்பாரவாவற்றார்" என்ற திருக்கு
றளுரைப் பொருட்டு. (ககக) இது, "அஞ்சுவதோருமறனே"
என்ற திருக்குறளுரைப்பொருட்டு. (கஉ0) பொருப்பைப் புணை
யா கரையேறுதல் போலும் எனமுடிக்க.

யின்றெனுநற், றுறையின் றெனுநற் றுறையுடையா யென்று
சூழ்வர் கேட்டவர்க, ளறைகின் றனர்பல் லோருநமக் கமைந்த
வெலாமென் றகங்களிப்பர். (௧௨௫)

களியிற்றெய்வசிந்தனையுங்கழிந்தேகிற்குமதுகழிய
வளியிற்சிறந்தநல்லறமுமகன்றேகிற்குமஃதகல [ம்
வொளியிற்றிடவந்திருளடைந்தாங்குடற்றும்பாவம்வந்தடையு
விளியிற்கொடியநிரையமெலாம்புகுந்துகிடக்கும்வேலைமிகும்.

அந்தநிரையக்கொடுந்துன்பமாரோபடுவாரநினைத்திடினும்
வெந்துபுழுங்காநின்றதுளமேவுமிவைக்குக்காரணமிப்
பந்தமுறுக்குஞ்செல்வமெனப்பயந்தானயின்னனநினைந்தா,
னிந்தவருத்தமிறத்துதிப்பேனெம்பிரானையெனத்துதிப்பான்.

மச்சாவதாரம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எழுதரு மறையைக் கவர்ந்தன னாகி யெறிதிரைக் கடல்
புகுந் தொளித்த, முழுவலிச் சோம காசுர னுயிரை முனைகெ
ழு மீனமாய்ச் சவட்டிப், பழுதிலம் மறையை யுலகிடை விரித்
துப் பளகறுத் துயிரெலாம் புரந்தாய், கொழுதிவண் டுழக்கு
நறுந்துழாய்ப் படலைக் கொற்றவ நின்னடி போற்றி. (௧௨௬)

கூர்மாவதாரம்.

எறிசெறி தரங்கப் பாற்கட னடுவ ணெறும்வரை மத்தென
க்கூட்டித், தறியென மதியை நாட்டிவெண் பிறைப்பற் றழல்
விழி யரவநாண் பூட்டி, மறிதொழின் மறியச் சுரர்கடை கா
லம் மந்தரங் கடலழுந் தாது, முறிவின்மோட் டாமை யுருக்
கொடு பரித்த முன்னவ நின்னடி போற்றி. (௧௨௭)

---

(௧௨௬) இதுமுதல் கூறப்படும் தசாவதார விபவங்களைப் பாகவதத்திலும் இராமாயணத்திலும் தெளிக.

வராகாவதாரம்.

மலர்தலைப் புவியைப் பாயலாச் சுருட்டி மயங்குபா தலத் திடைக் கரந்த, விலகுபொற் கண்ண னுயிர்குடிப் பதற்கு மி மைப்பினைப் புவிவிரிப் பதற்கு, நிலவுவெண் பிறைக்கோட் டடல்வலிக் கேழ னிமிருருக் கொண்டவெம் பெரும, வலர்மகள் குடிகொண் டுறைமறு மார்பத் தச்சுத நின்னடி போற்றி. ()

நரசிங்காவதாரம்.

மலைத்தட நிறத்து முன்னவ னுயிரை மாட்டிய பழிகொளக் கருதி, யலைத்தட ரெலைத்துச் சுரர்முதல் யார்க்கு மச்சுறுத் திட்டது மன்றிப், புலைத்தொழி லுணர்வாற் றன்பெயர் வழுத் திப் போற்றவும் புரிந்தபொல் லானைக், கொலைத் தொழில் புரி யத் தூண்கிழித் தெழுந்த கோளரி நின்னடி போற்றி. (கஉகூ)

வாமனவதாரம்.

பெருகிய தவத்துக் காசிப னதிதி பிறங்குறு தந்தைதா யாகத், திருகறத் தோன்றி மமதையிற் படிந்த திறல்கெழு மாவலி பாற்சென், றுருகிய மனத்தின் மூவடி மண்கொண் டோரடிக் கிடம்பெறு மையினுன், மருவவன் சிரத்தில் வைத்துயிர் புரந்த வாமன நின்னடி போற்றி. (கநo)

பரசுராமாவதாரம்.

மாணுடைச் சமதக் கினியிரே ணுகைக்கு மகனெனத் தோன்றிமா மறையோர்ப், பேணுடைத் துலக நடைநெறி யிகந்து பெயர்ப்பருஞ் செருக்கினின் மூழ்குங், கோணுடைக் குரிசிற் குலமறச் சவட்டிக் குலவுமம் மறையவர்ப் புரந்த, வேணுடைப் பரசு ராமவைம் படைக்கை யிறையவ நின்னடி போற்றி. ()

(கஉஅ) பொற்கண்ணன் - இரணியாக்ஷன். (கஉகூ) பொல்லானென்றது - ஈண்டு இரணியன். (கநo) உயிர் புரந்தமை மாவலியைச் சுதலலோகத்தில் இன்னுமிருக்கப் பணித்தமை. (கநக) குரிசில் என்றது - கார்த்தயவீரியனை.

ஸ்ரீராமாவதாரம்.

தடநெடு மாட மாளிகை யயோத்தித் தசரதன் கோசலை மகவா, வடல்கெழு பாயல் சங்குசக் கரமுந் தம்பிய ராயடி பரவத், திடனுறத் தோன்றிக் கடுந்தொழி லரக்கி சேயொடு மிறச்சிலை வாங்கி, மடனிகு முனிவன் மகத்தினைக் காத்தோர் மாதுகல் லுருவினை யகற்றி. (க௬௨)

பெருவள மிதிலை நகரகம் புகுந்து பெயர்க்கருங் கார்முக மிறுத்துக், குருமலர் நிறையப் பூத்தகொம் பன்ன கோதையை மணந்துமீட் டயோத்தித், திருநக ரடைந்து தாயுரை தாங்கித் தேவியுந் தம்பியுந் தொடர, மருவிய களிப்பி னந்நகர் நீங்கி மாண்பினோர் கிராதனை நட்டு. (க௬௩)

தவப்பெரு முனிவர் குடிகொளும் பன்ன சாலைகள் கடந்து விண் டடவ, நிவப்புறு குடுமிச் சித்திர கூட மடைந்தவ ணேயத்தி னிறுத்த, கவற்சிமிக் குடைய பரதனுக் கினிய கழறிப் பா துகைகொடுத் தனுப்பி, யுவப்புற வெவருந் தண்டகம் புகுந்தங் குடன்றெழு விராதனை மாட்டி. (க௬௪)

திகழ்சர பங்கன் கருத்தினை முடித்துச் செந்தமிழ் மணங்கமழ் செவ்வாய்ப், புகழ்முனி யிருக்கை யடைந்தவ ணொருவிப் பொலிபஞ்ச வடித்தல மடையா, விகழ்வறு மெருவை யிறைக்

(க௬௨) தசரதன் - பத்துத்திக்குகளினும் இரதத்தை நடத்த வல்லவனென்னுங் காரணப்பெயர். அரக்கி - தாடகை. சேய் - சுபாகு மாரீசர்கள். முனிவன்-விசுவாமித்திரர். மாது-அகலிகை.

(க௬௩) கார்முகம் - திரியம்பகமென்னும் வில்; இது தேவராதனெனுமரசன் வீரபத்திரக்கடவுள்பாற்பெற்றது. கோதை - சீதை (சினையாகுபெயர்.) கிராதன் - சிருங்கபேரபுரத்தலைவனாகிய குகன். (க௬௪) இனிய - வினைக்குறிப்புப்பெயர். பாதுகை - மிதிவடி. விராதன் - குபேரசாபத்தால் அரக்கனாகி தும்புருவென்னுங் கந்தருவன்.

குள மகிழ்வித் திராவணற் கிளையவள் கலாங்கண், டகழ்தரப்
போந்த கரன்முத லோரை யடுதொழிற் கூற்றுண நல்கி. ()

மாயையி னடைந்த வுழையுயி போக்கி மாதினைக் கவர்ந்
தெழு மரக்கன், பாயவொள் வாளாற் சிறையறுப் புண்டபட
ர்புகழ்த் தாதையைக் கண்டு, மேயபல் கடனும் விதியுளி முடி
த்து விலக்கருங் கொடுந்தொழிற் கவந்த, னுயவற் றொலைத்துச்
சவரிபூ சனைகொண் டகன்றுபோய் மதங்கவெற் படைந்து. ()

கதிரவன் பயந்த மதலையை நட்டுக் கனந்தவழ் மராமரந் து
ளைத்து, முதிரொளிக் குலிசப் படையினோன் மகனை முனிந்தட
ல் புரிந்துல கடங்க, வதிர்தரத் திரியுஞ் சேனைதற் சூழ வனும
ணு லறிவதை யறிந்திட், டெதிரறு கடற்க ணொருசாம் புகுத்
தி யியங்குற நடவையுண் டாக்கி. (௧௬௭)

இலங்கையுட் புகுந்து தசமுக னவனுக் கிளவல்விண் ணிறை
யவன் பகைமுற், பொலங்கழன் மைந்தர் மற்றையோ ரையும்
வெம் போர்க்களத் தவித்துவீ டீணற்கு, நலங்கெழு முரிமை

---

(௧௬௫) முனி - அகத்தியர். பஞ்சவடி - ஐந்து வடங்கள் நில
வப்பெற்ற ஓர் இடம்; வடம் - ஆல். எருவையிறை - அருணன்
புத்திரரான சடாயு சம்பாதியருள் சடாயு. இளையவள் - சூர்ப்
பணகை. (௧௬௬) உழை - மாரீசனாகிய மாயமான். சடாயுவை
த் தாதை என்றது-தமது தாதைபால் நண்புபூண்டிருந்த கார
ணம்பற்றி உபசரித்தமுறை. கவந்தன் - இந்திரனது வச்சிரத்
தால் உள்ளழுந்திய தலையையுடைய அரக்கன்; கவந்தம் - தலை
யில்லாவுடற்குறை. சவரி - இராமருக்குக் கனிவகைகளருத்தி
முத்தியடைந்தவள். (௧௬௭) கதிரவன் மதலை - சுக்கிரீபன்; குலி
சப்படையினோன்மகன் - இந்திரபுத்திரனாவாலி. இயங்குற - நட
க்க. நடவை - வழி. (௧௬௮) இளவல் - கும்பகர்ணன். விண்ணி
றையவன்பகை - இந்திரஜித்து. மைந்தர் - அதிகாயன் அக்ஷ
குமாரன், கும்பன் நிகும்பன் முதலியோர்.

யரசளித் துலகி னூட்டுகேற் பரசியை யீட்டு, நிலம்புக ழயோத் தி யடைந்தர சளித்த விராகவ நின்னடி போற்றி. (கஙஅ)

பலராமாவதாரம்.

மல்லலம் புவனம் புகழ்வசு தேவன் மயிலியற் றேவகி பிற ருக், கொல்லரும் வனப்பி னுரோகணி யிவர்கட் கொருமக வா வவ தரித்துக், கோல்லுமா குறித்த பிரலம்பன் முதலோர்க் கூற்றுணக் கொடுத்துயிர் புரக்குஞ், சொல்லருஞ் சீர்த்திப் பளிக்குரு வமைந்த தூயவ நின்னடி போற்றி. (கஙக)

கிருஷ்ணாவதாரம்.

பாவடிக் களிற்றுப் படையுடைக் கஞ்சன் பரித்துறை மது ரைமா நகரி, லாவணித் திங்க ளள்ளிருட் பக்கத் தட்டமி தனி லருங் கற்பின், மாவகிர்க் கருங்கட் டேவகி வயிறு வாய்த்திட க் காற்செறி கழன்று, மேவுறப் பணிந்த புகழ்வசு தேவன் மென்மலர்த் தடங்கர மடைந்து. (கசO)

காவல்செய் புதவும் யமுனையு நடவை கடிதினி திருளிடை யுதவக், கோவலர் பாடி நந்தகோன் மனையிற் கோதில்கற் ப சோதையீன் றெடுத்த, மாவலர் கதுப்பின் மாயைதான் பிறந் த மனையுறப் போக்குபு புகுந்து, தாவரு மகிழ்ச்சி யாவரு ம டையத் தடையற வளர்தரு நாளில். (கசக)

மாயையி னறிந்த மாதுலன் விடுக்க வந்தபூ தனையுயிர் சவ ட்டிப், பாயமென் சுவைய பண்ணிகா ரம்பெய் பண்டிநுண் டுகள்பட வுதைத்து, வாயுவிற் சுழன்று கொண்டுசெ லரக்கன்

(கஙக) இருதாயருக்கவதரித்ததென்றது:— தேவகியின்வயி ற்றில் மூன்றுமாதங்கருவாயிருந்து பின்பு உரோகணியின் கருப் பத்தில் மாயையினமர்ந்து உற்பவித்தமையாலென்க. (கசO) காற் செறி - விலங்கு. (கசக) புதவு - கதவு. புதவும் யமுனை யும் நடவையுதவ மனையிற்புகுந்து என இயையும். (கசஉ) பண் டி என்றது சகடாசுரனை. அரக்கன் - திருணவர்த்தன்.

மாய்தர நிலத்திடை வீழ்த்தி, யாய்தொடிப் புகழ்த்தாய் கா ணிய தன்னு ளடங்கலுங் காட்டிபு மறைத்து.　　(கசஉ)

நந்தகோன் றடக்கை பற்றுபு குறுத்தாள் பெயர்த்துமென் மெலநடந் துலவிச், சந்தமார் தாதை சொற்படி வந்த வேதி யன் றருபெயர் பெற்றுச், செந்துவர்க் கனிவா யன்னைபா லரு ந்தச் சேர்த்துபு வெண்டயி ருடைக்கு, மந்தவே லையிற்பால் பொங்குபு வழித லாற்றுவா னகன்றமை நோக்கி.　　(கசங)

அவ்விடத் திருந்த வெண்டயிர்க் குழிசி யனைத்தையு மத்தி னு லுடைத்துச், செவ்விய வளையைத் திரட்டியுன் டடுத்த செழுமனைப் புகுந்துறி வெண்ணெய், வவ்வுதற் குரன்மே னின்றுகன் மோதி வாய்ப்பெய்து பூசைக்குங் கொடுத்துக், கொவ்வையங் கனிவா யன்னைமென் றும்பாற் குழிசெறி கறை யொடு பிணிப்ப.　　(கசச)

மருதிரன் டொடிய வீர்த்திடைத் தவழ்ந்து மற்றது மாற் றிய பின்னர்க், கருதுறு பிருந்தா வனமடைந் துகளுங் கற்றி ன மேய்த்திடு நாளி, லொருகருங் கன்று கொடுவிள வெறிந் தங் குற்றபுள் வாய்கிழித் தரவப், பெருகிய சாபந் தொலைத் திடைச் சிறார்கள் பெட்புற வாற்றுஞ வுண்டு.　　(கசரு)

பு.ரப மலர்மகன் கவர்ந்த கற்றினஞ் சிறுவர் மாயையிற் பண்டுபோ லாக்கிக், கலவிய விடநீ ருண்டிட றுறந்த வுயிர்களுய்ந் திடக் கடைக் கண்பார்த், தலகிறீக் கொடுமைக் கட்செவிப் பணத்தி

(கசங) வேதியன் - கர்க்கமுனிவர். (கசச) பூசை - பூனை.

(கசரு) மருதாக விருந்தவர் - நளகூபரமணிக்கிரீவர். கற்றி னம் - கன்றுக்கூட்டம்; வலித்தல் விகாரம். கன்றுவடிவாக இருந்தவன் - வச்சாசுரன். புள் - கொக்குவடிவாய்வந்த பகாசுர ன். அரவமாயிருந்தவன் - அகாசுரன். ஆற்றுணு - கட்டமுது.

லடித்தல நிறுத்துபு நடித்துக், குலவுறு தந்தை யாய்ச்சிறார் தம்மை விளைவனக் கொழுந்தழ லயின்று. (கசசு)

பனிநிலா முறுவ லாய்ச்சியர் மயங்கப் பவளவாய் வேய்ங் குழல் வைத்துக், கனிநலத் தவர்நீ ராட்டயர் காலைக் கலையெ லாங் கவர்ந்தினார்க் குருந்தி, னினிதுற வேறிக் கனைமிசை யிவ ர்ந்தோர்க் கெடுத்தெடுத் தந்துகி லீந்து, நனிமலர்ச் சோலை யகம்புற முருவம் பலகொடன் னவர்நல முண்டு. (கசஎ)

தவம்பயின் முனிவர் பன்னிய ரளித்த சமைந்தவின் சுவை யுணு வினையுண், டுவந்துவா சவன்கொள் பூசையைத் தான்கொ ண் டுறுமழை வரைகொடு தடுத்துச், சிவந்தகண் ணசுரன் கொ டுசெலுந் தந்தை திருமுற மீட்டுமற் றவனு, நிவந்தவண் டர் களுங் காணவை குந்தங் காட்டுபு ளெரோலென மறைத்து. ()

இரும்பசுக் காவல் செய்யுமா வயினல் விராதைதன் னொழி னலங் கவர்ந்து, விரும்புபன் மாதர் குழாத்தொடும் பாடி மே வுபு தந்தையைக் கவரு, மரும்புபல் லரவைக் கான்மிதித் தக ற்றி யமைதரு கானமீட் டடைந்து, வரும்பெருஞ் சங்க சூட னை மாய்த்து மணியினை முன்னவற் களித்து. (கசகூ)

நாரத முனிவன் சொற்கொடு கஞ்சன் செலுத்திட நண்ணிய கேசி, யார்தரு மற்றே ருயிர்குடித் தன்னு னமர்தரு மதுரை யை யடைந்து, சார்தரு மீரங் கொல்லியைத் தடியா வெழில் கலன் றந்தவற் குதவி, யீர்மதுக் கண்ணி யன்புட னளித்தாற் கினியத னின்பவீ டளித்து. (கருO)

(கசகூ) கற்றினம் சிறவர் - கன்றினத்தையும் சிறவரையும் என்க. கட்செவி - காளிந்தன். (கசஅ) அசுரன் - வருணதே சன் என்பவன். (கசகூ) அரவு - முனிவரை பிகழ்ந்து பாம்புவ டிவுற்ற சுதரிசனன். சங்கசூடன் - குபேரனது சிரேகிதன். மணி - அவன் சிரசிலிருந்தமணி. (கருo) கேசி - குதிரைவடிவாக வந்த அரக்கன். மாலை கொடுத்தவனை ஸுதாமன் என்பர்.

சாந்தநன் களித்த கூனியை யணங்காச் சமைத்துடன் வேத்
தவை புகுந்து, காந்தெரி கவிழ்க்குங் கட்கடைக் களிறு கல்லடு
திணிபுய மல்லா, நாந்தக வாண்மைக் கஞ்சனை முன்னோர்
கடுங்கியுள் ளுயிரா விடக் கடிந்து, வாய்ந்தநன் பெருஞ்சீ ருக்கிர
சேனற் கரசுரி மைத்திறம் வகுத்து. (கருக)

தந்தையுண் மகிழ்ந்து நூற்கடி முதலாஞ் சடங்குக ளியற்று
வித் திடலு, மைந்துடை புணாச்சிச் சாந்திபற் சாந்து மறை
முதற் கலையெலா முணாந்து, வெந்திற லவுணன் வரைநிறங்
கிழித்து விரிசூகிராச் சங்கமொான் றெடுத்து, முந்தைநா ளிறந்த
மதலையை மீட்டா சாரியன் தேவிமுன் வைத்து. (கருஉ)

கோவியாத் தேற்ற வுத்தவற் போக்கிக் கூனிதன் னிளநல
நுகாந்திட், டேவியல் சாபந் திரிதராட் டிரன்பா லிலகுமக்
குரூரனைப் போக்கி, மாவியற் றூனைச் சராசந்த னோட மண்ட
மா பதினெழு முறைசெய், தோவியப் புரிசை மதுரையை
முனிவ னுந்துகா லயவனன் வளைப்ப. (கருங)

ஆதிரைப் புணரி நடுவன்வன் டுவரை யணிநக ரொன்றுண
தூக்கிப், போரினுக் காற்றுன் போல்விரைந் தோடிப் பொங்கு
சீர் முசுகுந்த னுறங்கு, மோாவரைக் குகையுட் புகுந்தவ னூற்
றெவ் வுடல்பொடிப் பித்துமுன் னவனோ, டோகெழு மதுரை
நின்றுவண் டுவரைக் கேகுழிச் சராசந்தன் வளைப்ப. (கருச)

(கருக) கூனி - இவளை குப்ஜை த்ரிவக்ரை சைரந்திரி என்
றுங் கூறுவர். (கருஉ) நூற்கடி - பூணூலணியுமணம். அவு
ணன் - பாஞ்ஜசனன். (கருங) சாபம் - வில். சராசந்தன் - கம்
ஸன் மனைவியராகிய அஸ்தி பிராஸ்தி என்பவரின் தந்தை. நார
தமுனிவரால் தூண்டிச் செலுத்தப்பட்ட காலயவனன் என்கு
இவன் யவனனென்னு மிலேச்சவரசன் கார்க்க முனிவர்பாற்
பெற்றுக்கொண்ட புத்திரன். (கருச) முசுகுந்தன் - மாந்தாதா
வின் குமாரன்; முசு முக முடையவன்; முசு - ஒருவகைக்குரங்கு.
தெவ் - (முற்கூறிய காலயவனனென்னும்) பகைவன்.

அவற்குமஞ் சினன்போன் முன்னொடு மாங்கோ ரணிவளை
யிவர்ந்தழல் சூழக், கவற்சியின் றுகி விரைந்துகுப் புற்றுக் கடி
மதிற் றுவரையை யடைந்து, நவத்தளிப் பொழில்சூழ் விதர்ப
நாட் டரச னங்கைமுன் னோனைக் கஞ்சி, நிவப்புற விடுத்த
தூதுகன் டாங்கு வெரோலெனத் தேர்மிசைச் சென்று.(கடுரு)

வரந்தரு கவுரி திருவடி வணங்கி மாமலர்ச் சோலையி னின்ற,
பரந்தபே ருண்கட் கன்னியைக் கவர்ந்து பகைத்தமன் னவர்
களை யோட்டி, யரந்தடி வெடுவே லுருக்குமன் குடுமி யரிந்து
வன் டுவரையை யடைந்து, சுரந்தரு ளுருக்கு மிணிபெறு மை
ந்தன் றெடுகடன் மீன்வயி றடைந்து. (கடுசு)

இரதியைச் சார்ந்து வளர்ந்தவ னலனுன் டேற்றிகற் சம்ப
ரற் றொலைத்துக், குரவலா குழலி யொடுதுவா ரகையிற் புகுந்
திடப் பெருமகிழ் கூர்ந்து, பரவுசத் திராசித் திரவிபாற் பெறு
பொன் பயந்திடு மணிபிர சேனன், கரமல ரளிப்பக் கோளரி
கவரப் பின்னரோர் கரடிகைக் கவர்ந்து. (கடுஎ)

பிலத்திடை யடைந்து மகடுயி லிடத்து வைத்திடப் பெரும்
பழி தனக்கு, நிலத்திடை வருத லெக்கியப் பிலத்தை நோர்ந்து
சாம் பவனொடு பொருதி, வெலத்தகு வாகை யொடுமவன்
மகளை மணியினைக் கைக்கொடு மீண்டு, வலத்தவ ளுய சத்திரா
சித்துக் கம்மணி நல்கிட மகிழ்ந்து. (கடுஅ)

(கடுரு) நங்கை - ஈண்டு உருக்குமிணிதேவி. முன்னோன் - அவர் தமையனை உருக்குமி. (கடுசு) தடிதல் - ஈண்டு அராவல். மைந்தன் - மன்மதாம்சமாயுதித்த பிரத்யும்னன் (கடுஎ) இரதி என்றது-இரதியம்சமாய் சம்பரனுக்கு மனைவியாயிருந்த மாயாவதி. பொன்பயந்திடுமணி - சூரியனிடம் பெற்ற சிமந்தகமணி. பிரசேனன் - சத்ராஜித்துவின் தம்பி. கரடி - ஜாம்பவன்.
(கடுஅ) மகள் - ஜாம்பவதி; இரண்டாவது தேவி.

எழினலங் கனிந்த சத்திய பாமை தனைமணி யொடுமுவக் தியக், கழிமகிழ் சிறந்து மணியையம் மாமன் கையளித் தறன் மகன் முதலோ, ரொழிவுறத் துயர மன்னவர் பாற்சென் றுறையுநாண் மாமனைக் கடிந்தாங், கழிவிலம் மணிகைக் கொள்சத தனுவா வாருயி ரிறத்தொலைத் தகற்றி. (கருகூ)

மழைவளஞ் சுரப்ப வக்குரு ரன்செம் மணியொடு வந்துகண் டிடலுந், தழைமகிழ் சிறந்தம் மணியினை யவற்கே தருசெழும் பொற்கிர ளெல்லா, முழைமரு ணயனச் சத்திய பாமைக் குதவுக வென்றினி தளித்து, விழைகள்வார் கூந்தற் சுபத்தி ரை தன்னை மேகவா கனன்மகற் கீந்து. (கசுo)

எரிமணி மாட விந்திரப் பிரத்த மெய்துபு தனஞ்சய னோடு, மரில்படு கானில் வேட்டமா டிடுங்கா லமிழ்தென வின்னிசை பாடும், வரிநெடுங் தடங்கட் காளிந்தி யின்ப மருவிவண் டுவ ரையை யடைந்து, விரிபெரும் புகழ்சா லவந்திம னளித்த மித்திர விந்தையைக் கவர்ந்து. (கசுக)

அரவுயர் கொடியோ னுதியோ ருள்ள மச்சுற வில்வளைத் தமர்த்துப், புரவுபூண் டியருங் கோசலத் தரசன் போர்விடை யேழையுந் தழுவிக், குரவுவார் கூந்தற் சத்தியை மணந்து

(கருகூ) சத்தியபாமை - சத்திராஜித்துவின் மகள்; மூன்றாந் தேவி. அறன் மகன் - இயம புத்திரனை தருமராசன். சததனுவா - சத்தியபாமையைத் தனக்குத்தரவில்லையென்று சத்திராஜித்துவினிடம் பகைகொண்ட ஓரரசன். (கசுo) அவற்கே அளித்து என இயையும். மேகவாகனன்மகன் - அருச்சுனன்.

(கசுக) அரில் - தூறு; மூங்கிலுமாம். வரி - வண்டு; இரேகையுமாம். காளிந்தி - சூரியன்மகள்; நான்காந்தேவி. மித்திரவிந்தை - ஐந்தாவது தேவி. (கசுஉ) சத்தி - ஆறுவது தேவி. கேகயத்தரசன் - சுதகீர்த்தியென்பவன். பத்திரவிந்தை - ஏழாவது தேவி.

குலவுறு கேகயத் தரச, னுரவுளத் தவனாய் மன்றல்செய் தளிப்ப வுற்றபத் திரைநல நுகர்ந்து. (கசூஉ)

இலங்குமத் திரத்திற் கயற்குறி தப்பா தெய்திலக் கணைமணம் புணர்ந்து, வலங்கொளு நரகற் கொன்றுவச் சிரத்தோன் மனக்குறை முடித்தினி தருளிப், பிலங்கொளாங் கிருந்த வொருபதி னாறு யிரமட வார்பெரும் போகந், துலங்குற விரும்பிச் சுத்திய பாமை தொழுதிட வைந்தரு நல்கி. (கசூங)

ஆம்பலங் குதலை வாய்மொழி மைந்த ரளவிலர் தோன்றிடக் களித்துத், தேம்பலின் மைந்தன் மகற்சிறை புரிந்த திறலினன் கைத்தலஞ் சிதைத்துக், கோம்பியாய்க் கிடந்தோன் பாதகந் தவிர்த்துக் குலவிய காசிமன் னனையும், பாம்பணைப் பரன்யா னேயெனத் தோன்றும் பவுண்டர வாசுதே வனையும்.

உயிர்குடித் தந்த வாரண வாசி யொன்னலன் மகன்விடு பூதஞ், செயிருறத் துரந்து சுயோதனன் கன்னி செழுநல நுகர்த்திருட் கவர்ந்த, வயிரவாட் சாம்பன் சிறையைமுன் னோன்

(கசூங) இலக்கணை - மத்திரதேயவரசன் மகள்; எட்டாவது தேவி. நரகன் - பிராக்ஜோதிஷ பட்டணத்தரசன். வச்சிரத்தோன் மனக்குறை:—அதிதியின் காதணியை நரகன் கவர்ந்த குறை. பதினாயிரமடவார்-நரகன் காவலிற்பட்டிருந்து தம்மை மகாதலித்த மங்கையர். ஐந்தரு - மந்தாரம், பாரிஜாதம், சந்தானம், தேவதாரு, கற்பகம் என்னும் தேவதருக்கள்.

(கசூச) ஆம்பல்வாய் குதலைமொழி என்க; ஆம்பல்- ஓர் பண்ணுமாம். மைந்தன் மகன் - பிரத்யும்நன்மகனை அநிருத்தன். திறலினன் - வாணாசுரன். கோம்பியாய்க்கிடந்தோன் - இக்ஷ்வாகுவம்ச நிருகுவென்னும் வேந்தன்; கோம்பி - பச்சோந்தி.

(கசூரு) வாரணவாசி யொன்னலன் மகன்-சுதக்ஷணன். சுயோதனன் கன்னி-இல[illegible]ணை. சாம்பன் - ஜாம்பவதியென்னு மனைவியின் மகன். யாழ் முனிவன் - மகதியாழை யேந்தியநாரதர்.

போய் மீட்டுவந் திடமகிழ் சிறந்து, பயிலும்யாழ் முனிவன் கண்டிடப் பதின் ருயிரந் திருவுருக் காட்டி. (கசுரு)

மல்லுயா திணிதோட் சராசந்த னுடலம் வகிர்ந்திடு கான் மக னறியப், புல்லினைக் கிழித்துப் பற்பனுள் வருந்து புரவலா சிறைவிடு வித்து, நல்லற மைந்த னிராசசூ யததி னடைபிறழ் சேதிபற் றடிந்து, வல்லசா லுவனைத் தந்தவக் கிரனை வலங் கெழு படையொடுஞ் செகுத்து. (கசுசு)

விறன்மிகு விசயன் வாவுமான் றடந்தோட் பாகனுய் நடத் திவீடுமென் முற், றிறன்மிகு வேந்தரைவரான் மடியச செய்து பூ பாரமுங் கழிப்பி, யறன்மகற் கரசு நல்கியென் கந்தை யக ம்பொதி யவலுந்தின் றளித்த, திறன்மிகு கமலக் கண்ணுடைக் கண்ண நின்மல நின்னடி போற்றி. (கசுஎ)

கலிகாவதாரம்.

இமையவா துதிக்கப் படியிடைய பரியா யினிவரு மெம்பி ரான் போற்றி, யமைதரு மறையுங் காணுப் பொருளா, யகிலமு மாயவ போற்றி, யிமையள வினிற்கை வரைமுறை யிடச்சென் றினிதருள் சுரந்தவ போற்றி, கமைதரு மன்ப ரெண்ணியாங் களிக்குங் கமலோா யகவடி போற்றி. (கசுஅ)

எனத்துதி முழக்கிக் கண்கணீ ரரும்ப விருகரஞ் சென்னி மேற் குவியக், கனத்திரு மறைநூ லுணாச்சிமிக் குடைய கா மரு குசேலமா முனிவ, னுனற்கரி யவனென் றனக்கினி தருள வுறுங்கொலோ வென்றுநெக் குருகி, மனக்கசி வுறுங்கான், மனத்தினுங் கடுகி மாமறைப் பிரான்வெளி வருமால். (கசுகு)

(கசுசு) ஜராஸந்தன் - கிரிவிரஜ நகரவரசன். கால்மகன் - வீமன். புரவலர் - ஜராஸந்தன் சிறைவைத்த உ0,000 அரசர் கள். சேதிபன் - சிசுபாலன். (கசுஅ) பரிமாய் வருதல் - கற் கியவதாரம். கைவரை - கஜேந்திரன்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னாரு மணிமகுடம் பசியவரை முகட்டெழுசெம் பொன்னை யேய்ப்ப, மின்னாரு மிருசெவியின் மணிமகர குண்டலம்வில் வீசி யாட, வொன்னார்த முயிர்குடிக்கு மெறுழ்வலித்தோ ளங்கதச்செவ் வொளிமே லோங்கத், தென்னாரக் கதிர்கீழும் பாய்ந்ததென வுத்தரியந் திகழா நிற்க. (௧௭0)

சாமருகன் னெறிநடப்ப வறந்தழைப்ப வெவ்வுயிருங் களிப்பின் மேவ, மாமறையை வடித்துவிரித் தினிதுரைத்த திருமலர்ச்செவ் வாய்க்குன் டாய, தோமறுவன் பெரும்புகழிற் .சிறிதுவெளிப் பட்டிலவு தோற்ற மேய்ப்ப, வேமமுறு குறுமூரல் வெள்ளென்று சிறிதரும்பி யிலகா நிற்க. (௧௭௧)

கொங்கவிழு நறுமலர்கொண் டருச்சித்து முளரினைந்துங் குடந்தம் பட்டுப், பங்கமறு பஃறுதிகள் முழக்கியுமிவ் வாறுவழி படலோ வாது, கங்குல்பக னிற்போர்க ணனிமூழ்கி யின் டையக் கமலக் கண்கள், பொங்குமருட் பெருவெள்ளந் திரையெறிந்து கரைபுரளப் பொழியா நிற்க. (௧௭௨)

2
தங்கள்குலம் விளக்கியபே ரிருங்கருணை தெரிந்துவகை தழைப்ப நாளு, மங்குதலி லிவன்பாலே யுறைவமெனப் பகலிரவு மருவத் தோன்றுஞ், செங்கதிரும் வெண்கதிரும் வலத்துமிடத் தினுமமர்ந்த செவ்வி யேய்ப்பப், பொங்குகதிர்த் திகிரியுஞ்சங் கமுமிருகைத் தலத்துநனி பொலியா நிற்க. (௧௭௩)

மன்பதைகள் முறையிடா தஞ்சலென வெடுத்தபயம் வழங்குங் கையுங், கொன்பரவு முலகமெலா முள்ளடியோர் புறத்

---

(௧௭0) பொன் - சூரியன். மகரகுண்டலம் - சுறவு முகமமையச்சமைந்த காதணி. அங்கதம் - தோளணி. தென் - அழகு. உத்தரியம் - மேலணியும் உடை; கீழணியும் உடையை அந்தரியமென்ப. (௧௭௧) வெள்ளெனல் - வெண்மையாதல். (௧௭௩) தங்கள் என்றது சூரிய சந்திரர்களை.

துறைநீள் குளிர்பூந் தாளி, லன்புறுக வெனவரதங் காட்டுமொரு திருக்கையுமப் போது பூத்த, தென்பரவு நன்பவள வம்புயமுஞ் சமழ்ப்பவெழில் சிறவா நிற்க. (கஎச)

அரியதவங் குயின்றுநெடுங் காலம்வயி றுளைந்தீன்ற வணங்கை யீந்து, விரியதிர்வெண் டிரைத்திருப்பாற் கடலளித்த வரிசையைப்பால் விலகா ராலுந், தெரியவருஞ் சிற்றிடையத் திருவுறையு ளமைத்தல்பெருஞ் சீர்த்தி யென்று, கரியநிறத் திடையமைத்த கவுத்துவமா மணிக்கற்றை கஞலா நிற்க. (கஎரு)

ஆடமைத்தோட் செங்கனிவாய்க் கருங்கூந்த லயிலனுக்கியம்ப லைக்கு, மோடரிக்கட் டிருமடந்தை மணிகாலும் வெயில் வருத்த முறுமெனா துங்க, நீடமைத்த விளஞ்சோலை யெனத்தழைந்து மணங்கான்று நிலவு மென்பூந், தோடமைத்த பசுந்துளபத் தொடையலளிக் குலமுணத்தேன் றுளியா நிற்க. ()

நிலங்காவ லொருவன்விடு களியானைக் கோட்டினுக்கு நிதமு மெண்ணி, லலங்கார மடமாத ருழுதுழக்கிக் கலக்கியமராட வுய்க்கு, மிலங்கார மணிந்துபணைத் திறுகியண்ணுந் தெழுந்தமுலை யிருங்கோட் டிற்குங், கலங்காத் திறப்பிரதா பம்போலச் செஞ்சாந்து கஞலா நிற்க. (கஎஎ)

(கஎச) உலகமெலாம் உள்ளடியின் ஓர்புறத்தி லடங்கும்படி நீண்டதாள் என்பது. கையும் கையும் சிறவாநிற்க என்பது.

(கஎரு) பால்விலகார் - பக்கத்திருந்து விலகாதவர். வரிசையையமைத்தல் என இயையும். (கஎசு) அனுக்கல் - கீழ்ப்படுத்தல். (கஎஎ) கஞ்சன்விடு யானைக்கோட்டினுக்கும் மாதர் உய்க்கும் முலைக்கோட்டினுக்கும் என்க. பிரதாபம் - வெற்றியாற் றோன்றுங் கீர்த்தி. இதைச் செந்நிறமாகக் கூறுதல் கவிமரபு.

திருவரையிற் கொய்துவிரித் தலங்கார மம் பெறவுடுத்த செம்பொ னுடை, யுருகெழுசெங் கதிருதர பந்தனம்பொன் னிரட்டைநா ணுளிரா நிற்க, விருபுடையுங் கருங்குழல்வெள் ளைச்செவ்வாய்த் தேவியரென் மர்களுஞ் சூழக், கருமுகிலொன் றுளிர்மின்னற் காடுவளா யெதிர்காட்சி கதியா நிற்க. (களஅ)

வயங்கெழுதுர் துபியைர்துங், காருநெடுங் கடலுமென வாய்விட் டார்ப்ப, நயங்கெழுபூ மழையமரர் பொழிதரவின் னரமகளிர் நடியா நிற்க, மயங்கெழுநல் லறந்தழைப்ப, வுலகுகுது கலிப்பவெளி வந்து நின்றான், பயங்கெழுமா மறைப்பொருளா யம்மறைக்கு மெட்டாத படிவத் தண்ணல். (களகூ)

மேற்படி வேறு.

காண்டலும்விரைந்தெழுந்துகரையுடைந்தெழுநீத்தம்போல்,
மாண்டதாய்வரவுகண்டமழவிளங்கோதனம்போற்,
றூண்டுதன்மனமும்பிந்தத்துணைவிணிதோடியன்பு
பூண்டவர்க்குரியதாண்மேற்பொள்ளெனவீழ்ந்தெழுந்து. ()

முடிமிசைக்கரங்கூப்பாமும்முறைபிரதக்கிணஞ்செய்
தடிமிசையன்புபொங்கவானந்தக்கண்ணீர்வாரப்
படிமிசைக்கிடத்துந்தண்டின்பரிசெனமீட்டும்வீழ்ந்து
நொடிமிசையெழுந்துதுள்ளிநோற்றுளோம்யாமேயென்று. ()

பூசனைசிறப்பிற்செய்துபொருந்துபாத்தியமுனீந்து
நேசமிக்கூறிப்பொங்கநேர்நின்றுகுடந்தம்பட்டு
வாசநன்கங்கைபங்கன்வதியிடம்வந்ததொத்த
தாசறுநினதுகாட்சியையவென்றினையசொல்வான். (கஅஉ)

(களஅ) கொய்தல்-குஞ்சமாகச் சுருக்கல். கதித்தல் - ஒத்தல். (களகூ) மயம் - அழகு. பயம் - பயன். (கஅ0) கோதனம் - பசு. (கஅக) கூப்பா - கூப்பி; (செய்யாவாய்பாடு.) (கஅஉ) பங்கன் - முடவன்.

அறமிகுதலங்கள்சார்ந்துமாரணியங்கள்சார்ந்து,
நிறமிகுவரைகள்சார்ந்துநெடியநாளிருந்தாணின்றி,
மறமிகுபொறியைவாட்டிவளாதவம்புரிவார்க்கன்றிப்,
புறமிகும்பாவியேற்குங்கிடைத்ததேபுகழ்சால்காட்சி. (கஅரு)

இலகுநான்மறைகளோலமோலமென்றெண்ணிளுள்க
ளலறிவாயிலைத்துங்காண்டற்கரியநின்னரியகாட்சி
கலகமார்விணைக்கோட்பட்டுக்கலங்குபுமருளின்மூழ்கும்
புலனிலாயானுங்காணக்கிடைத்ததுபுதுமையைய. (கஅச)

என்றினிதருளிச்செய்யவெழுந்தருள்வான்கொலென்று
பொன்றலிறவத்தின்மேலாய்ப்புண்ணியம்பழுத்தமேலோர்
துன்றிநிற்கின்றரெல்லாநிற்கவுள்ளகத்தாய்தன்மை [தே.
கொன்றிமேற்பொருளாக்கொண்டகருணையைக்குறிக்கொணு

பழையநான்மறையுமோர்ந்தபங்கயத்தவனுங்காணத்
தழையுமிக்காட்சிகாணப்பெற்றுளத்தண்மைபூண்டோர்
விழையுமோரின்பம்பெற்றேன்விருப்பினீபெறலென்பாலென்
மழைபெறும்பொருளுமுண்டோவையத்துவாழ்வார்மாட்டு. ()

தழலராத்தலையில்வைத்துநடித்தும்வெகுஞ்சகடுதைத்து
நிழலில்கானடந்துமுன்னம்பழக்கிணைநின்பொற்றுளை
யிழல்செயுமடியேனெஞ்சத்தமைத்திடுநிமித்தங்கொல்லோ
கழறராவிணையினேனின்றறிந்தனன்கடவுளேயே. (கஅஎ)

புன்றொழிலடியேனுள்ளம்போருகப்பாதம்வைப்பிற்
கனறுதலின்றிமுன்னைப்பழக்கத்தாற்கலங்காதாற்று

(கஅரு) நிறம் - ஒளி. புறமிகும் பாவியேன் - அகத்தேயன்றிப் புறத்தும் பாவத்தாற் சூழப்பட்டவன். (கஅச) ஓலம் - முறைப்பாட்டுமொழி. (கஅகு) தூய்து அன்மை - சுத்தமில்லாமை; (தீமை.) (கஅஎ) கழல்தார்வினை - விலகாதவினை.

மென்றளிரமேனிப்பூமேல்விளங்கிழைத்தாயர்கைகட்
கொன்றுமப்பாதவெப்பமுறுமெனவஞ்சுகின்றேன். (கஅஅ)

என்றுபற்பலவும்பேசியிருந்தழலிட்டவெண்ணெ
யொன்றியகருங்கலென்னவுள்ளநெக்குருகநேரே
நின்றவந்தணனைநோக்கிநெடியமால்கருணைபூத்து,
வென்றிமாதவத்தரேறேவேட்டதென்னுவதியென்றான். ()

அடியனேனுய்ந்தேனென்னுவங்கைகளிரண்டுங்கூப்பி
முடிமிசையேற்றிநின்றுமூதறிவுடையோர்கொள்ளாக்
கொடியவிச்செல்வமொன்றேகுணிப்பரும்பவத்திற்கேது,
படியறவாயிலின்பம்பயப்பதெட்டுணையுமின்றால். (கக0)

மனமொழியுடலமென்னவகுத்திடுகரணமூன்றுந்
தினமுநின்றிருவடிக்கேசெலுத்துநாயடியேனிந்தக்
கனவெனுஞ்செல்வத்தாழ்ந்தோகளித்துநாள்கழியாநிற்ப
னுனதடியவர்பூந்தாளினுறப்பணிந்துயர்தனீங்கி. (கசுக)

முன்னரேவெறுத்துவேண்டாவிதுவெனமுனிந்துசெல்வம்
பின்னர்கைக்கொள்வேனுகிற்பேரறிவுடையனன்றே
யன்னதுமன்றிக்கொண்டவிரதமுமழித்தானேனே
னன்னர்நெஞ்சுடையநீரார்நகைக்குநானுதுநின்றேன். (கசுஉ)

உடலமூக்ககற்றத்தூநீருற்றவனள்ளல்வாரி
யிடனுறப்பூசிக்கொள்வான்கொல்லிருகாலும்யாத்த [யப்
தொடர்செய்பொன்னிகளஞ்சீக்கத்துணிந்தவனிரும்பாற்செய்
படுபெருநிகளம்பூண்டுகொள்வனேபாரிடத்து. (கசுங)

(கஅஅ) ஆற்றும் - பொறுக்கும்.
(கஅக) தழலிலிட்ட வெண்ணெயுங் கருங்கல் என்றும்படி அதனினும் உள்ளமுருக என்பது. துவல் தி - சொல்லுதி.
(கக0) குணிப்பு - மதிப்பு, படி - ஒப்பு. (கசுங) சீத்தல் நீத்தல். நிகளம் - விலங்கு.

ஆதலாலையவிந்தவநித்தியச்செல்வம்வேண்டேன்,
மேதகமுன்னிருந்தமிடியதேயின்னும்வேண்டுங்,
காதலினடியார்வேண்டுங்காரியமளித்துக்காக்கு,
நீதயைபுரிந்தென்னுள்ளக்கருத்தினைநிரப்புகென்றான். (௧௱௪)

அல்கலிலன்பன்வார்த்தையனைத்தையுஞ்செவிமடுத்து
மல்குமாமறைகட்கெட்டாமாயவன்முறுவல்பூத்துப்
பல்குநன்பொருள்வேண்டாதுபயனின்றிக்கழிந்ததீய
நல்குரவளித்தியென்றகாரணநவிற்றுகென்றான். (௧௱௫)

தெள்ளுகாரணந்தான்முன்னர்ச்செய்தவிண்ணப்பத்தாலே
வெள்ளிடைவிலங்கல்போலவிளங்குபுகிடந்ததைய
வுள்ளுதன்முதலயாவுமியல்பினினுணராநிற்கும்
வள்ளனீயறியான்போலவினவுதன்மாட்சித்தேயோ. (௧௱௬)

செய்யநின்னடித்தியானஞ்செய்துநாள்கழியாநிற்பேற்
கையவீதிடையூறாகியடைந்ததிங்கிதனைப்போற்றிப்
பொய்படுபவஞ்சவாழ்க்கைப்புலைத்தொழிற்பாரம்பூண்டு
நைபடுமுள்ளத்தேனாய்நாடொறுங்கழிதனன்றே. (௧௱௭)

எம்பிரான்கருணைசெய்கவென்றிரந்தடியில்வீழ்ந்தான்
வெம்புறேல்கவலையெல்லாம்விடுதியென்றுடலந்தைவந்
தும்பரார்க்கரியவின்பமுறுவையென்றுரைக்கலுற்றான்
றும்பிகாலுழக்கமட்டுத்துளித்திடுந்துளபத்தாரான். (௧௱௮)

திருவநன்களித்ததன்னைச்சேர்ந்தவர்நிமித்தங்கண்டா,
யொருவினின்னுளம்போலன்றோருள்ளமுந்துறவிற்றேயோ,
மருவிநிற்சார்ந்தார்துன்பின்வயங்குதலழகிதாமோ,
பொருவிலாமுனிவரேறேயஃதெண்ணிப்புந்திமாழ்கேல். ( )

(௧௱௬) விலங்கல் - மலை. (௧௱௭) பவஞ்சம் - பிரபஞ்சமென்னும் வடசொற்றிரிபு. (௧௱௮) தைவரல் - தடவல்.

மெய்ப்பொருளுணர்ந்ததூயோர்மேவியெங்குறைவரேனும்
பொய்ப்பொருள்பற்றுவாரோபொய்ப்பொருளேனும்வந்து
கைப்படப்பற்றுங்கொல்லோவவ்வரையஃதசத்துக்கண்டாய்
வைப்பெனநமதுபூசைவாஞ்சித்துவயங்குமேலோய். (௨௦௦)

நின்னையச்செல்வமென்னோசெய்யுநேரதகத்தோடு
பன்னுமந்திரமுள்ளாரைப்பாம்பின்வாய்விடமென்செய்யு
மன்னுசெங்கதிரோன்றன்னைமயங்கிருட்குழாமென்செய்யு
முன்னிலைதவறுதென்றுமொருபடித்தாய்நிற்பாயால். (௨௦௧)

சாற்றுமெய்யறிவினோர்கடகுதொழிலியற்றுங்காலை
மாற்றுதலின்றாய்த்தாந்தாமரையிலைநீரபோனிற்பர்
போற்றுநின்றனக்கிப்பந்தம்பொருந்தாதுபன்னாள்வாழ்வுற்
றீற்றுநம்முலகஞ்சார்ந்தின்பெய்திடவரந்தந்தேமால். (௨௦௨)

திகழ்தரவிருத்திமீட்டுஞ்செல்வம்வேண்டுவதின்றென்னிற்,
புகழ்தருநந்துங்காதற்பொன்னைநீயிகழ்ந்தோனே,
யிகழ்வினுக்கஞ்சியன்னாளிரிதரவிரிவம்யாமு,
மகழ்வினைத்தவத்தின்மேலோயழுத்திடிவ்வுரையையுள்ளம். ()

என்றவன்மறுதவண்ணமினையபல்வார்த்தைகூறி,
யொன்றரும்பேறுநல்கிமறைந்தனனுவணப்பாகன்,
வென்றியங்கழற்கால்வேந்தேமேதினியிடத்தியார்க்கேனு
மன்றவுண்டாகுந்தெய்வவலிக்கெதிர்வலியுமுண்டோ. (௨௦௪)

பாம்பணைப்பள்ளிமேவும்பண்ணவன்மறைதலோடுந்
தேம்பலிற்றவிர்ந்தசிந்தைத்தெய்வமாமுனிவர்கோமா

---

(௨௦௧) அதகம் - மருந்து. (௨௦௩) வினைபகழ்தவம் என இயைக்க. (௨௦௪) உவணம் - கருடன்.

ஞேம்படைப்பெருமானுள்ளமுற்றதிவ்வாறேவென்று
கூம்பலிற்பெயராக்கையனுய்க்களிகூர்ந்திருந்தான். (உ0௫)

நீருறப்பயின்றுமுள்ளங்நீருறக்கிடையேபோலப்,
பாருறவுற்றுஞ்சற்றும்பற்றிலாஞகியன்பர்க்
கேருறவாயகண்ணனிணையடிக்குறவுபூண்டு,
தாருறவுற்றதோளாய்சாலநாள்கழியவாழ்ந்தான். (உ0௬)

ஒப்பிலாமுனிவன்பின்னரொருதினம்வானநாடா
வெப்பிலாக்கற்பகப்பூவிரைகெழுமாரிபெய்ய,
வைப்பின்மெய்யடியார்க்காயவைகுர்தவுலகஞ்சார்ந்து,
திப்பியவுருவமாயன்சேவைசெய்தின்புற்றனே. (உ0௭)

நூற்பயன்.

எதிர்பொருமரசரேறேயிக்கதையெழுதிவைப்போர்
பொதிதருமன்பிற்கேட்போர்பூசிப்போர்படிப்போர்யாருங்
கதிதருசெல்வம்பெற்றுக்கான்முளைபல்கவாழ்ந்து
மதிநலம்படைத்துப்பின்னர்வான்கதியடைந்துவாழ்வார். ()

நூன் முடிவு.

கலிவிருத்தம்.

என்றுரைத்தமுனிவனிணையடி
யொன்றுமன்பின்வணங்கியுவந்தெழீஇத்
துன்றுமிக்கதைகேட்டின்பந்தோய்ந்தனன்
மன்றவென்றுரைத்தான்புவிமன்னவன். (உ0௮)

(உ0௫) ஒம்படை - காவல். (உ0௬) கிடை - சடை.

வாழ்த்து.

மன்னுமாமறைவாழிமறையவர்
பன்னுமான்முகில்வாழிநற்பார்த்திபர்
மின்னுநீதியும்வாழிமிகுநல
மென்னுமிக்கதையின்றமிழ்வாழியே. (௨௧0)

மூன்றாவது
குசேலர் செல்வநுகர்ந்து வைகுந்தமடைந்த வத்தியாயம்
முற்றிற்று.

ஆகச் செய்யுள் - ௭௪௩.

குசேலோபாக்கியானம்
முற்றிற்று.

குசேலமுனிவர் திருவடிகளே சரணம்.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨	௨௪	ரரிவி	ரிரவி
௧௨	௨௩	பயில்கா	பயில்காவு
௧௪	௨௪	கருந்து	கருத்தது
ஷை	௨௫	தக்ஷிருக்கிணி	தக்ஷிண்ருக்கிணி
௧௮	௨௩	குவாா	குமவர்ா
௧௯	௨௫	ஆத்வத்	ஆத்மவத்
௨௧	௧௭	தொக்கிற்று ;	தொக்க
ஷை	௨௧	ஸத்தமேகோ	ஸததமேகோ
ஷை	௨௮	பிராம்ஹாம்	பிராஹ்மயம்
௨௩	௨௭	படிக்கிள்ளி	படிகிள்ளி
௨௪	௨௩	னொன்பது	னளென்பது
௨௮	௨௬	ஜானுஸ்	ஜருஸ்
௪௩	௨௧	காமியம்	காமிகம்
௪௪	௨௬	முதனிலைத்	முதனிலை
௪௬	௧௨	நானி	நனி
ஷை	௧௮	விழி	வழி
௪௭	௨௨	கல் ;	கல்லடுத்தபாலை நில
௫௦	௨௭	அழித்தலை	அழிதலை [ம்;
௫௪	௩௦	தங்கல்	அடைதல்
௫௮	௨௦	முன்னிரண்டடி	முன்னடி
௬௦	௨௬	பத்தது	பதித்தது
௬௧	௨௬	ஏா	ஏாதல்.
௭௩	௧௩	பின்னோர்தன்	பின்னோாதங்
ஷை	௧௮.	త్రైలంకారం	త్ర్యలంకారం
௭௪	௫	ருள்ளும்	றுள்ளும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
எஅ	உஅ	பதிஞயிரம்	பதிஞெருயிரம்
அஉ	உச	மற்றய	மற்றைய
அச	உகூ	பிராம்ஹ	பிராஹ்ம
கூஎ	உரு	என்று,,	,,என்று
கககூ	உரு	சித்தித்து	சிந்தித்து
கஉ0	உஅ	யாகர	யகர
கஉஎ	ச	வெறித்த	வெறுத்த
கசக	உச	உலோகம்	(கூஉ) உலோகம்
கசச	உஅ	தொடர்பா	தொடாப்பா
கசரு	உச	ஆறு	நாலு
கசகூ	உரு	மூயிாக்கும்	வுயிர்க்கும்
கசகூ	உஅ	காாத்தய	காாத்த
கருக	ககூ	பணைகை	பநகை
கருஅ	ககூ	பதிஞயிர	பதிஞெருயிர

அமைத்துக்கொள்ளல்.

சகூ-வது பக்கம் உரு-வதுவரியில் இராகுவென்னு மிடத்தில் கேதுவுமாமெனவும், கூ0-உ0-ல், வலையம் கம் என்பதை அலை அம் கம் எனப்பிரித்து, அலைகளையுடைய அழகிய சலமெனவும், கூரு - உகூ-ல் பரிக்காரரென்புழி இவர் யானைப் பாதுகாப்பின்பொருட்டு இருபக்கத்தும் வரும் குத்துக்கோற்காரரெனவும், கூஎ-உரு-ல், பண்மை - அழகின் றன்மை யென்புழி அதற்குரியசெய்யுளை மயங்குபு அண்மை யெனப்பிரித்து, மயங்கி அண்மைக்கலெனவும், உருக்குமிணி யென்றபாலது உருக்குமணியென்றே பெரிதும் மரீஇவழங்குகின்றதெனவும் அமைத்துக்கொள்க.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்